
கல்கி
30 காசு


சுபகிருது, ஆடி மீ 21உ

கல்கி

ஆகஸ்ட் 5, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட்டின் விலை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு தரமும் உயர்வு என்ற கருத்து பற்பலரிடம் உண்டு. இது எப்போதுமேயோ, எல்லா விஷயங்களிலுமேயோ உண்மையாகிவிடுவதில்லை. ஏனென்றால், அத்தகைய விலையில் மிகப் பெரும் பங்கு பற்பலவான வரிகளுக்கே போய்ச் சேருகின்றன.

ரூபாய்க்கு ரூபாய் தேறுமா ?



பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 710 A.TM

Greens' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 1

நீதி நிர்வாகம்

பெயரில் மட்டுமின்றிச் செயலிலும் உயர்ந்து விளங்கும் சென்னை உயர்நீதி மன்றம், காலத்திலும் உயர்ந்து நாளைய தினம் நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறது. நியாயத்தை நிலைநிறுத்துவதில் தனிப் புகழ் கொண்ட இம்மன்றம் தனது இச்சிறப்பு என்றும் குன்றாமல் பணி புரிவதாக.

புராதன நாட்களில் நிர்வாகத்தைப் போலவே நீதி பரிபாலனமும் அரசனின் நேரடிக் கடமையாக இருந்தது. இன்று நீதி மன்றங்களில் மக்கள் தமக்குள் தொடுக்கும் வழக்குகள் ஒருபுறமிருக்க, அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்துத் தொடுக்கும் வழக்குகளும் பல உண்டு. வேலியே பயிரை மேய்வது போலச் சட்டத்தைக் காக்க வேண்டிய அரசாங்கமே அரசியல் நிர்ணயச் சட்டங்களுக்குப் புறம்பாகச் செல்வதைக் காண்கிறோம்.

சட்ட சபைகள் இயற்றும் பல்வேறு சட்டங்கள் மூலம் ஆட்சியாளர்கள் அதிகாரம் பெறுகிறார்கள். சட்டம் விதிக்கும் அதிகார வரம்புக்கு மீறிப் போகாமல் ஆட்சியாளர்கள் செயல்புரிய வேண்டும். தவறினால் மக்களுக்குத் துன்பமும், அவர்களது உரிமைகளுக்கு ஆபத்தும் உண்டாகும், சுதந்திரத்துக்கே பங்கம் விளையும்.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் குறைகளை எடுத்துக் காட்டி ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு நீதி மன்றங்களினுடையது. இந்தப் பொறுப்பை நீதிபதிகள் மிகத் திறமையுடனேதான் நிறைவேற்றி வருகிறார்கள். அரசினரின் செய்கைகள் சட்டத்துக்கு முரண்பட்ட போதெல்லாம் தைரியமாகவே அவற்றைக் கண்டிக்கிறார்கள். இதன் மூலம் கிடைக்கும் பாதுகாப்புத்தான் மக்களுக்கு அரண்போல் அமைந்திருக்கிறது.

அதிகாரம் ஒரு போதை வஸ்து. ஒரு முறை உபயோகித்து விட்டால், மேன்மேலும் அதை உபயோகிக்கவே தூண்டும். புத்தித் தடுமாற்றம் கூட ஏற்படும். இன்று நம் நாட்டில் சோஷலிஸ சமுதாயக் கொள்கை மூலமும், நாட்டின் சக்திக்கு மீறிய திட்டங்கள் மூலமும், அரசாங்கத்திடம் அளவின்றி அதிகாரம் குவிந்துவிட்டது. மூலமான அரசியல் நிர்ணயச் சட்டம் மக்களுக்களித்த பாதுகாப்புகளை மீறிப் பல வகைகளில் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இச்சமயங்களில் நீதிமன்றங்கள் குறுக்கிட்டுச் சட்ட முரண்பாட்டை எடுத்துக் காட்டினால், மூலச் சட்டங்களையே மாற்ற முற்படுகின்றனர் ஆட்சியாளர்கள். அரசியல் நிர்ணயச் சட்டத்தையே பல தடவை திருத்தியாகி விட்டது. ஒவ்வொரு திருத்தத்தினாலும் மக்கள் உயர்வாக மதிக்கும் ஒவ்வோர் உரிமை பறிபோகிறது, அல்லது அவ்வுரிமைக்குப் பாதுகாப்பு குறைகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்புகூட ஓர் அவசரச் சட்டம் மூலம் சில ஆர்ஜித சட்டத்தின் இரண்டு ஷரத்துக்கள் மாற்றம் செய்யப்பட்டன. உத்தரப்பிரதேச ராஜ்யம் "பொது நன்மைக்காக" என்று காரணம் காட்டிப் பொது நன்மைக்கல்லாத உபயோகத்திற்குச் செய்த நில ஆர்ஜிதம் சட்டப்படி செல்லாது என்று நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்து செய்யும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமைந்துள்ளது.

சட்டத்தைப் பரிபாலனம் செய்யும் பொறுப்புள்ள நீதி மன்றங்களின் நிலைமை இம்மாதிரிச் சமயங்களில் பரிதாபகரமாக ஆகி விடுகிறது. சட்டமியற்றுதல், சட்ட பரிபாலனம்,

ஆட்சி புரிதல் இம் மூன்றும் ஜனநாயகத்தில் தனித்தனியாகச் சுயேச்சையுடன் நடைபெற வேண்டும் என்று கருத்தளவில் இருந்தாலும், நடை முறையில் அமைச்சர்களின் ஆதிக்கமே தலைதூக்கி நிற்கிறது.

நீதிமன்றங்களின் பலத்தைக் குறைக்கும் அரசாங்க நடவடிக்கை எல்லாம் கண்டிக்கப்பட வேண்டியவை. நீதி மன்றங்களுக்கு அடுத்தபடியாகப் பத்திரிகைகள் மக்கள் உரிமைக்கு ஒரு பாதுகாப்பு ஆகும். பத்திரிகைகளின் பலமும் அதிகமாக இராமல், நீதிமன்றங்களின் வலிமையும் குன்றிவிட்டால், அரசாங்க அதிகாரக் கொடுங்கோன்மையினின்று மக்களுக்குத் தப்ப வழியில்லாமல் போகும். இதனால் தான் அரசியல் சட்டத்தை ஆரம்ப காலத்தில் இருந்த நிலையிலேயே வைத்துப் பாதுகாக்கவேண்டும் என்று சுதந்திரக் கட்சி போர் புரிகிறது.

அறிஞர்கள் சொல்லுகிறார்கள்

மைசூர் ராஜ்ய சட்ட சாஸ்திர நிபுணர்கள் குழுவின் (Mysore State Commission cf Jurists) ஆதரவில் சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்ட இந்திய அட்டர்னி ஜெனரல் ஸ்ரீ எம். ஸி. செதல்வாட் நமது தேர்தல்களில் காணும் குறைகளைப் பற்றிப் பட்டவர்த்தனமாகப் பேசியிருக்கிறார். தேர்தல்களில் சுயேச்சையாக வாக்குப் பதிவு செய்யப்படுகிறது என்பது உண்மையல்ல. அரசியல் கட்சிகளின் பணமும் செல்வாக்கும் கல்வி அறிவில்லாத வாக்காளர்களைச் சுலபமாக மயக்கி விடுகின்றன. சட்டப்படி ஒவ்வோர் அபேட்சகரும் எவ்வளவு செலவு செய்யலாம் என்பதற்கும் உண்மையில் செலவழிக்கப்படும் தொகைக்கும் சம்பந்தமே இல்லை. மிதமிஞ்சிய பண பலத்தினால் ஒரு முறை பதவிக்கு வந்துவிட்ட கட்சி, தன்னை நிரந்தரமாகவே பதவியில் வைத்துக் கொள்ள முடிகிறது. கட்சிகள் செய்யும் பொதுச் செலவினால் அபேட்சகர்களின் தனிக் கணக்கில் அவை வருவதில்லை. ஆகவே ஒவ்வொரு கட்சியும் தான் பெறும் நன்கொடைத் தொகைகளையும் செய்யும் செலவுகளையும் பிரசுரிக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். அவைகள் கொடுக்கும் கணக்குகள் சரியாக இருக்கின்றனவா என்பதை நிச்சயிக்கக் கட்சிச் சார்பற்ற வெளிக் கணக்காயர்களைக் கொண்டு அத்தாட்சிப் பத்திரம் வழங்கச் செய்ய வேண்டும். இவ்வாறு பேசிக் கருத்தரங்கைத் தொடங்கி விட்டு இந்தப் பிரச்னையை மேலும் ஆராயும் பொறுப்பைத் தேர்தல் கமிஷனர் திரு கே. வி. கே. சுந்தரம் தலைமையில் அமைக்கப்பட்ட ஓர் உபகமிட்டிக்கு விட்டு விட்டார் ஸ்ரீ செதல் வாட். இந்த உப கமிட்டி விஷயத்தை மேலும் தெளிவாக்குகின்றது. கமிட்டி கூறுவது:

"அரசியல் கட்சி நிதிக்குக் கம்பெனிகள் நன்கொடை வழங்குவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். தனி நபர்களும் கம்பெனி பாகஸ்தர்களும், அபேட்சகர்களுக்காகச்செலவுசெய்வதையும் தடுக்க வேண்டும். தவறானது என்று தெரிந்தும் தப்புக் கணக்கைப் பெரும்பாலான அபேட்சகர்கள் தேர்தல் கமிஷனருக்குச் சமர்ப்பிப்பதைக் கண்காணிக்க ஏதாவது வழிவகுக்க வேண்டும்."

இக்கருத்துக்களைச் சுதந்திரக் கட்சி சொல்லியது என்றால் அரசாங்கம் விஷயங்களைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வாளாயிருந்துவிடக்கூடும். ஆனால் பேசியவர்கள் தேர்தல்களில் எவ்வித மான பிரத்தியேக லாப நஷ்டமும் எதிர்பார்க்காதவர்கள்; தேர்தலை நேர்மையுடன் நடத்திக் கொடுக்க வேண்டும் என்ற அக்கறையுள்ளவர்கள்; கட்சிச் சார்பற்றவர்கள்; இந்திய சர்க்காரின் பாராட்டுதலைப் பெற்ற உத்தியோகஸ்தர்கள். இவர்கள் எடுத்துக் காட்டும் இங்குகள் நடைபெறுமலிருக்கத்தான் ஆளும் கட்சியினர் தேர்தலுக்கு ஆறு மாதங்கள் முன்பு பதவியிலிருந்து விலகிவிட வேண்டும்; விலகிக் கொண்டு பிரசாரம் செய்ய வேண்டும் என்கிறார் ராஜாஜி. காங்கிரஸ் கட்சியும் அரசாங்கமும் இனி மேலாவது இதைக் கவனிப்பார்களா?

என்ன சேதி?

காங்கிரஸும் பஞ்சாயத்தும்

பஞ்சாயத்துத் தேர்தல்களில் கட்சி அரசியல் புகக் கூடாது என்பது எல்லோரும் ஒப்புக் கொண்டதாகும். சமீபத்தில் காங்கிரஸ் கட்சியும்கூடப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் கட்சி அடிப்படையில் போட்டியிடப் போவதில்லை என்று

முடிவு செய்தது. அப்போதே, அதிகாரத்திலுள்ள இந்தக் காங்கிரஸ் எவ்வளவு தூரம் இதைக் காரியத்தில் கடைப்பிடிக்கும் என்ற சந்தேகம் பலருக்கு எழுந்தது. அந்தச் சந்தேகத்தை வளர்க்கும் வகையில் ஒரிஸ்ஸாவிலிருந்து செய்தி வந்திருக்கிறது.

''பாரத நாட்டின் ஆட்சிப் பொறுப்பு காங்கிரஸ் கட்சியின் கையிலிருக்கிறது. ஒரிஸ்ஸா ராஜ்யத்திலும் காங்கிரஸ் அரசாங்கம்தான். ஜில்லா பரிஷத் நிர்வாகமும் காங்கிரஸ் கட்சியின் வசம். பஞ்சாயத்துசமிதியின் நிர்வாகப் பொறுப்போ, அதுவும் காங்கிரஸ் கட்சியினிடம்.

''இப்படிக் காங்கிரஸ் மயமான அரசாங்கத்தினிடமிருந்து பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, வெள்ளக் கட்டுப்பாடு, பஞ்ச நிவாரணம் போன்ற சலுகைகள் பெறக் காங்கிரஸ் கட்சி தாராபூர், கிராமப் பஞ்சாயத்துக்கு நியமித்துள்ள திருவாளர்.............அவர்களுக்கு உங்கள் வோட்டுக்களைப் போடுங்கள்'' என்று துண்டுப் பிரசுரம் அச்சடித்துக் கிராமங்களில் விநியோகித்திருக்கிறார்களாம்.

பஞ்சாயத்துத் தேர்தலில் காங்கிரஸ் தலையிடாத லட்சணம் எப்படி யிருக்கிறது, பார்த்தீர்களா?

ரயில் விபத்து

அமிருதசரஸ்—கல்கத்தா இடையே ஓடிய ஒரு மெயில் வண்டி, ஒரு கூட்ஸ் வண்டியுடன் மோதி மகத்தான உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் விளைந்திருக்கின்றன. மழை வெள்ளத்தாலோ, கலகக்காரர்களாலோ இந்த விபத்து ஏற்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் நியாயமாக விழிப்புடன் இருந்து ஆற்ற வேண்டிய கடமையில் தவறியதனாலேயே இந்தப் பயங்கர விபத்து நேர்ந்துள்ளது. ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதத்தைப் பற்றிக் கேள்விப்படும்போது நெஞ்சு துணுக்குறுகிறது. இந்தப் பரிதாப நிலையிலும் சில சமுதாய விரோதிகள் பிரயாணிகளிடமிருந்து பொருள்களைக் கொள்ளை

ஊர் வம்பு

PK



அடித்துக் கொண்டு போனதைப் படிக்கும்போது நெஞ்சம் சொல்லொணு வேதனையுறுகிறது. சமீப காலத்தில் ஒன்றன்பின் ஒன்ருக ஏற்பட்டுவரும் ரயில் விபத்துக்களையும், விமான விபத்துக்களையும் பார்க்கும்போது, மக்கள் 'நடந்து செல்வதே மேல்' என்ற முடிவுக்கு வந்தால் அதிசயப்படுவதற்கில்லை!

சட்ட பூர்வமான மாற்றம்

பிரஞ்சு பார்லிமெண்டின் கீழ்சபையும் மேல் சபையும் சட்ட பூர்வமாக, புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் பகுதிகளை இந்திய சர்க்காரிடம் ஒப்படைத்து விட்ட செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடையாதவர் இல்லை. ஆறு ஆண்டுகளுக்கு முன் பிரஞ்சுக்காரர்கள் இப் பகுதிகளை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு வெளியேறினர். ஆனல் சட்டபூர்வமான மாற்றம் செய்யக் காலம் தாழ்த்தப்பட்டு வந்தது. இப்பொழுது பூரண மாற்றம் சட்ட பூர்வமாக ஏற்பட்டு விட்டது. இனி புதுச்சேரி மக்கள் தில்லி பார்லிமெண்டுக்குத் தங்கள் அபேட்சகரை அனுப்பலாம். தங்கள் வழக்குகளை உயர்நீதி மன்றங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமெனில் பாரீஸுக்குப் போக வேண்டியதில்லை. தில்லி உயர்நீதி மன்றத்துக்குப் போனலே போதும். இவ்வாறு பல வசதிகளை இந்தப் பகுதி மக்கள் இனிப் பெறுவர்.

பிரஞ்சு மக்கள் பிரிட்டிஷாருக்கே இலக்கியம், கலை முதலியவற்றில் ஆர்வமூட்டியவர்கள் என்ற பெயர் உண்டு. பிரஞ்சுப் பண்பாடும், கலையும் ஐரோப்பாவில் மிகவும் புகழ் எய்தியது. பிரஞ்சு மொழி, ஆங்கிலம் போலவே உலக மொழிகளில் ஒன்ருகும்.

பிரஞ்சுக்காரர்கள் நீண்ட காலம் நமது இந்தியப் பகுதிகளில் வாழ்ந்து விட்டுச் சென்றுள்ளதால் அவர்கள் பண்பாட்டை அப் பகுதிகளில் இன்றும் காணலாம்.



தமிழகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆர். வேங்கடராமன் அவர்களின் புதல்வி செள. பத்மாவுக்கும் தமிழக சர்க்கார் நிதி இலாகா உதவிக் காரியதரிசி திரு கே. வேங்கடராமன் அவர்களுக்கும் சென்னையில் அதி விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு ராஜ்ய அமைச்சர்களும் நகரப் பிரமுகர்களும் விஜயம் செய்தனர். வாழ்க மணமக்கள்!

அவற்றில் பிரஞ்சு கல்வி போன்ற சிலஅம்சங்களை இந்திய சர்க்கார் விட்டு விடாமல் பேணி வருவது அனைவருக்கும் தெரியும். நாட்டின் எப்பகுதியில் நல்ல அம்சங்கள் காணக் கிடைத்தாலும் போற்றிப் பெற வேண்டியது நமது கடமையல்லவா?

இலங்கையில் நிலவரி இல்லை !

இலங்கை சர்க்கார் சமர்ப்பித்துள்ள இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் நம் நாட்டில் சுதந்திரக் கட்சி சொல்லி வருவதை இலங்கை சர்க்கார் அப்படியே கடைப்பிடித்திருக்கிறதாகக் காண்கிறேம்.

இந்திய நாட்டில் ஏழை விவசாயியைக் கசக்கிப் பிழியும் வகையில் ஒவ்வொரு ராஜ்ய சர்க்காரும் நிலவரியை உயர்த்தியிருக்கும் போது, இலங்கை சர்க்கார் நிலவரி வசூலை ரத்து செய்து விட்டிருக்கிறது. சோஷலிஸப் பாணியைப் பேச்சளவில்தான் இந்தியாவின் பார்க்கிறேம். ஏழைகளுக்கு இரங்காத சோஷலிஸத்தினுல் பயன் என்ன?

இளையாத்தங்குடி உற்சவம்

ராமன் இருக்கும் இடம் அயோத்தி என்பது போல் காமகோடி பெரியவர்கள் இருக்குமிடமெல்லாம் யாத்திரீகர்கள் ஏராளமாகக் கூடும் புனித ஸ்தலங்களாகி விடுகின்றன. இந்த உண்மை ஜூலை 17-ந்தேதி. வியாஸ பூர்ணிமையன்று இளையாத்தங்குடியில் நிதரிசனமாயிற்று. அந்தச் சின்னஞ் சிறு கிராமத்தில் அன்று ஆயிரமாயிரம் அடியார்கள் கூடி ஸ்ரீ ஆசாரியர்கள் வியாஸ பூஜை புரிந்த பெரு நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தனர். வழக்கம் போலவே பூஜாக் கிரமங்களுக்கு ஒரு சிறிதும் குறைவின்றி மாலை ஐந்தரை மணி வரையில் குரு பரம்பரையைச் சேர்ந்த புண்ணியாத்மாக்களுக்கு ஆராதனை நடைபெற்றது. பிரசாதம் அளித்து முடிக்கும்போது நள்ளிரவும் கடந்துவிட்டதிலிருந்தே அன்று இளையாத்தங்குடி பூண்டிருந்த விழாக் கோலத்தை ஊகிக்கலாமல்லவா?




கல்கி
2-9-62
இதழில்
பிரபல சரித்திரக் கதாசிரியர்
ஜெகசிற்பியன் எழுதும்
பத்தினிக்கோட்டம்
புதிய வரலாற்று நவீனம்
ஆரம்பமாகிறது!

அன்பார்ந்த நேயர்களுக்கு



குழந்தைப் பருவத்தைக் கடந்து, ஞான விசாரம் செய்யும் ஒரு நிலையைக் கல்கி அடைந்து விட்டது என்பதை இந்த ஏட்டின் சென்ற ஆண்டு நிறைவின்போது குறிப்புக் காட்டி அருளிய ஸ்ரீ காமகோடி பெரியவர்களின் ஆசியை ஒரு சுப சூசகமாகவும், இலட்சியமாகவும் கருதி, இந்த இதழோடு இருபத்தோரு ஆண்டுகள் நிறையும் கல்கி பத்திரிகையை மேம்படுத்த உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நாடுகிறேன்.

இன்றைய சமூக வாழ்க்கையில் அடிபட்டுப் போன மக்களுக்கு மனோரஞ்சகமான எளிய, ஹாஸ்ய அம்சங்களைத் தருவதில் கல்கி என்றும் பின் நின்றதில்லை; இனியும் பின் நிற்காது. எனினும் இதோடு அதன் பணி நின்று விடக்கூடாது என்பதே எனது விருப்பம்.

உயரிய விஷயங்களையும் உள்ளத்தை ஈர்க்குமாறு அளிப்பதே கல்கியின் இலட்சியம். இந்த இலட்சியத்தைக் கல்கி ஏட்டினை வாங்கிக் கண்ணுறும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பத்தினர் நிரூபிக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

கல்கி என்பது கண்ணியம் என்பதற்கு மறு பெயர் என்று பலர் கொண்டாடும்போதெல்லாம் கல்கி பத்திரிகையை இவ்வளவு பெருமளவில் வாங்கிப் போஷிக்கும் தமிழ்ப் பெருமக்களின் கண்ணியத்தைத்தான் நான் எண்ணி வணங்குகிறேன்.

இன்னமும் கல்கிப் பத்திரிகையின் விநியோகம் மக்களின் தேவைக்குக் குறைவாகத்தான் இருக்கிறது. இதற்கு எத்தனையோ காரணங்கள். வெளிநாடுகளிலிருந்து அச்சு இயந்திரங்களும், காகிதமும் பெறுவது பிரம்மப் பிரயத்தனம். எனவே போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து எனத் திருப்தி அடைய வேண்டியிருக்கிறது.

திருப்தி என்பது தனி மனிதனுக்கு எவ்வளவு அவசியமோ அப்படியே ஒரு ஸ்தாபனத்துக்கும் அத்தியாவசியமாகும். இருபத்தோரு ஆண்டுகளுக்கு முன்பு எழும்பூர் ஸ்டேஷனுக்கு எதிரே ஒரு சிறு ஓட்டுக் கட்டடத்தில் பழையதொரு அச்சு இயந்திரத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கல்கி ஸ்தாபனம் இன்று கிழ்ப்பாக்கத்தில் ஒரு விசாலமான பூங்காவின் நடுவில் நவீன இயந்திர வசதிகளுடன் பிரமிக்கத்தக்க அளவில் வளர்ந்திருப்பதைக்காண எனக்கு அத்தகைய மன நிறைவு ஏற்படுகிறது. இந்த நிறைவு நிலைத்திருக்க பெரியோர்களது ஆசியை வேண்டுகிறேன்.

இந்தப் புது ஆண்டில் உங்கள் யாவரையும் மகிழ்விக்கவும், சிந்திக்கச் செய்யவும்மற்றப்பல புது அம்சங்களையும் கல்கி பத்திரிகை வழங்கவிருக்கிறது.

பல்லவ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிற்பட்ட ஒரு மாபெரும் வரலாற்றைப் பிரபல கதாசிரியரான திரு ஜெகசிற்பியன் அவர்கள் 'பத்தினிக் கோட்டம்' என்ற தொடர்கதையாக செப்டம்பர் 3ந் தேதி இதழிலிருந்து அளிக்கிறார்.

குமரியிலிருந்து வேங்கடம் வரை வாசகர்களைத் தல யாத்திரைக்கு இட்டுச் சென்ற திரு பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் வேங்கடத்துக்கு அப்பாலுள்ள க்ஷேத்திரங்களையும் செப்டம்பர் 3ந் தேதி இதழிலிருந்து நமக்குத் தரிசனம் செய்து வைக்கப் போகிறார்.

''நமது அந்நியக் கடன்களும் அவற்றின் விளைவுகளும்'' பற்றியும் ''நிலச் சீர்திருத்தங்கள்'' பற்றியும் முன் ஆண்டுகளில் கருத்தரங்குகள் நடத்தியது நீங்கள் அறிந்ததே. இந்தப் பிரச்னைகள் நம்மை இன்னமும் விட்டபாடில்லை. புதுப் பிரச்னைகள் வேறு தோன்ற ஆரம்பித்து விட்டன. பாரத நாட்டின் ஐக்கியத்தையே குலைத்து விடுமோ எனப் பல பெரியோர்களைக் கவலையில் ஆழ்த்தி வரும் ஹிந்தி மொழிப் பிரச்னையைக் குறித்துப் பேரறிஞர்களைக் கொண்டு ஒரு விவாத அரங்கு நடத்தத் திட்டம் போட்டு வருகிறேன்.

நீதிக்காகவும், நியாயத்துக்காகவும் போராடும் கல்கியின் பிறந்த தினமும் சென்னை உயர்நீதி மன்றத்தின் நூறாண்டு விழாவும் ஒன்றாக அமையும் பொருத்தத்தையும் நற்சகுனமாகக் கருதுகிறேன். புது வருடத்தில் முதல் அடி வைக்கும் போது, நீதி தழைக்கப் பாடுபட்ட பெரியோர்களையெல்லாம் இந்த ஏட்டின் மூலம் நினைவுக்குக் கொண்டுவந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். இன்று போலவே என்றும் உங்கள் கல்கியை நேர்மையான பாதையில் செலுத்தி, அது எடுத்த நல்ல காரியம் யாவற்றையும் இனிது நிறைவேற்றித் தர விநாயகப் பெருமானைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

சதாசிவம்



அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்பு உடையார்
என்பும் உரியர் பிறர்க்கு — திருக்குறள்

13. உடலை ஈந்தார்!

வேதத்தை ஆதாரமாகக் கொண்ட மதங்களோடு வேதத்தைப் பிரமாண மாகக் கொள்ளாத அவைதிக மதங்களும் ஆசாரியரின் காலத்தில் பாரத நாட்டில் இருந்தன. அவற்றையும் ஆசாரியர் கண்டனம் செய்து வெற்றி கண்டார். அவற்றில் முக்கியமானவை ஜைன மதமும் புத்த மதமும் ஆகும்.

ஜைனர்கள் எண்ணிறந்த ஆத்மாக்கள் உண்டு என்பர். அவை எல்லாவற்றிடமும் நாம் அன்பு பூண வேண்டுமென்பதாலேயே அவர்கள் அஹிம்சையை மிகவும் தீவிரமாகக் கடைப்பிடிப்பர். ஆத்மா, தான் ஏற்றுள்ள உடலுக்குத் தகுந்தபடி சுருங்கும், விரியும் என்று அவர்கள் சொல்வார்கள். எந்தப் பொருளைப் பற்றியும் நாம் பூரணமாக அறிய முடியாது. நம்முடைய அறிவு, காலம், இடம் இவற்றைப் பொறுத்தே பொருட்களைப் பற்றிய நமது ஞானம் அமையுமாதலால் காண்பது எதனையுமே நிச்சயமாக இருப்பதாகவோ, இல்லையென்றோ சொல்ல முடியாது என்பர் அவர்கள்.

ஜைனர்கள் முழுமுதற் கடவுளை ஒப்புக் கொள்வதில்லை. கர்மத்தைக் கடந்து முக்தி நிலைபெற்ற ஜினர்களை ஆதரிசமாகக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் கூறுவர். ஆத்மா அறிவு விளக்கம் — அல்லது சைதன்யம் — உள்ளது என்றும் கர்மம் என்ற சூட்சுமமான தத்துவம் ஆத்மாவில் ஊடுருவி அதனை மாசு படுத்துவதாகவும் கூறுவர். சமண சமயத்தைத் தழுவுவதால் மட்டுமே இந்தக் கர்ம வினை நீங்கி விடுதலை கிடைக்கும் என்பது அவர்கள் சித்தாந்தம்.

கர்மம் ஆத்மாவை ஊடுருவாதிருக்கப் புலனடக்கம் முதலியவற்றை உபாயமாகக் கூறுகிறது ஜைன மதம். ஆனால் கர்மத் தளையைத் தகர்ப்பதால் கிடைக்கும் மோட்ச நிலையின் லட்சணத்தை அது தெளிவாகத் தெரிவிக்கவில்லை. இக் கோட்பாட்டில் உலகத்துக்குக் காரணம் எது என்பதும் பொருளாகவில்லை. ஆக, தொடக்கம் முடிவு இரண்டைக் குறித்தும் நிச்சயமாகத் தெரிய வில்லை. கர்மத்தினால் அநுதினமும் ஊடுருவப்படும் ஆத்மா எவ்வாறு அதிலிருந்து தனித்திருந்து இன்ப துன்பத்துக்கு மேல் செல்ல முடியும் என்ற வினாவும் எழுகிறது.

புத்த மதமும், கடவுள், கடவுள் வழிபாடு இவற்றைப் பற்றிக் கூறுவதில்லை. சமண சமயம் போலப் புலனடக்கம், நன்னெறிகளைப் பின்பற்றுவது ஆகியனவற்றையே வலியுறுத்துகிறது அது. 'அறிதல், உணர்வு, கருத்து, மன இயல்பு, உருவம் என்ற ஸ்கந்தங்கள் பல விதங்களிலும் கூடிப் பிரிவதே உலகம். இதில் எதுவுமே நிரந்தரமானதல்ல. ஆத்மா என்பதாக எதுவும் இல்லை' என்கிறது அது. ஆத்மாவைப் பற்றி புத்தர் எதுவுமே கூறவில்லை என்றும் பின்னால் வந்த பௌத்தர்கள் தாம் ஆத்மாவை மறுப்பதாகவும் சிலர் கருதுகிறார்கள். 'காண்பனவெல்லாம் காண்பவன் அறிவில் இருப்பனவையே; உலகம் ஒரு மனோநிலைப் பிரவாகம் தான். கணந்தோறும் மாறுபடும் தர்மங்கள் என்ற மூலப் பொருட்கள் கொண்டதே உலகம். இறுதி நிலையில் எல்லாம் வெறும்பாழே' என்கிறது புத்த மதம். [illegible] எச்



னும் வேட்கையை வெல்வதன் மூலம் அந்தப் பாழ் நிலையை அடைவதே நிர்வாணம் அல்லது மோட்சம் என்கிறது.

நாம் காணும் உலகம் பொய் என்று புத்த மதம் கூறுகிறது; அத்வைதமும் உலகம் மாயை என்கிறது. எனவே தான் ஆசாரியருக்குப் பின் வந்த பிற மதஸ்தர்கள் ஆசாரியரையும் ஒரு மறைமுக பௌத்தர் என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள். ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் புறம்பானது.

உலகம் பொய் என்று கூறும் போது அத்வைதம் அது சூனியம் என்று பொருள் கொள்ளவில்லை. 'உலகை நாம் எப்படிக் காண்கிறோமோ அந்தத் தோற்றமே பொய். உலகமும் உண்மையில் பரம் பொருளே' என்கிறது அது. சங்கரர், எல்லாம் மாயை என்று மட்டும் கூறி நிறுத்திய மாயாவாதி அல்ல; எல்லாம் பிரம்மமே என்று அறுதியிட்டு உறுதி கூறிய பிரம்மவாதி அவர். எல்லாம் சூனியத்தில் முடிவதாக அவர் சொல்லவில்லை; எல்லாம் பூரணத்துவத்தில் முடிவதாகத்தான் சொல்கிறார்.

எல்லாம் நிலையற்றவை என்று பௌத்தம் கூற, ஆசாரியரோ நிலையற்ற சலனங்களுக்கிடையே அவற்றைத் தொடர்புறுத்திக் காட்டியபடி நிரந்தரமாக நிற்கும் ஆத்மாவைப்பற்றி சவிஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். காண்பவன் அறிவில் உள்ளதே உலகத் தோற்றம் என்ற பௌத்தக் கோட்பாடு, இந்த உலகம் ஜீவனின் கற்பனை அல்லது கனவு என்றே சொல்வதற்கு ஒப்பாகும். அவ்வாறானால் ஒவ்வொரு ஜீவனையும் ஒட்டி அவன் கற்பனை செய்யும் ஒவ்வொரு உலகம் அல்லவா இருக்க வேண்டும்? ஆசாரியரின் மதத்தில் இவ்வாறு பல உலகங்கள் இல்லை. பிரம்மம் தனது மாயா பலத்தினால் ஒரே உலகமாகத்தான் எல்லா ஜீவர்களுக்கும் தோன்றுகிறது.

வெறுமையும், நிறைவும் ஒன்றே என்று வாதாடுபவர்கள் தான் புத்த மதமும் அத்வைதமும் ஒன்று என்று கூற முடியும்.

வைதிக மதங்களை ஸ்தாபித்தவர்கள் முனிவர்களே. பூர்வ மீமாம்ஸையை நிறுவியவர் ஜைமினி மகரிஷி. நியாயத்தை அவலம்பித்தவர் கௌதம முனிவர். வைசேஷிகத்தின் ஸ்தாபகர் கணாதர் என்ற மகரிஷி. சாங்கிய மதத்தின் ஆதிகுரு கபிலர். யோக சாஸ்திரத்தைச் செய்தவர் பதஞ்சலி. அத்வைதம் என்ற பெயரில் ஆசாரியர் சாங்கோபாங்கமாக விளக்கி ஸ்தாபித்த வேதாந்தம் வியாஸ மகாமுனிவரே வகுத்தளித்ததாகும். சத்தியத் தத்துவத்தை மற்ற முனிவர்களும் அத்வைதமாகவே உணர்ந்திருந்தாலும் ஒவ்வொரு கோணத்திலிருந்து கண்டு வெவ்வேறான சில முடிவுகளை வெளியிட்டதாகவே சநாதனிகள் நம்புகிறார்கள். உதாரணமாக, கடவுளைப் பற்றிக் கூறாத ஜைமினி கூத்தப்பிரானின் அநுக்கிரகத்தைப் பெற்று அவரைத் துதித்திருக்கிறார். பதஞ்சலியே கோவிந்த பகவத் பாதராகி அத்வைதத்தைப் பிரசாரம் செய்திருக்கிறார். நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸை, வேதாந்தம் (அத்வைதம்) † இவற்றை வைதிக தரிசனங்கள் என்று சொல்வதுண்டு. தரிசனம் என்ற பதமே, மெய்ப்பொருளைக் குறித்து ஒவ்வொருவர் ஒரு கோணத்திலிருந்து பெற்ற நோக்கு இவை என்பதை ஒப்புக் கொள்ளும் சர்வமத சமரஸத்தைக் காட்டுகிறது அல்லவா? புத்த மதமும், ஜைன மதமும் அவைதிக தரிசனங்கள் எனப்படும்.

ஆசாரியர் இந்த தரிசனங்களை அழிக்கவில்லை; அவற்றை நிறைவு செய்தே அருளினார். இந்தத் தரிசனங்களில் பொதிந்து கிடந்த சத்தியங்கள் எல்லாம் அடங்கியதே அத்வைதம். உதாரணமாக பூர்வ மீமாம்சகர் ஆற்றும் கர்மமோ, யோக மார்க்கக்காரர்களின் அப்பியாசங்களோ அத்வைதிகளுக்கு விலக்கானவை அல்ல. அதே சமயத்தில்

† விசிஷ்டாத்வைதம், த்வைதம் முதலிய பிற்கால மதங்களும் வேதாந்த சமயங்களேயாகும்.



புத்த மதத்தின் அஹிம்சையையும் சநாதன மதத்தின் ஒரு முக்கியமான அங்கமாக்கினார் ஆசாரியர். நியாயமும், யோகமும் கூறும் கடவுளும் அத்வைதத்தில் உண்டு. இதனால்தான் ஆசாரியரை, பிரம்மமும் ஜீவனும் ஒன்றெனக் கூறிய பிரம்மாத்வைதி மட்டுமல்ல; அவர் தர்சனாத்வைதியுமாவார் என்று கொண்டாடுகிறோம்.

'துன்பமற்றிருப்பதே மோட்சம்; அந்நிலையை அடைய ஆசைகளைத்துடைக்க வேண்டும்' என்பது எல்லா மதங்களும் ஒப்புக் கொள்ளும் விஷயமாகும். உடல் அநுபவிக்கும் இன்ப துன்பங்களோடு மட்டும் மனிதனின் வாழ்வு நிறைவு பெற்று விடவில்லை என்பது இம்மதஸ்தர்கள் யாவருக்கும் பொதுக் கருத்தாகும். ஆனால் உடலைப் பேணுவதும், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றிருப்பதுமே போதும் என்று கூறிய லோகாயத மதமும் சங்கரரின் காலத்திலேயே—ஏன், அதற்கும் முன்பே—இங்கு இருந்தது. இந்த சார்வாக மதத்தை ஸ்தாபித்தவர் பிருஹஸ்பதி என்று கூறப்படுகிறது. உடலில் உறையும் ஆத்மாவின் பிரபாவத்தை இவர்களுக்கும் அறிவித்து நல்வழிப்படுத்தியிருக்கிறார் ஆசாரியர்.

ஆசாரியர் தமது அதி நுட்பமான அறிவினால் மட்டும் இதர மதஸ்தர்களை வென்றதாக நாம் சொல்ல முடியாது. அவர் எந்தத் தத்துவத்தை போதித்தாரோ அதற்கு நடமாடும் ஒரு சான்றாக விளங்கியதே அவருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பையும் வெற்றியையும் தேடித் தந்தது. அத்வைதமுக்தியை இன்றே இங்கே எவனும் பெறலாம் என்று அழுத்தமாகக் கூறி ஜீவன்முக்தனின் இலட்சணங்களையும் அவர் விளக்கியிருக்கிறார் அல்லவா? அந்த இலட்சணத்துக்கு ஓர் இலக்கியமாக, சகல ஜீவராசிகளையும் தாமாகக் கண்டு, தம்மை சகல ஜீவராசிகளிலும் கண்டு பேரன்பின் உருவகமாகத் திகழ்ந்தார் ஆசாரியர்.

கணக்கிலடங்காத கிரந்தங்களைப் பொழிந்து தள்ளிய ஆசாரியர் தம்மைப் பற்றி அவற்றில் ஒரு சிறு குறிப்புக் கூடச் சொல்லிக் கொண்டதில்லை. இதனால்தான் இன்று அவரது சரித்திரத்தை எழுதும் போது எவ்வளவோ முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்டவர் சூத்திர பாஷ்யத்தின் இறுதிப் பகுதியில் கூறும் ஒரு வாசகம் மட்டும் தம்மைக் குறித்தே அவர் சொல்லிக் கொண்டது போன்ற உறுதியுடன் தொனிக்கிறது. அவர் கேட்கிறார்: ''ஒருவன் பிரத்தியட்சமாக இவ்வுடலில் இருக்கும்போதே இதய பூர்வமாக பிரம்மாநுபவத்தை நுகர்ந்தால் அதை மறுக்க மற்றவருக்கு ஏது ஆற்றல்?'' என்று.

ஆம், அப்படி பிரம்மாநுபவத்தில் சங்கரர் திளைத்திருந்ததால் தான் பரசமயத்தினர் அவரது அத்வைதத்தை மறுக்க முடியவில்லை; அந்தத் தத்துவம் தேசமெங்கணும் வெற்றிப் பாவட்டா பறக்க விட்டது.

அறிவினால் மட்டும் மக்களின் சமய உணர்ச்சியைப் பூர்த்தி செய்ய முடியாதல்லவா? உணர்ச்சியின் பிறப்பிடம் இதயம்; எனவே இதயத்திலிருந்து பொங்கும் பக்தியை உறைவிக்கும் உபாயமாக உள்ள மதங்கள்தாம் மக்களிடையே ஒரு பிடிப்பைப் பெற முடியும். பக்தியைச் செலுத்தும் போது தான் மூர்த்தி வழிபாடுகள் வருகின்றன. இவ்விதமான தேவதா ஆராதனங்களுக்கும் ஆசாரியரின் நாட்களில் குறைவில்லை. பக்தி என்பது சாமானியமான ஓர் உணர்ச்சி அல்ல. கடவுளிடத்தில் அன்பு செலுத்தும் பக்தி உண்டு; அச்சம் கொள்ளும் பக்தியும் உண்டு. கடவுளை அச்சம் கொள்பவராகக் கண்டு, அந்த பயங்கரமூர்த்தியிடம் அன்பு செலுத்தும் ஏராளமான பாசுபதர்களும் சாக்தர்களும் ஆசாரியரின் நாட்களில் இருந்தனர். இவர்கள் பயங்கரத்திடம் அன்பு கொண்டிருந்தாலும், இவர்களிடம் சக ஜீவராசிகள் அன்பு கொள்ள முடியாதபடி நரபலி முதலிய கோர கிருத்தியங்களில் ஈடுபட்டிருந்தனர். கடவுளை சௌம்ய நாராயணனாகவும், ஆனந்த நடேசனாகவும், லலிதா தேவியாகவும் கண்டு அன்புடன் பூஜித்தவர்களிலும் பெரும்பாலோர், பிற உபாசகர்களை அன்புக் கண்ணுடன் காணவில்லை. 'தந்தெய்வம், எந்தெய்வம் என்றெங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிட்டபடி' யிருந்தனர். எல்லா தெய்வங்களும் ஒரே மூல வஸ்துவின் மாறுபட்ட மூர்த்தங்களே என்ற ஞானமின்றிக் கடவுளருக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து வந்தனர். குரூரமான முறையில் தம்மைத் தாமே வருத்திக் கொண்டவர்களிலிருந்து, சகல நுகர்ச்சிகளையும் பகவத் அர்ப்பணமாகச் செய்வதாகக் கூறிக்கொண்டு கும்மாள மிட்டவர்கள் வரையில் பலதரப்பட்டவர்கள் பக்தியைச் சிதைத்துச் சின்னபின்னமாக்கி வந்தார்கள்.

எல்லாத் தெய்வங்களும் ஒன்றே என்றும், முக்கியமாக சிவ சக்தி அத்வைதம், ஹரிஹர அத்வைதம் ஆகியவற்றையும் மக்களுக்குப் போதித்

தார் ஆசாரியர். எல்லா தேவதைகளுக்கும் வைதிகமாகவும், மந்திர — தந்திர சாஸ்திர முறைப்படியும் பூஜிப்பதற்கான பூஜாக்கிரமங்களை அமைத்தருளினார். 'பிரபஞ்ச ஸாரம்' என்ற நூலில் சகல தேவதைகளையும் எப்படி வழிபடுவது என்பதை விளக்கினார்.

அக்காலத்தில் ஈசுவரன், தேவி, திருமால், கணநாதன், ஆதித்தன், ஷண்முகன் ஆகியோரின் வழிபாடு பிரசித்தமாக யிருந்தது. இந்தத் தெய்வங்களின் ஆராதனை முறையைச் செப்பம் செய்து தந்தார் ஆசாரியர். இதனாலேயே ஷண்மத ஸ்தாபனாசாரியர் என்ற விருதையும் பெற்றார். ராமநவமியும், கிருஷ்ண ஜயந்தியும், சிவராத்திரியும் நாட்டுக்கெல்லாம் பொது விழாக்கள் ஆனது அவரது திருப் பணியே. சங்கரருக்குப் பின்னர் தோன்றிய விசிஷ்டாத்வைதம், சைவ சித்தாந்தம் முதலியவற்றுக்கு அவர் அத்வைத ஸ்தாபகர் என்ற முறையில் முரண்பட்டவராக இருக்கலாம். ஆனால் இந்த சமயங்களைச் சேர்ந்தோர் இன்று தொழும் மகாதேவனையும், நாராயண மூர்த்தியையும் பர மதங்கள் அடித்துச் செல்லாதபடி தடுத்த ஷண்மத ஸ்தாபகர் என்ற முறையில் இந்த நாட்டில் பிறந்துள்ள ஒவ்வொருவருமே அவருக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள்.

தமது அத்வைத மதத்தைப் பரிபூரணமாக ஏற்றவர்கள் ஈசன், அம்



பிகை, நாரணன், விநாயகன், ஆதித்தன் ஆகிய மூர்த்தங்களைச் சேர்த்துப் பஞ்சாயதனமாக பூஜிக்க வேண்டுமெனப் பணித்தார் சங்கரர். ஸ்கந்தன் அக்னி ஸ்வருபனனபடியால் வைதிக கர்மாக்களே அவனுக்குரிய வழிபாடு என்று கருதித் தனிப்பட்ட மூர்த்தியாக அவனைச் சேர்க்கவில்லை என்பர்.

பயங்கரத்தையும், பீபத்ஸத்தையும், இந்திரிய வேகத்தையும், பக்தியிலிருந்து களைந்து அன்புருவான ஆண்டவனை அன்புடன் போற்றி அனைவருடனும் அன்பு பூணும் பாங்கினை எடுத்துரைத்தவர் ஆசாரியரே. மக்களுடைய உணர்வுகளும் அறிவும் பாயும் எல்லாத் துறைகளையும் நிர்மலமாக்கித் தந்த கருணை வள்ளல் அவர். அந்த வள்ளன்மையை வாரி வழங்குவதற்காகவே கருணை வெள்ளமாக நாடெங்கிலும் சஞ்சரித்த மகான் அவர்.

ஆசாரியருடைய திக்விஜயத்தின் போது பல சுவை செறிந்த சம்பவங்கள் நிகழ்ந்ததாக சங்கர விஜய நூல்களும் கர்ண பரம்பரைக் கதைகளும் கூறுகின்றன. இவற்றில் சிலவற்றைப் பார்ப்போம். முன்பே கூறியதுபோல் இந்தச் சம்பவங்கள் இங்கே குறிப்பிட்டிருக்கும் கிரமத்தில்தான் நிகழ்ந்தன வென்று நிச்சயமாகக் கொள்வதற்கில்லை.

பிரயாகையில் ஒரு நாள் ஆசாரியர் தமது சீடர்களுடன் அக்ஷய வட தரிசனத்துக்காகச் சென்றார். தொழுநோயால் பயங்கரமாகப் பீடிக்கப்பட்ட ஓர் இளைஞன் அம்மரக்கிளை யொன்றில் தூக்கிட்டுக் கொள்ள முயலுவதைக் கண்டார். அவனும் அவரைக் கண்டான். ஆலடியில் சீடர்கள் புடைசூழ நின்ற ஆசானைக் கண்டதும் சாட்சாத் தட்சிணா மூர்த்தியே சுக, ஸனகாதிகளுடன் தரிசனம் சாதிப்பதாகக் கண்டு புல்லரித்துப் போனான் அவன். ஆசாரியரது அடியிணைகளை ஆசிரயித்தான். அவனைக் கண்டதும் ஆசாரியரின் பட்டுப் போன்ற உள்ளத்தில் இரத்தம் கசிந்தது. வெண்பட்டை நிகர்த்த அவரது திருக்கரம் அந்த கோரமான மாமிச பிண்டத்தை அணுகியது. செம்பட்டுக்கு ஒப்பான அவரது உள்ளங்கை, அதனைச் சற்றும் கூச்சமின்றித் தடவிக் கொடுத்தது. அகில புவனங்களையும் ஆக்கிப் பந்துகளாகப் போட்டு விளையாடி, தொடும் இடமெல்லாம் தீஞ்சுவை நீரும், தங்கச் சுரங்கமும், தன தானியங்களுமாகச் செழிக்கவைக்கும் அம்பிகையின் கைமலரல்லவா அது? அது பட்ட மாத்திரத்தில் அந்த யுவனின் நோய் தீர்ந்தது. பூரணத்துவத்தின் ஸ்பரிசம் பட்ட பின்னும் அவனது அங்கங்கள் குறைவு நீங்கி வளர்ச்சி பெறாமலிருக்குமா? துன்பம் தீர்ந்ததால் உதங்கர் என்ற திருநாமம் பெற்று ஆசாரியரின் சிஷ்யன் ஆனான் அந்த வாலிபன்.

கௌசாம்பியில் ஆசாரியர் சுற்றுலா சென்று கொண்டிருக்கையில் ஒரு தாயும் தந்தையும் தங்களது ஒரே மகனுடைய சடலத்தின் மீது விழுந்து இதயம் பிளக்கக் கதறிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவரது உள்ளம் துடித்தது. 'பரிகாரம் தேட முடியாத விஷயங்களில் பரிதாபப்பட்டு என்ன பயன்?' என்று ஏதோ ஒரு குரல் அவர் காதில் விழுந்தது. 'பரிதாபமா? நான் யார் பரிதாபப்பட? இந்தப் பெற்றோர்களின் துயரை என்னுடையதாக எண்ணிப் பரிதாபப்படும் கருணை எனக்கேது? அந்த அளவுக்குக் கருணை கொள்ளக் கூடியவன் ஈசன் ஒருவனே அல்லவா?' என்று எண்ணி அதையே தாமறியாமல் முணுமுணுத்தார் அவர். விந்தை! இறந்து கிடந்த அந்த வேதியச் சிறுவன் மறு விநாடியே தூக்கத்திலிருந்து விழிப்பது போல எழுந்து நின்றான்.

விந்தையா? இதில் என்ன விந்தை இருக்கிறது? ஈசனால் பெருக்க முடியும் கருணையை ஆசாரியரால் பெருக்க முடியாதா, என்ன? ஈசன் வேறு, ஆசாரியர் வேறு அல்லவே!

ஒரு விதத்தில் பார்த்தால் வேறுதான். ஈசுவரன் கர்ம நியதிக்கு ஏற்பப் பலனளிப்பதில் சற்றுக் கடுமையாகக்கூட இருந்து விடுவான். ஆனால் ஆசாரியர் மற்றவர்களின் மாற்ற முடியாத கர்ம பலன்களையும் தாம் வாங்கிக் கொண்டு அவர்களுக்கு அருள் புரிந்தவரல்லவா? ஆம், ஆண்டவனின் ஆணையான கர்ம நியதியை யதிகள் ஒருபோதும் அற்றுப் போகும்படி செய்ய மாட்டார்கள். எனினும் தங்களது வினை யாவற்றையும் எரித்த அந்த மகாத்மாக்கள், துன்புறுவோரைக் காணும்போது தயை பெருகி அவர்களது கர்மங்களைத் தாங்கள் ஏற்று அவர்களை கர்மப் பயனிலிருந்து விடுவிப்பதுமுண்டு. கர்த்தர் சிலுவையில் அறைபட்டதும், பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் புற்று நோய்க்கு ஆளானதும், ரமண பகவானுக்குப் பிளவை கண்டதும் இதனால்தான் என்பது அடியார்களின் கருத்தாகும். எனவேதான் மகான்களை ஞானத்துக்காக மட்டும் நாட வேண்டும், இதர பலன்களை விரும்பி அவர்களை அணுகக் கூடாது என்று கூறுவதும்.

பிரயாகைக்குக்கிழக்கேயுள்ள பிரதிஷ்டானபுரியில் பிரபாகராசாரியர் என்ற

கர்மவாதியை ஆசாரியர் சந்தித்து வாதிட்டு அவரை அத்வைதியாக்கியதாகச் சில வரலாறுகள் கூறுகின்றன.

வெளியில் நாஸ்திகம் பேசி, மறைவாகத் தெய்வம் தொழுபவர்களை இப்போது பார்க்கிறோ மல்லவா? அந்த நாளிலேயே அமரசிம்மன் என்ற ஜைனன் இப்படித்தான் இருந்திருக்கிறான்.

ஜைனனான போதிலும் அவன் கலைவாணியை உபாசித்திருக்கிறான். அவள் அருளால்தான் அவன் ஏராளமான ஜைனமத நூல்களைச் செய்தது. அமரகோசம் என்ற வடமொழி அகராதியும் அவன் இயற்றியதே. அதில் எல்லாத் தெய்வங்களைப் பற்றியுமே அவன் ஏற்றத் தாழ்வில்லாமல் சொல்லி யிருப்பது விசேஷமாகும்.

அமரசிம்மன் தான் ஒரு திரைக்குப் பின்னாலிருந்தே ஆசாரியருடன் வாக்கு வாதம் நடத்துவேன் என்று கூறினான். திரைக்குப் பின்னால் ஒரு குடத்தை வைத்து அதில் கலைத் தேவியை ஆவாஹனம் செய்திருந்தான் அமரசிம்மன். இதனை அறியாத, ஆசாரியரும் அவனது நிபந்தனைக்கு ஒப்புதல் அளித்தார். திரை மறைவிலிருந்து ஆசாரியரிடம் மிகவும் நெருடலான வினாக்களைக் கேட்கத் தொடங்கினான் அவன். அவற்றுக்கும் அவர் அற்புதமாக மறுமொழி பகர்ந்தார். அதேபோல அவர் வினவிய சிக்கலான கேள்விகளுக்கும் அமரசிம்மன் மிகவும் யுக்தியுடன் விடை கூறினான். இதில் சங்கரருக்கு ஒரு சங்கை ஏற்பட்டது. தமது ஞான திருஷ்டியைக் கொண்டு ஒரு கண நேரம் நோக்கினார். அவருக்கு உண்மை புரிந்து விட்டது! இத்தனை நேரம் அவருடன் வாதிட்டது அமரசிம்மன் அல்ல; சரஸ்வதி தேவியே அவனுக்காகப் பேசியிருக்கிறாள் என்று தெரிந்து கொண்டார் அவர்.

''வாணி! நீ இப்படி மீண்டும்மீண்டும் என்னைச் சோதிக்கலாமா?'' என்றார்.

உடனே திரை அறுந்து விழுந்தது. அதன் பின் சங்கரர் கேட்ட கேள்விகளுக்கு அமரசிம்மனால் உத்தரம் தர இயலவில்லை. அமரசிம்மன் வெட்கமுற்றான். இல்லத்தின் பின் அங்கணத்துக்குச் சென்று மறைந்தான். அங்கு வானளாவத் தீ மூட்டினான். அந்தக் கொழுந்து விட்டெரியும் தீயில் தான் எழுதிய கிரந்தங்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் போட்டுக் கொளுத்தலானான். அந்தத் தீயைவிட உக்கிரமாகக் கொதித்துக் கொண் டிருந்தது அவனது உள்ளம்.

திடீரென, தென்றல் காற்றே இறுகி ஓர் உருவமாகித் தன்னை ஸ்பரிசிப்பது போன்ற ஒரு குளுமை அவன் கரங்களில் பாய்ந்தது. ஆசாரிய சங்கரர்தாம் தனது கரங்களை இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார் என்பது புரிய அவனுக்குச் சிறிது நேரமாயிற்று.

''அமரசிம்மா! என்ன அசட்டுக் காரியம் செய்து விட்டாய்? உன்னுடைய புத்தி தீட்சண்யத்துக்கெல்லாம் அமுத மொழியில் உருக்கொடுத்தது இப்படி அக்கினிக்கு இரையாக்குவதற்குத்தானா? இந்த கோரச் செயலை நிறுத்துவாய் அப்பனே!'' என்றார் அவர் தமது தயாள குணத்தோடு. அவனது கையில் எஞ்சியிருந்த ஒரே ஓர் ஏட்டுச் சுவடிக்கட்டை உலகுக்குக் காத்துத் தந்தார். அதுவே அமரகோசம் என்பார்கள்.

ஆந்திர தேசத்திலுள்ள ஸ்ரீசைலம் வந்தடைந்தார் ஆசாரியர். அங்கு காபாலிகர்கள் பலர் வசித்துவந்தனர்.



நரபலி முதலிய வற்றால் கபாலீசனைத் திருப்தி செய்ய எண்ணுபவர்கள் அவர்கள். அவர்களும் நரமாமிசம் உண்பர். மயானத்தில் வசிப்பர். இத்தகைய கோர உபாசனைகள் அவசியமே இல்லை என்று ஆசாரியர் கண்டித்து வந்தார். இதனால், உக்ர பைரவரை ஆராதித்து வந்த ஸ்ரீ சைலவாசியாகிய ஒரு காபாலிகனுக்கு ஆசாரியர் மீது எல்லையற்ற கோபம். அவரைத் தீர்த்துக் கட்டி விடுவது என்று தீர்மானித்தான்.

ஒரு நாள் சங்கரர் தனியாகத் தியானத்தில் அமர்ந்திருந்த போது அவரை அணுகினான். மெய்ப் பொருளுடன் ஒன்றி ஒளிப் பிழம்பாக வீற்றிருந்தார்

ஆசாரியர். காபாலிகன் மனம் மாறியது; அந்த நிலையில் அவரைக் கொல்லக் கூடாது என்று எண்ணினான். என்ன, அவ்வளவு நல்லவனாகி விட்டானா? இல்லை. அவரை அந்த நிலையிலேயே, அதாவது அவரறியாமலே, கொன்று விடும் உத்தேசத்தை மட்டும்தான் அவன் மாற்றிக் கொண்டான்.

திவ்விய தேஜஸ் காந்தும் இவர் ஓர் உத்தமமான சந்நியாசி! இவரை வெறுமனே கொலை செய்யாமல், பைரவருக்குப் பலியாகக் கொடுத்தால் தனக்குக் கடவுள் பிரத்யட்சமாவார், அஷ்டமகா சித்திகளும், அரச பதவியும் அளிப்பார் என்று ஒரு நப்பாசை ஏற்பட்டது அவனுக்கு. பலி கொடுக்கப்படும் வஸ்துதான் பலிக்கு ஆளாகப் போகிறோம் என்றறிந்து பிரியத்துடன் பலியானால்தான் பலி கொடுப்பவனுடைய இச்சை பலிக்கும். எனவேதான் சங்கரர் அறியாமல் அவரைக் கொல்ல வேண்டாம் என்று எண்ணினான் காபாலிகன்.

கருணை நனி நிரம்பித் துளும்பிச் சொட்டுகிறது அந்தத் தெய்வத் திருவுருவிலிருந்து. அக் கருணையையே நம்பி சங்கரரைத் தியானத்திலிருந்து எழுப்பினான், காபாலிகன். நமஸ்கரித்தான். பரிவு பொழியும் கண்களால் அவனை நோக்கினார் பரமாசாரியர். தாம் வாய் திறந்து பேசாமலே, அவன் சொல்ல விரும்புவதை வெளியிட அநுமதித்தார்.

திக்கித் திணறி அந்தக் காபாலிகன் ஒருவாறு விஷயத்தைச் சொன்னான்.

''நான் உக்கிர பைரவருக்கு எவ்வளவோ பலியெல்லாம் கொடுத்தும் தரிசனம் பெறவில்லை. சக்கரவர்த்தி ஒருவன் தலையையாவது, அல்லது ஆத்மஞானி ஒருவர் தலையையாவது பலி கொடுத்தால் சுவாமி பிரத்யட்சமாவார்....'' என்று இழுத்தான்.

ஆசாரியர் மிருதுவாக நகைத்தார்.

''அப்பனே, சக்கரவர்த்தியின் தலைக்கு நீ முயற்சி செய்யாதே! முயன்றால் உன் தலையே போய்விடும். என்னை நீ ஆத்மஞானி என்று எண்ணினால், இந்த என் தலையை நீ எடுத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணையே இல்லை. இதில் நவரத்தின கசிதமான கிரீடமும், குண்டலமும் கிடையாது. 'வெறும் முடிகூடக் கிடையாது. சிக்கனமாகப் பலி தந்தே பிரயோஜனம் அடைவாய்'' என்றார் அருளாளர்.

காபாலிகனுக்கு அப்படியும் ஒரு சந்தேகம் — இவர் முழு மனசுடன் பலியாக விரும்புகிறாரா, அல்லது தன்னிடம் பயந்துகொண்டு இணங்கி, அது தெரியாதிருக்க இப்படி எல்லாம் பரிமளிக்கப் பேசுகிறாரா என்று. எனவே, ''நீங்கள் முழு விருப்பத்துடன் பலியானால்தான் எனக்கு நிச்சயமாகப் பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் உங்களைக் கொல்வதுதான் மிச்சமாகும்'' என்று வியக்தமாகக் கூறினான்.

சங்கரர் நன்றாக மலர்ந்தே சிரித்தார்.

''பலியாவதற்கு எனக்குப் பூரண சம்மதம்தான், அப்பனே! இந்த உடம்பு கூடத் தேவ காரியமாகப் பிரயோஜனப்படுகிறது என்று நீ சொல்வதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?

''மரம் பட்டுப் போனால் விறகுக்கு உதவுகிறது: இறந்து போன மாட்டுத் தோல் செருப்புக்குப் பயன்படுகிறது. மான், புலி இவற்றின் சர்மம் ஆசனத்துக்கு உபயோகமாகிறது. யானையினுடைய தந்தம் எத்தனையோ பயனைத் தருகிறது. சில விலங்கினங்களின் நரம்புகள் வீணை முதலிய வாத்தியங்களில் உபயோகமாகிறது. மனித உடல்தான் உயிர் போனபின் ஒன்றுக்கும் பிரயோஜனமாவதில்லை; உயிர் உள்ள மட்டும்தான் இதற்கு மதிப்பு என்று எண்ணியிருந்தேன். நீயோ, இந்த உடலையும் உபயோகமுள்ளதாக்குகிறேன்; அதுவும் சாதாரண மக்களுக்கின்றி இறைவனுக்கே உபயோகமாக்குகிறேன் என்கிறாய். அதன் பின்னும் இந்த உடலை உனக்குத் தர நான் ஏன் தாமதிக்கவேண்டும்? நீயும் தாமதிக்காமல் காரியத்தை முடித்துக்கொள். ஏனென்றால், இப்போது என் சிஷ்ய பிள்ளைகள் இங்கு வரக்கூடும். அவர்கள் உன் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்பார்கள். எனவே, யோசியாதே! உம்....'' என்றார், பிறர்க்குரியாளர்.

கண்களை மூடிக்கொண்டு, யோகாசனத்தமர்ந்து ஆத்மாவை ஏகவஸ்துவில் கரைத்துக் கொண்டு விட்டார் சங்கரர். அது அவருக்குச் சகஜம்தான். (உண்மையான அர்த்தத்திலேயே 'சகஜம்' தான் — அதாவது அவரது இயல்போடு பிறந்தது தான்.) உடலைப் பற்றி இனி அவருக்கு எண்ணமேயில்லை.

பெருமகிழ்ச்சியுடன் கத்தியை உருவினான் காபாலிகன். தன் மதத்தின் எதிரியைத் தொலைக்கிறோம்; தனக்குக் கடவுள் தரிசனமும் அஷ்டமாசித்திகளும் கிடைக்கவும் வழி தேடிக் கொள்கிறோம், என்ற இரட்டை மகிழ்ச்சியுடன் கத்தியை ஒரே வீச்சாக வீசினான்.

''ஹா....''

பயங்கரமான அலறல் அந்த வனவனாந்தரத்தை ஊடுருவிச் சென்று ஸ்ரீசைலத்தின் முகடுகளில் மோதியது; அந்த மலையே அலறுவது போல அந்த ஆஹாகாரம் சுழன்று சுழன்று எதிரொலித்தது. (தொடரும்)



நீதிமன்றம் வளர்ந்த கதை

எம். எஸ். சிவஸ்வாமி

ஆங்கிலேயர் ஆட்சியினால் நமது நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகள் பற்றி முன் காலங்களில் கல்லூரிகளில் கட்டுரைகள் எழுதுவதுண்டு. கட்டுரைகளில் ஒவ்வோர் அம்சம் முக்கியமானதாக எடுத்துக் காட்டப்படும். ஆனால் முக்கியமானது என்று எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது பார்லிமெண்டு முறை ஜனநாயகமும், நீதி பரிபாலன முறையும். இவ்விரண்டும், ஒன்றோடொன்று இணைந்தவையே. ஆனாலும் சட்டம் இயற்றுவதும், சட்டத்தைப் பரிபாலனம் செய்வதும் இரண்டு வெவ்வேறு தொழில்கள். சட்டம் செய்வது சட்ட சபையினர்கள்; சட்டத்தைப் பரிபாலிப்பவர்கள் நீதிபதிகள். சட்டத்துக்கு முன் எல்லாப் பிரஜைகளும் சமம். நியாயம் எல்லாப் பிரஜைகளுக்கும் ஒரே சீராக வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஜனநாயக முறையில் அடிப்படையானது. இதை நடைமுறையில் நிலைநாட்டுபவை நீதிமன்றங்கள்.

சென்னை மாகாண உயர்நீதி மன்றம் ஏற்பட்டு இப்போது நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆகஸ்டு 6-ம் தேதி நீதி மன்றத்தின் நூறுவது ஆண்டு விழா விரிவாகக் கொண்டாடப்பட விருக்கிறது. உண்மையில் சரித்திர வாயிலாகப் பார்க்கப் போனால் நமது நீதி மன்றத்தின் ஆரம்ப காலம் சுமார் மூந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுலிருந்தே தொடங்குகிறது.


1678-ம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைக் காரியாலயம் செய்த தீர்மானத்தின்படி இந்தியா சம்பந்தப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளைக் கவர்னர் தமது குழுவினரின் உதவியுடன் கவனித்து வந்தார். இந்தக் குழுவினர் வியாபாரம், அரசியல் நடைமுறை முதலிய விஷயங்களைக் கவனித்ததுடன், வாரத்தில் இரண்டு நாட்கள் வழக்குகளையும் விசாரித்துத் தீர்ப்பளித்து வந்தனர். சில்லறைத் தகராறுகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளும் இங்கிலாந்தில் அந்தக் காலத்தில் இருந்த நடைமுறைப்படி ஜூரர்களின் உதவியைக் கொண்டே பரிசீலனை செய்யப்பட்டன. இதைச் சுருக்கமாகக் 'கவர்னரின் கௌன்சில் கோர்ட்டு' எனச் சொல்வார்கள். இந்தக் கவர்னர் குழுவினர் வழங்கிய நீதி பரிபாலன முறையிலிருந்து நமது உயர்நீதி மன்றத்தின் வரலாறு தொடங்குகிறது.

சுமார் எட்டு ஆண்டுகள் இந்த முறை நடைபெற்று வந்தது. பின்னர் 1686-ம் ஆண்டில் 'கௌன்சில் கோர்ட்டு'க்குப் பதிலாக "அட்மிராலிடி கோர்ட்டு" ஏற்படுத்தப்பட்டது. இப்பெயர் மாற்றத்திலிருந்தே, இங்கே விசாரிக்கப்பட்ட வழக்குகள், கப்பல் வியாபார சம்பந்தப்பட்டவையாக இருந்தன என்பது தெரிகிறது. இதர வழக்குகள் இருந்தாலும், இம்மாதிரி வழக்குகளே இங்கே அதிகமாக விசாரிக்கப் பட்டன. 1727-ம் ஆண்டில் அட்மிராலிடி கோர்ட்டுக்குப் பதிலாக 'மேயர் கோர்ட்டு' ஏற்படுத்தப் பட்டது. நகராட்சியினரைப் பிரதானமாகக் கொண்ட இந்த அமைப்பில் 'ஆல்டர்மென்' என்ற

நீதிபதி
ஸர் டி. முத்துஸ்வாமி அய்யர்
(1878-1895)



நீதிபதி
ஸர் தாமஸ் ஸ்ட்ரேஞ்ஜ்
(1801-1817)




நீதிபதி
ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர்
(1895-1907)





நீதிபதி
ஸர் ஸி. சங்கரன் நாயர்
(1908-1915)



நீதிபதி
எப்.எச்.பி. தியாப்ஜி
(1913-1915)



நீதிபதி
டி. சதாசிவ அய்யர்
(1912-1921)

பத்து உபதலைவர்களைத் துணையாகக் கொண்டு சட்ட பரிபாலனம் நடைபெற்று வந்தது. பிற்காலத்தில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் செய்துவந்த தொழிலே இந்த மேயர் கோர்ட்டுகள் கவனித்து வந்தன. இந்தக் கோர்ட்டுகளின் தீர்ப்புகளைப் புனர் பரிசீலனை செய்ய கவர்னருடைய கௌன்சில் கோர்ட்டுக்கு அதிகாரம் இருந்தது. ஆகவே இரண்டு படிவங்களில் பணியாற்றும் நீதி மன்றம் அந்தக் காலத்திலேயே தோன்றி விட்டது.

இந்த முறை சுமார் எழுபது ஆண்டுகள் மாறுதல் இன்றி நடந்து வந்ததே அது வெற்றிகரமாகச்செயல்புரிந்ததற்குச் சான்று. 1798-ம் ஆண்டில் இங்கிலாந்தில் மூன்றாவது ஜார்ஜ் மன்னராக இருந்த காலம். அப்போது தான் மன்னர் முத்திரை தாங்கி, அதிகார பூர்வமாகச் சென்னையில் நீதி மன்றம் ஏற்படுத்தப்பட்டது. ''ரிக்கார்டரின் கோர்ட்டு'' (Court of Recorder) என்று வழங்கப்பட்ட இந்தக் கோர்ட்டு, மேயர் கோர்ட்டின் இடத்தைப் பெற்றதுடன், ஸிவில், கிரிமினல், வர்த்தகம், சமய ஸ்தாபனம் முதலியன குறித்த எல்லா வழக்குகளையும் தன் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

இதன் தலைவராக நியமிக்கப்பட்ட ஸர் தாமஸ் ஸ்ட்ரேன்ஜ் நமது நீதிபதிகள் வரிசையில் முன் நிற்பவர். உயர்ந்த கல்விமான். ஆங்கில சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நோவாஸ்கோஷியா என்ற பிரதேசத்தில் பிரதம நீதிபதியாகப் பணியாற்றிப் புகழுடன் விளங்கி வந்தார். அவருடைய அறிவும் ஆற்றலும் இந்தியாவுக்குப் பயன்பட வேண்டும் என்று அவர் நோவாஸ்கோஷியாவிலிருந்து சென்னைக்கு முதல் ரிகார்டராக அனுப்பப்பட்டாராம். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ரிக்கார்டர் கோர்ட்டுக்குப் பதிலாக மன்னர் அளித்த உரிமைப் பத்திரப்படி உண்டான உயர்நீதி மன்றம் ஸ்தாபிக்கப்பட்டதும், 1801-ம் ஆண்டில் முதல் உயர் நீதிபதியாக இவர்தான் நியமிக்கப்பட்டார். சுமார் பதினேழு ஆண்டுகள் இங்கே பணியாற்றியுள்ளார். 'ஹிந்து சட்டம்' பற்றி ஓர் அருமையான நூலும் எழுதியுள்ளார். இந்த விஷயத்தில் ஆரம்ப காலப் புத்தகங்களில் இவர் எழுதியதுதான் முக்கியமானது. தவிரவும், சட்ட முறைகளைப் பற்றிய பல முக்கியமான சீர்திருத்தங்கள் நாட்டுக்கு அவசியம் என்று அந்தக் காலத்திலேயே எடுத்துச் சொல்லியுள்ளார். ஆங்கி

நீதிபதி
டி. வி. சேஷகிரி அய்யர்
(1914-1920)



நீதிபதி
ஜே. ஏ. பி. வாலிஸ்
(1914-1921)



நீதிபதி
ஸி. வி. குமாரஸ்வாமி சாஸ்திரி
(1914-1930)





நீதிபதி
வேபா. ராமேசம்
(1920-1935)



நீதிபதி
எம். டி. தேவதாஸ்
(1921-1926)



நீதிபதி
ஸர் மர்ரே கட்ஸ் ட்ராட்டர்
(1915-1924)

லேய முறைப்படி நீதி வழங்குவது இந்திய மக்களுக்கு ஒவ்வாதது; இங்குள்ள பழக்க வழக்க, சம்பிரதாய, பண்பாட்டுக்கிணங்க இந்திய நீதி முறை உருவாக வேண்டும் என்றும் எடுத்துக் காட்டியுள்ள அறிஞர் இவர். இவருடைய உருவப் படம் இன்றும் உயர் நீதிமன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பது பொருத்தமேயல்லவா ?

ரிக்கார்டர் கோர்ட்டுக்குப் பின்னும் ஏற்பட்டது உயர்நீதி மன்றம் என்று மேலே சொல்லப்பட்டது. இது 1800-ம் ஆண்டு இறுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. ரிகார்டர் கோர்ட்டு செலுத்தி வந்த முழு அதிகார உரிமை இதற்கு அளிக்கப்பட்டதுடன், ஆங்கிலேயர்களைத் தவிர, இந்திய மக்களுக்கும் இந்த மன்றத்தின் முழு உபயோகமும் விஸ்தரிக்கப்பட்டது. மேலும், சேரானை நிர்வாகத்துக்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் தானே மேற்கொள்ளவும் இந்த மன்றத்துக்கு உரிமைகள் வழங்கப்பட்டன. உயர் நீதி மன்றத்தைத் தவிர, சிவில் வழக்குகளின் மேல் விசாரணைக்காக ஸத்தர் திவானி அதாலத் என்ற மன்றமும், அதே போல் கிரிமினல் விவகார மேல் விசாரணைக்கு ஸத்தர் ஃபௌஜ்தாரி அதாலத் என்ற மன்றமும், கீழ்ப் படிவத்தில் சிவில், கிரிமினல் கோர்ட்டுகளும், மாகாண தலைநகரங்களிலும் இதர நகரங்களிலும் சிறு வழக்குகளுக்கான சிறிய தாவா (ஸ்மால் காஸ்) கோர்ட்டுகளும், நகரங்களில் தனி மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளும் செயல் புரிந்து வந்தன. ஆகவே வழக்கு மன்றங்களின் பாகுபாடுகள், வழக்குகளின் பாகுபாடுகள், அதிகார வரம்பு, கீழ்க் கோர்ட்டு, மேல் கோர்ட்டு பிரிவினைகள், நிர்வாகப் பிணைப்புக்கள் எல்லாம் 1802-ம் ஆண்டிலேயே தெளிவாகத் தோன்றத் தொடங்கி விட்டன. ரிக்கார்டர் கோர்ட்டு, வழக்கறிஞர்களைப் பதிவு செய்துகொள்ளும் முறையைக்கூட முதன் முதலாக ஆரம்பித்தது என்பதைக் கவனிக்கும்போது நீதி பரிபாலன முறைக்கு எவ்வளவு பலமாகவும், தீர்க்க தரிசனத்துடனும் அப்போது இருந்த அறிஞர்கள் அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி வியக்கவே தோன்றும்.

1802-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட உயர் நீதி மன்றத்துக்கு ஒரு பிரதம நீதிபதியும், இரண்டு உப நீதிபதிகளும் இருந்தனர். இங்கிலாந்தில் 'மன்னரின் நீதி மன்றம்'

நீதிபதி
வெ. வி. அனந்தகிருஷ்ணய்யர்
(1928-1934)



நீதிபதி
கே. பண்டாலே
(1928-1934)




நீதிபதி திவான்பகதூர்
கே. சுந்தரம் செட்டியார்
(1930-1935)





நீதிபதி
பாண்டுரங்கராவ்
(1934-1941)



நீதிபதி
கே. பி. லஷ்மணராவ்
(1934-1947)



நீதிபதி
பி. வெங்கடரமணராவ் நாயுடு
(1935-1942)

என்னென்ன அதிகாரங்களை வகித்து வந்ததோ, அதே போன்ற அதிகாரங்களை இந்தியாவில் இந்த உயர்நீதி மன்றம் வகித்து வந்தது. இதற்கென்று தனி அதிகார முத்திரை இருந்தது. மன்றத்தின் உத்தரவுகள் எல்லாம் மன்னர் பெயராலேயே பிறப்பிக்கப்பட்டு ஷெரிப் என்ற அதிகாரியின் மூலமாக நிறைவேற்றப்பட்டன. வக்கீல்களைப் பதிவு செய்யவும், அட்டார்னிகள், பாரிஸ்டர்கள் (அந்தக் காலத்தில் இந்தப் பாகுபாடுகள் இருந்தன) ஜாபிதா வைத்துக் கொள்ளவும், வழக்குகளுக்குக் கட்டண விதிகள் நிர்ணயிக்கவும், சிப்பந்திகளை நியமிக்கவும் பூரண உரிமை இம்மன்றத்துக்கு இருந்தது. கைதிகளை ஜெயிலுக்கு அனுப்புவதும் (அப்போது ஜெயில் கோட்டைக்குள்ளேயிருந்தது) வெளியே அழைத்து வருவதும், அவர்களுக்குத் தண்டனை விதித்து அதை நிறைவேற்றுவதும், மரண தண்டனையை ரத்து செய்வதும் கூட இம்மன்றத்தின் பொறுப்பில் இருந்து வந்தது. அறுபது ஆண்டுக் காலத்துக்கு இந்த உயர்நீதிமன்றம் தான் நீதி பரிபாலனம் செய்து வந்தது.

1861-ம் ஆண்டில்தான் இந்திய ஹைகோர்ட்டுச் சட்டம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டு, இப்போது நாம் காணும் நீதி மன்ற அமைப்பு தோன்றியது. இச்சட்டம் ஆங்கிலேய ஆட்சி பீடத்துக்கு இந்தியாவில் நீதிமன்றங்களை ஸ்தாபிக்கும் அதிகாரத்தை அளித்தது. இதன்படி, எங்கெல்லாம் தேவையோ, அங்கெல்லாம் உயர்நீதி மன்றங்களை அமைத்து, நீதிபதிகளை நியமித்து, சம்பள விகிதங்களை நிர்ணயித்து, மற்றும் இதர நடைமுறைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டது. இதன் விளைவாகத்தான் இந்தியாவின் மூன்று முக்கிய நகரங்களான சென்னை, பம்பாய், கல்கத்தா மூன்றிலும் பின்னர் இதர தலைநகரங்களிலும் உயர்நீதி மன்றங்கள் தோன்றின. சென்னை உயர்நீதி மன்றம் தோன்றியவுடன், அதுவரையில் தனிப் பெயர் கொண்டு செயலாற்றிக் கொண்டிருந்த திவானி அதாலத், ஃபௌஜ்தாரி அதாலத் கோர்ட்டுகளும் கலைக்கப்பட்டு அவை எல்லாம் உயர் நீதி மன்றத்தில் ஐக்கியமாகி விட்டன. உயர்நீதி மன்றத்தின் கீழ்ப்படிவங்களில் இப்போது காணப்படும் முறையில் கீழ்க் கோர்ட்டுகள் அமைக்கப்பட்டன.

சென்னை உயர்நீதி மன்ற ஸ்தாபன உத்தரவு 1862, ஜூன் 26-ல் பிறப்பிக்கப்பட்டுச் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது. அதே ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதியன்று ஹைகோர்ட்டின் ஆரம்ப விழா சாதாரண எளிய முறையில் கொண்டாடப்பட்டது. கடற்கரை முதற் சாலையில் துறைமுகத்துக்கு எதிரில் இப்போது கலெக்டர் அலுவலகம் உள்ள இடத்தில்தான் ஹைகோர்ட்டு முதலில் தொடங்கப்பட்டது. பிரதம நீதிபதியும், ஐந்து உபநீதிபதிகளும் அங்கே பிரசன்னமாகி இருந்தனர். வழக்குகளை விசாரித்து முடிவு செய்யும் புது அமைப்பு முறைகளையும் மன்றத்தின் விதிமுறை, செய்முறைகளையும் பிரதம நீதிபதி மற்றவர்களுக்கு விளக்கி வைத்தார்.

அந்த ஆரம்ப காலத்தில் நீதிபதிகள் எல்லாரும் ஆங்கிலேயர்களே. சிலர் பாரிஸ்டர்களாகத் தேர்ச்சி பெற்றவர்கள், சிலர் வழக்கறிஞர்கள், சிலர் ஐ. ஸி. எஸ். அங்கத்தினர்கள். அரசாங்க நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வந்த சாமர்த்தியசாலிகள் இவர்கள்.

சென்னை உயர்நீதி மன்ற வரலாற்றின் அடுத்த முக்கியமான கட்டம், இப்போது உள்ள கம்பீரமான கட்டடத்துக்கு அது மாறியது. இந்தக் கட்டடம் கட்ட அந்தக் காலத்திலேயே 13 லட்சம் ரூபாய் பிடித்ததாம். இதற்கு அஸ்திவாரம் போட்டவர்களின் தீர்க்கதரிசனத்தையும், கட்டடத்துக்கு அமைப்பு வகுத்தவர்களின் விசால புத்தியையும், எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். விரிவான முறையில், நூறு வருஷங்களுக்குப் பின் இப்போது காணும் அளவுக்கு கோர்ட்டுகளுக்குத் தேவைப்படும் விசாலமான அறைகளையும், கோர்ட்டையொட்டி நீதிபதிகளுக்கு அறைகளையும், வக்கீல்களுக்குத் தனித் தனி அறைகளையும் விஸ்தரிப்பதற்கு ஏற்றபடியல்லவா அப்போதே இக்கட்டடம் எழுப்பப்பட்டிருக்கிறது! சென்னைக்குப் புதிதாக வருபவர்கள் என்னென்ன இடங்களைப் பார்க்கத் தவறக் கூடாது என்று ஜாபிதா தயாரித்தால், சென்னை உயர்நீதி மன்றக் கட்டடம்

அதில் நிச்சயமாக இடம் பெறும். அவ்வளவு பெரிய ஸ்தலத்திலும் இப்போது நெருக்கடி அதிகரித்துவிட்டது என்பதால் பக்கத்தில் ஒரு புதுக் கட்டடம் வேகமாக எழும்பிக் கொண்டிருக்கிறது. இதைக் கூட அந்தக் கால திட்ட நிபுணர்கள் எதிர்பார்த்தே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் விஸ்தாரமாக இவ்வளவு காலி இடம் அப்போதே ஒதுக்கி வைத்திருப்பார்களா?

1892-ம் ஆண்டில் இப்போதுள்ள கட்டடம் பூர்த்தி அடைந்து விட்டது. ஜூலை 12-ம் தேதி உயர்நீதி மன்றம் பழைய ஹைகோர்ட்டுக் கட்டடத்திலிருந்து புது மனைக்கு மாறியது. அப்போது ஸர் ஆர்தர் காலின்ஸ் பிரதம நீதிபதியாக இருந்தார். இந்த வைபவத்தில் பங்கு கொண்ட இதர நீதிபதிகளில் ஸர் டி. முத்துசாமி அய்யரும் ஒருவர்.

''நாம் மறைந்து வெகுகாலத்துக்குப் பிறகும் ஜாதி, மதம், வகுப்பு முதலிய பேதமின்றி இந்த விசாலமான கோர்ட்டுகளில் சட்டமும் நியாயமும் சீராக வழங்கச் சாமர்த்தியமும், தீரமும் நிறைந்த பலர் தோன்றிக் கொண்டிருப்பர் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்'' என்று ஆரம்ப விழாவில் ஸர் ஆர்தர் காலின்ஸ் உணர்ச்சியுடன் பேசினார்.

பிந்தைய ஆண்டுகளில் உயர்நீதி மன்றச் சட்டம் இரண்டு மூன்று முறைகள் திருத்தப் பட்டது. 1915-ம் ஆண்டு செய்த மாறுதலில் நீதிபதிகளின் எண்ணிக்கை இருபதுக்கு உயர்த்தப்பட்டது. மற்றும், பதவி நியமனங்கள் சம்பந்தமாகச் சில விதிமுறைகளும் வகுக்கப்பட்டன. கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு வரையில் ஒவ்வொன்றின் அதிகார வரம்பும் வரையறை செய்யப்பட்டது. 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் வந்த போது அகில இந்தியாவுக்கும் ஓர் உயர் பெடரல் கோர்ட்டு ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் இங்கிலாந்திலிருந்த தலைமை நீதி மன்றமாகிய பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொள்ளும் உரிமையும் இருந்தது. பெடரல் கோர்ட்டும் அப்பீல் விசாரணை செய்து கொண்டிருந்தது.

சுதந்திரம் வந்து நாட்டின் நிர்வாகம் மாறிய பின் நாட்டின் இரண்டாவது பெரும் ஸ்தானமாக மதிக்கப்படும் நீதி பரிபாலன மன்றத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.


1949-ம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்பு ஏற்பட்டதும், பழைய இந்திய அரசாங்கச் சட்டமும், அதன் மூலம் உருவாக்கப்பட்ட பெடரல் கோர்ட்டும் ரத்து செய்யப்பட்டன. சுப்ரீம் கோர்ட்டு என்ற இந்திய உயர்நீதி மன்றம் புது தில்லியில் ஸ்தாபிக்கப்பட்டு, பாரதத்தின் நீதி பரிபாலனத்துக்கு உயர் பீடமாக விளங்கி வருகிறது. ராஜ்ய ஹைகோர்ட்டுகள் உபயோகிக்கும் முத்திரையிலும் முன்னிருந்த ஆங்கில அரசுச் சின்னங்கள் அகற்றப்பட்டு அசோக சக்கரமும் ''ஸத்யமேவ ஜயதே'' என்ற உபநிஷத மகா மந்திரமும் இப்போது பொறிக்கப்பட்டிருக்கின்றன.

1953-ம் ஆண்டு ஆந்திர ராஜ்யம் தனி ராஜ்யமாகப் பிரிந்த போது, சென்னை உயர் நீதி மன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை பன்னிரண்டுக்குக் குறைக்கப்பட்டது. இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் நீதிபதிகளின் உருவப் படங்கள் அடுத்த பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இந்த நூறு ஆண்டுகளில் நீதி மன்றங்களில் நீதிபதிகளாக அமர்ந்திருந்தவர்களின் வரிசை நீண்டது. ஆங்கிலேயர் பலர் பதவிக்கு அணிகலன்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். அயல் நாட்டினராக இருந்தாலும், ஆங்கிலேயர்கள் அசாதாரண சிரத்தையுடன் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையும் சட்ட கோட்பாடுகளையும் தெரிந்து கொண்டு, அவற்றை மிகத் திறமையாகக் கையாண்டு சட்ட பரிபாலனம் செய்ததை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும்.

வழக்கறிஞர்களாக இருந்து நீதிபதியாக உயர்ந்தவர்கள் பலர். வழக்கறிஞர்கள் பலர் சட்ட அறிவுக்கும் வாதத் திறமைக்கும், குறுக்கு விசாரணைக்கும், பேச்சு சாமர்த்தியத்துக்கும் புகழ் பெற்றவர்கள். நீதிபதிகள் வரிசையில் ஸர் டி. முத்துசாமி அய்யர், ஸர். எஸ். மணி அய்யர் போன்ற பெயர்களை அடிக்கடி மரியாதையுடன் சொல்லுவது போல் வழக்கறிஞர் வரிசையில் ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார், வி. கிருஷ்ணசாமி அய்யர், ஸர் பி.எஸ். சிவசாமி அய்யர், டி. ஆர். ராமச்சந்திர அய்யர், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்,

நீதிபதி
சி. மாதவன் நாயர்
(1935-1938)



நீதிபதி
கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (1938-1944)



நீதிபதி
பி. ஸோமய்யா
(1939-1946)



எஸ். சீனிவாச அய்யங்கார், எல். ஏ. கோவிந்தராகவ அய்யர் போன்ற பெரியார்களின் நினைவும் பெருமையை அளிக்கிறது.

நீதிமன்றத்துக்கு உள்ளமதிப்புக்கும் கௌரவத்துக்கும் நீதிபதிகளுக்கு எவ்வளவு பங்கு உண்டோ, அவ்வளவு வக்கீல்களுக்கும் உண்டு. வக்கீல்களின் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வந்ததுடன், அவர்களுக்குள்ள தொழில் முறை வசதிகளையும் கட்டுப்பாடுகளையும் அவர்களே ஏற்படுத்திக் கொண்டு கண்யமான முறையில் தொழில் நடத்தி வருகின்றனர். சென்னை வக்கீல்கள் சங்கம் 1889ம் ஆண்டிலேயே ஸ்தாபிக்கப்பட்டு, அதை யொட்டி விரிவான நூல் நிலையமும் ஏற்பட்டுள்ளது. கோர்ட்டுகளுக்கு இட நெருக்கடி ஏற்பட்டிருப்பது போல், வக்கீல் சங்க நூல் நிலையங்களுக்கும் இட நெருக்கடி தோன்றி விட்டது. புதுக் கட்டடம் முடிந்த பின்னர் ஒருகால் இந்த நெருக்கடியும் தீரக் கூடும்.

சமீப காலங்களில் நமது அரசாங்கத்தின் பொருளாதாரக் கோட்பாடுகளினாலும் சோஷலிஸ சமுதாயக் கருத்துக்களாலும் அரசாங்கத்தின் அதிகாரம் பிரமிக்கத் தக்க முறையில் வளர்ந்து விட்டது. சட்டங்களும், மிக வேகமாக இயற்றப்பட்டு வருகின்றன. அவை தோன்றும் வேகமும் சாவதானமாக யோசித்துக்கூடப் பார்க்க நேரமில்லாது அவசரமாக இயற்றப்படுவதால் தோன்றும் குறைபாடுகளும் பொது மக்களைத் தாக்குவதோடு சிக்கல்களை அவிழ்க்க வேண்டிய வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் பெரிதும் சோதிக்கின்றன. இதை அரசாங்கம் செய்யும் சோதனையாகக் கருதாமல் சத்தியம் தரும் சோதனையாகக் கருதி நேரிய முறையில் தீர்ப்புக் கூறும் நமது நீதி மன்றங்களை எவ்வளவோ பாராட்டலாம். அரசாங்கத்தின் போக்குகளுக்குத் தடையாக நீதி மன்றங்களின் தீர்ப்புக்கள் இருந்து விட்டாலோ, சட்டத்தைத் 'திருத்தி' அமைத்து விடுகிறது அரசாங்கம். மனித சுதந்திரத்துக்கும் உரிமைகளுக்கும் பாதுகாப்பாக இருப்பது சட்டமன்றங்கள் என்றாலும், அந்தப் பணியைப் பூரண திருப்தியுடன் அவை செய்ய முடியாதபடி நிலைமை மாறிக் கொண்டு வருகிறது என்பது நூற்றாண்டு விழா கொண்டாடும் மகிழ்ச்சியிலும் இழையோடிக் கொண்டுதான் இருக்கிறது. 70 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய பிரதம நீதிபதி காலின்ஸ் சொல்லிய வார்த்தைகளை இந்தச் சமயத்தில் நினைவு படுத்திக் கொள்ளவும் தோன்றுகிறது.



பி. வி. ராஜமன்னார்
(சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் இந்தியப் பிரதம நீதிபதி)

ஒரு நூற்றாண்டு காலத்தில் சென்னை உயர் நீதி மன்றத்துக்கு மின்சுடர் போல் பிரகாசம் அளித்துத் தென்னகத்தவர்களின் மதிப்பையும் உயர்த்திய எல்லா நீதி நெறி நிறைந்த பெரியார்களையும் இன்று எண்ணி அஞ்சலி செலுத்துவது நமது கடமையாகும்.

இன்றைய நீதிபதிகள்

அமர்ந்திருப்பவர்கள்: 1. நீதிபதிகள் திரு கே. சீனிவாசன், 2. ஜி. ஆர். ஜகதீசன், 3. எஸ். கணபதியாபிள்ளை, 4. பிரதம நீதிபதி திரு எஸ். ராமச்சந்திரய்யர், 5. எம். அனந்தநாராயணன், 6. கே. என். வீராசாமி, 7. டி. வெங்கடாத்ரி.

நிற்பவர்கள்: 1. திரு எஸ். கே. கஜேந்திரம் நாயுடு (ரிஜிஸ்ட்ரார்) நீதிபதிகள் ஆர். சதாசிவம், 3. பி. எஸ். கைலாசம், 4. பி. ராமகிருஷ்ணன், 5. எச். பி. வி. குன்அஹமத்குட்டி, 6. கே. எஸ். வெங்கடராமன், 7. வி. டி. கந்தசாமி (மாஸ்டர்)





சட்டத்தில் சிறந்தது சென்னை

டி. எல். வெங்கட்ராமய்யர்



நீதிபதி
டி. எல். வெங்கடராம அய்யர்
(1951-1953)

"சட்டத்தில் சிறந்தது சென்னை. சென்னை வக்கீல்களின் சூக்ஷ்ம மேதையும், ஆழ்ந்த சட்ட அறிவும் வெகுவாகப் போற்றத்தக்க அம்சங்கள் என்று பாரத தேசம் முழுவதிலும் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறார்களே, இது வாஸ்தவம் தானா?" என்று என்னை ஒரு பெரியவர் கேட்டார். அதற்கு நான் "வக்கீலாகத் தொழில் நடத்தியவன் என்ற முறையில் என் அனுபவத்தில் சிலவற்றைச் சொல்லுகிறேன். இவற்றைக் கேட்ட பின், நீங்கள் கேட்ட கேள்விக்கு விடையை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொன்னேன்.

நான் சுமார் முப்பத்திநான்கு ஆண்டுகள் வக்கீல் தொழில் நடத்தினேன். அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த வக்கீல்கள் பலர். அவர்களில் சிலரைப் பற்றியே இங்கு சொல்லவிரும்புகிறேன்.

முதலாவதாக என்னுடைய குரு வர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யரைப் பற்றிச் சொல்லுகிறேன். சட்ட சாஸ்திரத்தில் அவர் ஒரு நிபுணர். சட்டத்தில் அவரை ஓர் ஸ்மிருதிகாரர் என்றே சொல்ல வேண்டும். தர்ம சாஸ்திர தத்துவங்களிலும் சூக்ஷ்மங்களிலும் அவர் கரை கண்டவர். அவருடைய ஞாபக சக்தி அபாரமானது. முக்கியமான தீர்ப்புகள் எல்லாம் அவருக்கு மனப்பாடம். தீர்ப்புக்கள் மட்டும் அல்ல. அவற்றில் உள்ள முக்கியமான வாக்கியங்களையெல்லாம் புத்தகத்தைப் பார்க்காமல் அப்படியே சொல்லும் சக்தி வாய்ந்தவர்.

அவர் ஆவேசமுடன் வாதிடுவதில் வல்லவர். அவரது வாதங்களில் வேகமும் விறுவிறுப்பும் இருக்கும். ஆணி அறைந்தது போல் இவர் வாதம் புரிவார். அச்சம் சிறிதும் இல்லாமல் பேசுவார். நீதிபதிகள் தமது கட்சிக்கு விரோதமாக இருந்தாலும், எதிர்க்கட்சி வக்கீல் திறமையுடன் பேசி விருந்தாலும் மனக்கலக்கம் அடைய மாட்டார். தன்னம்பிக்கையுடன் தமது கட்சியை வாதிக்கும் சாமர்த்திய முள்ளவர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரின் வாதம் ஓர் அழகான கட்டடம் எழுப்பப்படுவது போல் நல்ல திட்டத்துடன் அடுக்கடுக்காக அமைந்திருக்கும். எதைச் சொல்ல வேண்டும், எப்போது சொல்ல வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும் என்பதை எல்லாம்முன் கூட்டியே யோசனை செய்துவைத்து அப்படியே சொல்லி முடிப்பார். எதிர்க்கட்சியின் சார்பில் ஒரு புதுவிஷயம் சொல்லப்பட்டால் அதற்குப் பதில் புத்தகத்தைப் படித்துவிட்டுத்தான் சொல்ல வேண்டும் என்பது இல்லை. உடனுக்குடனேயே தம் புத்தி நுட்பத்தைக் கொண்டு எதிர்வாதம் புரிந்து விடுவார்.

அட்வகேட்
டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி



அட்வகேட் அல்லாடி
கிருஷ்ணசாமி அய்யர்



அட்வகேட்
டி. ஆர். ராமச்சந்திர அய்யர்





நீதிபதி
ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார்
(1901-1904)



நீதிபதி
எம். வெங்கட சுப்பராவ்
(1921-1936)



நீதிபதி
ஸர் எஸ். வரதாச்சாரி
(1934-1939)

இவர்தான் எனக்குத் தொழில் முறையைப் போதித்தார். என்னுடைய யோக்கியதை, பதவி எல்லாவற்றிற்கும் அவரே காரணம்.

அடுத்ததாக, ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இவர் ஸர். வி. பாஷ்யம் அய்யங்காரிடம் தயாரானவர். ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருக்கு எதிர்ப் தரப்பில் முக்கியமாக ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்கார் ஆஜராவார். அவர் சட்டத்தில் அதி நிபுணர். இவருக்குத் தெரியாத தீர்ப்புகளே இல்லை எனலாம். மிகவும் சூக்ஷ்மமான மேதா விலாசம் உள்ளவர். குசாக்கிர (தருப்பை நுனிபோலக் கூரிய) புத்தியுள்ளவர் என்று அவரைச் சொன்னால் அது பொருத்தமே. விஷயங்களை அதிவிரைவில் கிரகித்துக்கொள்ளும் சமர்த்தர். ஒன்று போலவே இருக்கும் இரண்டு விஷயங்களில் ஒரு சிறு வித்தியாசத்தைக் கண்டு பிடித்து அதை வைத்துக் கொண்டு ஒரு கோட்டையைக் கூடக் கட்டி விடுவார். அவர் புரியும் வாதங்களைக் கவனத்துடன் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் அநேக விஷயங்கள் தெரிந்து கொள்ளலாம். தாம் பேசும் போது தாம் சொல்லும் விஷயத்திலேயே லயித்து, அதிலேயே மூழ்கி, தாம் நீதிபதிக்கு முன் வாதித்துக் கொண்டிருப்பதைக் கூட மறந்து விடுவார். அதனால் சில சமயங்களில் அவர் சொல்லும் விஷயங்களை முழுவதும் புரிந்து கொள்ளாமலே நீதிபதிகள் அவருக்கு எதிராகத் தீர்ப்பு அளித்து விடுவதும் உண்டு. ஓர் அப்பீல் வழக்கில் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் நானும் ஒரு கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கு ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரும் ஆஜரானோம். ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்கார் ஓர் அபூர்வமான சட்ட நுணுக்கத்தை (லா பாயிண்ட்) எடுத்துச் சொன்னார். அதற்குச் சரியான பதில் எங்களிடம் இல்லை. ஆகவே நான் தயங்கிக் கொண்டிருந்தேன். அப்போது அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ''அய்யங்கார் அவர்கள் சொன்னதை நீதிபதிகள் புரிந்து கொள்ளவில்லை. நாம் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை'' என்று சும்மா இருந்து விட்டார். தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாகவே வழங்கப்பட்டது.

பிரபலமான வக்கீல்களில் ஒருவர் ஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திரய்யர். அவர் லலிதமான நடையில்தான் பேசுவார். குழந்தைகளால் கூட அவர் சொல்லுவதைப் புரிந்து கொள்ள முடியும். ருஜு அம்சம் சம்பந்தமாக உள்ள வழக்கு விஷயங்களை மிகத் தெளிவாகச் சொல்லுவார். அவர் வாதம்செய்வது பௌராணிகர் கதை சொல்லுவது போல் இருக்கும். ஒரு கிரிமினல் அப்பீல் வழக்கில் அவர் பேசும்

நீதிபதி
எம். பதஞ்சலி சாஸ்திரி
(1939-1947)



நீதிபதி
என். சந்திரசேகர அய்யர்
(1943-1948)



நீதிபதி
விஞ்சமூரி கோவிந்தராஜாச்சாரி
(1946-1948)





நீதிபதி
எஸ்.பஞ்சாபகேச சாஸ்திரியார்
(1948-1951),



நீதிபதி
என். சோமசுந்தரம்
(1949-1960)



நீதிபதி
கே. சுப்பாராவ்
(1948-1954)


போது. ''ஒரே ஒரு ஊரில் ஒரு ஜமீன்தார் இருந்தார். அவருக்குப் பிள்ளை இல்லை....'' என்று கதையாகவே ஆரம்பித்தார். நீதிபதிகள் கட்டை அப்படியே வைத்து விட்டுக் கதை கேட்டு கொண்டிருந்தனர். தஸ்தவேஜிகள் சுமார் ஐந்நூறு பக்கங்களுக்கு மேல் இருந்தாலும், ஸ்ரீ ராமச்சந்திரய்யர் அவற்றைத் தொடக்கூட இல்லை. இப்படியே அவர் கேசுகளில் பேசுவது வழக்கம். மற்றவர்கள் ஒரு நாள் பேசுவதை ராமச்சந்திரய்யர் ஒரு மணியில் பேசி விடுவார். அவர் வாதத்தைக் கேட்கும் போது, தம்முடைய கட்சிக்காரர் மிகவும் நல்லவர் என்றும் எதிர்க் கட்சிக்காரர் தான் அயோக்கியர் என்ற எண்ணத்தைச் சுலபமாக உண்டாக்கி விடுவார். அவர் ஒரு வழக்கில் பேசி முடித்த பின், எதிரியின் கேசு மிகவும் பலமாக இருந்தால்தான் அவருக்கு ஜயம் கிடைக்கும். சந்தேகமான விவகாரமாக இருந்தால் ராமச்சந்திரய்யர் பேச்சினுல் ஜெயித்து விடுவார்.

சட்ட நுணுக்கங்களில் ராமச்சந்திரய்யர் அவ்வளவு நிபுணர் என்று சொல்ல முடியாது. ஆகையால் அவற்றைக் கூடியவரையில் விலக்கி ருஜு அம்சங்களை வைத்துக் கொண்டே கேஸை நடத்தி ஜயித்து விடுவார்.

ஓர் அப்பீல் வழக்கில் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் நுட்பமான ஒரு சட்ட நுணுக்க அம்சத்தை மிகதிறமையாக விளக்கிப் பேசி முடித்தார். நீதிபதிகளுக்குச் சட்டப்படி எவ்வாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்பதில் சந்தேகம் ஏற்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் பேசுவதற்கு எழுந்த ராமச்சந்திரய்யர், ''அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் அபூர்வமான சட்ட விஷயங்களை எடுத்துப் பேசியிருக்கிறார். ஆனால் இந்த வழக்கில் அவைகளைப் பற்றிக் கவனிக்க வேண்டாம். சில விஷயங்கள் ருஜுவாகி இருக்கின்றன. அவற்றைக் கொண்டே இந்த அப்பீலைத் தள்ளுபடி செய்ய வேண்டும். எதிரிக்கு அடமானத்தின் பேரில் நான் பணம் கொடுத்திருக்கிறேன் என்று ருஜுவாகி யிருக்கிறது. இதை வசூலிக்க வழக்குத் தொடுத்திருக்கிறேன். இதைக் கொடுக்கக் கூடாது என்பதற்கு இவ்வளவு சட்டம் வேண்டுமா?'' என்று வெகுளிமையாகச் சொன்னார். இதைக் கேட்ட நீதிபதிகள் இந்த விஷயம் எங்கே ருஜுவாகியுள்ளது என்று கவனித்துக் குறிப்பெடுத்துக் கொண்டு, சட்ட அம்சத்தைக் கவனியாமலே வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டனர்.

ஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திர அய்யரைப் பற்றிச் சொல்லும்போது திவான் பஹதூர் டி. ரங்காச்சாரியாரின் ஞாபகம் எனக்கு

நீதிபதி
ஏ. எஸ். பி. அய்யர்
(1950-1959)



நீதிபதி
பி. வி. பாலகிருஷ்ணய்யர்
(1950-1960)



நீதிபதி
பஷீர் அகமத் சயீத்
(1950-1960)





நீதிபதி
டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு (1950-1956)



நீதிபதி
பி. என். ராமஸ்வாமி
(1951-1960)



நீதிபதி
கே. ராமஸ்வாமி கவுண்டர்
(1951-1957)

வருகிறது. அவரைப் போலவே, ரங்காச்சாரியாரும் ருஜு அம்சங்களைப் பேசுவதில் சமர்த்தர். கடுமையான உழைப்பாளி. கட்டைப் பூராவும் தலைகீழாகப் படித்து விடுவார். வாதம் புரியும் போது ஒன்றையும் விடமாட்டார். தாம் சொல்லுவதைப் பல தடவை, பலவிதத்தில் சொல்லி நீதிபதிகள் புரிந்து கொள்ளும்படி செய்வார். அவர்கள் புரிந்து கொள்ளும் வரையில் விடமாட்டார். இந்த அம்சத்தில் அவர் வாதத்தை உடும்புப் பிடிக்குச் சமமாகச் சொல்லலாம். தமக்கு விரோதமாக உள்ள நீதிபதிகளைக் கூட விடாக் கண்டராகப் பேசிப் பேசி வழக்கை ஜெயித்து விடுவார். பொறுத்தவர் பூமி ஆள்வார் என்பதற்கு டி. ரங்காச்சாரியாரை உதாரணமாகச் சொல்லலாம். ராமச்சந்திரய்யரைப் போலவே இவருக்கும் சட்டத்தில் நிபுணர் என்ற பெயர் இருந்ததில்லை.

ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார், சட்டம், ருஜு இவ்விரண்டு அம்சங்களிலுமே நிபுணர். இவர் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரிடம் தயாரானவர். இவர் அமைதியுடனும் நிதானத்துடனும் வாதம் செய்வார். சொல்லும் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நிறுத்தியே பேசுவார். சொல்லுவதில் ஒன்றும் மிகையாக இருக்காது.

ருஜு அம்சங்களைப் பற்றிப் பேசும்போது தக்க ஆதாரத்துடனே பேசுவார். சட்ட விஷயம் பேசும் போது அது எவ்வளவு தூரம் அனுகூலம், எவ்வளவு தூரம் பிரதிகூலம் என்று இரண்டையுமே சொல்லி விடுவார். அவர் வாதத்தைக் கேட்டால் எந்த விஷயத்தைப் பற்றியும் ஒரு தெளிவு ஏற்படும். படபடப்பு, வேகம் முதலியவை அவருடைய பேச்சில் காண முடியாது. ஆகவே ஆரவாரத்திலும் மயங்கும் சில கட்சிக்காரர்கள் சாஸ்திரிகளிடம் அதிகமாகப் போவது கிடையாது. ஆனால் நீதிபதிகள் சாஸ்திரிகளுடைய வாதத்துக்கு விசேஷ கௌரவம் அளித்திருந்தார்கள். அவர் சொல்லுவது சரியாகத்தான் இருக்கும் என்று ஏற்றுக் கொள்ளுவார்கள்.

பொதுவாக எல்லா அம்சங்களும் நன்றாக ஏ அவோடு பொருந்தியிருந்த வக்கீல்களில் டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார் ஒருவர்.

இவ்வளவும் ஸர். எஸ். வரதாச்சாரியாருக்கும் பொருந்தும். ஆனால் காலஞ்சென்ற பெரியார்கள் சிலரைப் பற்றியே சொல்லுவதென்று ஆரம்பித்த இந்தக் கட்டுரையில் இவரைப் பற்றியும் மற்றப் பெரியோர்களைப் பற்றியும் சொல்லாமல் விடுகிறேன்.

இது வரையில் சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் துறையில் சிறந்து விளங்கிய வக்கீல்

நீதிபதி
என்.ராஜகோபால அய்யங்கார்
(1953-1959)



அட்வகேட்
வி. எல். எதிராஜ்



நீதிபதி
பி. ராஜகோபாலன்
(1957, 58-1961)




களைப் பற்றியே பிரஸ்தாபித்தேன். இப்போது 'ஒரிஜினல்' துறையில் விளங்கிய வக்கீல்களில் சிலரைப் பற்றிச் சொல்லுகிறேன்.

ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார் இவர்களில் முக்கியமானவர். நன்றாகப் படித்தவர். உலக அனுபவம் மிக்கவர். இவர் குறுக்கு விசாரணையில் நிபுணர். எதிர்த்தரப்பு சாட்சியை விரோதியாக வைத்து நடத்த மாட்டார். சுமுகமாகப் பேசி, தானும் அவருக்கு வேண்டியவர் போல் பாவித்துக் கேள்விகளை சாந்தமாகவும் மிருதுவாகவும் கேட்பார். ''இந்த சாட்சி நியாயத்தையேதான் சொல்லுவார். அவருடைய தோற்றமே அதைச் சொல்லுகிறதே'' என்று அவர் மனத்தில் ஒரு நட்பு மனப்பான்மையை உண்டாக்கி விடுவார். சாட்சிகளுக்குத் தெரியாமலே அவருக்கு வேண்டிய விஷயங்களை அவர்களிடமிருந்து வரவழைத்துக் கொள்ளுவார். அவர் வாதம் தெளிவாகவும், ஒவ்வொரு வார்த்தையையும் அவர் அழுத்திச் சொல்லுவதும் கேட்க இன்பமாக இருக்கும். இவருடைய பேச்சைப் பற்றி ஒரு தீர்ப்பில் ஒரு பிரபலமான நீதிபதி ''தேனைப் போல் மதுரமாக இருந்தது'' என்று சொல்லியிருக்கிறார்.

ஸர் வேங்கடசுப்பாராவ் ஒரிஜினல் பகுதியில் மற்றொரு பிரபலமான வக்கீல். அவர் கட்டுகளைச் சாங்கோபாங்கமாகக் கவனத்துடன் படிப்பார். தாம் பேச வேண்டிய எல்லாவற்றையும் விவரமாகக் குறிப்பு எழுதிக் கொள்வார். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் போது ஒவ்வொரு விஷயமாக எடுத்துக் கொண்டு, அதைப் பற்றிக் கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, பந்தாவாக நடத்துவார். அவர் வாதமும் அதே ரீதியில் இருக்கும். அதில் தவறு இருக்காது என்றே நீதிபதிகள் நினைப்பார்கள்.

இன்னும் எவ்வளவோ பெரியவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் மேற்கண்டவர்களுடைய யோக்யதைகளைக் கொண்டே, ''சட்டத்தில் சிறந்தது சென்னை'' என்பது விளங்கவில்லையா ?



1913-ம் வருஷத்திய சென்னை உயர்நீதி-மன்ற நீதிபதிகளையும் நீதித்துறை நிர்வாகிகளையும் படத்தில் காணலாம். நீதிபதிகள்-அமர்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து வலமாக) 1. தியாப்ஜி. 2. ஸர் டி. சதாசிவய்யர், 3. பி. ஆர். சுந்தரய்யர், 4. மில்லர், 5. பென்ஸன், 6. ஸர் சார்லஸ் அர்னால்ட் வைட், 7. ஜான் வாலிஸ், 8. சங்கரன் நாயர், 9. பேக்வெல், 10. ஸ்பென்ஸர்.

ஸ்ரீநிவாசன் பேர் கொண்ட சீலர் மூவர்

வி.சீ.கோபாலரத்தினம்

மங்காத புகழுடன் பிரகாசித்து வரும் நமது சென்னை உயர்நீதி மன்றத்துக்கு இந்த வருஷத்தோடு நூறு வயது நிறைகிறது. 1861-ம் ஆண்டு இந்திய உயர் நீதி மன்றச் சட்டம் பூரண உருப் பெற்றதும் நமது தேசத்தில் மூன்று முக்கிய மாகாணங்களில் உயர் நீதி மன்றங்களை ஸ்தாபித்தனர் ஆங்கிலேயர். இதற்கு முன்பு தேசத்தில் நடந்த பெரிய சிப்பாய்க் கலகத்தின் விளைவாகக் கிழக்கிந்திய கம்பெனி போன்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்குக் கீழ்ப்படாமல் இந்திய நாட்டின் நிர்வாகம் நேரடியாக இங்கிலாந்து தேசத்தின் அரசாட்சியின் கீழ் வந்தது. உடனே மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் பார்லிமெண்டின் அங்கீகாரத்துடன் இந்திய நாட்டில் மூன்று உயர் நீதி மன்றங்களை நிறுவினார்கள்.

சென்னையில் அதற்கு முன்பு சுப்ரீம் கோர்ட் என்ற உயர் நீதி மன்றம் 1802-ம் வருஷத்திலிருந்து மக்களுக்கு நீதி வழங்கி வந்தது. அந்த மன்றத்தைக் கலைத்துப் புது உயர் நீதி மன்றம் ஏற்படுத்தவே, கலைந்த மன்றத்திலிருந்த சில நீதிபதிகள் புது மன்றத்தின் நீதி ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டார்கள். முதல் பிரதம நீதிபதி ஸர் காலின் ஸ்காட்லண்ட் என்பவர். மிகவும் திறமை வாய்ந்தவர் என்று புகழ் பெற்ற இவரைச் சீமையிலிருந்து வரவழைத்து அந்த உயர்ந்த பதவியில் அமர்த்தினார்கள். அவருடன்கூட இன்னும் நான்கு நீதிபதிகளும் அமர்த்தப்பட்டார்கள். 1877லிருந்து ஸர் டி. முத்துசாமி அய்யர் அவர்கள் நீதிபதியாக்கப்பட்டார். பதினெட்டு வருஷங்கள் அந்தப் பதவியில் அமர்ந்து வெற்றிகரமாகப் பல அருமையான தீர்ப்புகளையெல்லாம் வழங்கி 'நீதியின் இருப்பிடம்' என்ற பெரும் பேர் பெற்றார். இன்று வரையில் ஸர் டி. முத்துசாமி அய்யர் பெற்ற பெயரை வேறு ஒருவரும் பெறவில்லை என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. 1895-ம் வருஷம் பிப்ரவரி மாதம் அந்தப் பெரியார் காலமானார்.

ஆரம்பத்தில் பரம ஏழையாக இருந்து மாதம் ஒரு ரூபாய் சம்பளம் பெற்றுப் படிப்படியாக முன்னுக்கு வந்து இவ்வித உயர்ந்த பதவியை அடைந்து இந்தியர்களின் பெருமையை உயர்த்தினார் ஸர் முத்துசாமி அய்யர். அவருடன் சகாக்களாகவே நெருங்கிப் பழகிய சர் வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்களும் சர் எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்களும் முத்துசாமி அய்யர் காலமானபின் தத்தம் கீர்த்தியை நிலைநாட்டினார்கள். பொதுமக்கள் 'மகான் மணி அய்யர்' என்று அழைக்கும் அளவுக்கு அவர்களின் அன்பையும் மதிப்பையும் அமோகமாகப் பெற்றவர் எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

பாஷ்யம் அய்யங்காரோ பிரதம சட்டவாதி (அட்வகேட் ஜெனரல்) பதவியை வகித்ததுடன் நீதிபதி பதவியையும் மூன்று வருடங்கள் நிரம்ப வகித்தார். வெகு காலம் வரை வழக்கறிஞர் தொழில் புரிந்து அந்தத் தொழிலுக்கே ஒரு கௌரவத்தையும் ஜனங்களிடம் நன்மதிப்பையும் தேடிக் கொடுத்தார்.

இவர்களுக்குப் பின் ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யர், ஸ்ரீ பி. ஆர். சுந்தரம் அய்யர், ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் என்னும் மூவர் இத்துறையில் மகத்தான விருத்தி அடைந்து பெரிய பெரிய வழக்குகளையெல்லாம் திறமையுடன் வாதித்து வெற்றி கண்டு புகழடைந்தவர்கள். ஸர் சிவஸ்வாமி அய்யர் அவர்கள் கவர்னருடைய மந்திராலோசனை சபையில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டுப் புகழடைந்து பிறகு அதிலிருந்து விலகிப் பல ஆண்டுகள் பொதுஜனசேவை செய்து மங்காப் புகழடைந்தார். இவர் சென்னை சர்வ




அட்வகேட்
எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார்



நீதிபதி
வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்
(1924-1928)



அட்வகேட்
'கே. ஸ்ரீனிவாச அய்யங்கார்



டி. டி. கே. யின் சோஷலிஸம் நிரூபணமாகிவிட்டது.

கலாசாலையின் தலைவராகவும் இருந்து சிரேஷ்டமான பல சேவைகளைச் செய்துள்ளார். ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யர், ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் ஆகிய இருவரது வாழ்வையும் நிறை போட்டால், யார் அதிகமான தான தர்மங்கள் செய்தவர் என்பதைத் தீர்மானிப்பது சற்றுக் கடினம். சிவஸ்வாமி அய்யர் தமது சொத்துக்கள் அனைத்தையும் தமது சொந்த ஊரில் உள்ள ஓர் உயர்தரப் பள்ளிக்கும் சென்னை மயிலாப்பூரில் உள்ள தேசியப் பெண் பாடசாலைக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டார். கிருஷ்ணசாமி அய்யர் எத்தனையோ தர்ம ஸ்தாபனங்களுக்கு ஏராளமாக உதவியிருக்கிறார்.

இவர்களுக்குப் பிறகு தோன்றி, இவர்களுக்கே சீடர்களாய் இருந்த இருவரும், மற்றொருவரும் சட்டத் தொழிலில் அளவற்ற கீர்த்தியையும், வெற்றியையும் சம்பாதித்தார்கள். இம் மூவருக்கும் பெயர் ஒன்றே தான். ஒருவர் ஸ்ரீ கே. சீனிவாச அய்யங்கார். அடுத்தவர் ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்கார். மூன்றாமவர் ஸ்ரீ வி. வி. சீனிவாச அய்யங்கார். பெயர் மாத்திரம் ஒன்றே தவிர இம் மூவரும் வழக்கு வாதம் புரிவதில் தமக்கெனத் தனிப்பட்ட வழிகளில் சென்று வெற்றி கண்டவர்கள்.



அட்வகேட்
அனந்தாச்சார்லு

ஸ்ரீ கே. சீனிவாச அய்யங்கார்

ஸ்ரீ பி. ஆர். சுந்தரம் அய்யர் அவர்களிடத்தில் சில காலம் சீடராக இருந்தார் இவர். பின் தாமே தனித்து நின்று தொழிலை நடத்த ஆரம்பித்தார். மிகக் கூர்மையான புத்தியை உடையவர். ஆயிரம் பக்கங்கள் கொண்ட வழக்குக் கட்டுகளைச் சளைக்காமல் கூடக் கவனமாகப் படித்து அதில் ஓர் இடத்திலாவது ஒரு குறிப்பும் செய்யாமல், அதன் சாராம்சம் அவ்வளவையும் தம் கவனத்திலேயே ஏற்று நிறுத்திக்



நீதிபதி
வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்
(1909-1911)



அட்வகேட்
ஸர் பி.எஸ்.சிவஸ்வாமி அய்யர்



நீதிபதி
பி. ஆர். சுந்தர அய்யர்
(1911-1913)

கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்தவர். மிகுந்த சாதுரியமுள்ளவர். தம் கட்சிக் காரருடைய கட்சியை எடுத்துச் சொல்லும்போது கேட்கும் நீதிபதியின் கவனமெல்லாம் தம் மீதே பதியும்படியாக அத்தனை சுவாரசியமாக வழக்கை நடத்துவார். எதிர்க் கட்சியில் வாதிக்கும் வக்கீல், மிகுந்த கவனத்துடன் இவர் சொல்லுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு, இவர் தவறாக ஏதாவது சொன்னால் உடனே மறுத்து அதைத் திருத்தாது விட்டாரானால் அதோடு அவரது கட்சிக்காரனின் தாவா 'என்னாகி' விடும். ஏனென்றால் ஸ்ரீ கே. சீனிவாச அய்யங்கார் அவர்கள் ரிகார்டில் உள்ளதையும் இல்லாததையும் வெகு கெட்டிக்காரத்தனமாகக் கலந்து சகஜமாய் உரைப்பதில் வல்லவர். வாக்குச் சாதுரியத்தினாலும் மேலே சொன்ன கெட்டிக்காரத்தனத்தினாலும் அனேகமாகத் தாம் எடுத்துக்கொண்ட வழக்குகளில் வெற்றி கண்டவர். அது மட்டுமா? நாக்கில் நரம்பின்றி வழக்காடுவதற்கான 'ஃபீஸ்' தொகையையும் அதிகமாகவே, கண்டிப்புடன் கேட்பார். அப்படியே பெறவும் பெறுவார்.

1915-ம் வருஷம் சில மாதங்கள் நீதிபதி பதவியை ஏற்று அந்தத் துறையிலும் வெகு சாமர்த்தியமாகத் தீர்ப்புக்களைச் சொல்லி ஏராளமாகச் சேர்ந்து போயிருந்த வழக்குகளையெல்லாம் கவேகத்தில் தீர்த்துக் கட்டினார். சில காலம் பிரதம சட்ட வாதியாய் இருந்து மேன்மையுறப் பணி புரிந்தார். திடீரென்று நீதிபதி பதவியை ராஜிநாமாச் செய்து விட்டு மறுபடியும் வழக்கு வாதத்தை மேற்கொண்டார். முன்னிலும் நாலைந்து பங்கு அதிகமான ஃபீஸைக் கண்டிப்பாகக் கேட்டுப் பெற்றார். ரூபாய் ஐயாயிரம் மதிப்புள்ள ஒரு தாவாவில் இவரை ஆஜராகும்படி கேட்ட கட்சிக்காரரிடம் ரூபாய் ஐயாயிரம் ஃபீஸாகக் கேட்டு வாங்கவும் வாங்கிவிட்டார். பத்தாயிரக் கணக்கில் ஃபீஸ் வாங்கி வக்கீல் தொழிலின் மதிப்பையே உயர்த்தியவர் இவர். கவர்னர் தமது மந்திராலோசனை சபையில் இவரை ஒரு வருட காலம் அங்கம் வகிக்கச் செய்து இவருடைய அருமையான சேவையைச் சர்க்காரும் பெறும் படி செய்தார். சேவகம் பிடிக்காமல் மறுபடியும் அதை உதறிவிட்டு வாதத் தொழிலைத் தொடங்கினார். ஆனால் ஒரு வருடத்துக்குள்

அட்வகேட் திவான்பகதூர்
வி. ராமச்சந்திர ராவ்சாஹிப்



அட்வகேட்
எல்.ஏ. கோவிந்தராகவ அய்யர்



அட்வகேட்
டி. பிரகாசம்




அட்வகேட்
டி. ரங்காச்சாரி


அட்வகேட்
டாக்டர் ஸ்வாமிநாதன்


அட்வகேட்
ஜே. எல். ரொஜாரியோ

காலமாகி விட்டார். சட்டவாதியாகவே இருந்து ஐம்பது லட்சத்துக்கு மேல் சம்பாதித்து அதைக் குறையாமல் கட்டிவைக்காத்த பெருமை இவருக்கு, உண்டு.


ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்கார்

ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார் அவர்களுடைய சீடராக இருந்தவர் இவர். அவருடைய மருமகனுகவும் இருந்ததால் அவருடன் சேர்ந்து சில வருடங்கள் சட்ட வாதத் தில் தொழில் புரிந்தார். சட்டத்தில் மகா நிபுணர். இவருக்கு பின்னல் வேகத்தில் புதிய புதிய வாதங்களெல்லாம் அடிக்கடி தோன்றும். அவைகளை உபயோகித்துக் கவப மாக வழக்குகளில் வெற்றி காண்பார். ஒரு வார்த்தை மாற்றிச் சொல்ல மாட்டார். இல்லாததைச் சொல்லுவதில்லை. முக்கியமாக இருப்பதை விடுவதும் இல்லை. ஒரே முறை தான் சொல்லுவார். நீதிபதி வழக்கைப் புரிந்து கொண்டால் அது நீதிபதி செய்த பாக்கியம். இல்லாவிட்டால் போயிற்று. திரும்பத் திரும்பச் சொல்ல மாட்டார். ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்கள் வாதம் செய்யும்போது நீதிபதிகள் இரு செவிகளையும் சாய்த்து ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக் கொள்வார்கள். இவரிடம் இன்னெரு பெரிய விசேஷம் என்னவென்றால் எதிர்வாதக்காரர் எத்தனை முறை இவர் பேசும்போது குறுக்கிட்டு மறுதளித்தாலும் அதனால் சற்றும் கலக்கமடைய மாட்டார். இந்தச் சீனிவாச அய்யங்காரும் லட்சக்கணக்கில் சம்பாதித்தார். ஆனால் துன்பம் என்று வந்து கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கினர். அரசியல் துறையில் இறங்கி வெகு சீக்கிரத்தில் முதல் ஸ்தானத்தை அடைந்து நமது மாகாணத்துக்கே முதல்வர் என்று யாவராலும் போற்றப்பட்டு 1926-ல் நடந்த கௌஹாத்தி காங்கிரஸ் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். 1929-ம் வருஷம் லாகூரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்துக்குப் பிறகு மனம் சலித்து அரசியல் துறையை விட்டே ஒதுங்கி விட்டார். அதன்பின் சட்ட வாதியாகச் சில வருடங்கள் மிகுந்த கீர்த்தியுடன் விளங்கிக் கண் பார்வை குறையவே அத் தொழிலிலிருந்து விலகிக் கொண்டார். இவரிடம் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி யடைந்து சட்டத்துறையில் மேன்மையுடன் விளங்கிய

அட்வகேட்
ஜான் ப்ரூஸ் நார்ட்டன்



அட்வகேட்
ஜே.எச். ஸ்பிரிங் பிரான்ஸன்



அட்வகேட்
எர்ட்லி நார்ட்டன்



வர்கள் அநேகர். அவர்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும் காலஞ்சென்ற ஸ்ரீ கே. பாஷ்யம் அய்யங்கார் அவர்களும் ஆவர்.

வி. வி. சீனிவாச அய்யங்கார்

இந்த மூன்றாவது சீனிவாச அய்யங்கார் அவர்களை மக்களுக்கும் பரம மித்திரராக விளங்கியதால் 'வி. வி.' என்று சுருக்கமாக அன்போடு அழைக்கப்பட்டவர். இவர் சட்ட வாதத் துறையில் பிரவேசித்து உயர்நீதி மன்றத்தின் அசல் தாவாக்களை (Original Sides) தீர்மானிக்கும் பிரிவில் பிரபலமடைந்தார். இவர் 1898-ம் வருடம் தொழிலில் புகும்போது அந்தப் பிரிவில் பெரும்பான்மையோர் வெள்ளையர்களே. இந்தியர் வெகு சிலரே. அப்போது ஸ்ரீ வி. வி. குமாரசாமி சாஸ்திரியார் அவர்கள் சட்ட வாதியாய் விளங்கிய காலம். சில ஆண்டுகளுக்குள் அவர் நீதிபதி ஸ்தானத்தைப் பெற்றதும் அவர் ஸ்தானத்தில் சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் வந்து அமர்ந்தார். வி. வி. சீனிவாச அய்யங்காருடன் மிகுந்த தோழமையுடன் பழகி இவர்கள் இருவரும் சேர்ந்து அசல் தாவாக்களைத் தீர்மானிக்கும் பிரிவிலிருந்த வெள்ளையர்களை யெல்லாம் அடியோடு அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

சீனிவாச அய்யங்கார் அவர்கள் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதில் வல்லவர். சாட்சியை மிரட்ட மாட்டார். சாட்சியுடன் மிகுந்த சிநேக பாவத்துடன் பேசுவதுபோல் பேசித் தம் கட்சிக்கு வேண்டிய ஆதாரங்களை யெல்லாம் அவன் வாயிலிருந்தே வரவழைத்து விடுவார். தாவா முடிந்ததும் தான் அந்தச் சாட்சி, தான் மோசம் போன கதையைப் புரிந்து கொள்ளுவான். ஸ்ரீ வி. வி. அவர்களிடம் மற்றொரு திறமை உண்டு. நீதிபதியின் முகத்தையே பார்த்துக் கொண்டு தாவா நடத்துவார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற உண்மையை உணர்ந்தவர் அவர்.



அட்வகேட்
ஜான் டான்ஸன் மேன்

நீதிபதியின் முகம் ஒரு சிறிது கோணினாலும் உடனே தாம் வாதம் புரிந்து வந்த வழியை விட்டுவிட்டு வேறு கோணத்தில் வாதத்தை ஆரம்பித்து நீதிபதியைக் கவனித்துப் பார்ப்பார். சட்டங்களை நன்றாக அறிந்தவராதலால் எவராலும் அவரை ஏமாற்றமுடியாது. எந்த விதமான சிக்கல்கள் ஏற்பட்டாலும் அதை உடனே தீர்க்கக் கூடிய திறமை வாய்ந்தவர். மூன்றரை வருட காலம் நியாயாதிபதியாக உயர்நீதிமன்றத்தில் விளங்கிப் பின்னர் அதை ராஜிநாமா செய்து விட்டு வாதத் தொழிலில் புகுந்தார். ஏறக் குறைய ஐம்பத்தாறு வருடங்கள் வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். ராஜதானி முழுவதிலுமிருந்த நியாய ஸ்தலங்களிலெல்லாம் வழக்குகளை நடத்தி, எவ்வித வழக்கானாலும் அதில் வெற்றியையே கண்டு பெரும் புகழை ஸ்தாபித்துக் கொண்டார். ஐம்பது லட்சத்துக்கு மேல் பொருளீட்டினார். தாராள மனமுடையவர். கேட்பவருக்கெல்லாம் அள்ளிக்கொடுத்த வள்ளல். 1954-ம் ஆண்டில் அவர் காலமானபோது அவர் தம் குடும்பத்துக்கென விட்டுச் சென்றது ஐயாயிரம் ரூபாய் சொத்துக் கூடக் கிடையாது. வலக்கரத்தால் கொடுப்பது இடக் கரத்துக்குத் தெரியக்கூடாது என்னும் கொள்கை உடையவர். தருந்தவர்களுக்கு இரு கைகளாலும் வழங்கியவர். நல்ல ஆசார சீலர். வடமொழியில் புலமை மிக்கவர். பண்டிதர்களையும் வித்துவான்களையும் போற்றிப் பல விதத்திலும் கௌரவித்தார். எவ்வளவுதான் தமக்குத் தீங்கிழைத்தவனாயினும் அவன் தனக்குத் துன்பம் என்று வந்தால் அவனுக்கே தயங்காமல் உதவிசெய்தவர். பல விதத்திலும் நல்லவர் என்று பெயர் பெற்று 'குலபதி' என்னும் சிரேஷ்டமான பட்டத்தை மடத்து ஸ்வாமிகளிடமிருந்து பெரும் பேறாகப் பெற்றவர்.

மும்மணிகளாக விளங்கிய இந்த மூன்று சீனிவாச மணிகளின் வாழ்க்கை, வழக்கறிஞர் தொழிலுக்கே ஒரு பெருமை தரக் கூடியது; எடுத்துக்காட்டாக விளங்குவது. தமது தொழிலைப் பக்தியோடு போற்றி, அதில் புகழ் பெற வேண்டும் என்ற உத்வேகத்தோடு உழைத்து உன்னத ஸ்தானத்தை அடைந்த இந்த சீனிவாசர்களின் வாழ்க்கையை நியாயவாதிகள் என்றும் பின்பற்ற வேண்டும்.



"குற்றாலத்துக்குப் போகலாம் என்று இருந்தீரே! செலவை உத்தேசித்து இங்கேயே இப்படி.....!"

நீதி மன்றத்தில் நகைச்சுவை

நீதிபதிகள் நீதி மன்றங்களில் நுழையும் பொழுதே சட்டத்தின் உயர்வும் ஆட்சியின் மேன்மையும் வெளிப்படையாகத் தோன்றத் தொடங்கும். நீதி தண்டம் ஏந்தி முன்னால் செல்லுவான் ஒரு பணியாள். "நீதிபதி வருகிறார்" என்று அறிவிப்பான் மற்றொருவன். உடனே மன்றத்தில் சலசலப்பு அடங்கி அமைதி நிலவும். வெட்டிப் பேச்சுக்கள், 'கசமுச' சத்தங்கள் எல்லாம் நின்று விடும். நீதிபதியும் மன்றத்துக்கு மரியாதை வணக்கம் செலுத்திக் காரியத்தைத் தொடங்குவார். சட்டத்தின் மீதே கருத்துக் கொண்டு செயலாற்றும் நீதிபதிகள் தங்கள் தோற்றத்தினாலாவது பாவனையினாலாவது தங்கள் நடு நிலை ஸ்தானத்துக்கு ஊறு நேராதபடி கம்பீரமாகவே செயல் புரிவார்கள். நகைப்புண்டாக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் கூடச் சிரிப்பு மனத்துக்குள்ளேயோ அல்லது புன்னகையுடனேயோ நின்றுவிடும். வாய் விட்டுச் சிரிப்பது மிகவும் அபூர்வம். ஆனாலும் அவர்களும் நம்மைப் போன்ற உணர்ச்சியுள்ள மனிதர்களே. சட்டத்தின் முன்னிலையில் மனித உணர்ச்சிக்கு இடமில்லை என்று சாதாரணமாகச் சொல்லப்பட்டாலும், பல உயர்தர நகைச்சுவையும் இதர மனித உணர்ச்சிகளும் நீதி மன்றங்களில் மின்னல் போலத் தோன்றித் தோன்றி மறையும். கோர்ட்டு ஹாஸ்யங்களின் போக்கே அலாதி. சென்னை உயர்நீதி மன்றத்தில் நிகழ்ந்த சில ஹாஸ்யத் துணுக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

இன்ஸால்வெண்டு சம்பந்தமான தாவாக்களை வாரத்தில் ஒரு நாள்தான் விசாரிப்பது வழக்கம். திங்கட்கிழமை இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 1929-ம் ஆண்டுக்கு முன்பு வரையில் உயர்நீதிபதி ஒருவர் இந்த மன்றத்தில் அமர்ந்து நீதி வழங்கிக் கொண்டிருந்தார். ஒரு திங்கட்கிழமை! நீதிபதி ஸர் மர்ரே கூட்ஸ்–ட்ராட்டர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கோர்ட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அன்று ஆஜராக வேண்டிய ஒரு கட்சிக்காரனிடமிருந்து வந்த தந்தி ஒன்றை கோர்ட்டு குமாஸ்தா நீதிபதியிடம் கொடுத்தார். கட்சிக்காரர் ஆங்கில அறிவு இல்லாதவர். "கனம் இன்ஸால்வெண்ட் ஜட்ஜ் அவர்களுக்கு" என்று தந்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பெஞ்சு கிளார்க்கிடம் தந்தியை நீட்டியபடியே ஸர் கூட்ஸ் – ட்ராட்டர் "என் நிதி வசதியின் உண்மை நிலையை இந்தக் கட்சிக்காரர் எப்படிக் கண்டுபிடித்தார்?" என்று உவகையுடன் கேட்டாராம்.

ஃ ஃ ஃ

அம்மை நோய் நமது நாட்டில் நமக்கெல்லாம் பழகிப்போனது. ஆண்டுதோறும் கோடைக் காலங்களில் இதன் கடுமை அதிகம். மருந்துகளின் உதவியின்றி ஆசார முறைகளினாலேயே நமது மக்கள் இதைப் பெரும்பாலும் சமாளித்து விடுகின்றனர். ஆனால் ஆங்கிலேயர்களுக்கு 'அம்மை' என்றாலே குலை நடுக்கமே ஏற்படும். அம்மை வந்தால், மரணம் நிச்சயம் என்ற அளவுக்குப் பீதி. ஒருநாள் ஸர் கூட்ஸ் ட்ராட்டர் கோர்ட்டு நடத்து கொண்டிருக்கையில் ஒரு கட்சிக்காரனிடமிருந்து வந்த தந்தியில் "தனக்குப் பெரிய அம்மை போட்டிருப்பதால் அன்று வர முடியவில்லை" என்று கண்டிருந்தது. 'பெரியம்மை' என்ற வார்த்தையைப் படித்த மாத்திரத்தில், நீதிபதி அந்தத் தந்தியை அப்படியே வெடவெடத்துப்போய் விட்டெறிந்தாராம். தொத்து வியாதியாகையால் அந்தத் தந்திக் காகிதத்தில் கூட வியாதி தொத்திக் கொண்டிருக்குமோ என்று பயந்து விட்டாராம்.

இதைக் கண்ட கட்சிக்காரருடைய வக்கீல், "இது தபால் அல்ல; தந்தி. இதை எழுதியவர் இந்த ஊர் தந்தி ஆபீஸ் குமாஸ்தா. கட்சிக்காரன் அல்ல" என்று வினயத்துடனே தெரிவித்துக் கொண்டாராம்.

ஃ ஃ ஃ

வேறொரு சமயம். திங்கட்கிழமை கோர்ட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நீதிபதி ஸர் மர்ரே கூட்ஸ் ட்ராட்டர் யாரோ ஒருவர் கட்ட வேண்டிய கடன் தவணையைக் குறைப்பதற்காகப் போட்ட மனுவை விசாரித்துக் கொண்டிருந்தார். கட்சிக்காரர் கூண்டில் நின்று கொண்டிருந்தார். ஏழ்மையே உருவான அவர் தோற்றத்தைக் கண்டு மனம் இளகி விட்டார் நீதிபதி. அவரே கேள்விகள் கேட்டார்:

"உமக்குச் சம்பளம் எவ்வளவு ?"

"மாதம் 85 ரூபாய்."

"உமது குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?"

"நானும் என் மனைவியும் எட்டுக் குழந்தைகளும்."

"அப்படியென்றால் இந்த 85 ரூபாயில் நீங்கள் பத்துப் பேர்களும் பட்டினி கிடக்கிறீர்கள் என்று சொல்லுங்கள் !"

"எப்படியோ ஜீவித்து வருகிறோம்."

"நீர் இருக்கும் ஊர் எங்கே?"

"நைஜாம் ராஜ்யத்தின் ஒரு மூலையில் காட்டுப் பிரதேசத்தில்."


"காட்டில் புலிகள் நடமாட்டம் உண்டா?"

"சில சமயங்களில் வரும்."

"இன்னும் எவ்வளவு தவணைகள் பாக்கி செலுத்த வேண்டும்?"

"பாதித் தொகை செலுத்தியாகிவிட்டது. மேற்கொண்டு செலுத்த முடியவில்லை."

ஒரு கணம் மௌனம். சிந்தனை. பிறகு "பாக்கி முழுவதும் செலுத்தியாகி விட்டது. இனிமேல் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்று தீர்ப்பு செய்கிறேன். நீர் போகலாம். இந்த அபிஷியல் அஸைனி, அவர் இவர் யாராவது உங்களுக்குத் தொந்தரவு செய்ய



உபாத்தியாயர்: டேய்! மணி! இளாசைக் கொஞ்சம் கவனிடா!
மணி: என்னாலே எவ்வளவு கொஞ்சமா கவனிக்க முடியுமோ, அவ்வளவு கொஞ்சமா கவனிச்சிண்டுதான் இருக்கேன் சார்!

வந்தால், உங்கள் வீட்டுப்பக்கம் நடமாடும் புலிகளை அவர்கள்மேல் ஏவிவிடுங்கள்'' என்று கூறினாராம். ஹாஸ்யத்தோடு மனிதாபிமானமும் மிளிரும் நிகழ்ச்சி இது.

ஃ ஃ ஃ

''வழக்குகள் விசாரணைக்கு வரும்போது சில சமயம் பெரிய வக்கீல்கள் வர இயலாமல் போய் விடும். அவர்கள் சார்பில் அவர்களுடைய ஜூனியர்களோ, அல்லது மற்றவர்களோ, விசாரணையைத் தள்ளிப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதுண்டு. ஒரு சமயம் தமது இல்லத்தில் 'புண்யாஹவாசனம்' ஆகையால் வர முடியவில்லை என்று சொல்லி வாய்தா கேட்டுக் கொள்ளும்படி ஒரு வக்கீல் தமது சக வக்கீலைக் கேட்டுக் கொண்டார். குறிப்பிட்ட வழக்கு விசாரணையைத் தொடங்கிக் கூப்பிட்டதும், வக்கீல் நண்பர் எழுந்திருந்தார். கோர்ட்டைக் கண்டு பயந்து விட்டாரோ, அல்லது என்ன கோளாறோ, ''வக்கீல் ஸ்ரீ...பிரசவித்திருக்கிறார். அதனால் வாய்தா வேண்டும்'' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதி ஒரு கணம் திகைத்துப் போனார். அப்போது கோர்ட்டில் இன்னொரு கேசுக்காகக் காத்துக் கொண்டிருந்த ஸ்ரீ வி.வி. ஸ்ரீனிவாசய்யங்கார் இதைக் கேட்டு ''கோர்ட்டாரவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கூட வாய்தா கொடுக்க மாட்டீர்களா?'' என்றார். நீதிபதி வாய் விட்டுச் சிரித்தபடியே நகைச்சுவை குன்றாமல், ''அவசியம் வாய்தா கொடுக்கிறேன். இப்படிப்பட்ட சாதனைத்தைச் செய்திருக்கும் ஒரு வக்கீலுக்கு வாய்தா மட்டுமா கொடுக்கலாம், ஏஜாவே கொடுக்க வேண்டும்''. என்று கூறினாராம்.

ஃ ஃ ஃ

ஆங்கிலேய நீதிபதிகள் பெரும் பிரயாசை எடுத்துக் கொண்டு நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையும், ஹிந்து சமூகக் கோட்பாடுகளையும் நன்குணர்ந்து நீதி வழங்கி வந்துள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் தங்கள் நாட்டு மனோபாவங்களுக்கும் முறைகளுக்கும் முற்றிலும் மாறானவையும் பகுத்தறிவுக்கு எட்டாதவையுமாக உள்ள சில இந்து சட்ட உரிமைகளைப் பற்றி அவர்களுக்குச் சந்தேகம் தோன்றிவிடும். ஒருசமயம் நீதிபதி ஆட்ஜர்லாக்கும் இன்னொரு நீதிபதிக்கும் முன் பிரபல வக்கீல் டி. ஆர். ராமச்சந்திரய்யர் அவர்கள் ஒரு ஹிந்து குடும்பத்தில் மாப்பிள்ளை ஸ்தானத்தில் இருந்தவரை குடும்பத்தினருக்குள் சேர்ந்து முடிந்துவிட்டு விவகாரம் பண்ணியதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். விவாதத்தைக் கேட்டுக் குழப்பமடைந்த நீதிபதி, ''ஹிந்து குடும்பத்தில் மாப்பிள்ளைக்கு நியாயமாக எவ்வளவு உரிமை உண்டு?'' என்று கேட்டாராம்.

''அது அவனுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது. அவனால் எவ்வளவு சுரண்ட முடியுமோ, அவ்வளவும் அவனது உரிமை'' என்று வக்கீல் கூறினாராம். இன்னொரு விவகாரத்தில் அதே நீதிபதி அதே ராமச்சந்திரய்யர் அவர்களை ''பெண்ணுக்கு என்ன உரிமைகள் உண்டு'' என்று கேட்டார். பக்கத்திலிருந்த நீதிபதிக்கு இந்தக் கேள்வி புதிராக இருந்தது. (பெண்களுக்குச் சொத்தில் பங்கில்லை யென்ற சட்டம் அமுலிலிருந்த காலம் அது) ''ராமச்சந்திரய்யர், அப்படியா?'' என்றார். நீதிபதி சொன்னது சரியில்லை என்று நேரடியாகச் சொல்லாமல், ''கனம் நீதிபதி சொல்ல வந்தது பெண்ணும், பிள்ளையாகப் பிறந்திருந்தால் எவ்வளவு உரிமை என்றுதானே?'' என்று கேட்டார் ஸ்ரீ ராமச்சந்திரய்யர் அவர்கள்.

ஃ ஃ ஃ

ஏர்ட்லி நார்ட்டன் சென்னை நீதிமன்றத்துக்குப் பெருமை அளித்த வழக்கறிஞர்களில் முக்கியமானவர். ஆங்கிலத்திலும், பிரஞ்சு மொழியிலும் ஆழ்ந்த புலமையுள்ளவர். அவருடைய நகைச்சுவை மிகத் தீவிரமானது. சில சமயங்களில் புண்படுத்துவதாகக்கூட இருக்கும். நார்ட்டன் துரை அடிக்கடி வழக்குகள் நடத்தும் ஒரு கோர்ட்டின் நீதிபதிக்குத் தாம் ஓர் உயர்ந்த லத்தீன் புலவர் என்ற அகம்பாவம் இருந்தது. உண்மையில் இம் மொழியில் அவருடைய அறிவு மிகவும் சாமானியமானது என்பது நார்ட்டன் துரைக்குத் தெரியும்.

ஒரு சமயம் கோர்ட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சர்வதேசச் சட்டத்தில் தனி மனிதன் உரிமை பற்றிய ஒரு விஷயம் விவாதிக்கப்பட்டது. இது சம்பந்தமாக உலக மேதைகள் என்று புகழ்பெற்ற 'க்ரோஷியஸ்' பூபெண்டார்ஃப் போன்றவர்கள் இயற்றிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி நீதிபதி பேசினார். இவ்வாசிரியர்கள் பிரஞ்சு, லத்தீன் இவ்விரு மொழிகளிலும் நூல்கள் எழுதியுள்ளார்கள்.

நீதிபதி காட்டிய மேற்கோள்களுக்கு மறுப்பாக, பிரஞ்சு ஆசிரியர் வால்ட்டேர் எழுதிய 'காண்டிட்' என்னும் நூலிலிருந்து

முற்றிலும் சம்பந்தமே இல்லாத பெரும் பகுதியைப் பிரஞ்சு மொழியிலேயே சரமாரி யாக நார்ட்டன் துரை பொழிந்து தள்ளினர். தம்முடைய அறியாமையைக் காட்டிக் கொள்ள விரும்பாத நீதிபதி, நார்ட்டன் துரை சொன்னதை யெல்லாம் தாம் புரிந்து கொண்டவர் போலவே பலமாகத் தலை யாட்டிக் கொண்டே இருந்தது. கடைசியில் நார்ட்டன் துரைக்குச் சாதகமாகவே தீர்ப்பும் அளித்து விட்டார்!

ஃ ஃ ஃ

நீதிபதி ஃபிலிப்ஸ் வக்கீல்களின் வாதத்தி லும் பேச்சிலும் சிறு தவறுதல் ஏற்பட்டா லும் அதைக் குத்திக் காட்டுவார். ஒரு சம யம் வழக்கறிஞர் வி. வி. சேஷாச்சாரியார் ஒரு ஹிந்து விதவையின் சொத்துரிமை பற்றிப் பேசிக்கொண்டே இருக்கும்போது, 'அவள்' என்பதற்குப் பதிலாக 'அவன்' என்று இரண்டு மூன்று தரம் சொல்லி விட்டார். அதைக் குறிப்பிட்டு, ''அவன் என்று யாரைக் குறிப் பிட்டீர்கள்?'' என்று நீதிபதி கேட்டார்.

''விதவையைக் குறிப்பிட்டேன்'' என்றார் வக்கீல். ''அவன் என்று சொன்னீர்களே!'' என்று சற்றுக் குத்தலாகவே நீதிபதி சுட்டிக் காட்டினர். ஆனால் வக்கீல் சளைக்கவில்லை. ''எங்கள் சமூகத்தில் பெண் விதவைகளைப் போல் ஆண் விதவைகள்கூட இருக்கிறார்கள்'' என்று பதிலளித்தாராம்.

ஃ ஃ ஃ

நீதிபதி ஜாக்ஸன், கோர்ட்டு நடத்திக் கொண்டிருந்தார். மேஜை மீது காகிதக் கட்டுகள் பரவலாக வைக்கப்பட்டிருந்தன: காற்றில் பறந்து போகாமல் இருக்க, கண்ணா டிப் பளுவுகளுக்குப் பதிலாகக் கூழாங்கற்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆபீஸ் சாமான்களுக்கு அப்போதும் நெருக்கடி ஏற்பட்டிருக்க வேண் டும்? ஒரு வழக்கைப்பற்றிவாதித்துக்கொண் டிருந்த வக்கீல், சொன்னதையே சொல்லிக் கொண்டு நீதிபதியின் பொறுமையை மிகவும் சோதித்துக் கொண்டிருந்தார். தமது ஆத்தி ரத்தை வெளிக்காட்ட முடியாமல் தவித்த நீதிபதி கோர்ட்டு குமாஸ்தாவைக் கூப்பிட்டு, ''இந்தக் கூழாங் கற்களை யெல்லாம் இங் கிருந்து அப்புறப்படுத்தி விடு. இல்லாவிடில் இவற்றை இங்கேயே உபயோகிக்க வேண்டும் என்ற ஆவல் என்னைத் தூண்டிக் கொண்டிருக்கிறது'' என்று உரக்கவே சொன்னாராம்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் நீதிபதி குட்ஸ்-ட்ராட்டர் கோர்ட்டில் இந்து சட்ட சம்பந்தமாகச் சில நுணுக்கமான சட்ட விஷயங்களை வக்கீல் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். விஷயம் சிக்கலாக இருந்ததால், ''நீங்கள் சொல்வது பகுத்தறிவுக்கு ஒட்டியதாக இல்லையே?'' என்று நீதிபதி சொன்னர்: தேர்ச்சி பெற்ற வக்கீல் தயங்காமல், ''நான் சொல்வது ஹிந்து லா பகுத்தறிவு, சாதாரணப் பகுத்தறிவிலிருந்து மாறுபட் டது'' என்று வினயத்துடனே திருப்பிக் கொடுத்தாராம்.

வைத்திய ரத்தினத்தின் மறைவு


நாட்டு வைத்தியர்களை வைத்திய உலகத் தோர் தீண்டாதவரைப் போல் நடத்தி வந்த காலத்தில், அத் தீண்டாமையை ஒழிக்க முன் வந்து, உழைத்து, வெற்றி கண்டவர் டாக்டர் ஜி. ஸ்ரீநிவாஸ மூர்த்தி.

நம் நாட்டு வைத்திய முறைகளில் திறமை மிக்க தேர்ச்சியும் மேல் நாட்டு வைத்திய முறைகளில் அத்தியாவசியமான அளவுக்குப் பயிற்சியும் ஒருங்கே போதிக்கும் உஸ்மான் கமிட்டி திட்டத்தை நிறுவி, அதன்படி மாநில அரசினரால் நிறுவப்பட்ட பள்ளியில் நூற்றுக்கணக் கான மாணவருக்குப் பயிற்சி யளித்து அவர்களைக் கிராமாந் திர வைத்திய நிலையங்களில் வைத்தியர்களாக நியமித்து, கிராம மக்களுக்குத் தேவை யான வசதியை அளிக்கும் திட்டத்தை இந்தியா முழு வதுக்குமே முதன் முதலாகத் திறம்படச் செய்து காட்டி யவர் டாக்டர் ஸ்ரீநிவாஸ மூர்த்தி. நம்நாட்டு வைத்திய முறைகளை ''வெறும் பித்த லாட்டம்'' (Quackery) என்று ஏளனம் செய்த மேல்நாட்டு வைத்திய நிபுணர்களை யெல் லாம் வெட்கித் தலைகுனிய வைத்து, ''நாட்டு வைத்தியமும் விஞ்ஞானபரமானது தான். அதிலும் பிரமிக்கத்தக்க அம்சங்கள் இருக் கின்றன'' என்று வாய்விட்டுச் சொல்லும்படி செய்த வல்லுநர் டாக்டர் ஜி. ஸ்ரீநிவாஸ மூர்த்தி அவர்கள்.



கிண்டி வார்ஜன் தரத்தில் சென்னை இந்தியக் கல்லூரியின் தலைவராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு, தாம் நீண்ட நாளாக ஈடு பட்ட பிரம்மஞான சபையின் பலவகைப் பட்ட அன்புப் பணிக்கே தம்மை அர்ப்பணித்தவர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்கள்.

கூட்டுறவு முறையில் இன்று அகில இந்திய வியாபகம் பெற்ற நாட்டு மருந்துகள் செய்யும் நிலையத்தைப் படைத்த பிதாமகர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸமூர்த்தி: 15-7-62ந் தேதி தமது எழுபத்தியாறுவது வயதில் புகழுடம்பை எய்தினார். நாட் டின் வைத்தியத் துறைக்கு ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர் களின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.





Remy
TOOTH
POWDER
Remy
TOOTH
PASTE

சிந்தனை மேடை

அரவிந்தன்

9. காலம் தேய்த்த கலைகள்

கலைகள் என்றும் அழியப் போவதில்லை; ஆனால் அவற்றின் நோக்கமும், பயனும், காலந்தோறும் மாறிக் கொண்டே போவதுண்டு. சிற்பம், சித்திரம், சங்கீதம் போன்ற நளின கலைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் என்னென்ன இலட்சியங்களை எல்லையாகக் கொண்டிருந்தனவோ அந்த இலட்சியங்களும், அவற்றின் எல்லைகளும் இன்று கருகிப் போயிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்தக் கருக்கத்துக்குக் காரணம் என்ன?

'வேலை செய்தால் கூலி — கூலி கொடுத்த அளவுக்கு வேலை' — என்று தொழிலும் பயனும் அருகருகே வைத்துக் கணக்கிடப்படுகிற நூற்றாண்டில் சிற்பமும், சித்திரமும், சங்கீதமும் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சிந்திக்கலாம். தொழிலும் கலையும் ஒன்றாக முடியாத தனித் தனித் துறைகள். ஒரு தொழிலைச் செய்கிறவன் அதை முடித்ததும் அதற்கென்று கிடைக்கிற பயனைப் பெற்றுக் கொண்டு மனநிறைவு அடைந்து விடுவான். ஆனால் ஒரு கலையின் மன நிறைவோ, புகழோ, இப்படிச் சுருக்கமாகக் கிடைத்து ஓய்ந்து விடக் கூடியதில்லை. கலையின் நயத்தைப் போலவே அதற்குக் கிடைக்கிற புகழும் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்தது. தலைமுறை தலைமுறையாக வளர்ந்து கொண்டே போகக் கூடியது. புகழ் கணிக்கப்படுகிற காலத்துக்கு முற்றுமிடமில்லாமல் வளர்ந்து கொண்டே போகக் கூடிய இந்தப் பெருமை கலைத்துறைக்கு மட்டுமே உண்டு.

ஆனால் சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த அந்தக் கலைகளெல்லாம் இன்று ஆற்றல் குன்றித் தேய்ந்து போய் நிற்கின்றன. 'இந்த உலகத்தை இன்றும், நாளையும், அழகாய் வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணமானவற்றில் தன் கலையும் ஒன்று' — என்ற பெருமிதத்தோடு நிமிர்ந்து நின்றுகொண்டு பலரைக் கைகூப்பித் தொழச் செய்த இலட்சியக் கலை வீரர்களைப் பற்றி நினைத்து விட்டு இன்றைய நிலையையும் நினைத்தால் மனத்துக்கு வேதனையாகத்தான் இருக்கிறது.

தன்னுடைய மனத்தின் எண்ணங்களையும் தவத்தையும், அந்தத் தவத்தின் ஆற்றல் வாய்ந்த அழகுகளையும் செதுக்கிச் செதுக்கிக் கல்லைத் தெய்வமாக்கும் சிற்பியின் கைகளை எந்த விலையால் மதிப்பிட முடியும்? நினைப்பில் கற்பித்துக் கற்பித்து அழகாக்கி வர்ணங்களாலும், கோடுகளாலும் அதைக் கண்ணுக்குத் தென்படும் உருவமாய்ப் படைக்கிற ஓவியனின் சாதனைக்குத்தான் விலை ஏது?

மனிதனோடு மனிதன் பேச முடிந்த மொழியைக் காட்டிலும் ஒரு படி உயர்வாகச் சென்று தெய்வத்தோடு மனிதன் பேசுவதற்கு ஒரு மொழி வேண்டுமென்ற இலட்சியத்துக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட சங்கீதத்துக்கும் எவரால் விலை கணிக்க முடியும்? சங்கீதம் என்பது உயர்ந்த தரத்து அன்பைப் பேசுவதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட மொழி. தெய்வத்தின் மேலோ, அல்லது தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள் மேலோ, ஏற்படுகிற பக்தியை அல்லது அன்பைப் பக்குவமாக வெளியிடுவதற்குக் கண்டுபிடிக்கப் பெற்றிருக்கும் பண்பட்ட மொழியே சங்கீதம். அது ஒரு மொழி. அன்பின் பல்வேறு நிலைகளை மிகவும் இனிமையாகவும், சுருக்கமாகவும் பேச முடிந்த மொழி. இன்று இசையும் அதன் பயனும் எப்படி எப்படியோ உபயோகப் படுகின்றன என்றாலும் ஆதியில் உயர்ந்த தரத்து அன்பை இனிமையாகவும், சுருக்கமாகவும் பேசுவதற்கு ஒரு புதிய பாஷையாகவே அது பிறந்ததென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. கால தேச வர்த்தமானங்களினால் இந்தக் கலைகளும் இவற்றின் இலட்சியங்களும் இன்று தேய்ந்து போயிருக்கின்றன; ஆனால் அழிந்து போய் விடவில்லை என்பது ஓரளவு நம்பிக்கை தருவதாயிருக்கிறது.

நலிந்த வாழ்க்கை

சிற்ப சாத்திரங்களையும், கோயில் அமைப்பு முறை ஆகமங்களையும், முறையாகப் பயின்று தேர்ந்த ஸ்தபதியார் ஒருவரைச் சமீபத்தில் சந்தித்தேன். அவரிடம் பேசிக் கொண்டிருந்த சில மணி நேரத்திலே மனக் குமுறலோடு அவர் வெளியிட்ட பல கருத்துக்களை என்றும் மறக்கவே முடியாது. அவை உங்களோடும் பகிர்ந்துகொள்ள ஏற்ற கருத்துக்களே.

''எங்கள் தொழிலை விடப் பாய்முடைகிறவன், கூடை முடைகிறவன் தொழில் இலாபகரமாயிருக்கிறது ஐயா! மூன்று மாதத்தில் வாங்கிய பாய் பழையதாகியவுடன் புதுப் பாயைத் தேடி வந்து வாங்குவார்கள். கூடை கெட்டுப் போய் விட்டால் புதுக் கூடை வாங்குவார்கள். எனவே பாய் பின்னுகிறவனுக்கும், கூடை முடைகிறவனுக்கும் அவன் படைக்கிற பொருள்கள் அடுத்தடுத்துச் செலவழிந்தபடி இலாபம் தந்து கொண்டேயிருக்கும்! ஆனால் நான் செதுக்கிக் கொடுக்கிற சிலையும், கட்டிக் கொடுக்கிற கோயிலும், என் காலத்துக்கும் பின்பு பல தலைமுறையானாலும் அழிவோ, சேதமோ இல்லாமல் நிலைத்து விடுகிறதே! பழைய காலத்தில் ஏதாவது ஒரு கோயிலுக்கு ஒரு சிலை செதுக்கிக் கொடுத்திருந்தாலும் அந்த ஒற்றைச் செயலுக்காகவே எங்கள் வாழ்நாள் முழுதும் எங்களை ஆதரித்துப் பாதுகாக்க மன்னர்களும் அவர்களுடைய பரந்த மனப்பான்மையும் துணையாக இருக்கப் பெற்றோம். இப்போது அப்படி எங்களைப் பேணுவதற்கு யார் இருக்கிறார்கள்? வீடுகளை

ளும், பெரிய பெரிய காரியாலயங்களையும், திட்டத்தோடு கட்டிக் கொடுக்க 'என்ஜினியர்கள்' புதிய யுகத்தின் வருவாய் நிறைந்த சிற்பிகளாகத் தோன்றி விட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் பாட்டன், முப்பாட்டன் தலைமுறையில் கட்டப்பெற்ற கோயில்கள் கூட இன்னும் இடமானவையாக இருக்கின்றன. எப்படி நாங்கள் வயிற்றைக் கழுவுவதென்று சொல்லுங்கள். இலட்சியத்தைப் பற்றி அப்புறம் பேசலாம்.''

அந்த ஸ்தபதியாரிடமிருந்து மனக்கொதிப்போடு பிறந்த இந்தப் பேச்சைக் கேட்ட பின்பு எனக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. கூடை முடைகிறவனையும், பாய் பின்னுகிறவனையும் விட நிலையான அழகைப் படைக்கிற மதிப்பு வாய்ந்த கலைஞன் ஒருவன் தன் தொழிலில் அன்றாட வாழ்க்கைக்குச் சோறு போட முடியாததாயிருக்கிறதே என்பதை உணர்ந்து வருந்திப் பேசுகிறபோது பொய்யான சமாதானங்களைக் கூறுவதற்கு என் மனம் துணியவில்லை. இந்தச் சிற்பியைப் போலவே அன்றாட வாழ்க்கைக்குத் தொல்லைப்படுகிற சங்கீத வித்துவான்களும் இருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கைக்குத் தொல்லைப்படுகிற ஓவியர்கள் இருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கைக்குத் தொல்லைப்படுகிற கவிஞர்கள் இருக்கிறார்கள். சில உயர்ந்த கலைகளும், அவற்றைப் புரிந்து கொள்ளுகிற சமுதாய இலட்சியமும் இன்று நலிந்து போய் விட்டன. அப்படி அந்தக் கலைகளும், அவற்றைப் புரிந்துகொள்கிறவர்களும் நலிந்து போய் விட்டதன் காரணமாகவே அவற்றை ஆளும் கலைஞர்களின் வாழ்க்கையும் பொருளாதார ரீதியாக நலிந்து போய் விட்டது. இந்தப் பிரச்னையின் அவசிய அநாவசியங்களைச் சிந்திக்கும்போது பாதிக்கப் பட்டவர்களின் தொகை அதிகமா, குறைவா என்பதை வைத்து மட்டும் சிந்திக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட கலைகளின் அவசிய அநாவசியங்களை வைத்தே சிந்திக்க வேண்டும். சிற்பமும், சித்திரமும், சங்கீதமும் சமூகத்துக்கு அவசியமில்லை என்று யாரும் துணிந்து கூறிவிட முடியாது. இன்று அவை எப்படி எப்படித் தேவைப்படுகின்றனவோ அப்படித் தேவைப்படுகிற விதங்கள் வேண்டுமானால் நலிந்து போய் மாறியிருக்கலாம்.

வளர்ச்சியும் தளர்ச்சியும்

சிற்பிகளுக்குள்ள அத்தனை அதிகமான கவலை ஓவியர்களுக்கு இல்லை. ஓவியர்களுக்குள்ள அத்தனை அதிகமான கவலை சங்கீதத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இல்லை. ஆனால் மொத்தத்தில் எல்லாருக்கும் ஏதேதோ கவலைகள் இருக்கின்றன. பத்திரிகைகளுக்கும், காலண்டர்களுக்கும் படம் போட்டுக் கொடுக்கிற வகையிலாவது ஓவியர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. சபைகளிலும், வானொலிகளிலும் கிடைக்கிற வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு காலத்தள்ளுகிற நம்பிக்கை சங்கீதத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களில் சிலருக்காவது உண்டு. கோவில் கட்டுவதிலும், சிலைகள் செதுக்குவதிலும் ஆகமங்களின் ஆழ்ந்த ஞானத்தோடு தேர்ந்துள்ளவர்களுக்கு இன்றைய நம்பிக்கையும் குறைவு. நாளைய நம்பிக்கையும் இல்லை. நீடித்து நிற்கக் கூடிய ஒரு கலையை ஆள்கிறவனின் சொந்த வாழ்க்கை இந்த நூற்றாண்டில் எவ்வளவுக்கு உறுதியில்லாமல் போய் விட்டது பார்த்தீர்களா? கூடை முடைகிறவனுக்கும், பாய் பின்னுகிறவனுக்கும் இருக்கிற நாளைய நம்பிக்கை தலைமுறை தலைமுறையாய் அழியாமல் நிற்கிற படைப்பைச் செய்கிறவனுக்கு இல்லாமல் போய் விட்டதென்று தெரியும்போது நமக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கிறது?

கலைகள் நேற்றிருந்த நிலையிலிருந்து இன்று எப்படி எப்படியோ மாறி வளர்ந்து பிழைத்துக் கொள்ளுகின்றன. ஆனால் இந்த மாறுதலுக்கு ஏற்ப விரைந்து தங்களை மாற்றிக் கொள்ள முடியாத சில கலைஞர்கள் தளர்ந்து பின்தங்கி நின்று விடுகிறார்கள். கலைத் துறையில் ஈடுபட்டிருப்பவனுடைய வாழ்க்கையில் பரிதாபத்துக்குரிய இடம் இப்படிப் பின்தங்கி விடுகிற சமயம்தான். கலைகள் தெய்வங்களைப் போன்றவை. ஒரு சிலர் வழிபடுவதை நிறுத்தி விட்டாலும் வேறு பலர் தங்களை எப்போதும் வழிபாடு செய்யும்படி ஆக்கிக் கொள்ளும் நிலையான கௌரவம் அவைகளுக்கு உண்டு. ஆனால் கலைத் தெய்வத்தை வழிபட்டுப் பயன் கிடைக்காமல் மனம் தளர்ந்த கலைஞர்களின் சொந்த வேதனைகளை யார் தவிர்ப்பது என்ற கேள்வி எழும்போதுதான் சிக்கலாயிருக்கிறது.

இந்தச் சிக்கல் முன்பு தகுதி வாய்ந்த ஆதரவுகளால் பேணப்பட்டு இன்று 'தன் உழைப்பே தனக்கு ஆதரவு' என்பது போல் கைவிடப்பட்டுள்ள எல்லாக் கலைஞர்களுக்கும் உரியதாகத்தான் இருக்கிறது. ஆனால் சிற்பக் கலையைப் போலப் பழக்கத்திலே அருகி அரிதாய்ப் போய் விட்ட சில கலைகளுக்கு இந்த மாறுதல் இழப்பைத்தான் கொடுத்திருக்கிறது என்பதில் வேறு விதமான கருத்துக்கு வழியே இல்லை. விக்கிரக வார்ப்பு, சிலை செய்தல் போன்ற அபூர்வமான கலைப் படைப்புக்களைக் காப்பாற்றுவதற்காகவாவது அந்தத் துறையைச் சேர்ந்த கலைஞர்களையும் நாம் காப்பாற்ற வேண்டும். எங்கும் கிடைக்காமல் போய் விட்ட சில அருமையான மூலிகைகளைத் தேடிக் கண்டு பிடிப்பது போல்தான் இன்று இந்தக் கலைகளில் வல்லவர்களைக் காண்பதும் அரிதாயிருக்கிறது. நாம் தேடிக் கண்டு பிடிக்கிற இரண்டொரு வல்லவர்களும் மேற்கண்டவாறு தங்கள் குறைகளை அறுத்துக் கொள்கிறவர்களாயிருக்கிறார்கள். குறைகள் இருக்கும் போது அவற்றை அறுத்துக் கொள்ளாமல் மறைத்து விட்டு, 'நாகரிகமாயிருந்து' ஏமாற்றுவதும் நியாயமில்லைதான்.

அந்தக் கலைஞர்களுடைய பொறுமையையும் பெருந்தன்மையையும் சோதனை செய்வது போல் சமூகமும் அவர்களை விட்டு விடக் கூடாது. இன்று செழிப்பாயிருக்கிற பல கலைகளும் நாளை இதே நிலைக்குப் போய்விடலாம். கலைகளின் நோக்கமும் பயனும் தலைமுறைக்குத் தலைமுறை மாறி விடுவது என்பது நாளைக்கும் உண்மைதான்.

கலையின் வேகத்துக்குக் கலைஞர்களும் ஈடு கொடுக்க முடியாமல் பின்தங்கி விடுகிறபோது அப்படிப் பின்தங்கி விடுகிறவர்களின் நாளைய நிலை என்ன என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்கள் சிந்தனைக்கு உடனே முடிவு கிடைத்து விடும் என்று நான் சொல்ல வரவில்லை. முடிவு கிடைக்கிற வரையில் இந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திக்க உங்களால் முடியவில்லை என்றாலும் யாராவது எங்காவது இதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை மட்டும் சொல்லி வைக்கிறேன்.

1925
1950
1962

காலம் மாறிப் போச்சு

1925–பேராசிரியர் ரகுநாத் தோண்டோ கர்வே குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி பரிந்து பேசினார். இதனால் பெரும் எதிர்ப்புக்கு அவர் ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. மேலும் வில்சன் கல்லூரி அதிகாரிகள், கர்ப்பத்தடைப் பற்றி அவர் செய்த பிரசாரத்தை ஆக்ஷேபித்ததனால், அக் கல்லூரியில் தான் வகித்து வந்த கணிதப் பேராசிரியர் பதவியையும் ராஜிநாமா செய்ய வேண்டியிருந்தது.

1950-1962–இந்தியாவில் இதுவரை 27 குடும்பக் கட்டுப்பாடு அபிப்பிராய சர்வேக்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த சர்வேக்களிலிருந்து குடும்பக்கட்டுப் பாடுக்கு மதசம்பந்தமான எதிர்ப்போ அல்லது சமூக எதிர்ப்போ இல்லை என்று தெரியவருகிறது. 35ம் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவுள்ள பெண்களில் சுமார் 70 சதவீதத்தினர் குடும்பத்தைத் திட்டமிட விரும்புகின்றனர் எனவும் தெரிகிறது.

குடும்பத்தைத் திட்டமிடுங்கள்

ஆனந்தம் ஆரோக்கியம் அளிக்க

அருகிலுள்ள அரசாங்கம் அங்கீகரித்துள்ள

குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கு சென்று

ஆலோசனை பெறுங்கள்



பொய்க்கால்

பி.வி.ஆர்

"திப்பம்பட்டி பெரிய பண்ணை வூட்லே அன்னிக்கு ஆடினானே அவ இன்னிக்குக் கவுண்டர் வூட்டுக் கல்யாணத்திலே ஆடறா... போய்ப் பார்ப்பமா?"

"நான் வல்லே.... நீ போ...."

"அவகூட ஒரு மதுரைக்காரன் ஆடறானாம்....."

"நம்மை ஏற்பாடு செய்திருந்த கவுண்டருக்கு ஏதோ சால்சாப்பு சொல்லி முடியாதுன்னே. இப்போ போனா அவங்க சிரிக்க மாட்டாங்க?"

"அன்னித்து விசயம் அப்படியிருந்தது.... கவுண்டர்கூட மனசிலே வைச்சுக்காம கல்யாணத்துக்கு அழைச்சிருக்காரு. வா, போகலாம்....."

"மூணு நாளாச்சு தூங்கி. எனக்குத் தூக்கம் வருது...."

மயில்சாமி நச்சரித்து நச்சரித்து அங்கண்ணியை இணங்க வைத்து விட்டான். அவனுடைய வெற்றியில் அவனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. திருமூர்த்தி கோயிலில் நடக்கவிருக்கும் ஆட்டத்துக்கு இருவருமாகப் போனால் கவுண்டரே இருவரையும் எதிர்கொண்டு நின்று வரவேற்க மாட்டாரா?

* * *

சமீப காலம் வரை கோவை மாவட்டத்துக்குள் மட்டும்தான் அங்கண்ணியின் புகழ் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருந்தது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் உடுமலைப் பேட்டையில் ஒரு மில் முதலாளி வீட்டில் ஒரு காது குத்தலுக்கு ஆடினாளாம், ஆடினாள், புகழ் திடீரென்று அமெரிக்காவைத் தாக்கிக் கொண்டு பரவியது. மில் முதலாளியைச் சந்திக்க வந்திருந்த ஒரு டாலர்க்காரர் தம்முடைய காமிராவில் அங்கண்ணியையும் அவளுடைய ஆட்டத்தையும் அடைத்துக் கொண்டு அமெரிக்காவுக்குப் போனார். போனவர் பேசாமல் இருக்கக் கூடாதா? நிழல் படமாக்கியதை மற்றவர்களுக்குக் காட்டினார். பத்திரிகைகளில் வர்ணக் குதிரையும் அங்கண்ணியும் பவனி வந்தார்கள். ஏதோ ஒரு பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைக்கு நூறு டாலர் சன்மானமும் வந்தது. அதை அப்படியே அங்கண்ணிக்குத் தம் நண்பர் மூலம் அனுப்பியும் வைத்தார்.

ஆக அங்கண்ணி அமெரிக்கர்களின் இதயங்களில் இடம் பெற்றாள். அதன் மூலமாகவே தமிழ் நாட்டிலும் அவள் புகழ் பரவலாயிற்று.


அமெரிக்கா புகழ்கிறது என்பதால் அவளுடைய தரத்தைக் குறைத்து விடக் கூடாது. உண்மையிலேயே பொய்க்கால் குதிரைக்குள் புகுந்து விட்டால், அவள் கந்தர்வ ஸ்திரீ தான். மரத்தால் செதுக்கிய குதிரையின் விகாரத்தை விழுங்கிக் கொண்டு பளிங்கில் செதுக்கிய உருவமாக அவள் திகழ்ந்தாள். இரு கண்களின் துடிப்பும், அவசரமாக இறங்கித் திடீரென நிற்கும் மூக்கும், பூப் புன்னகை அரும்பி நிற்கும் உதடுகளும் மனத்தைக் கொள்ளை கொண்டு விடும்.

அவளுடைய ஆட்டம்? நேரில் பார்த்துத் தான் அனுபவிக்க வேண்டும். நாயனத்தின் ராகத்துக்கும் மேளத்தின் தாளத்துக்கும் ஒப்ப அவள் ஆடினாள். மலையிலிருந்து உருண்டு வந்து தாவி மோதும் நீரின் வேகம் கால்களில் துடிக்கும். அடுத்தகணமே மேகமற்ற வானில் ஊர்ந்து செல்லும் மதியின் நிதானம் பிறக்கும். ஒரு கணம் சலனமற்ற இடத்தில் ஆடாமல் அசையாமல் மேலோங்கி வீசும் குத்து விளக்கின் நா ஒளியாக நிற்பாள். அடுத்த விநாடியே, காற்றின் அணைப்போடு வீசும் காட்டுத் தீ போல் அங்கே இங்கே என்று எங்கும் இருப்பாள். ஆட்டத்தைப் பார்த்தவர்கள் தங்கள் தங்கள் உலகங்களுக்கு எப்போது திரும்புவார்களோ, தெரியாது.

அந்த அங்கண்ணி இப்போது மயில்சாமியுடன் போய்க் கொண்டிருந்தாள்.

* * *

ஜல்லிப்பாடி கவுண்டர் வீட்டுக் கல்யாணம்



உபாத்தியாயர் : போன பரீட்சைக்கு இந்தப் பரீட்சையில் நீ ரொம்பக் குறைச்சலாக மார்க் வாங்கி இருக்கே! என்ன காரணம்?

மாணவன் : அதற்கு நீங்கதான் காரணம்!

உபாத்தியாயர் : யார்? நானு?

மாணவன் : ஆமாம்! போன பரீட்சையின்போது என் பக்கத்தில் ஒரு கெட்டிக்காரப் பையனை உட்கார வைத்திருந்தீர்கள். இந்தப் பரீட்சையில்தான் அவனை வேறு இடத்தில் உட்கார வைத்துவிட்டீர்களே!

திருமூர்த்திக் கோவிலில் நடக்கிறது. பெரிய மிராசுதார் வீட்டுக் கல்யாணம். நல்லூர், தளி, கரட்டூர் முதலான கிராமங்களிலிருந்தெல்லாம் நூற்றுக்கணக்கானவர்கள் வந்திருந்தார்கள். உடுமலைப் பேட்டை 'பெரிய' மனிதர்கள் வேறு.

இரவு பத்து மணி. கோவிலை அடுத்தாற் போல் ஒரு வெட்ட வெளி. அருகே பாறைகளிடையே சலசலத்துக் கொண்டு ஓடும் திருமூர்த்தி நதி. ஒரு பக்கம் மலைக் குடும்பம் வானை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தது.

வெட்ட வெளியில் வட்ட வியூகத்தில் ஏழு எட்டு சாரிகளில் ஆட்டத்தை எதிர்பார்த்து மக்கள் பொறுமையுடன் போராடிக் கொண்டிருந்தார்கள். பெட்ரமாக்ஸ் விளக்குகளைச் சுற்றி ஈசல் குடும்பங்கள் ஆனந்தமாக ஆடிக் கொண்டிருந்தன.

மணி பத்தரை. கவுண்டர் தம் மானம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து வருகிறதே என்று ஆத்திரமும் துக்கமும் நிறைந்தவராக அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்.

ஆட இருக்கும் மதுரைக்காரன், தன் குதிரையின் கன்னத்தை வருடிக் கொண்டிருந்தான். அவன் கூட ஆட இருக்கும் பெண்ணை ஏனோ காணோம்.

கடைசியாக அந்தச் செய்தியும் வந்தது.

தளியருகே வண்டியில் ஏறப் போன பெண் கால் தடுக்கி விழுந்து விட்டாளாம். பாதம் புரண்டு விட்டதாம்.

கவுண்டரை அவமானம் பிடுங்கித் தின்று கொண்டிருக்கும்போதுதான், அங்கண்ணியும் மயில்சாமியும் ஆட்டம் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று ஒருவன் அவரிடம் வந்து சொன்னான். அவ்வளவுதான் ஆள் பறந்தது.

''இந்தாம்மா, நீதான் மானத்தைக் காப்பாத்தணும். மணி பதினொண்ணு அடிச்சாகி விட்டது'' என்றார் கவுண்டர்.

அங்கண்ணி மயில்சாமியைப் பார்த்தாள்.

அவன் முகம் சுருங்கியது.

''குதிரை இல்லே... துணியில்லே....''

''எல்லாம் மதுரைக்காரன் கொண்டு வந்திருக்கான்.... அந்தப் பொண்ணுக்கான 'டிரஸ்' எல்லாம் இருக்கு.''

''அங்கண்ணி தூங்கி மூணு நாளாவது...''

''மயில்சாமி, இந்த வேளையிலா என்னை நீ அழ வைக்கணும்...?'' உள்ளூறக் கவுண்டருக்குக் கோபம் வந்தாலும், சமயத்துக்காக நெளிந்தார்.

''அவ உடம்புக்கு ஒத்துக்காதுங்க.''

அங்கண்ணி கவுண்டரைப் பார்த்தாள்: சற்றுத் தூரத்தே மணப் பெண்ணையும் பிள்ளையையும் பார்த்தாள். பாவம், அவர்கள் வாழ்வில் ஒரு புண்ணிய தினம். அன்று ஓர் ஏமாற்றமா?

மெல்ல எழுந்து மதுரைக்காரன் அருகே வந்து. ''உடைகளெல்லாம் எங்கேயிருக்கு?'' என்று கேட்டாள்.

அவனை அவன் பார்த்தான். அவன் கண்கள் கூசின.

''நீயா ஆடப் போறே?''

''ஆமாம்.''

''தெரியுமா?''

''இன்னிக்குத்தான் அரங்கேற்றம்.''

''யார்கூட.....?''

''ஆடத் தெரிஞ்சவன்கூட.....''

''அப்படி ஒரு ஆள் இந்த வட்டாரத்திலே இருந்தாக் கவுண்டர் மதுரைக்கு ஏன் ஆள் அனுப்பறாரு?''

''நீங்க பேசிக்கிட்டே இருங்க.''

அவசரம் அவசரமாக உடை அணிந்து அங்கண்ணி வட்டத்தின் நடுவிலே புகுந்து விட்டாள். ஜனங்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரித்துக் கைதட்டினார்கள்.

மயில்சாமியின் அரும்பு மீசை துடித்துக் கொண்டிருக்கும் போதே, மதுரைக்காரன் இளம் ராஜகுமாரனாக மாறி வட்டத்தின் குதிரையுடன் பிரவேசித்து விட்டான். மயில்சாமி என்ன செய்வான்? ஊமைக் கோபம் அவனைத் தகித்தது. அங்கண்ணி தன் உரிமை என்ற காரணத்தில் ஆட்டத்தைத் தடுக்கப் போனால், அவன் எலும்பை ஜனங்கள் எண்ணி விடுவார்கள் என்பது நன்றாகத் தெரியும் அவனுக்கு.

அன்றைக்கு அவர்கள் ஆடினது ஆட்டமா? தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் பிரிந்து சென்றார்கள். நெருங்கினார்கள்: பார்வையோடு பார்வை மோதியது. ஓடினார்கள். குதிரையும் குதிரையும் அணைத்துக் கொண்டன. பாட்டு, அதன் தாளம், எது ஆட்டம் எது குதிரை என்று தெரியவில்லை.

பொய்க்கால் குதிரை முடிந்த போது மணி நாலு. அங்கண்ணி சோர்ந்து மண்டபத்தில் விழுந்தாள். கவுண்டருடைய மனைவியே அவளுக்குச் சிசுருஷை செய்தாள். இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை அவள் கையில் வைத்து, ''நீ என்னென்னிக்கும் மகராசியா இருக்கணும்'' என்று ஆசீர்வதித்தாள்.

ஃ ஃ ஃ

விடியற்காலை.

மயில்சாமியைக் காணோம்.

பாண்டியன் அவள் அருகே வந்தான்.

''என்னை மன்னிச்சுடு!''

''ஏதுக்கு!''

''நேத்து ராத்திரி நான் கேட்ட கேள்விக்கு!''

அவள் அவனையே பார்த்தாள். மயில் சாமிக்கும் இவனுக்கும்தான் என்ன வித்தியாசம்?

அவன் மேலே தொடர்ந்தான்.

''என்னோட சரி சமமா ஒருத்தி ஆட இருக்காளான்னு எனக்கு ரொம்ப நாளா ஒரு அசம்பாவம். அது நேத்து ராத்திரி உன் ஆட்டத்திலே செத்து விட்டது. இன்னும் சொல்லப் போனால் உன்னோடு ஆட எனக்குத் தகுதியே இல்லை!''

''நீங்க ரொம்பப் புகழுறீங்க!'' அங்கண்ணி வெட்கத்தால் தலை குனிந்தாள்.

''நான் பத்து வயசிலே கத்த வித்தை அம்மா இது. பத்து வயசிலே கத்த வித்தை... ஒவ்வொரு நாளும் மேலே போகணும்னு துடிக்கிற மனசு என் மனசு... மதுரை, ராம நாதபுரத்திலே கிடைச்ச புகழிலே திருப்தியே அடையலே...நேத்துத் திருப்தி கிடைச்சது.''

''ஏன்?''

''உன்னுடன் ஜோடி சேர்ந்ததுதான்.''

அங்கண்ணியின் முகம் சிவந்தது.

''இது நேத்தோடு நிக்கக் கூடாது. இது ரொம்பப் பெரிய கலை. இப்போது செத்துக் கொண்டிருக்கிறது....நீ நெனைச்சா புது உயிர் கொடுக்கலாம்.''

''நீங்க என்னை ரொம்பச் சிலாகிக்கிறீங்க!''

''உன் சொந்த ஊர் எது?''

''சொந்த ஊரு அங்கலக் குருச்சி. இருக்கிறது உடுமலைப் பேட்டை.''

''அப்பா அம்மா எல்லாம்?''

''இரண்டு பேரும் இல்லே! மாமன் கத்துக் கொடுத்தாரு. அவருடைய மகளும் ஆடு வாரு. நானும் அவரும்தான் ஆடுவோம்.''

''அந்தப் பெரியவரை, உனக்குச் சொல்லிக் கொடுத்த அந்தப் புண்ணியவானைப் பார்க்கணும்!''

''இன்னிக்குச் சாயந்திரம் வாருங்க...''

ஃ ஃ ஃ

வீட்டை அடைந்தவுடன் அங்கண்ணிக்கு கிடைத்தது. மயில்சாமி கொடுத்த அறை தான். கன்னத்தில் விரல்கள் பதிந்தன.

அவள் உடல் தள்ளாடியது. மூன்று இரவுகளாகத் தூக்கமே இல்லை. ஆட்டத்தின் அசதி வேறு. இப்போது மயில்சாமிக்கு ஈடு கொடுக்க மனத்திலும் உடம்பிலும் தென்பு இல்லை. நேரே போய்ப் படுத்துக் கொண்டாள்.

கண் விழித்த போது மாலை சுமார் ஆறு மணி இருக்கும். பாண்டியன் வண்டியிலிருந்து இறங்கினான்.

''மாமா.... இவருகூடத்தான் நேத்து ராத்திரி ஆடினேன்!''

''வா, தம்பி உட்காரு. இந்தாம்மா இவருக்குக் குடிக்க ஏதாச்சியும் கொண்டா!''

பெரியவர் பாக்கை எடுத்துப் போட ஆரம்பித்தார்.

''அது இருக்கட்டுமுங்க. முதல்லே ஒங்க காலைத் தொட்டுக் கண்ணிலே ஒத்திக்கணுமுங்க. நீங்க ஒரு பெரிய ஆட்டக்காரியைத் தந்திருக்கீங்க....''

''எல்லாம் முருகன் அருள்!''

''இந்த விளக்கைக் குடத்துக்குள்ளே அடைக்காதீங்க. மலை மேலே வையுங்க!''

''பொண்ணு அமெரிக்கா கூடப் போயி



போட்டோ எடுப்பவர்: ஏனய்யா இப்படி இளிக்கிறீரு...? என் காமிரா உம்மைக் கடிக்கா தய்யா... சும்மா இரும்.

டிக்க!'' என்று சொல்லிச் சிரித்தார் பெரியவர். பிறகு விஷயத்தைச் சொன்னார்.

வெகு நேரத்துக்குப் பாண்டியன் மயில் சாமிக்காகக் காத்திருந்தான்.

''அவன் இனிமேல் எப்போ வருவானோ?'' என்ற பெரியவர், ''என் புள்ளைதான். பிடிவாதக்காரன். நேத்து இவ உன்கூட ஆடினுன்னு என்ன கோபம் தெரியுமா?'' என்றார்.

''ஏன்?''

''அவன் போக்கு. கலையிலே பொறாமை இருந்தா அது வளரும். ஆனால் மத்தப் பொறாமைங்க ஆளையே அழிச்சுடும்... ஏன், கலையையே கொன்னுடும்.''

''நான் இன்னிக்கு ராத்திரி மதுரை திரும்பறேனுங்க. அடுத்த வாரம் குத்தாலத்திலே ஒரு ஆட்டம் இருக்கு. நீங்க அவளையும் அனுச்சுக்கிட்டு வர முடியுமா?''

''யோசிச்சுச் சொல்றேன்.''

''வெள்ளிக்கிழமைக்குள்ளே தகவல் வரலேன்னு, நானே வந்துடுவேன்!''

ஃ ஃ ஃ

மயில்சாமியின் கோபம் வீட்டில் இருக்கிற பாத்திரங்களைப் பாதித்தது. அங்கண்ணி முதலிலெல்லாம் பேசாமல் இருந்தாள்.

கடைசியில், ''அந்த ஆள் உன்னைவிட நன்னு ஆடுறாரு. ஏன் அதுக்காக என் பேரிலே எரிஞ்சு விழுறே? முடிஞ்சா நீயும் ஆடிக் காட்டு புதுசா!'' என்றாள்.

அவளுடைய ஆவேசத்தைத்தான் அதிகமாக்கின அவள் வார்த்தைகள்.

குற்றாலத்துக்கு மாமாவே அழைத்துச் சென்றார் அங்கண்ணியை. பாண்டியனுடைய ஆட்டத்தைப் பார்த்து விட்டு, அவருக்கு உடுமலைப் பேட்டைக்குத் திரும்ப மனம் வரவில்லை. வயதுக் காலத்தில், நிறைய சம்பாதிக்க வாய்ப்பு இருக்கிறது என்று தோன்றியது. தாம் மதுரையிலேயே சில மாதங்கள் அங்கண்ணியுடன் தங்கப் போவதாக மயில் சாமிக்குக் கடிதாக எழுதி விட்டார்.

கம்பம், தேனி, சின்னாளம் பட்டி, பெரியகுளம் என்று ஊர் ஊராகச் சுற்றினார்கள்.

பொய்க்கால் குதிரை உலகத்தில் ஒரு புது ஜோடி பிறந்து விட்டதாகப் பார்த்தவர்கள் சொல்ல, பாராதவர்கள் பார்க்க வேகமாக ஓடி வந்தார்கள்.

அங்கண்ணி ஒரு விசித்திரப் பிறவி. ஊரெல்லாம் அவள் ஆட்டத்தைப் புகழ்ந்தாலும் அவளுக்குத் தன் அருகில் மயில்சாமி இல்லையே என்றுதான் குறை தோன்றும். அவளுக்கும் அவளுடைய வெற்றிக்கும் ஊன்றுகோலாக இருந்தவன் அவன்தான். இளம் பருவத்திலிருந்து. அவளுடன் ஒட்டி ஒட்டி வளர்ந்த அவன் அவளுடைய இதயத்தோடு ஒன்றிப் போனவன். அன்று கவுண்டர் வீட்டுக் கல்யாணத்துக்கு ஆடினதிலிருந்து அவளுக்கே தன் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் பிறந்து விட்டது. அனாதையாக இருந்த தன்னை மாமன் எடுத்து வளர்த்தாரே என்ற கடமை உணர்ச்சியிலும் பாண்டியனுடைய புகழுரைகளிலும் தன்னை மறந்து புறப்பட்டு விட்டாள். தன்னால் மாமனுக்கு நாலு காசு கிடைக்கிறது என்றால் திருப்திதான். ஆனால் அந்த நாலு காசை அவள் இது நாள்வரை மயில்சாமியுடன் ஆடிச் சம்பாதித்துக் கொடுத்ததில்லையா? இப்போது ஊரை விட்டு வேறு ஊர் வந்ததில் என்ன சுகத்தைக் கண்டாள்? அதுவும் மயில்சாமி அவள் அருகே குதிரையில் ஆரோகணித்துக் கொண்டு புன்முறுவலுடன் இல்லாத போது? அவனுடைய மூச்சுக் காற்று அவளுடைய முகத்திலே வீசுகையில் உடலில் ஏற்படும் புல்லரிப்பு எங்கே? அந்த இன்பத்தை உதறி விட்டு எத்தனை நாட்கள் தான் இருப்பது?

அன்றுதான் முதன் முதலாகத் தன் மாமனிடம் விஷயத்தை ஆரம்பித்தாள்.

“என்னிக்கு மாமா நாம் கிளம்பலாம்?”

“இரும்மா.... பாண்டியன் எத்தனை வசதி செஞ்சுக் கொடுத்திருக்கான்.... இங்கே என்னம்மா குறை?”

“மனசிலேதான் மாமா குறை....”

“போகலாம், போகலாம்.”

“அவரு தனியா இருக்காரு. அதுவும் எம் பேரிலே கோபமா இருக்காரு.” அங்கண்ணிக்கு அழுகை வந்தது.

* * *

அன்று மாமா எங்கேயோ போயிருந்தார். அங்கண்ணியின் மனம் கசந்தது. என்னதான் அவர்மீது அன்பும் பக்தியும் இருந்தாலும், தம் மனத்தைப் புரிந்து கொள்ளாமல் தம் வருவாய் மீதே கண்ணாக இருக்கிறாரே என்று எரிச்சலும் உண்டாயிற்று. அவருடைய வருவாய்க்கு அவள் எத்தனை நாட்கள்தான் கருவியாக இருக்க முடியும்?

பாண்டியன்!

அவனை நினைத்தபோதே மனம் குமட்டியது! நன்றாக ஆடுபவன்தான். மயில்சாமி அருகே நிற்க முடியாதுதான். ஆனால் சுயநலத்துக்காக எதையும் செய்யும் பாண்டியன் எங்கே? அன்பும் ஆசையும் கொண்ட மயில்சாமி எங்கே, ஆட்டம் ஒன்றுதானா வாழ்க்கையில் ?

அவள் சின்னஞ்சிறு குழந்தையாக இருக்கையில் மயில்சாமி அவளைத் தன் மடிமீதும் தோள் மீதும் வைத்துத் தூங்கப் பண்ணியிருக்கிறான். சிறுமியாக இருக்கும் போதோ, தலை வாரிப் பின்னிப் பொட்டிட்டுப் பூ வைத்திருக்கிறான்: அவள் மேல் ஒரு துரும்பு விழுந்தால்கூட அவனால் சகிக்க முடியாது. அவளிடம் கொண்ட அளவில்லாத அன்பினாலும் காதலினாலும்தான் அடிக்கடி கோபமே அவனிடம் உண்டாகிறது. மற்றவர்களுடைய புகழுரைகளில் அவள் மயங்கி, ரசிகர்களுக்காக அதிக நேரம் ஆடித் தன் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாளே என்ற எண்ணம் தோன்றும் போது, அவன் தன்னால் பரிகாரம் தேட முடியாமல் அவள் மீதே எரிந்து விழுகின்றான். உண்மையில் அவனுடைய கோபத்தில் புதைந்து கிடப்பது அன்புதான், மேல் மட்டத்தில் வெப்பமும் உள்ளே தண்மையும் கொண்ட குளத்தைப் போல.

அந்த மயில்சாமி இப்போது எங்கே அலைந்து கொண்டிருக்கிறானோ?

எண்ணக் கதிர்கள் அவளுடைய மனத்தில் வீச வீச, உடனேயே அவனைப் பார்க்க வேண்டும் என்ற அவா பேராசையாக எழுந்தது.

அவள் தன் இருக்கையை விட்டு எழவும், “அங்கண்ணி!” என்ற குரலுடன் பாண்டியன் வரவும் சரியாக இருந்தது.

“என்ன வேண்டும்?”

“மாமா எங்கே?”

“தெரியாது.எங்கேயோ போயிருக்கிறார்.”

“நாம ரெண்டு பேரும்...” பாண்டியன் இழுத்தான். அவன் குரலே புது மாதிரியாக ஒலித்தது.

“என்ன சொல்லுங்கள்.”

“இன்னிக்கு ஒரு புதுப் படம்....”

அவனை எரித்து விடுபவளைப் போலப் பார்த்த அங்கண்ணி, “நாம ரெண்டு பேரும்

பிழைப்புக்காகத்தான் ஆடுகிறோம், தெரியுமா?'' என்று கூறினான்.

''அத்துடன் நிற்கக் கூடாது என்று நான் ஆசைப்படுகிறேன்.... இரு கலைஞர்களுடைய வாழ்க்கை....''

''போதும்.... நான் ஊருக்குத் திரும்பலாம் என்று தீர்மானிச்சுட்டேன்.''

''ஏன் கோபமா?''

''எனக்குப் போதுமென்று ஆகிவிட்டது... என்ன ஆட்டம் வேண்டிக் கிடக்கிறது!''

''நீயா இப்படிப் பேசுகிறாய்!''

''ஆமாம், நானேதான். ஆட்டம் வாழ்வில் ஒரு மூலைதான்..... அந்த மூலையே வாழ்வை விழுங்கி விடுவதற்குள் நான் அதைத் தேடிக் கொள்ளப் போகிறேன்.....''

''அந்த வாழ்வையும் இந்த ஆட்டத்தையும் நான் தரமாட்டேனா? அதைத்தான் நினைத்து நினைத்து நான் இது நாள்வரையில் கனவு கொண்டிருந்தேன்.''

''நான் கனவு காணவில்லை.''

''மயில்சாமியுடன் நீ வாழ்ந்தால், உன் கலை அழிந்து விடும்!''

''அவர் இல்லாவிட்டால் நான் அழிந்து போய் விடுவேன். தயவுசெய்து நீங்கள் போய் விடுங்கள்.''

* * *

அவள் உடுமலைப் பேட்டையை அடையும் போது மணி ஏழாகிவிட்டது.

மயில்சாமி முற்றத்தின் அருகே உட்கார்ந்திருந்தான். மூன்று மாதத்துத் தாடியில் அவனைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

''அத்தான்!'' என்று கூப்பிட்டுக்கொண்டே அங்கயற்கண்ணி அவன் கால்களில் விழுந்தாள்.

மயில்சாமி திடுக்கிட்டான்.

''வந்துட்டியா!''

''ஆமாம்.''

''அவன் துரத்திட்டானா?''

''இல்லே, அத்தான்! மாமாவுக்குக்கூடத் தெரியாம ஓடி வந்துட்டேன்.''

''ஏன்?''

''அத்தான்.....!''

''என்ன வேணும் இப்போ!'' குரலில் கோபத்தின் கடுமை தளித்தது.

''என்னே மன்னிச்சுடு அத்தான்!''

''உன்னே மன்னிக்க நான் யாரு?''

''நீதான் எல்லாம்....''

''இந்தப் புத்தி அன்னிக்கு ஆடறப்போ வல்லியே!''

''கவுண்டரோடு முகத்தைப் பார்க்கச் சகிக்கலே அத்தான். நம்மை ஆதரிச்சவரு, நன்றி மறக்கக் கூடாதுன்னு.....''

''மதுரைக்கு ஓடறதுக்கும் அதுவா காரணம்.....?''

''நானு போறேன்னு சொன்னேன்? அந்த மதுரைக்காரன் வார்த்தையிலே மாமா மயங்கினாரு. என்னே எடுத்து வளர்த்த அவரு, 'கிளம்பு'ன்னு கட்டாயப்படுத்தறப்போ நான் என்ன செய்யறது அத்தான்?''

''எனக்கு உன் கதையே வேணும். போயிடு.''

''இனி மேல் சத்தியமா நான் ஆட மாட்டேன். என்னே நம்பு அத்தான்! ஆடினால்

உன்கூட ஆடறது; இல்லேன்னு எனக்கு ஆட்டமே வேண்டாம்!''

''எங்கிட்டே பேசாதே...போ...'' என்று சீறினான் மயில்சாமி. ''நான் உன்னைக் கட்டிக்கிட்டப்புறம்கூட நீ அவனுடன் ஆட மாட்டாய்னு நான் எப்படி நம்பறது?''

'எப்படி நம்ப வைப்பது?' என்று அங்கண்ணி பிரலாபித்துக் கொண்டாள்.

❀ ❀ ❀

இரண்டாம் நாளே மாமா பண மூட்டையுடன் திரும்பினார். அங்கண்ணியை என்னவெல்லாம் திட்டலாமோ அவ்வளவும் திட்டினார். ஆனால் அவள் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

நாட்கள் சென்றன. வீடே வெறிச்சோடியது. மயில்சாமி அவளுடன் பேசுவதை நிறுத்தினதோடு நிற்காமல், அடிக்கடி வீட்டை விட்டு வெளியிலேயே அலைந்து கொண்டிருந்தான். அங்கண்ணி திரும்பி வந்த பிறகு எத்தனையோ பேர்கள் ஆட்டத்துக்கு ஏற்பாடு செய்ய வந்தார்கள். மாமனின் கோபத்தையும் பொருட்படுத்தாமல் அவள் மறுத்தாள்.

கடைசியாக ஒரு பேரிடியும் விழுந்தது.

''அங்கண்ணி !'' என்று அழைத்துக் கொண்டே வந்தார் மாமா.

''என்ன மாமா!''

''உனக்குக் கலியாணம் செய்யலாம்னு தீர்மானிச்சுட்டேன்!''

அவள் கண் முன் மயில்சாமிதான் நின்றான்.

''என்ன பேசாமல் நிக்கறே?''

''நான் என்ன மாமா சொல்றது? உங்க இஷ்டம். அத்தானையும் கேட்டுக்குங்க....''

''அந்தப் பயலே எங்கே போய்த் தேடறது? எங்கே சுத்தறானோ......?''?

''என்ன சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியல்லே.....'' அங்கண்ணி நிலைகுலைந்தாள்.

''பாண்டியன் அஞ்சாயிரம் தரான். பழனியிலே கலியாணம். இன்னும் எட்டு நாள் இருக்கு!''

அவள் அயர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

இரண்டு நாட்கள் ஆயின. மாமா நடக்க இருக்கும் கலியாணத்துக்கான ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்து விட்டார். அவருடைய கடைசிக் காலத்தில் அனாதையான மருமகள் மூலம் அதிருஷ்டம் அடிக்கிறது. தம் பிள்ளையும் அவளுமாக ஆடி என்னத்தைக் கொண்டு வந்து விட்டார்கள்? மூன்று மாத ஆட்டத்தில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் பாண்டியன் கொடுத்து விட்டான். இப்போது ஐயாயிரம் ரூபாய் ரொக்கம்! அவள் வாழ்நாள் முழுதும் அவனுடன் வாழ்க்கையில் ஆடுவதற்கு அச்சாரம்!

மூன்றாம் நாள் இரவென்று மயில்சாமி வந்தான்.

அழுது கொண்டே அங்கண்ணி விஷயத்தைச் சொன்னாள்.

முதலில் திடுக்கிட்டாலும் அவன், ''அவர் உன் இஷ்டப்படிதான் செஞ்சிருக்காரு!'' என்றான்.

''அத்தான்! நீயும் கை விட்டுட்டா எனக்கு யாரு அத்தான்?''

''முருகன்!'' என்று சொல்லி விட்டு அவன் வெளியேறினான்.

அன்று இரவு அவள் தூங்கவில்லை. ஆனால் உள்ளத்தில் திடீரென்று பிறந்த எண்ணம் உறுதியாகி, அதை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கலாயிற்று.

❀ ❀ ❀

மறு நாள்.

அங்கண்ணியைக் காணோம். மாமா வெலவெலத்துப் போனார். மருமகளைக் காணாதது மட்டுமல்ல! அவருடைய ஐயாயிரத்துக்கு உலை! மயில்சாமிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அங்கண்ணியின் போக்கு அவனுக்குத் தெரியும். அவளுடைய மனசை அளவுக்கு மீறிப் புண்படுத்தி விட்டதாக நினைத்தான்.

மணி எட்டு இருக்கும். அங்கண்ணியை எங்கே என்று தேடுவது என்று தெரியாமல் தந்தையும் மகனும் கலங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பதை பதைக்க ஒருவன் ஓடிவந்தான்.

''அங்கண்ணி ஆஸ்பத்திரியிலே இருக்கா!''

''என்ன?''

''ஆமாங்க. மேற்கே போற ரயிலிலே ஏறினளாம். கொஞ்ச தூரம் போனப்புறம் இறங்கணும்னு குதிச்சாளாம்.... காலிலே சரியான அடி!''

மயில்சாமி தன்னை மறந்தான். கால்கள் ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தன.

❀ ❀ ❀

முதல் நாள் மயக்கம் தெளிந்து முனகின அங்கண்ணி மறு நாள், மாலை தன்னருகே அமர்ந்திருந்த மயில்சாமியைப் பார்த்ததும் முறுவலித்தாள்.

''என்னை மன்னிச்சுடு, அங்கண்ணி!''

''அத்தான்! நீதான் என்னை மன்னிக்கணும்'' என்று கேவின அவள், ''இனிமே நான் ஆடவே முடியாது அத்தான், ஆடவே முடியாது!'' என்றாள்.

''என்னாலேதான் உனக்கு இந்தக் கதி!''

''எனக்கு இப்போ என்ன சந்தோஷம் தெரியுமா?''

மயில்சாமி ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''நீ என்னைக் கட்டிக்கிட்டப்புறம் நான் இன்னொருத்தனோடு ஆடுவேனென்னு நீ பயந்தியே, இனிமேல் அந்தப் பயத்துக்கு இடமே இல்லேங்கிற போது எனக்கு எத்தனை திருப்தியா இருக்கு, தெரியுமா?''

மயில்சாமி அவள் முகத்தையே பார்த்து உட்கார்ந்தான்.

அவன் கண்களில் நீர் முட்டி நின்றது.

''கால் முறிஞ்சு போனவளைக் கட்டிக்கிட்டா கஷ்டம்னு நினைக்கிறியா, அத்தான்? பொய்க்காலே வெச்சுக்கிட்டுப் பொய்க்கால் குதிரை ஆட முடியாதென்னு யோசிக்கிறியா ?''

''என்னைக் கொல்லாதே அங்கண்ணி. என்னைக் கொல்லாதே. உன் மனசை முறிச்ச எனக்குக் கால் முறியலியேன்னு நான் தவிக்கிறேன். உன்னை நான் புரிஞ்சுக்கவேயில்லே!''

அங்கண்ணி நிம்மதியாகத் தூங்கினாள்.

யாரோ ஒருவருக்கு

"சார்!" என்ற குரல் கேட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். யாரோ அறிமுகமில்லாத மனிதர் நின்று கொண்டிருந்தார். நான் வழக்கம் போல் வீட்டு நம்பரைச் சொல்லி, "உங்களுக்கு யாரைப் பார்க்க வேண்டும்?" என்றேன். நான் இருந்த வீட்டில் மூன்று குடித்தனங்கள் இருந்தனவே!

அந்தப் புது மனிதர் முகத்தில் தயக்கம் தோன்றியது. "இந்த வீட்டில் வாடகைக்குப் போர்ஷன் இருப்பதாகச் சொன்னார்களே! இருக்கிறதா?" என்றார் அவர். இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டி விட்டு, "உங்களுக்கு யாரோ தவறுதலாகச் செய்தி கொடுத்திருக்கிறார்கள்" என்று முடித்து உள்ளே போகத் திரும்பினேன்.

"சார்! ஒரு நிமிஷம்! இந்தத் தெருவிலே எங்காவது இடம் காலி இருக்கிறதா? உங்களுக்குத் தெரியுமா? ஐம்பது அறுபது ரூபாயில் இருந்தால் நலம். நான் வெளியூரிலிருந்து உத்தியோகம் மாறி வந்திருக்கிறேன்" என்றுசொல்லி ஒரு தனியார் ஸ்தாபனத்தின் பெயரைச் சொன்னார்.

"ஐயா! மாதம் இருபது ரூபாய்க்குக் கீழே வாடகையுள்ள இருட்டறை, பொந்துகள் சுலபமாகக் கிடைக்கும். இல்லை, இருநூறு ரூபாய் மாத வாடகைக்கு மேற்பட்ட இடங்கள் தனிமையாகவோ போர்ஷன்களாகவோ எளிதில் கிடைக்கும்! நடுத்தரமானவர்களுக்கு நல்ல இடம் குடியிருக்கக் கிடைப்பது குதிரைக் கொம்பான விஷயம்தான்" என்றேன். வந்தவர் கிளம்பினார்! அவர் முகத்தில் ஏமாற்றம் தேங்கியிருந்தது.

இன்றைய நகர வாழ்க்கையில் குடியிருக்கத் தகுந்த இடம் கிடைப்பது மகா பெரிய அதிர்ஷ்டம். அதைக் கண்டு பிடிப்பது சிரமமான கலை! எத்தனையோ பேர் இடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள்! ஒரு பெரிய தொல்லையிலிருந்து அதைவிடக் கொஞ்சம் குறைவான தொல்லையை நாடிப் போகிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, இருந்த இடத்தை விட வேறு நல்ல இடத்துக்குப் போகிறார்கள் என்று சொல்ல முடியாது. அப்படிப் போகிறவர்கள் ஆயிரத்தில் ஒருவராகத்தான் இருப்பார்.

சொந்த வீடுகளுடைய பலர், அவற்றின் மூலம் வரும் வாடகையை நம்பி வாழும் நிலையில்தான் இருக்கிறார்கள். வீட்டுப் பராமரிப்பு, வரிகள் முதலிய செலவை ஈடு செய்ய அவர்களுக்குக் குடக்கூலி தேவைப்படுகிறது. ஆனால் என்னவோ அவர்கள் வாடகை கொடுக்க முன் வருபவர்களைச் சுலபமாக நம்புவதில்லை; அவர்களை மதிப்பதுமில்லை.

"உமக்குக் குழந்தைகள் எத்தனை? உம் குடும்ப நபர்கள் எத்தனை பேர்? உம்முடைய மாதச் சம்பளம் எவ்வளவு? சம்பளம் குறித்த தேதியில் கிடைக்குமா? நான் கேட்கும் வாடகையைக் கொடுக்க உமக்குச் சக்தி உண்டா? ஆறு மாத வாடகை அட்வான்ஸாகக் கொடுக்க முடியுமா?" இவை போன்ற துணிந்த கேள்விகள் நகரத்தில்தான் கேட்கப்படுகின்றன. இடம் வேண்டுவோர் பதில் தான் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து ஐம்பது ரூபாய் போர்ஷனுக்குக் குடி வந்தார் அன்பர் ஒருவர். அவர் குடி வந்த மூன்றாம் மாதமே வீட்டுச் சொந்தக்காரர் வீட்டை வேறு ஒருவருக்கு விற்று விட்டார். புது சொந்தக்காரர் குடியிருந்தவர்களைக் காலி செய்ய நோட்டீஸ் கொடுத்துவிட்டார். அன்பர், இன்னும் பழைய வீட்டுக்காரரிடம் பஸ் சார்ஜ் செலவழித்துக் கொண்டு போய் வந்து கொண்டிருக்கிறார். வருடம் மூன்றாகிறது. ஐந்நூறு ரூபாயும் வராமல் அப்படியே நிற்கிறது.

எப்படியோ இடம் கிடைத்துக் குடி புகுந்தாகி விட்டது என்று வைத்துக் கொள்ளலாம்! அப்புறம் வீடே இடிந்தாலும் ரிப்பேர் செய்ய முன்வர மாட்





நீங்கள் சொல்லும் ஹாஸ்யத்தைக் கேட்டுப் பெண்கள் சிரிக்கவேண்டுமா? அவர்களைப் பார்த்து 'ஆஹா! உங்கள் சிரிப்பொலிக்கு ஈடு உண்டா! சலங்கை கொஞ்சுவது போன்று அல்லவா இருக்கு!' என முதலில் புகழ்ந்து கூறிவிடுங்கள். பிறகு பாருங்களேன்!

டார்கள். "ஐயா! குழாயிலே ஏதோ ரிப்பேர்! தண்ணீர் வரவில்லை" என்று கண்ணீர் உதிரக் கத்தினாலும் காதில் போட்டுக் கொள்ள மாட்டார். ஆனால் காலண்டரில் கொட்டை எழுத்தில் போடப்பட்டிருக்கும் தமிழ் மாதமுதல் தேதியைக் கூட ஆங்கில மாத முதல் தேதியாக்கும் என்று நினைத்து இரண்டாவது தடவை ஒரே மாதத்துக்குள் வாடகை கேட்க வந்து நிற்பார்கள்.

பொதுவாக, பல வீட்டுச் சொந்தக்காரர்கள் அடிக்கடி குடித்தனங்கள் மாறுவதை விரும்புவதால்தானோ என்னவோ, ரிப்பேர் செய்து கொடுப்பதை விரும்புவதில்லை. ஒவ்வொரு குடித்தனமும் புதிதாக வரும்போது ஐந்து ஐந்து ரூபாய் வாடகையை உயர்த்த வாய்ப்பு இருக்கும் போது அதைக் கைநழுவ விடுவானேன் என்ற எண்ணமாகவும் இருக்கலாமல்லவா?

நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தேன். முன்வாசலை ஒட்டிய அறை. அங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். காப்பி சாப்பிட்டுப் போக வேண்டும் என்று வற்புறுத்தினர். 'சரி' என்றேன். போனார், போனார். போயே விட்டார். கால் மணி நேரம் கழித்துத் திரும்பி வந்தார். "என்ன ஸ்வாமி! ஓட்டலுக்கா போயிருந்தீர்?" என்று கேட்டேன். "இல்லை ஐயா! சமையல் அறை பின்கட்டுக் கடைசியில் இருக்கிறது. இடையே இரண்டு கட்டுகள். கெங்குரெட்டி ரோட் லெவல் கிராஸிங் மாதிரி நடுக்கட்டுக் கதவுகளைச் சில சமயங்கள் சாத்தி விடுவார்கள்! நின்று போக வேண்டும்" என்றார். "உமது கால்கள் இப்படி நடந்து நடந்து இரும்புக் கால்களாயிருக்க வேண்டுமே? இந்த இடத்துக்கு என்ன வாடகை?" என்று கேட்டேன்.

"ஐம்பது ரூபாய்! அதாவது இந்த அறைக்கு நாற்பத்தைந்து. பின்னால் இருக்கும் சமையல் அறைக்கும் ஸ்டோர் ரூமுக்கும் ஐந்து ரூபாய் என்று நான் கணக்குப் போட்டு வைத்திருக்கிறேன்! இந்த வீடு கிடைக்க நான் வீட்டு புரோக்கர்களுக்காகச் செலவழித்திருக்கும் தொகை நூற்றுக்கு மேலிருக்கும்!" என்று கூறினார்.

இடத்தின் அருமை அது கிடைக்காதவனுக்குத்தானே தெரியும்? வீடு கிடைக்கவில்லையே என்று முன்னால் தெருவில் அலைந்தார். இப்போது வீடு கிடைத்த பிறகு உள்ளே அடுக்களைக்கும் வாசல் அறைக்கும் அலைகிறார். நடை யோகக்காரர்! ஆனால் அவரைப் பார்த்ததும் பெருமூச்சு விட ஆயிரம் பேர்கள் காத்திருக்கிறார்களே!

நகர மக்கள் தங்கள் வாழ்க்கையை ஓட்டப் பல இடங்களில் பரவலாக இருக்கும் தொழிற்சாலைகளுக்கும் கடைகளுக்கும் போய் வரச் சர்க்கார் பஸ் போக்குவரத்து, டாக்ஸி ஆட்டோ ரிக்ஷா, ரயில் முதலிய சாதனங்களைப் பல இடையூறுகளைச் சகித்துக் கொண்டு உபயோகப்படுத்துவது போலவே வசிக்கும் இடங்களையும் உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சொந்த இருப்பிடம் உள்ளவர்கள் வெகு குறைவு. குடக்கூலிக்கு இடம் பிடிக்க வேண்டியவர்கள் வெகு அதிகம்.

அவர்களிடம் அன்புடனும் தயவுடனும், ஏன் மரியாதையுடனும் தான், நடந்து கொள்ளும் மனப்பான்மையை வீட்டுச் சொந்தக்காரர்கள் கொஞ்சம் காண்பித்தாலும் போதுமே! அது அவர்களுக்கு எவ்வளவோ உற்சாகத்தைக் கொடுக்குமே!

"என்ன ஐயா! கொஞ்சம் இதமாக நடந்து கொண்டால் இளிச்சவாயன் என்ற பட்டம் தான் கிடைக்கிறது! வாடகைக்கு நாமத்தைப் போட்டு விட்டு ஓடி விடுகிறார்கள்!" என்று ஒரு வீட்டுச் சொந்தக்காரர் முணுகுவது காதில் விழாமலில்லை. ஆயிரத்தில் ஒருவர் இருவர் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்காக மீதி அத்தனை பேரையும் விரோதிகளாகப் பாவிப்பது நியாயமா? இந்த ஜனநாயக யுகத்தில் பெரும்பான்மையினரின் போக்குக்கு மதிப்புக் கொடுப்பதுதானே நியாயம்!

ஜாதி இரண்டொழிய வேறில்லை
சாற்றுங்கால் — மெட்ராஸில்
விதிமுழுதும் வீடிருந்தும்
இடம் கொடுப்போர் பெரியோர் —
குடியிருப்போர் இழிகுலத்தோர்
பட்டினத்துப் பாஷைப் படி.


என்று யாரும் அனுபவக் கவிஞர் பாடாமலிருக்க உதவி செய்யுங்கள்.

யாரோ எழுதியது


மேலானது!
Parle's
MONACO
salted snacks
"சுவையுள்ள,
ஆரோக்கிய
மணிக்கும்,
கரகரப்பான"
பார்லேயின்
மொனுகோ
சால்டெட் ஸ்னுக்ஸ்
பார்லேயின் மொனுகோ சால்டெட் ஸ்னுக்ஸ்
இந்தியாவில் மற்றெந்த காரா பிஸ்கெட்டுகளை
விட அதிகம் விற்பனையாகின்றன !
ISI
பார்லே ப்ராடக்ட்ஸ் மானு. கம். பிரைவேட் லிட்., பம்பாய்-57.
PP. 501 TAM.


ஓட்டப்பந்தயம்
கதை: ஏ.எஸ்.சுந்தரராஜன்
சித்திரம்: செல்லம்
கதிரவனின் பொற் கிரணங்கள் தன்றுந் துளிராய நின்று கொண்டிருந்த அந்தக் கிழட்டுப் பங்களாவையும் அணைத்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தன.
அப்பனே! எட்டு மணி இப்போ. இமைதனைத் திறந்திடு. இட்டிலி சாம்பார் ரெடி!
என்னடா சுப்ரபா-தம் பாடி அவனை எழுப்புகிறாயா?
ஆளையே காணோமே...
அப்போ என் இண்டர்வியூ
போடா பெரிய இண்டர்-வியூ! ஆறுமாதமாக அலைகிறாய். ஒரு வேலை-யும் கிடைக்கவில்லை. இவன் தான் பெரிதாகத் தூக்கிக் கொடுத்து விடப் போகிறானோ?
என்ன மாமா, இப்படி ஆச்சரியப்பட்டு நிக்கிறீங்க? இன்னிக்குத் திருச்சியிலே கம்பெ-னியிலே இண்டர்வியூ. அதனால்தான் சீக்கிரம்...
வரலாறு காணாத புதுமை... ம்... சரி! உன் அத்தை பெங்களூரிலிருந்து வருகிறாளாம். ஸ்டேஷனுக்குப் போய்க் கூட்டிவா.
பஞ்சு திவண்டா வெறுப்பாக சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வருகிறான்.
ஐயோ! குழந்தையைக் காணோமே, காமினி!.. காமினி!
என்ன அத்தை, ஏன் இப்படித் தவிக்கறே?
ஊரிலிருந்து என் அக்கா பெண் காமினியைக் கூட்டி வந்தேன். குழந்தையைக் காணோம்!


குழந்தையா? அப்படின்னு இருந்தாதான் எங்காவது பலூன் கடையில் நிற்கும். இதோ தேடிப் பார்த்துத் தூக்கி வருகிறேன்!
நீ தூக்கி வரும் குழந்தையில்லே. அவள் பதினெட்டு வயதுக் குமரி யாக்கும்.
காமினியின் அங்க அடையாளங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பஞ்சு முதல் வேலையாகக் கடைக்குப் போய் ஒரு ஸ்கேல் வாங்கிக் கொண்டு அவளைத் தேடக் கிளம்புகிறான்.
இடை நாலு அடி இருக்குமாமே ம்... அளந்து பார்த்து விட வேண்டியது தான்.
ஏம்மா! உன் பேரு காமினியா? உன் வயசு பதினெட்டுதானே?
இல்லே! ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தியேழு!
திருப்பதியிலே கூட மொட்டைத் தாதனைக் கண்டு பிடிச்சுடலாம். இந்தப் பட்டணத்திலே... அதோ ஒரு பொண்ணு யாரையோ தேடறா. அது காமினியாகத் தானிருக்கணும். நாலடி இடை...
என்னடேய்? பொம்பிளைகளை வழி மறித்துக் கலாட்டாப் பண்றே? நட ஸ்டே-ஷனுக்கு
உன் கதை எல்லாம் போதும். இந்தமாதிரி எத்தனை கதைங்களைக் கேட்டிருக்-கேன்? ஏய்! 402 இந்த ஆளை லாக் அப்பிலே தள்ளு.
சார்.... இது ரொம்ப அநியா-யம்! அக்கிரமம்!
ஷட் அப்!


மூன்று மணி நேரச் சிறை வாசத்துக்குப் பிறகு பஞ்சுவுக்கு விடுதலை கிடைத்தது - ஒரு நண்பனின் உதவியால்
ஏண்டா பழி! ஏன் இப்படி லூஸ் ஆயிட்டே நீ? வழியிலே போற பெண்களோட இடையை அளந்-தாயாமே?
ஆறுமுகம்! இப்போ நீ என்ன பண்ணிக் கொண்டிருக்கே அதைச் சொல்லலியேபா!
நானா? நலிந்து வரும் நாடகக் கலையைச் சும்மா கிளாக்ஸோ குழந்தை மாதிரி கொழு கொழுன்னு வளர்க்கப் பாடுபடுகிறேன். பம்மாதசு நாடக சபா என்று கேள்விப் பட்டிருப்பாயே. அதனுடைய ஓனர் நான்தான்.
பஞ்சு நண்பனிடம் விஷயத்தை விளக்கிறான்.
ஏண்டா, ஒருநாளி! ஊர் சுற்றி! காமினி எங்கே?
வந்து... மாமா, ஜோசியம் பார்த்தேன். அவன் விஷயம் தெரியாமல் திண்டாடிவிட்டுப் பெங்களூருக்கே போய்விட்டாளாம்.
முட்டாள்! பெண்ணைத் தேடிப் பாரடா என்றால் ஜோசியம் பார்த்தாயாம். காமினி எப்படியோ விசாரித்துக் கொண்டு வந்துவிட்டாள். சந்தேகமிருந்தால் உன் ஜோசியரையும் கூட்டிக் கொண்டு மாடிக்குப் போய்ப் பார்.
என்னடா, என்ன? ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறாய்?
எப்படியோ வந்து சேர்ந்துவிட்டாளா? ஒரு ஆள் அசகாய சூரியாகத்தானிருக்க வேண்டும். காமினி கூடக் கட்டழகியாக இருப்பாளோ?
ஐயையோ! மாமா! அத்தே! ஓடி வாருங்க... ஓடி வாருங்க...

(தொட

பாமாலிவ் லவண்டர்

வசீகரிக்கும் நறுமணம்....

பெருமிதத்தையும், அழகையும் அளிக்கிறது!



வசீகரம்...பாமாலிவ் லவண்டர் டால்கம் பெருமிதத்திற்கும், அழகிற்கும் உற்ற நண்பன். சிறிது பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பின்மேல் தூவிக்கொண்டால், அதன் இனிய நறுமணம் உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள். பாமாலிவ் உபயோகித்து எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும், நறுமணத்துடனும், அழகுடனும் விளங்குங்கள்.

பாமாலிவ் டீலக்ஸ்—மயக்கும்
17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை!

PT-G-6-TAM-



அத்தியாயம் 33

ஏமாற்றத்தின் எல்லை

கொஞ்ச நாட்களாகவே வடிவேலுவின் மனம் திரிசங்கு சொர்க்கம் என்பார்களே அதைப் போல் அந்தரத்தில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது- தாராவுடைய இதய ஆழத்திலே பூட்டி வைக்கப்பட்டிருந்த ரகசியங்களை எப்படியோ ஊடுருவிப் பார்த்துவிட, அவளை முழுமையாகப் புரிந்து கொள்கிற அந்த இனிய அனுபவம் இறக்கைகளாக அமைந்து அவனை ஆகாயத்தில் ஆனந்தமாய்ப் பறந்து வரச் செய்தது என்று கூறி விடுவதற்கில்லை. அதே சமயத்தில் அவளுடைய உள்ளத்தை நான் இன்னும் அறிந்து கொள்ளவே ஆரம்பிக்கவில்லை என்று முடிவு கட்டி விடவும் அவன் மறுத்தான். இரண்டுங் கெட்டான் நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவன் பல சந்தர்ப்பங்களில் அவளைத் துணிந்து கேட்டுவிட எண்ணி வாய் திறப்பான். ஆனால் தொண்டையிலே பிறந்த வார்த்தைகள் தொண்டையிலேயே தேய்ந்து அங்கேயே மறைந்தும்விடும். அல்லது வேறு ஏதாவது ஒரு குறுக்கீடு வந்து சேர்ந்து விடும்.

‘தாரா தன்னைப் பற்றி என்ன நினைக்கிறாள்?’ — இரவும் பகலும் அவன் சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கேள்வி இது.

பிறந்தது முதல் இன்று வரையில் என்று எடுத்துக் கொண்டாலும் அவன் வாழ்க்கையிலேயே மிக மிகத் துன்பம் நிறைந்த ஒரு விநாடியில் துயர் துடைக்க வந்த ஒரு தோழனைக் கருதித் தனக்கு நன்றி தெரிவிக்கிறாள்

என்பது தெளிவு. கணவனைப் பிரிந்து கதறித் துடித்த அந்தக் கணத்தில், பித்துப் பிடிப்பதோ அல்லது தற்கொலை புரிந்து கொள்வதோ இரண்டில் ஒன்று நிச்சயம் என்கிற சூழலில் அனுதரட்சகனுகத் தக்க தருணத்தில் தோன்றிய தன்னைத் தாரா உயர்வாக மதிக்கிறுள் என்பதில் சந்தேகமில்லை. அவளைக் காப்பாற்றி அருளியவனுக மட்டுமல்லாது அவள் வயிற்றில் வளர்ந்து வந்த சிசுவை மாய்த்து விடுகிற பாபத்திலிருந்து அவளைத் தடுத்தாட் கொண்டவனுகவும் தன்னைப் போற்றுகிறுள், கையெடுத்துக் கும்பிடவும் தயாராக இருக்கிறுள்.

ஆனுல் நன்றி விசுவாசம் மட்டும் தான் அவள் நெஞ்சில் நிறைந்திருக்கிறதா ? தனக்கு அங்கே கிஞ்சித்தும் இடமில்லையா?

தாராவும் பாருவும் ஒன்றுகக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் அவர்கள் காதும் காதும் வைத்தாற் போல் பரிமாறிக் கொண்ட அந்தரங்கப் பேச்சு வார்த்தைகளுக்கிடையில் தன் பெயரும் அடிபட்டதை வடிவேலு அனுமானித்தான். அப்போதெல்லாம் அவனைக் கண்டதும் தாராவின் விழிகள் அவளையும் அறியாமல் தாழும். நாணிச் சிவக்கும் கன்னங்களில் குழி விழ அவள் மென் நகை உதிர்ப்பாள். பின்னர், 'எதற்காக நான் வெட்கப்பட வேண்டும்? இவருக்குத்தான் எங்களுடைய திட்டங்களைப் பற்றி ஒரு விவரமும் தெரியாதே' என்று சமாதானமடைந்தவளாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனைப் படபடக்கும் இமைகளுடன் ஏறிட்டு நோக்குவாள். தன்னைச் சந்திக்கும் போது தாராவின் தோற்றத்தில் ஏற்படும் இந்த மாறுதல்களும், ''என்றென்றைக்கும் நாங்கள் இணைபிரியாத தோழிகளாய் ஒன்றுகவே இருக்கத் தீர்மானித்திருக்கிறேம், அண்ணு!'' என்று பாரு பல தடவைகளில் அவனிடம் கூறி யிருந்ததும் அவ்விரு பெண்களுடைய இதயங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஒருவாறு அவனுக்குப் புலப்படுத்தின.


சிநேகத்தால் தன்னுடன் கட்டுண்டிருந்த பாருவை விட்டுத் தனியே வெகுதூரம் செல்லப் பிரியமின்றித் தாரா இந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டிருந்தாளா? அல்லது உண்மையாகவே வடிவேலுமீது அவளுக்குப் பற்றுதல் விழுந்திருந்ததா? இது வடிவேலுவுக்கு இன்று வரையில் தெரியாது. தெரிந்து கொள்கிற ஆவலும் அவனுக்கு அன்றைக்கு இருந்ததில்லை. ஆனுல் இப்போது?....

கல்லூரிப் படிப்பு முடியும் வரையில் இத்தகைய கற்பனைகளில் ஈடுபட்ட தோழிகள், படிப்புப் பூர்த்தியாகிப் பொறுப்பு வந்ததும் தங்கள் அசட்டுத் தனங்களுக்காக வருந்தி யிருக்கலாம். அல்லது பெற்றேர்களிடம் தங்கள் அபிலாஷைகளைக் கூற அஞ்சி வாய் திறவாமலும் இருந்திருக்கலாம். பின்னுல் ஒரு முறை, 'அது ஒரு பருவம்; அர்த்தமற்ற சபதங்களுக்கும் அபத்தப் பேச்சுக்களுக்கும் அங்கே நிறைய இடம் உண்டு' என்று தாரா அந்த மாணவப் பருவத்து நினைவுகளை விலக்கித் தள்ளினுளே யொழிய விளக்கம் தரவில்லை.

வடிவேலுவுக்கு இப்போது விளக்கம் தேவைப்பட்டது.

உமாகாந்துக்கு வாழ்க்கைப்படப் போகிறுள் என்று முதன் முதலாகக் கேள்விப்பட்டபோது சற்றும் கலக்கமுருதவன்; இன்று அவளைச் சோதிக்க எண்ணிக் கேள்விகளால் தாக்கிஞல், ஆணித்தரமாக அவள் கூறிவிடக் கூடிய பதிலைத் தன்னுல் தாங்க முடியாமல் போய் விடுமோ என்பதற்காகத் தயங்கிஞன். தேனூருக்கு அவள் வந்து சேர்ந்தது முதல், கடந்த இரண்டு மாதங்களாக அவனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு, உருவாக்கியிருந்த நிலை இது.

இப்படி எற்கனவே அவன் இண்டாடிக் கொண்டிருக்கும் போது, தாரா



"வேற்று மனுஷியா நான்?" என்று கேட்டு அவனைத் திக்குமுக்காடச் செய்து விட்டாள். ஊரைப் பார்க்க அவர்கள் திரும்பி நடந்து சென்று கொண்டிருக்கையில் படாத பாடு பட்டுவிட்டான் வடிவேலு.

'தாரா! நான் அனுபவிக்க வேண்டியது இன்பமா துன்பமா என்றே விளங்காத இந்த மனக் கஷ்டத்தை என்னால் இனி பொறுக்கவே முடியாது! வெதும்பி வாடுகிற நான், அனலாக உங்கள் மீது அன்பைச் சொரிந்து பனிக்கட்டியாக உறைந்திருக்கும் உங்கள் உள்ளத்தை இளகச் செய்கிறேன். அதற்குச் சம்மதம் தெரிவியுங்கள். இல்லையானால்—சந்தோஷசாகரத்தில் குதூகலமாக மிதந்து வர எனக்கு அனுமதி தர உங்களுக்கு விருப்பமில்லையானால் — துன்பப் படுகுழியில் என்னை ஆழப் புதைத்து விடுங்கள்!

'இரண்டிலொன்றைச் செய்யுங்கள். கருணை கூர்ந்து தாராவென்னும் அந்தச் சிக்கலான புதிரை விடுவித்து வையுங்கள்.'

"தாரா! இவ்வளவு நாட்களாக அந்நியோன்னியமாகப் பழகியும் இன்னமும் ஒரு விஷயத்தை நீங்கள் என்னிடம் வெளியிட இஷ்டப்படாமல் உங்கள் மனத்துக்குள்ளேயே ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்!" — இப்படி உரையாடலைத் தொடங்கினான் வடிவேலு.

"என்ன அதிசயம்!" என்றாள் தாரா. "எனக்குக்கூட இதே மாதிரியான எண்ணம் எழுவதுண்டு. நீங்கள் ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்து என்னிடம் விவாதிக்க விரும்புகிறீர்கள் என்றும் அந்த ஆசையை ரொம்பவும் சிரமப்பட்டு உள்ளடக்கிக் கொள்ளுகிறீர்கள் என்றும் அடிக்கடி தோன்றுகிறது."

"தாரா! அது நிஜம்தான்!" என்றான் வடிவேலு ஆர்வத்துடன். "என் மனத்தைக் குடைந்து கொண்டிருக்கும் அந்தக் கேள்வியைப் போடட்டுமா?"

"தாராளமாக!"

இந்த நேரத்துக்காகவே காத்துக் கொண்டிருந்தது போல் பெரிய துளிகளாக மழை கொட்ட ஆரம்பித்தது.

நடையைத் துரிதப்படுத்திய தாரா, "குழந்தை நனையப் போகிறான்" என்று கூறினாள்.

தன் தோளில் சாய்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்த மோகன் மேல் வடிவேலு துண்டைப் பிரித்துப் போட்டான். "ஓடத்தான் வேண்டும்" என்றான் அவன்.

அவன் வேண்டுகோளுக்கு இசைந்தவள் சற்றுத் தூரம் ஓடுவதற்குள்ளாகவே சகதியில் சறுக்கி விழுந்து விடவே, 'வீல்' என்று கத்தினாள். முன்னால் சென்று கொண்டிருந்த வடிவேலு சட்டென்று திரும்பி ஓடி வந்தான். அவள் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து, "பலமாக அடிபட்டு விட்டதா?" என்று கவலையோடு கேட்டான். அவன் பதற்றத்தைக் காண வேடிக்கையாக இருந்தது தாராவுக்கு. கலகலவென்று சிரித்ததன் மூலம் தனக்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை என்பதை நிரூபித்ததுடன் அவனுக்கு நிம்மதியும் அளித்தாள். வடிவேலுவும் சிரித்துக் கொண்டே எழுந்து அவளுக்குக் கைலாகு கொடுத்துத் தூக்கினான்.

மீண்டும் அத்தகைய விபத்து நேராதிருக்கப் பத்து விரல்கள் ஆதரவாக ஒன்றை யொன்று தழுவிப் பின்னிக் கொண்டன. பற்றிய கரங்கள் நழுவி விடாதவாறு ஓடத் தொடங்கிய அவர்களை அவர்களுடைய நகைப்பொலி தொடர்ந்தது.

கிராமத்தின் எல்லைப்புறத்திலேயே பாடசாலை அவர்களுக்குப் புகலிடமாய் அமைந்தது. அதைச் சென்றடைவதற்குள்ளாகவே தெப்பமாக நனைந்துவிட்ட அவர்கள் தாழ்வாரத்தில் ஒண்டி நின்றார்கள். ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். இருட்டில் நிழலுருவமாய்த் தெரிந்த தங்களை, "இரண்டு கரும் பூதங்கள்!" என்று வடிவேலு வேடிக்கையாகக் குறிப்பிட இருவரும் சிறு பிள்ளைகளைப் போல மீண்டும் நகைத்தார்கள். அந்த ஒலியை நிற்கச் செய்யவென்றே 'பளீர்' என்று ஒரு மின்னல் விநாடிப் பொழுதுக்கு அவர்களை ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டு மறைந்தது. அந்த வெளிச்சத்தில் தாராவின் கன்னங்கரிய கேசத்தின் ஒரு சிறு பகுதி முத்து முத்தாக மழைத் துளிகள் தங்கி இருந்த அவளது கன்னங்களில் மின்னலைப் போலவே நெளிந்து ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான் வடிவேலு.

"இடி இடிக்கப் போகிறது" என்றான் அவன். தற்காப்பை நாடும் இயற்கையான இயல்புக்குக் கீழ்ப்படிந்து தன்னையுமறியாமல் அவள் அவனை நெருங்கினாள்.

"தாரா!"

தாபங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கொட்டித் தீர்த்தான் வடிவேலு. தாராவின் உடல் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.

அதன் பின்னர்தான் அந்த இடியோசையும் கேட்டது.

"குழந்தையை இப்படிக் கொடுங்கள். பயப்படப் போகிறான்" என்றபோது தாராவுக்குத் திக்கியது.

தலை அலங்கரிப்புக்குத் தகுந்த ஹேர் ஆயில்

பாரத மக்கள் சிறுவயதிலிருந்தே தங்கள் தலை அலங்கரிப்பில் எண்ணெய் தடவி தலை வாருவதில் மிகவும் ஈடுபடுகின்றனர். கூந்தல் மிகவும் அழகாகத் திகழ்வதற்கு மண்டைக்குள் செல்லத் தேவையான நல்லதோர் ஹேர் ஆயில் அவசியம். ஆகையால்தான் மயிர்க்கால்களில் இயற்கையான எண்ணெயுடன் சேர்ந்து திகழச் செய்ய நல்லதோர் ஹேர் ஆயிலை உபயோகிக்கவேண்டும்.

டாடாவின் ஹேர் ஆயில்கள் கூந்தலின் அடிமண்டைக்குள் பாய்ந்து அவை அடர்த்தியாகவும் ஆரோக்கியத்துடனும் இருக்க உதவுகின்றன.

டாடாவின் கோகோனட் மற்றும் கேஸ்டர் ஹேர் ஆயில்கள் நறுமணம் வீசும்படி வாசனை கலக்கப்பட்டு மூன்று விதமான சைஸ்களில் கிடைக்கின்றன.



டாடாவின் ஹேர் ஆயில்கள்



THOY.18.TAM

மோகனை அவளிடம் ஒப்படைத்து விட்டுத் துண்டை முறுக்கிப் பிழிந்தான் வடிவேலு.

வாசலில் தொங்கிய பூட்டை ஒரு முறை உலுக்கிப் பார்த்த தாரா, ''காலையில் வெங்கிட்டு ஸார் ஏதோ காரியம் இருக்கிறது என்று சாவியை வாங்கிக் கொண்டு போனார். பூட்டாமலே வீட்டுக்குத் திரும்பி யிருக்கிறாரே? எவ்வளவு அஜாக்கிரதை!'' என்றாள். வடிவேலு நீட்டிய துண்டினால் மகனின் தலையைத் துவட்டியதுடன் தன் முகத்தின் ஈரத்தையும் ஒற்றி எடுத்தாள்.

''தாரா! நான் கேட்க ஆரம்பித்ததை முடிக்க வொட்டாமல் பாழாய்ப் போன மழை தடை செய்து விட்டது. நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்களென்றால் அதை இப்போது கேட்கிறேன். அது உங்களுக்குப் பிடிக்காமல் இருந்து தவறு என்றும் எண்ணினால் தயவு பண்ணி மன்னித்து விடுங்கள்!''

''இந்தப் பூர்வ பீடிகையெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீங்கள் எதை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்!''

''தெரியுமா, தாரா! நிஜமாகவா?''

''இன்று நேற்றா எனக்கு நீங்கள் பரிச்சயமானீர்கள்? ஆறேழு வருஷங்களுக்கு முன்னால் உங்களை முதன் முதலில் சந்தித்தேன். அப்படியிருக்கச் சதா சர்வ காலமும் நீங்கள் எதைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளும் சக்தி இல்லாமலா போய் விட்டது எனக்கு?''

''தாரா! பெரிய சங்கடத்திலிருந்து என்னைக் கரையேற்றினீர்கள். ஆனால் உங்கள் பதில்? அதை நான் இப்போதே எதிர்பார்க்கலாமா? அல்லது இன்னும் சில தினங்கள் பொறுத்திருக்கட்டுமா? உங்களை நான் அவசரப்படுத்தவில்லை. நிதானமாக யோசியுங்கள்!''

''யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் தாரா. ''என்னுடைய பதில்—அதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா என்ன?''

''ஆமாம், தாரா!'' என்றான் வடிவேலு வருத்தத்துடன். ''கண்ணாடி வழியே பார்ப்பது போல் நீங்கள் என் மனத்தைப் படித்து விட்டீர்கள். ஆனால் எனக்கு அந்தத் திறமை இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். தயவு செய்து வாய் விட்டுச் சொல்லிவிடுங்கள் உங்கள் முடிவு என்ன என்பதை!'' அவன் மனம் 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது.


''அப்படியானால் சரி, சொல்கிறேன். நான் உங்களுக்குத் தடை விதிக்கப் போவதில்லை. சம்மதத்தைத்தான் அளிக்கப் போகிறேன். திருப்திதானே?''

வடிவேலுவுக்குத் திகைப்பாகத்தான் இருந்தது. இவ்வளவு சுலபமாகவா தாரா தன் வயப்பட்டு விட்டாள்? அவளுடைய கருத்து என்ன என்பதைக் கண்டு பிடிக்கு முன்னர் முளை விடாத புதுப் புது பிரச்னைகள் 'திடு திப்' என்று இப்போது விசுவரூபமெடுத்தன. 'பெற்றவர்கள் இந்தச் செய்தியை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்? எல்லா விதங்களிலும் புரட்சிகரமான இந்த இணைப்புக்குத் தேனூர்வாசிகளிடையே ஆதரவு கிட்டுமா? எதிர்ப்பு உருவாகுமா?'

''தாரா! தாரா! என்னைப் போன்ற அதிர்ஷ்டசாலி இந்த உலகத்தில் வேறு யாருமே இல்லை தாரா!'' என்று கூறி வரும்போதே வடிவேலுவின் உள்ளத்தில் இந்தக் கவலைகள் தலைகாட்டத் தொடங்கி விடவே தொடர்ந்து ''ஆனால்,...'' என்று அவன் இழுத்தான்.

''ஆனாலென்ன? உங்கள் அப்பாவைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள். இல்லையா? கோபக்காரராயிற்றே அவர்?''

''ஆமாம், தாரா! அதையேதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் நான்!'' என்றான் வடிவேலு. 'இவள் என்ன மந்திர ஜாலங்களில் கைதேர்ந்தவளோ?' என்ற ஆச்சரியம் அவனை ஆட்கொள்ள.



இல்லே. நல்ல நாளில் அப்பா, அம்மா இருவருக்கும் நமஸ்காரம் பண்ணி விட்டு...''

அவன் கூறி முடிக்கும் வரையில் வடிவேலு காத்திருக்க வில்லே. இரு கைகளாலும் தலேயைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கொட்டும் மழையையும் லட்சியம் செய்யாமல் அவன் ஓடிஞன். கால்கள் சளேத்து ஓடிந்து துவளுகிற வரையில் அவன் ஏமாற்றத்தின் எல்லேயை நோக்கி ஓடிச் சென்று கொண்டே இருந்தான்!

அத்தியாயம் 34

உலகம் அழுதது

பிரளய காலமே நெருங்கி வந்து விட்டாற் போல் மழை தரையைத் தகர்த்துவிட முயன்று தாக்கியது. பூமி முழுவதையும் வெள்ளக் காடாக்கி, நிலத்தில் வாழும் சகல ஜீவ ராசிகளேயும் மற்ற ஜடப் பொருள்களேயும் ஒன்ருக மூழ்கடித்து விடுகிற வேகத்தோடு பெய்தது. கேசத்தைப் பற்றி இழுத்துக் கொண்டும் விம்மல்களே விழுங்க முயன்றும் விரைந்தோடிக் கொண்டிருந்த வடிவேலுவுக்கு, மழைத் துளிகள் தன் மீது சொரிவதாகவே தோன்றவில்லே. சிறு சிறு கூழாங் கற்களேப் பொறுக்கி எடுத்து அவன் மீது யாரோ வீசிக் கொண்டிருந்தார்கள். கண்களே இறுக மூடிக் கால் போன போக்கில் ஓடிய அவனுக்கு இந்தத் தண்டனே போதவில்லே. இதை விடப் பல மடங்கு அதிகமான வேதனே உடலுக்கு உண்டானல்தானே மனத் துன்பத்தை அவனல் ஓரளவுக்கேனும் மறக்க முடியும்? 'எதன் மீதாவது முட்டி மோதிக்கொள்ள என் மண்டை பிளக்காதா? நெளிகின்ற மின்னல்களுள் ஒன்று என் மீது பாய்ந்து என்னுடைய கண்களேப் பறிக்காதா? அண்டத்தை அதிர வைக்கிற இடிகளுள் ஒன்று இந்தப் பாவியின் தலேயிலே விழாதா?' என்ற ஏக்கம்தான் அவனுக்கு.

கன்னங்கரிய இருளில் கெட்டியான மழைத் திரைக்குப் பின்னல் வடிவேலுவின் உருவம் வெகு சீக்கிரம் மறைந்து போய் விட்டது. அசையாமல் நின்று கொண்டிருந்த தாராவின் நயனங்களிலிருந்து பெருக்கெடுத்த வெப்பம் மிகுந்த கண்ணீர், சலசலத்து ஓடிக் கொண்டிருந்த மழைத் தண்ணீரில் கொட்டி இரண்டறக் கலந்தது.

'இந்த நீரோடைகள் இப்படியே ஒன்ருேடொன்று இணைந்து பெரிதாகி வாய்க்காலாக மாறிச் சென்று, வடிவேலு எங்கிருந்தாலும் அவரைத் தேடிப் போய் அவர் கால்களேச் சூழாதா? தமது கால்களே நனேப்பது மழை நீர் மட்டுமல்ல. அதில் தாராவின் கண்ணீரும் கலந்திருக்கிறது என்பதை அவர் உணர மாட்டாரா? கண்ணீரால் தன் கால்களே நீராட்டுபவள், இதயமற்றவளல்ல, இரக்கமற்ற அரக்கியல்ல என்பதைப் புரிந்து கொள்ள மாட்டாரா?

'வடிவேலு! நீங்கள் என்னேப் புரிந்து கொண்டுதான் ஆக வேண்டும்! மீண்டும் முன்போலவே என்னேக் கனிவு பொங்கப் பார்த்துத்தான் ஆக வேண்டும்! உங்கள் அன்பான இதயத்தையும் ஆதரவான பேச்சையும் ஜென்ம ஜென்மத்துக்கும் இழந்து விட்ட அபாக்கியவதியாக நான் ஆகிவிடக் கூடாது! மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கிய உங்கள் இதயத் தாமரையைக் கணப்பொழுதில் கசக்கிப் போகக்கி விட்ட இந்தக் கல்நெஞ்சக்காரியை, கருணே கூர்ந்து மன்னித்து விடுங்கள்! முன் எப்போதையும் போல் கலகலப்பாய்ப் பேசுங்கள். இல்லாவிட்டால் நூறு பேருக்கு மத்தியிலிருந்தாலும் நான் தனிமையில்தான் உழலுவேன். இன்று எனக்கு இன்பமளிக்கக் கூடிய ஓரிரு காட்சிகளும் துன்ப நினேவுகளேயே எனக்குள் எழுப்பும். வாழ வேண்டியிருக்கும் ஒவ்வொரு விநாடியும் எனக்குப் பாரமாகத் தோன்றும். வடிவேலு! திரும்பி வாருங்கள்! தயவுகாட்டுங்கள்!'

பள்ளிக் கூடத்தின் வாசற் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. கதறுகின்ற உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு கண்டுவிரலால் தாரா கண்ணீரை வழித்தெறிந்து விட்டுத் திரும்பிஞள். பக்கத்தில் நின்ற பொன்னம்பலத்தைக் கண்டு அவள் திகைப்புறவில்லே. ''அடேடே! இவ்வளவு நேரம் இங்கேயா இருந்தீர்கள்?'' என்று கேட்ட போது அவள் குரலில் ஆச்சரியத்தின் சாயலேக் கூடக் காணும். அவளிடமிருந்து அத்தனே வியப்பையும் பொன்னம்பலம் தாமே பிடுங்கிக் கொண்டு இரட்டிப்பாக ஆச்சரியம் அடைந்தவராகத் தென்பட்டார்.

''தாரா! தம்பி வடிவேலு பட்டாளத்திலே சேருவதில் இவ்வளவு தீவிரமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே யில்லே!'' என்ருர்.

இலவசம்

கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

தேவைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மன மகிழ்வு பெறலாம்.




ஓ. கே. தயாரிப்புகளின் பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள்.

★ ஓ. கே. வனஸ்பதி ★ ஓ. கே. டபிள் ரிஃபைன்ட் ஆயில் ★ கோல்டன் ஸாலட் ஆயில் ★ ஓ. கே. சந்தன சோப் ★ ஓ. கே. ஓரியண்டல் ரோஸ் சோப் ★ ஓ.கே. கீம் சோப் ★ மியோகே சோப் ★ சோப் சிப்ஸ்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஓ. கே. தயாரிப்புகளிலும் உள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்குப் பதிலாக, உங்கள் அருகிலுள்ள ஓ. கே. வியாபாரியிடமிருந்து, நீங்கள் விரும்பும் அளவிலும், வடிவிலும் கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பெறுங்கள்.

இந்த விசேஷமான பரிசுத் திட்டம் பற்றிய இதர விவரங்களை அறிய உங்கள் ஓ. கே. வியாபாரியிடமிருந்து, படங்களோடு கூடிய 'போல்டரை' (folder) வாங்கிப் பாருங்கள்.





EP-EAC-1-TAM

தயாரிப்பாளர்கள் :

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1



''நீங்கதானே கையில்லாத 'ஸ்வெட்டர்' வேணும் என்று கேட்டீங்க!''

''அவர் உங்கள் மகளைக் கலியாணம் செய்து கொள்வதில் எனக்கு எதனால் சிரத்தை இல்லை என்பது புரிகிறதா? போர்முனைக்குப் போக மாட்டேன் என்று அவரைக் கையடித்துச் சத்தியம் பண்ணச் சொன்னேன். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. ஆகவேதான் செல்லத்தை அவருக்கு நீங்கள் கொடுப்பதில் எனக்கும் உற்சாகம் குறைந்து போய் விட்டது.''

''தாரா! நீங்கள் தங்கமானவங்க! பொன்னுக்கும் பித்தளைக்கும் வித்தியாசம் தெரியாத அந்த மூடன் சிமாச்சுவைக் கருப்பஞ்சாறு பிழிவதுபோல முறுக்கி எடுத்தால் கூட என் மனசு ஆறாது!''

சிமாச்சுவைப் பற்றி அவர் கூறியதைக் கிரகித்துக் கொண்டாள் தாரா. ஆனாலும் அதைக் கவனியாதது போல, ''இந்த வடிவேலு எதற்கு இப்படிக் கண்மண் தெரியாமல் ஓட வேண்டும் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை'' என்றாள், வடிவேலுவின் அந்த நடத்தை அவரிடம் சிறிதளவேனும் சந்தேகத்தைக் கிளறி விட்டிருக்குமோ என்ற கவலையில்.

உடனடியாக அதைத் தீர்த்து வைத்தார் பொன்னம்பலம். ''பட்டாளத்திலே சேர உங்க அனுமதி கிடைச்சுடுத்துல்ல; அதனாலே தம்பிக்குக் குஷி பிறந்துடுச்சு! கிராமத்திலே எல்லாரும் எல்லாத்துக்கும் உங்களண்டே வந்து தானே யோசனை கேட்கிறாங்க? நீங்க உத்தரவு கொடுத்ததும் தம்பிக்குத் தலை கால் புரியலை. அடுத்தாற் போல் எப்படியும் முத்தையாவையும் நீங்க சமாளிச்சுப்புடுவீங்க, தம்பியைச் சிப்பாயாகப் பட்டணத்துக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துடுவீங்க என்கிற சந்தோஷம்! தைரியமாகத் துப்பாக்கி பிடிக்க வேண்டியவன் மழையைக் கண்டு தயங்கினால் எப்படி? பீரங்கிகளையும் டாங்குகளையும் ஏரோப்பிளேனிலிருந்து குறி தப்பாம விழுகிற குண்டுகளையும் பொருட்படுத்தாமல் போராட வேண்டியவனுச்சே! இடிக்கும் மின்னலுக்கும் பயந்தால் நடக்குமா?''

வருங்கால வீரனுடைய தீரப் பிரதாபங்களை அவர் ஆனந்தமாக அளந்து கொண்டே போகத் தாராவின் இதயமோ சுக்குநூறாக வெடித்து விடுவதாக ஆசை காட்டியது; மோசம் செய்தது. வடிவேலு தனக்கு மாப்பிள்ளையாக வராவிட்டாலும் பரவாயில்லை; தாராவைப் பற்றித் தான் தோன்றித்தனமாகச் சிமாச்சுப் பேசியது பொய்யாகி விட்டதே என்ற குதூகலம் பொன்னம்பலத்துக்கு. மன நிறைவோடு அவர் முத்தையாவின் மகன், ஹிட்லருடைய கொட்டத்தை அடக்கப் போவது பற்றிப் பிரமாதமாக வர்ணித்தார். பல மாதங்களாக வடிவேலு போட்டு வரும் திட்டம் நிறைவேற வேண்டும் என்ற அவா தாராவுக்கு உண்டு. ஆனாலும் அந்த லட்சியத்தைச் சென்றடையும் பாதையில் அவன் அனுபவிக்க வேண்டிய கஷ்ட நஷ்டங்களைப் பொன்னம்பலம் இப்போது விவரித்தபோது ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றுவது போல்தான் இருந்தது அவளுக்கு. அதைப் பொறுக்க முடியாதவளாக, ''சிமாச்சு என்று ஏதோ ஆரம்பித்தீர்களே, யார் அவர்?'' என்று குறுக்கிட்டுக் கேட்டாள்.

''இந்தக் கிராமத்துக்குச் சகுனி, சனீசுவரன் எல்லாம் அந்தத் தடியன் தான்'' என்றார் பொன்னம்பலம். ''சாரல் அடிக்குது. உள்ளே வாங்க'' என்று அழைத்துப் போய் அரிக்கேன் விளக்கை ஏற்றியபடியே தொடர்ந்தார். ''அவன் ஏதோ பிதற்றினான் என்று நானும் இங்கே ஒளிஞ்சுக்கிட்டிருந்து, நீங்க பேசறதைக் கேட்டுக்கிட்டிருந்தேன் பாருங்க; என் புத்தியை ஜோட்டால்தான் அடிக்கணும்!''

''நீங்கள்தான் இந்தக் கதவைத் திறந்ததா? வெங்கிட்டு வாத்தியார் அலட்சியமாக இருந்து விட்டதாக நினைத்து நான் வருத்தப்பட்டேன். நல்ல வேளை, நாளைக்கு அவரைக் கோபித்துக் கொள்ளுவதற்கு முன்னால் உண்மை தெரிந்ததே! அது சரி, ஒட்டுக் கேட்கும்படியாக அப்படி என்ன சொல்லி விட்டார் சிமாச்சு என்னைப் பற்றி? என்னதான் இருந்தாலும் நீங்கள் நேரடி

யாக என்னிடம் வந்து விசாரித்திருக்க லாமே?'' என்றாள் தாரா.

''நேருக்கு நேராக வந்து வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு விஷயத்தை உடைச்சுச் சொல்லிப்பிட்டுப் போறதாய்த்தான் இருந்தேன். எப்பவும் இருட்டிக்கிட்டு வருகிற நேரத்திலே நீங்க இங்கே ஏதாவது காரியமா உட்கார்ந்துக்கிட்டு இருப்பீங்களேன்னு இந்தப் பக்கமா நடந்தேன். கதவு பூட்டியிருந்துச்சு. திரும்பவும் நாளைக்குச் சந்திச்சுக்கிட்டா போச்சுன்னு முடிவு கட்டிப் புறப்படுகிறபோது கொஞ்ச தூரத்திலே யாரோ இரண்டு பேருங்க வந்துக்கிட்டிருக்கிறாப் போல் தோணிச்சு. வடிவேலுவும் நீங்களுமாகத்தான் இருக்கும்னு ஊகிச்சேன். அப்போ இந்தப் பூட்டுக்கு ஒரு சாவியைத்தான் உங்க கிட்டே கொடுத்திருக்கிறேன் என்கிறதும் மாற்றுச் சாவி என் சாவிக் கொத்திலேயே மாட்டித் தொங்குது என்கிறதும் ஞாபகம் வந்துச்சு. சிமாச்சுவும் உங்க ரெண்டு பேரையும் சம்பந்தப்படுத்தித் தான் உளறியிருந்தான். அதனாலே....''

''உளவறியற நோக்கத்தோடு அவசரம் அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனீர்கள்.''

''ஆமாம், தாரா! எப்படியும் மழைக்கு நீங்கள் இங்கே ஒதுங்காமல் போக மாட்டீங்க என்கிற நம்பிக்கை.''

''சிமாச்சு என்னைப் பற்றிக் கதை கட்டி விட்டதற்காக நான் சிரமப்படவில்லை. எந்த ஊரிலேயும் இந்த மாதிரியான அசட்டு ஜன்மங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் நீங்களும் அதை நிஜமென்று நினைத்து விட்டீர்களே?''

''இல்லை தாரா! கடவுள் ஆணையாகச் சொல்கிறேன். அந்தச் சண்டாளன் உங்களைத் தூஷிச்சதிலே ஒரு வார்த்தைகூட நான் சரின்னு ஒப்புக் கொள்ளலே. உங்க பேரிலே விஷத்தைக் கக்கத் துணிஞ்ச அந்தப் பாம்போட பல்லைப் பிடுங்கிட்டுத்தான் இங்கே வந்திருக்கேன் நான். வேண்டுமானால் என்னோடே கிளம்பி வாங்க; சிமாச்சுவின் சிண்டைப் பிடிச்சு உலுக்கி உண்மையை வரவழைக்கிறேன்!''

''அதற்கெல்லாம் அவசியம் இல்லை'' என்றாள் தாரா நீண்ட பெருமூச்சுடன். ''பல்லைப் பிடுங்கி விட்ட போதிலும் பாம்பு இன்னமும் நெளிந்து கொண்டு தானே இருக்கிறது?''

''அதுதான் எனக்கும் தலைவேதனையைத் தருகிறது. சரஸ்வதி தேவி போல் இருக்கீங்க; உங்களைப் பற்றி அவன் கண்டபடி பேசி விட்டானே. எதுக்கும் நீங்க கலங்காதீங்க. தப்பித் தவறி எதினாச்சும் உங்க காதிலே விழுந்தாலும் மனசை அலட்டிக்கிடாதீங்க நேரா என்னண்டை வந்து சொல்லுங்க. வம்பு வளர்த்தவன் உடம்பைப் பிடிச்சு விட்டு எலும்புகளையும் பொடி பண்ணிட் போடறேன்!''

''என்னால் உங்களுக்கெல்லாம் எவ்வளவு துன்பம்? பிறருக்குத் தொந்தரவு கொடுக்க வென்றே பெண்ணாய்ப் பிறந்து தொலைத்திருக்கிறேன் நான்!''

''அடாடா! உங்களுக்கு என்ன நேர்ந்து போயிடுச்சு இப்போ? திடமா இருக்கணும் நீங்க. இந்தாங்க குடை கொண்டாந்திருக்கிறேன். எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போய்ப் படுத்துத் தூங்குங்க. காலையிலே எழுந்திருச்சு இதையெல்லாம் சொப்பனமா எண்ணி அடியோட மறந்துடுங்க.''

''வேண்டாம்! எனக்கு இங்கே கொஞ்சம் வேலை பாக்கியிருக்கிறது. நீங்கள் போய் வாருங்கள்.''

''அப்போ சரி. குடையை வெச்சுட்டுப் போறேன். நாளைக்குச் செல்லத்துக்கிட்டே ஞாபகமா கொடுத்தனுப்பிச்சுப் புடுங்க. வரட்டுமா?''

வேஷ்டி சேற்றிலே புரளாமல் சற்றுத் தூக்கிக் கொண்டு தூற்றல் போடுகிறதா என்று கைநீட்டிப் பரிசோதித்து விட்டு வாசலில் இறங்கி நடந்தார் பொன்னம்பலம்.

தாராவிடம் அதுவரையில் அடக்கியிருந்த கண்ணீர் வெள்ளம் வைராக்கிய அணையை உடைத்து விட்டுப் பாய்ந்தது.

தூக்கக் கலக்கத்தோடு தாயாரை ஏறிட்டு நோக்கினான் மோகன். அவன் கண்ணீரைத் தன் பிஞ்சுக் கரங்களால் துடைத்தான். அவனை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டு, விம்மல்களுக்கிடையில், ''கண்ணா! தாத்தாவையும் பாட்டியையும் நாம் பார்க்கப் போகலாமா?'' என்று கேட்டாள் தாரா.

மோகனின் கண்களில் குடி கொண்டிருந்த உறக்கம் எங்கோ மாயமாய்ப் பறந்து விட்டது. மலர மலர அன்னையை விழித்துப் பார்த்து, ''உடனே போகலாம்'' என்று தன் கனிவாயைத் திறந்து 'கணீ' ரென்று சொன்னான். மகனை வெறித்து நோக்கினாள் தாய். 'குழந்தை வடிவில் கடவுள் தனக்குக் கட்டளை யிடுகிறாரா?''

''ஆமாம், தேனூரை விட்டுச் செல்ல வேண்டிய தருணம் வந்துதான் விட்டது'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் அவள்.

அவள் நிலையைக் கண்டு வெளியே உலகமே அழுதுகொண்டிருந்தது. (தொடரும்)



பாமாலிவ் உபயோகத்தினுல் வளரும்
நீண்ட அடர்த்தியான கேசம்
மிக அழகிய கூந்தல்
அலங்கரிப்புக்கு
இயற்கையாக அமைகிறது!
பாமாலிவ்
பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
மூன்று வசீகரிக்கும் வாசனைகள்: லவண்டர்-மல்லிகை-ரோஜா
PALMOLIVE



புதிய பெரிய டப்பாவில்
கால்கேட்
பேபி பவுடர்
அதிகப் பவுடர்...
அதிகச் சிக்கனம்...
புதிய சுலபமாக
அழுந்தும் மூடி!
குழந்தையின் நளினமான
சருமத்திற்கு இதமளிக்கிறது!
New
COLGATE
BABY
POWDER

நாணயத்தின் கதை



நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் மனிதன் காடுகளிலும் குகைகளிலும் வசித்தானே அந்தக் காலத்தில் அவன் எப்படி வியாபாரம் நடத்தினான்? இன்று நீ கையாளும் நாணயங்கள் இருந்தனவா அப்போது? இல்லவே இல்லை. அப்படியானால்? ஒரு சாமானைக் கொடுத்து மற்றொரு பொருளைப் பெற்றான். இதற்குத்தான் பண்டமாற்று முறை என்று பெயர் (5). வண்ணக் கற்களைக் கோத்துக் கட்டிய மாலை ஒன்று ஒருவனிடம் இருக்கும் (4). அதன் அழகிலே மயங்கிய மற்றவன் அதைத் தானடைய விரும்பினால் தன்னிடமிருக்கும் கொழுத்த ஆட்டை அதற்கு ஈடாகக் கொடுத்துப் பெறுவான். ஒரு கத்திக்கு ஒரு கோழிக் குஞ்சு (6). ஒரு பானைக்கு இரண்டு மீன் (6). பொருள்களின் மதிப்பு எப்படி? உனக்கு ஒரு பொருள் வேண்டுமானால், அதை வைத்திருப்பவனைத் தேடி நீ போக வேண்டும். நீ கொடுக்கும் சாமான் அவன் விரும்புவதாக இருக்க வேண்டும். இது இரண்டும் ஒத்து வருவதில்லை. ஆகவே வியாபாரத்தைச் சுலபமாக்க மனிதன் நாணயத்தைக் கண்டு பிடித்தான். மனிதன் ஆதியில் உபயோகித்த நாணயங்கள் பலவிதமானவை. சோழி நாணயமாகக் கருதப்பட்ட காலம் உண்டு (2). புராதனச் சீன நாட்டில் கத்தியும், மீன் பிடிக்கும் தூண்டிலும் பணமாகப் பயன்பட்டன (2).

எடுத்துச் செல்லச் சுலபமானதும், பகிர்ந்தளிக்கப் பக்குவமானதுமான பொருள்களெல்லாம் அந்தக் காலத்தில் எல்லோராலும் பணமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. மெக்ஸிகோ நாட்டில் வாழும் அஸ்டெக் என்ற இனத்தவர் கோக்கோ விதைகளைப் பணமாகப் புழங்கினர் (3). இந்தப் பணத்தை இன்று நாம் பானமாக அருந்துகிறோம் (1). ஸ்காண்டிநேவியாவில் வண்ண மணிகள் பணமாகப் பயன்பட்டன. பிஜித் தீவில் பறவைகளின் இறகுக்குப் பணத்தின் மதிப்பு இருந்தது. கிளிஞ்சலை ஒரு சீராகப் பணமாக்கும் நாணயச் சாலை சாமோ தீவில் இருந்திருக்கிறது (7).

எல்லாவற்றிலும் விநோதமானது காலமன் தீவுகளில் பயன்பட்டு வந்த பிரும்மாண்டமானதும் வட்ட வடிவமானதுமான கல் நாணயங்கள். நடுவில் துளையுடைய இந்தக் கல் நாணயத்தை இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்து தான் தூக்கிச் செல்லுவார்கள் (8).

இப்படி அநேகவிதமான நாணயங்களை மனிதன் உபயோகித்துக் கொண்டிருந்த போது பாரதத்தில் பொற்காசுகள் புழக்கத்திலிருந்தன. தாமிரத்திலும் வெள்ளியிலும் நாணயங்களை, நாம் கிரேக்கர்களுக்கும், எகிப்தியர்களுக்கும் முன்பாகவே உபயோகிக்க ஆரம்பித்து விட்டோம். உலோக நாணயங்களின் மதிப்பு அவற்றின் நிறையைப் பொறுத்ததாக இருந்தது. மேலை நாடுகளில் குழப்பம் மிகுந்திருந்த காலத்தில் மக்கள் தங்கள் சேமிப்புக்களை நகரின் பொற் கொல்லர்களிடம் கொடுத்து வைத்து அதற்கான ரசீதை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். பிறகு தாங்கள் நடத்தும் வியாபாரப் பேரங்களின் போது, பணத்துக்குப் பதில் அந்த ரசீதைக் காட்டி முடித்துக் கொண்டார்கள்.

இந்தப் பழக்கமே பிற்காலத்தில், கனமான நாணயங்களுக்குப் பதில் காகித நோட்டுக்கள் போடுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. பாங்கியில் பணம் போட்டுச் செக் கிழித்துக் கொடுப்பதின் மூலம் வியாபாரங்கள் நடைபெறுகின்றனவே, அந்த முறையை முதன் முதலில் கையாண்டவர்கள் சீனர்கள்தான். ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே 'பாங்க்நோட்' என்று அழைக்கப்படும் 'செக்' முறை சைனாவில் இருந்திருக்கிறது.



பேசும் வாத்தியம்


நூல் சுற்றி வரும் கட்டை ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அகலம் அதிகமுள்ள ஒரு ரப்பர் வளையம் ஒன்று. இந்த ரப்பர் வளையத்தை ரீல் கட்டையின் ஒரு துவாரம் மறையும்படி மூடி இரண்டு சுற்றுச் சுற்றுங்கள். மறு பக்க முனை திறந்திருக்க வேண்டும். (படம் 1)

இனி மேல் தான் வேடிக்கை. திறந்துள்ள பக்கத்தை வாயில் வைத்துக் கொம்பைமுழக்குவது போல் காற்றை ஊதி ஒலி உண்டாக்குங்கள் (படம் 2). கைகளைக் குவித்து அணைத்து ரீல் கட்டையின் ரப்பர் மூடிய பாகத்தை மூடியும் திறந்தும் மாற்றி மாற்றிச் செய்யுங்கள். அந்த ரீல் கட்டையிலிருந்து 'மா...மா' என்ற விநோதமான சத்தம் உண்டாகும்.

இது எப்படி ஏற்படுகிறது? இழுத்துச் சுற்றப் பட்ட ரப்பர் வளையம் காற்றின் வேகத்தால் நடுங்கி அசைகிறது. நீ பேசும் போதும் குரல்வளையிலுள்ள மெல்லிய தசைகளில் இதைப் போன்ற சலனம்தான் ஏற்படுகிறது. கையை மூடித் திறப்பதனால் ஒலியில் மாறுதல் உண்டாகிறது. நீ பேசும் போது வாயை மூடித் திறப்பதினால் தான் விதம் விதமான ஒலிகளை உன்னால் உண்டாக்க முடிகிறது. குரல்வளையின் தத்துவமே இந்தப் பேசும் வாத்தியம்.



முயன்றால் முடியாததுண்டோ ?



1. இங்குள்ள ஆறு பட்டைத் தாளின் பக்கங்களில் ஒன்று முதல் பன்னிரண்டு வரையுள்ள எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. எந்தப் பக்கத்தின் மூன்று எண்களைக் கூட்டினாலும் 17 வரும். மிகச் சுலபமான ஒரு முறையில் இந்த எண்களையே மாற்றியமைத்துக் கூட்டுத் தொகை 22 வரும்படி செய்ய முடியுமா?

2. ரமணி, எட்டு அட்டைகளைக் கொண்டு வந்தான். ஒவ்வொன்றிலும் ஒரு இலக்கம் எழுதப்பட்டிருந்தது. வரிசைக்கு நான்கு அட்டைகளாக அடுக்கினான். முதல் வரிசையின் கூட்டுத் தொகை பத்தொன்பதாகவும் இரண்டாவது வரிசையின் கூட்டுத் தொகை இருபதாகவும் இருந்தது. 'இரண்டு வரிசையின் எண்ணிக்கையும் சரிசமமாக இருக்கும் படி இவைகளை மாற்றி அமைக்க முடியுமா?' என்று கேட்கிறான் ரமணி. உங்களால் முடியுமா?

9	8
1	3
2	4
7	5

1. விடை: சுலபமான முறை—ஒவ்வொரு எண்ணையும் பதின்மூன்றிலிருந்து கழித்து, வரும் விடையை அந்த எண் இருந்த இடத்தில் போட்டு விடுங்கள்.

2. விடை: இரண்டு வரிசையிலும் முதலில் இருக்கும் 9, 8 என்ற அட்டைகளை இடம் மாற்றி வை. அப்படிச் செய்யும் போது மட்டும் ஒரு தந்திரம் செய். 9ஐத் தலைகீழாகத் திருப்பி 6 என்று வை. இப்போது கூட்டிப்பார். இரண்டின் கூட்டுத் தொகையும் 18 என்று வரும்.

உங்களுக்குத் தெரியுமா ?

உடைகளுக்கு உபயோகிக்கப்படும் பித்தான்கள் முதலில் எப்போது எங்கே தோன்றின, தெரியுமா?


★ புராதன எகிப்தியர்களின் காலமான அதாவது கி. மு. 2500-ம் ஆண்டிலேயே பித்தான்கள் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. ஆனால் எகிப்தியர்கள் தங்கள் உடைகளை ஒன்று சேரப் பொருத்தப் பித்தான்களை உபயோகித்ததாகத் தெரியவில்லை. மத்தியதரைக் கடல் பிரதேச வாசிகள் மூலம் பித்தான்களைப் பற்றி அறிந்த எகிப்தியர்கள் இதை அணிகலனாகத் தான் உபயோகித்திருக்கிறார்கள். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரம் பித்தான் தொழிலில் சிறப்புற்று விளங்கியது.


சோப்பு எப்போது யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

★ கி. பி. 23—79-ல் வாழ்ந்த 'பிளினி' என்ற லத்தீன் நூலாசிரியர் 'சோப்பு' என்னும் பொருள் (Gaul) 'காஸ்' மக்களின் கண்டு பிடிப்பு என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். 'காஸ்' மக்கள் தங்கள் கேசத்தைப் பளபளப்பாக்கிக் கொள்ள இதை உபயோகித்தார்களாம். பாழடைந்த 'பாம்பி' நகரின் (கி. பி. 79) இடிபாடுகளைத் தோண்டி ஆராய்ந்த போது கிடைத்த சில கொப்பரைகளில் சோப்பு காய்ச்சப் பட்ட அடையாளங்கள் காணக் கிடக்கின்றன. இங்கிலாந்தில் பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிறகே, சோப்பின் பழக்கம் புகுந்தது.

மோட்டாரில், ஓடிய தூரத்தையும் அதற்கான பணத்தையும் கணக்கிடும் மீட்டரை (Taxi Metre) யார் முதன் முதலில் கண்டு பிடித்தது?

★ புராதனச் சீன தேசத்தவர்கள். கி. பி. நான்காம் நூற்றாண்டிலேயே வாகனங்களில் பிரயாணம் செய்யும் தூரத்தைக் கணக்கிடும் யந்திரங்களில் சீனர் அனுபவமுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன.





பேசும் நாய்

வாலை ஆட்டிக் கண்களைச் சிமிட்டிச்சிரிக்கும் அழகிய நாய்க்குட்டிப் பொம்மை செய்யும் விதத்தைச் சொல்லித் தரப் போகிறேன். இங்குள்ள மாடல் 1, மாடல் 2, ஆகிய இரு படங்களையும் அப்படியே ஒரு கெட்டியான வெள்ளை அட்டையில் டிரேஸ் செய்து காப்பி எடுத்துக் கொள்ளுங்கள். இனி நாயின் உடல், தலை, வால் இவைகளுக்கு ஏற்றபடி வர்ணம் தீட்டுங்கள். உடலின் பின்புறமுள்ள இதய அமைப்பான பின்புலனுக்கு விழிகளைச் சுற்றி இடைவெளி விட்டு விட்டு நல்ல சிவப்பு வர்ணந் தீட்டுங்கள். அட்டையிலிருந்து மாடல் 1, 2 இவைகளைத் தனியே கத்திரித்து எடுங்கள். மாடல் 2-ல் 'A' என்ற இடத்தில் புள்ளிக் கோடிட்ட பகுதியில் வெட்டுவாய் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதன் பிறகு நாயின் கழுத்துப் பட்டையிலும் மாடல் 1-ல் 'B' என்ற இடத்திலும் அதில் குறித்துள்ள வட்டத்தின் நடுவில் துவாரம் செய்து கொள்ளுங்கள். இனி மாடல் 1-ன் வால் பாகத்தை மாடல் 2-ன் 'A' வெட்டு வாய்க்குள் நுழையுங்கள். 'C' என்ற பாகம் உள்ளே புகாமல் முரண்டு பிடிக்கும். அதை உள் பக்கமாக மடித்து விட்டால் சுலபமாகப் போய் விடும். துவாரங்கள் இரண்டும் கழுத்துப் பட்டையில் (B) ஒன்று சேரும். அதில் கொண்டை யுடைய பித்தளைக் கிளிப் ஒன்றை (F) நுழைத்துப் பின் பக்கத்தில் அதன் இரு முனைகளையும் பிரித்து எதிர்ப்பக்கமாக மடித்து விடுங்கள். இதற்கு முன்னால் மறக்காமல் நாயின் விழிப் பகுதியை வெட்டி எடுத்துத் துவாரமாக்கிக் கொண்டிருக்க வேண்டுமே நீங்கள்? அந்தத் துவாரத்தில் மாடல் 2-ல் உள்ள விழிகள் பொருத்தமாக வந்து உட்கார்ந்திருக்கும், இல்லையா? 'C' என்ற பாகம் இப்போது நாயின் காலடியில் நீட்டிக் கொண்டிருக்கும். அதை விரல்களால் இங்கும் அங்கும் அசைத்தால்...? அசைத்துப் பாருங்களேன். நாய் வாலை ஆட்டிக் கண்களைச் சிமிட்டி உங்களை வரவேற்கும். இதை விடப் பெரிய அளவில் நாய் தேவையானால் கட்டான் முறையில் 'மாடல்'களைப் பெரிதாக வரைந்து கொள்ளுங்கள்.



இரண்டு குருவிகளும் ஒன்றை ஒன்று பார்த்து அழுது கொண்டன! பத்து நாட்களாய் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்த துயரம் உடைத்துக் கொண்டு வெளிப்பட்டது!

கண்கள் கண்ணீரில் ஆழ, கூண்டில் அடைபட்ட ஏக்கத்தோடு பெண் குருவி ஆண் குருவியைப் பார்த்து உருகியது. அருகில் இருந்த . மாமரக் கிளையில் அமர்ந்தபடி பெண் குருவியைப் பார்த்து ஆண் குருவி பெருமூச்சு விட்டது!

''ஐயோ, பாவமே! எப்படி இளைத்து விட்டீர்கள்!'' என்று கண் கலங்கியது பெண் குருவி.

''எனக்கென்ன கேடு! உன்னைத் தேடி எங்கெல்லாம் அலைகிறேன். அகப் பட்டாயே! எப்படியோ போன உயிர் திரும்ப வந்ததே அதைச் சொல்லு!'' என்று ஆண் குருவி அங்கலாய்த்தது.

''அடேயப்பா! என் மேல் எவ்வளவு ஆசை! இந்தக் கூண்டு மட்டும் இல்லை என்றால்....''

''அது போகட்டும்! நீ இந்தப் பாவிகளின் கையில் அகப்பட்டு என் னென்ன அவஸ்தைப்பட்டாயோ!''

''இதுவரை என் மனம் பட்ட அவஸ்தை கொஞ்சமா? என்னென்ன சித்திரவதைகள் உண்டோ அத்தனையும் அனுபவித்தாயிற்று! உயிர் ஒன்றுதான் போகவில்லை! அதுவும், போவதும் வரு வதுமாக அலைகிறது! இந்தப் பாவிக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண் டும்! உங்கள் பேச்சை அலட்சியப் படுத்தினேனே, அந்தப் பாவம்—''

''நான் அப்போதே எச்சரித்தேனே! மனிதர்களிடம் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டாமோ? மணி மணி யான தானியங்களைக் கண்டதும் மயங்கி விட்டாயே! அதைத் தின்பதற்காகக் கிளையை விட்டு நீ இறங்கவில்லை யென் றால் — உன்னைப் பிடிக்க முடியுமா?''

''இந்தப் பாவிக்கு அப்போது புத்தி போகவில்லையே!....''

''பாவம்! நீ என்ன செய்வாய், நம் விதி!....''

பேச்சுக்கு மத்தியில் ஒரு மனிதன் வந்தான் — கருப்பாய், பருமனாய்!

'சடக்' கென்று ஆண் குருவி செடி மறைவில் மறைந்து கொண்டு, மெல்லத் தலை நீட்டி வெளியே பார்த்தது. வந்த வன், தன் கை நிறைய இருந்த பழங் களையும் தானியங்களையும் கூண்டைத் திறந்து உள்ளே வைத்தான். பத்திர

மாய்க் கூண்டை மறுபடியும் முன் போல் மூடிவிட்டுப் போனான்.

ஆண் குருவி மெல்லப் பெருமூச்சு விட்டது. இலை மறைவிலிருந்து வெளிப்பட்டு, கூண்டில் இருந்த பழங்களைப் பார்த்தபடியே ''யார் இவன்?'' என்றது.

''மஸ்தானின் கையாள்'' என்றது பெண் குருவி.

''மஸ்தானா?...''

''ஆமாம். என்னைப் பிடித்து வந்தானே அவன் பெயர்தான் மஸ்தான்!''

''அந்தக் குறவனா?''

''சேச் சே! அவன் குறவனும் இல்லை; வேடனும் இல்லை. பெரிய வஸ்தாத்! சினிமாக்காரர்களுக்குப் பாம்பு, கரடி, கிளி, பறவை முதலியவைகளைப் பழக்கி வாடகைக்கு விடுபவனும்! பிடித்து வந்த மூணும் நானே என்னையும் எப்படி எப்படியோ பழக்கி விட்டான்! அவனுக்குக் கையாள்தான் இப்போது போனவன். என்னைக் கண்ணும் கருத்துமாய்க் கவனிக்க வேண்டியதுதான் அவனுக்கு ஜோலி. வேளை தவறாமல் இப்படி ஏதாவது தின்னக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போவான். மஸ்தான், என்னைக் கூண்டை விட்டு வெளியே விடும் போது, ஆடாமல் அசையாமல் இவன் கூடவே நிற்பான்!''

''அட பாவி!''

''இந்தப் பழங்களில் கொஞ்சம் தின்கிறீர்களா? இந்தாருங்கள்!'' என்று கூறி விட்டு, தனது காலாலும் அலகாலும் பழங்களையும் தானியங்களையும் கூண்டிலிருந்து கீழே தள்ளி விட்டது.

கிளையை விட்டுக் கீழிறங்கி அவற்றைக் 'கொறித்த'படியே ஆண் குருவி பெருமூச்சு விட்டுக் கொண்டது.

''இதோ தெரிகிறதே இந்த மாளிகை அவனுடையதா?''

''இது மாளிகை அல்ல. ஸ்டுடியோ!''

''என்னது!''

''அதுதான் — சினிமாப் படம் எடுக்கும் கொட்டகை. அங்கேதான் எனக்கு இரண்டு மூன்று தினங்களாக வேலை!''

''நீயும் சினிமாவில் சேர்ந்து விட்டாயா?''

''நானாக அல்ல. அது என் தலைவிதி! அந்த விதிக்கு உடந்தை இந்தப் பாவி மஸ்தான்! அவன் பிடித்து வந்த சில தினங்கள் என்னை எப்படி எப்படியோ சித்திரவதை செய்து ஒரு பூனையோடு பழக விட்டான்!...''

''ஐயையோ! பூனையா?''

''ஆமாம்! நான்கூட முதலில் உங்களைப் போல்தான் 'வெட வெட'த்து விட்டேன். பூனைக்கும் நமக்கும் என்ன முன்பின் உறவா? அதை நினைத்துக் கொண்டதும் அழுகை அழுகையாக வந்தது. ஆனால் பல மணி நேரங்களுக்குப் பின்பு மனம் கொஞ்சம் தைரியமடைந்தது. அந்தப் பூனையும் அவன் பழக்கினது. ஆகையால், என்னை ஒன்றும் செய்யாமல் அவன் சொன்னபடியே ஆடிக் கொண்டிருந்தது! என் உயிருக்கு எந்தத் தீங்கும் நேராமல் என் கழுத்தைத் தன் கைகளால் பிடிப்பதும் விடுவதும் வாயால் கவ்வுவதுமாக அந்தப் பூனை பழகிக் கொண்டிருந்தது!''

ஆண் குருவி வாயடைத்துத் தன் ஜோடியையே பார்த்துக் கொண்டிருந்தது! இரண்டு தானியங்களைக் 'கொறித்து' விட்டுப் பெண் குருவி மீண்டும் பேச்சைத் தொடங்கியது:

''என்னதான் பழகினாலும் விஷத்தை விழுங்க முடியுமா? நெஞ்சுக்குள் 'திக் திக்'கென்றிருந்தது! பூனையின் ஒவ்வொரு பிடியிலும் எனக்கு உயிர் போய்ப் போய் வந்தது! நெருப்பிலே விழுந்து மீள்வது போல் இருந்தது எனக்கு! உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நாளைக் கடத்திக் கொண்டிருந்தேன். இரண்டு தினங்களுக்கு முன்பு என்னைக் கூண்டோடு தூக்கிக் கொண்டு இங்கே வந்தான்....!''

''இந்த மாளிகைக்கா?''

''ஆமாம். இந்த ஸ்டுடியோவுக்கு! மஸ்தான் வீட்டில் வளர்ந்ததைவிட எனக்கு இங்கே நல்ல கவனிப்பு! எங்கோ புதுமையான உலகத்துக்கு வந்த மாதிரி என் மனம் பிரமித்தது! அடேயப்பா! என்னென்ன அலங்காரம். எத்தனை எத்தனை பேர்! விதம் விதமான விளக்குகளுக்கு மத்தியில் கூண்டைத் திறந்து என்னைக் கீழே விட்டான். முன் போலவே பூனையும் எனக்கு ஜோடியாக வந்து விட்டது! மஸ்தான் வீட்டில் பட்ட அவஸ்தையே என்னை மீண்டும் பற்றிக் கொண்டது! முன்னெல்லாம் மஸ்தானின் முன்னாலே இந்த மரண தண்டனை நடக்கும். ஆனால் இங்கே அதைப் பல பேர் பார்த்துக் கொண்டு ரசித்தபடியே 'ஆஹா, ஓஹோ' என்றபடியும் 'ரைட்.. கட்... டேக்' என்றபடியும் இருந்தனர்! மூன்று தினங்களாக என் உடம்பு சதை சதையாய் வலிக்கிறது! யாரும் கவனிக்க வில்லை. பூனையும் முன்னைவிட வெறி கொண்டபடி கால் நகங்களால் கீறி விடுகிறது! உயிர் போகவில்லை என்ற ஒரே கவலைதான்....!''

ஆண் குருவி கண்ணீர் விட்டது! ஜோடியையே பார்த்தபடி ஒரு கணம் மலைத்து நின்று விட்டு, ''ம்...அடுக்கடுக்காக உனக்கு என்னென்ன கஷ்டங்கள் பார்த்தாயா? துளி நேரத்திய சபல புத்தி உன்னை எவ்வளவு பெரிய

நரகக் குழியில் தள்ளி விட்டது!'' என்று பெருமூச்சு விட்டது.

''பெண் புத்தி பின் புத்தி! இப்போது என்ன செய்யலாம்?''

''ஏன் கூண்டைத் திறந்து விடும் போது துணிந்து 'சடக்'கென்று தப்பி வந்து விடுவதுதானே! உயிர் போனாலும் சரி என்று முயன்று பாரேன்.''

''வந்த அன்றைக்கே எனக்கு இந்த யுக்தி முளைத்தது! முயற்சி செய்தும் பார்த்தேன். ஆனால் என் தந்திரம் இந்தப் பாவிக்கு எப்படியோ தெரிந்து விட்டது! முன்னைப் போல் பறக்க முடியாதபடி சிறகை என்னவோ செய்து என் சக்தியைப் பறித்து விட்டானே! இனி என்ன செய்வது?''

ஆண் குருவி மீண்டும் மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்தது! அதைப் பார்த்த பெண் குருவியின் நெஞ்சம் எரிமலையாய்க் குமுறியது!

''போதும், போதும்! அழாதீர்கள். இந்தப் பாவிக்காக அழுது இனி எந்தப் பலனும் இல்லை! என்னை நினைத்துக் கண்ணீர் விட நீங்களாவது இருக்கிறீர்களே என்று நினைக்கும்போது, என் மன வேதனையெல்லாம் பறந்து விடுகிறது! எனக்கு இனி எதுவுமே வேண்டாம். இந்தப் பாழும் ஜன்மம் இப்படியே சாபல்யமடையட்டும்!''

பெண் குருவி பேச்சை முடிப்பதற்குள், மீசையை முறுக்கி விட்டபடி கனைத்தபடியே அருகிலிருந்த 'செட்டி'லிருந்து மஸ்தான் வந்தான்.

அவனைப் பார்த்ததும் ஆண் குருவி 'வெருட்' டென்று பறந்து புதரில் மறைந்து கொண்டது! பெண் குருவி அவனையே பார்த்தபடி 'திரு திரு' என்று விழித்து மௌனமானது!

வந்தவன் கூண்டைத் திறந்து குருவியைக் கையில் பிடித்துக் கொண்டு 'செட்'டுக்குள் நுழைந்தான்.

அவனைப் பின்தொடர்ந்து ஆண் குருவியும் உள்ளே நுழைந்தது!

அடேயப்பா! 'செட்'டுக்குள் ஒரே கூட்டம். அன்றைய படப் பிடிப்பின் வேலைகள் 'ஜரு'ராய் நடந்து கொண்டிருந்தன. நந்தவன 'செட்'டின் அமைப்பு கண்களைப் பறித்தது. ஜோடனைகள் தத்ரூபமாய் இருக்க வேண்டும் என்பதில் டைரக்டர் கண்ணும் கருத்துமாய் இருந்தார். வெள்ளமாக வெளிச்சம் நிரம்பி யிருந்தது!

உள்ளே வந்த ஆண் குருவி மெல்லப் பதுங்கி ஒரு மூலையில் இருந்த பூச்செடியின் இலைகளுக்கு மத்தியில் தனது உடலை மறைத்துக் கொண்டு தலையை நீட்டி 'செட்' முழுவதையும் பார்த்துப் பிரமித்தது !

சிறிது நேரத்துக்கெல்லாம் காமிரா சரி செய்யப்பட்டது.

செயற்கையாய்த் தயாரிக்கப்பட்டிருந்த புல் தரையில் பெண் குருவியையும் பூனையையும் கொண்டு வந்து மஸ்தான் விட்டான். இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்துத் 'திரு திரு' வென்று விழித்துக் கொண்டன. இருந்தவர்கள் சற்றுத் தள்ளி நின்று கொண்டனர். டைரக்டர் நாற்காலியை விட்டு எழுந்து மிகவும் சிரத்தையாக அவைகளையே நோக்கியபடி 'ரைட்' என்று குரல் கொடுத்தார். துணைவர்கள் 'சைலன்ஸ்' என்று தலைக்குத் தலை முழங்கினர். மஸ்தான் 'விஷ்' என்று சீழ்க்கை அடித்தான்.

படச் சுருள் சுழலும் ஓசை மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

'வெட வெட'வென்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்த பெண் குருவியின் அருகே பூனை மெல்ல மெல்லப் பதுங்கி நகர்ந்து, 'லபக்'கென்று பயந்து பாய்ந்து வாயில் கவ்வி இழுத்தது !

குருவி 'கீச் கீச்' என்று கத்தி விட்டு, சிறகையும் காலையும் அடித்துக் கொண்டது! அதன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அருகிலிருந்த பலகைப் பொந்தில் பதுங்கிக் கொண்டது!

கண் இமைக்காமல் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஆண்

குருவிக்கு மனம் 'படபட'வென்று அடித்துக் கொண்டது. போன உயிர் திரும்பி வந்தது போல் பெருமூச்சு விட்டது!

டைரக்டர் எரிச்சலோடு ''கட் கட்'' என்று கத்திவிட்டு, ''சே சே! என்னப்பா இது? இரண்டு நாட்களாக ஒரே அடம் பண்ணுதே! மஸ்தான்! என்ன பூனையய்யா இது? தெனாலிராமன் வளர்த்த மாதிரி வளர்த்திருக்கே! ஒரு குருவியைப் பிடிக்க வக்கில்லை'' என்றார்.

மஸ்தானுக்குக் கோபம் கோபமாக வந்தது. பூனையைப் பிடித்து இழுத்துக் கொண்டு 'செட்'டுக்கு வெளியே வந்து 'வீறு வீறு' என்று வாங்கினான்! அவன் கையாள் குருவியைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தான்.

டைரக்டர் தயாரிப்பாளர் இருந்த இடத்துக்கு வந்து கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டபடியே, ''இந்தக் கட்டம் நம்ம படத்திலேயே ஒரு 'கிளைமாக்ஸ்'! இது வரை யாருமே கையாளாத 'சிமிலி'! இதை ஜனங்கள் மனசிலே நல்லா படியற மாதிரி அமைக்கணும். அதுக்காகத்தான் மூணுநாளா அவஸ்தைப் படறேன். ஒரு 'டேக்'கும் சரியாவே அமைய மாட்டேங்குது. இது மட்டும் அமைந்துதானா நம்ம லட்சியமே பூர்த்தியான மாதிரி! ஏன்னா, இந்தக் கட்டத்திலே வில்லன் கதாநாயகியை மிருகத்தனமாகக் கைப்பற்றுகிறான்! இந்த நிகழ்ச்சியை அப்படியே 'ஆடியன்ஸ்' மனசிலே 'கிளியரா'பதிய வைக்கணும்னுதான், இந்தப் 'பூனை—குருவி' காட்சியைத் தயார் பண்ணினேன்! இதை எடுக்கறதுக்குள்ளேயே நம்ம உயிர் போகுது!'' என்றார்.

இதற்குள் மஸ்தான் வந்து, ''டைரக்டர் சார்! வாங்க. பூனைக்கு நல்லாப் பாடம் கொடுத்துட்டேன்!'' என்றான்.

மீண்டும் பூனையும் குருவியும் புல் தரையில் விடப்பட்டன!

'காமிரா' சுழல ஆரம்பித்தது.

டைரக்டரின் 'ரெடி... டேக்' என்ற குரலைக் கேட்டதும் குருவியின் உடல் 'கிடு கிடு' வென்று ஆடியது! பூனை குரூரமாகக் கண்களை விழித்துக் கொண்டு குருவியின் மேல் பாய எத்தனித்தது.

செடி மறைவில் இருந்த ஆண் குருவிக்கு இரத்தம் உறைந்து விட்டது! என்ன நடக்குமோ என்ற கவலையில் சிலையாகி நின்றது!

பதுங்கிப் பதுங்கிச் சென்ற பூனையைக் கண்டு, குலை நடுங்கியபடியே குருவி விழித்துக் கொண்டிருந்தது !

'வீல்' என்று மஸ்தான் ஒரு சீழ்க்கை ஒலியைக் கொடுத்தான். அடுத்த விநாடி 'லபக்'கென்று குருவியின் தலையைத் தன் வாயில் கவ்வி, முன்னங் கால் நகங்களால் உடலைப் பற்றிக் கிழித்துக் கீழே போட்டது! 'கீச் கீச்' என்ற ஈனக் குரலோடு பெண் குருவி இரத்த வெள்ளத்துள் மிதந்தது !

ஆண் குருவியின் தலை சுழன்றது!

சூழ்ந்திருந்தோர் எல்லாரும் 'ச்சோ ச்சோ' என்று பரிதாபப் பட்டனர் ! ''கட் கட்'' என்று டைரக்டர் சந்தோஷமாகக் குரல் கொடுத்தார்.

தன்னால் இறந்துவிட்ட தன் தோழியைப் பார்த்தபடியே பூனை பெருமூச்சு விட்டது!

படம் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும் உற்சாகமாகப் பேசிக் கொண்டனர். ''அப்பா! ஒரு வழியா வெற்றிகரமாக முடிஞ்சுதப்பா! நான் எதிர் பார்த்ததற்கு மேலேயே ஒரு படி மிஞ்சிப் போச்சப்பா உன் பூனை! ரொம்ப 'ரியலா' 'ஒரிஜினலிடி'யோட நடிச்சது அப்பா உன் பூனை! 'புரொடியூஸர்' கிட்டே சொல்லி, அதுக்காக உனக்கு, பேசினதுக்கு மேலே இருநூறு ரூபாய் கொடுக்கச் சொல்கிறேன், மஸ்தான்! குருவி செத்துப் போச்சேன்னு கவலைப் படாதே!'' என்றார் டைரக்டர்.

''அட, பாவிகளா!'' என்று வாய் ஓயச் சபித்து விட்டு, தன் ஜோடிக்காக ஒரு துளிக் கண்ணீரைச் சிந்தியபடியே அங்கிருந்து 'தப்பினோம்; பிழைத்தோம்' என்று ஆண் குருவி பறந்தது!

ஆனந்தக் களிப்பில் அதை யாருமே கவனிக்க வில்லை !

நந்தவனம் சோம

31. ஆசைக் கனவுகள்

"செண்பகநாயகி கோவிலுக்கு வழிவழியாக இசைத்தொண்டு புரிந்துவந்த ஒரு புகழ்பெற்ற கலைக்குடும்பத்தில் தோன்றினார்கள் குமுதவல்லியும் அவளுடைய அண்ணன் பால்வண்ணனும்!'' என்று தொடங்கினான் வேணுலிங்கம்.

''எந்தக் குமுதவல்லியைச் சொல்லுகிறீர்கள்?'' என்று ஆவலோடு கேட்டான் வில்வநாதன்.

''வேறு எந்தக் குமுதவல்லி தம்பி! நீங்களும் நானும் இப்போது இந்த வட்டப் பாறையிலே வந்து உட்கார்ந்து பேசுவதற்குக் காரணமாக அமைந்த அதே குமுதவல்லிதான்! அவளும் அவளுடைய தமையனும் மிகச் சிறுவயதாக இருந்த போதே அவர்களுடைய தாயார் இறந்து போனதால், இந்த இரண்டு குழந்தைகளும் செண்பகநாயகி கோவிலின் மலையடிவாரத்தில், கோவிலுக்குச் சொந்தமான ஒரு வீட்டில் உறவினர் ஒருவருடைய மேற்பார்வையில் வளர்ந்து வந்தார்கள்!'' என்று தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தான் வேணுலிங்கம். வில்வநாதன் மௌனமாக அந்த வரலாற்றைப் பின்தொடரலானான்.

''வழி வழியாக இசைத் தொண்டு புரிந்து வந்த குடும்பமாதலால், அவர்களுடைய வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட போக்கிலே செல்வதாக இருந்தது. ஆனால் பால்வண்ணனுடைய மனப்பான்மை வேறு விதமாக இருந்தது. மிகச் சிறு வயதிலிருந்தே அவனுடைய உள்ளத்தில் உயர்ந்த இலட்சியங்களும் உன்னதமான நோக்கங்களும் வளர்ந்து வந்தன. தன்னுடைய வாழ்விலும் தனது தங்கையின் வாழ்விலும் ஒரு பெரிய மாறுதலை உருவாக்க நினைத்தான் பால்வண்ணன்!

குமுதவல்லிக்கு இயற்கையன்னை மிகவும் கருணையோடு அழகுச் செல்வத்தை வாரி இறைத்திருந்தாள்! பிறவியிலேயே ஒப்பற்ற முக விலாசமும், குறுகுறுப்பான கண்களும், மிகவும் பிரகாசம் பொருந்திய மேனியும் அவளுக்கு வரப்பிரசாதங்களாக அமைந்திருந்தன. விசேஷமான செல்வச் செழிப்பு அந்தக் குடும்பத்துக்கு இல்லாது போனாலும், இந்த இயற்கையழகையே ஈடு இணையற்ற ஒரு செல்வமாக அவளுடைய உறவினர்கள் எல்லோரும் கருதினார்கள். ஆனால் பால்வண்ணனுடைய கருத்து வேறுவிதமாக இருந்தது.

குமுதவல்லிக்கு உரிய பருவம் வந்ததும் அவளைக் கோவிலுக்குப் 'பொட்டுக் கட்டி' வைத்து, அந்தக் கோவிலின் பணிகளிலேயே ஈடுபடும்படி செய்ய வேண்டும் என்று மற்ற எல்லாரும் நினைத்தார்கள். ஆனால் பால் வண்ணனுக்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை! தனது தங்கையின் அற்புதமான எழிலும், இசைத் திறமையும் நடனக் கலைக்குப் பயன்படும்படி செய்வதில் அவனுக்குச் சம்மதந்தான். என்றாலும் வாழ்வில் அவள் 'காதல் ஒருவனைக் கைப்பிடித்து,' அவன் 'காரியம் யாவினும் கை கொடுத்து', இல்லறம் என்ற நல்லறத்திலே ஈடுபட! வேண்டும் என்று விரும்பினான் பால்வண்ணன். தனது தங்கையின் வாழ்க்கையைப் போலவே தன்னுடைய வாழ்வையும் ஒரு திட்டவட்டமான நெறிப்படி அமைத்துக்கொண்டு, தனது இலட்சியங்களுக்கு உகந்த ஒரு கன்னியைத் தானும்





மணந்து கொண்டு, ஒரு புதிய பாதையிலே வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று பால்வண்ணன் கருதினான்.

உற்றார் உறவினர்களிடமும் தனது தங்கையிடமும் தன் கருத்தைத் தெரிவித்தான் பால்வண்ணன்! அவனுடைய எண்ணமும், எதிர்காலத் திட்டமும் வழக்கத்துக்கு மாறாக இருந்தபோதிலும் யாரும் அவனை எதிர்த்துப் பேசவில்லை. அப்படி ஒரு வாய்ப்பு நேருமானால் அவ்விதமே செய்யலாம் என்று கூறினார்கள்.

பால்வண்ணனுடைய அதிர்ஷ்டம், அவனைப் போலவே இத்தகைய மாறுதலை விரும்பிய இளைஞர்கள் இரண்டொருவர் அந்த வட்டாரத்துக் கலைக் குடும்பங்களிலே இருந்தார்கள். அவர்களில் மிகவும் சாதுவான சிவசங்கரன் குமுதவல்லியை மணந்து கொள்ளச் சம்மதித்தான். ஒரே ஒரு நிபந்தனை மட்டும் விதித்தான். குமுதவல்லியைப் போலவே அவனுக்கும் ஒரு தங்கை இருந்தாள். அவளைப் பால்வண்ணன் மணந்து கொள்வதானால், தான் குமுதவல்லியை மணப்பதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை என்று சொன்னான் சிவசங்கரன்! பால்வண்ணனுக்கு இந்த ஏற்பாடு மிகவும் சௌகரியமாகப் போயிற்று! எனவே, குறித்த ஒரு நன்னாளிலே, ஒரு நல்ல முகூர்த்தத்திலே பால்வண்ணனுக்கும் சிவசங்கரனின் தங்கைக்கும் திருமணம் நடந்தேறியது: அதே மணவடையில் குமுதவல்லியும் சிவசங்கரனைக் கரம் பற்றினாள்!

ஊரில் பலர் பலவிதமாக நையாண்டி பேசினார்கள். ஜமீன் வட்டாரங்களில் இந்தப் ''புரட்சி''யை விரும்பாத பிரமுகர்கள் எல்லாரும் ஏதேதோ வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டார்கள். பால்வண்ணன் இந்த வார்த்தைகள் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. எந்த வம்புக்கும் போயறியாத சிவசங்கரனோ தானும் தனது சாதுத் தன்மையுமாக !இணைந்து குமுதவல்லியோடு வாழ்க்கை நடத்தத் தலைப்பட்டான்!

இந்தத் திருமணங்கள் நடந்த மறு வருஷத்தில் பால்வண்ணனின் மனைவிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குமுதவல்லியும் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இந்த நிகழ்ச்சி அந்தக் குடும்பத்தின் ஆனந்தத்தை ஆயிரம் மடங்காகப் பெருக்கியது! ''நம்மைப் போலவே நமது குழந்தைகளின் எதிர்

காலமும் அமையப் போகிறது. என்னுடைய பையனுக்கு ஏற்ற மனைவியும் பிறந்து விட்டாள்!'' என்று பால் வண்ணன் சிவசங்கரனிடம் எல்லையற்ற களிப்போடு கூறினான்.

இப்படி அமைதியோடும் குதூகலத்தோடும் அந்தக் குடும்பம் ஒற்றுமையாக வாழ்க்கை நடத்தி வருவது, பாழான விதிக்குப் பிடிக்கவில்லை போலும்! சாந்தமாகச் செல்லுகிற சிற்றாற்றிலே திடீரென்று புரட்டாசி மாதத்தில் வெள்ளம் பெருகி வந்து கரையை உடைத்துக் கொண்டு, ஊருக்குள்ளே வந்து நாசம் விளைவிப்பதுபோல, எதிர்பாராத நிகழ்ச்சிகள் அவர்களுடைய வாழ்க்கையில் சம்பவித்தன.

ஆண் குழந்தை பிறந்த ஒரு வருஷத்துக்குள் பால்வண்ணனுடைய மனைவிக்குக் கடுநோய் கண்டு, அவள் அந்த ஆண் குழந்தையை விட்டு விட்டு இந்த உலகிலிருந்து மறைந்தாள். தாயில்லாக் குழந்தையோடு திக்கற்ற நிலையிலே, பால் வண்ணன் தனது தங்கையோடும் சிவசங்கரனோடும் வந்து வாழ ஆரம்பித்தான். கார்காலத்து வானத்திலே 'படபட' என்று கருமேகங்கள் சூழ்வது போல் அந்தக் குடும்பத்தில் இருள் கவிய ஆரம்பித்தது.


சிவசங்கரனுக்கும் அவனுடைய மனைவி குமுதவல்லிக்கும் அடிக்கடி மனத்தாங்கல் வர ஆரம்பித்தது! ஏதோ சந்தர்ப்பத்தின் கோளாறு என்று, பால் வண்ணன் இந்த மனத்தாங்கல் எதையும் பொருட்படுத்தாமல் பொறுமையாக இருந்தான். ஆடலிலும் பாடலிலும் சிறு வயதிலிருந்தே நன்றாக ஊறிப்போன குமுதவல்லிக்கு, அந்தவிதமான கலை நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று சிவசங்கரனிடம் விளக்கம் கூறினான் பால் வண்ணன். அதன் பேரில் குமுதவல்லியின் நடன நிகழ்ச்சிகள் அதிகமாக நடக்க ஆரம்பித்தன. கோவில் திருவிழாக்களிலும், திருமண விழாக்களிலும், குமுதவல்லி அடிக்கடி 'சதுர்க்கச்சேரி'க்குச் செல்ல ஆரம்பித்தாள். குடும்பத்தில் மறுபடியும் அமைதி மலர ஆரம்பித்தது. கலையிலும், கலை வாழ்விலும் ஒன்றிய இதயத்தைக் கலையிலிருந்து பிரித்து விடக் கூடாது என்ற மனத் தத்துவ உண்மையை நன்றாக உணர்ந்து, சிவசங்கரன் தனது மனைவியின் கலைக்கு முழு ஆதரவு கொடுத்தான்! நடனத்திலே இயற்கையான மேதையும், இசையிலே அபூர்வமான தேர்ச்சியும் இணைந்திருந்த குமுதவல்லியைப் பெரும் புகழும் தேடி வந்தன! அந்த மாவட்டத்திலே அவளை மிஞ்சக் கூடியவர் யாருமில்லை என்று சொல்லும்படி குமுதவல்லி நடன ராணியாகத் திகழ்ந்தாள். சிவசங்கரனும் பால் வண்ணனும் அந்தப் புகழ்க் கோலாகலத்திலே துயரங்கள் அனைத்தையும் மறந்து உள்ளம் பூரித்து உற்சாகத்தோடு உலவி வந்தார்கள். இருவருடைய குழந்தைகளும் எதிர்காலத் தம்பதிகளைப் போலக் கைகோத்து வளர்ந்து வந்தார்கள் அந்த அமைதியான சூழலிலே! ஆனால்?

கார்காலத்திலே திடீரென்று பெருகி வந்த வெள்ளம் திடீரென்று வடிந்துவிட்டால் அதை எப்படி நம்புவது? அடுத்த வெள்ளத்துக்கு அதுவே ஒரு முன்னெச்சரிக்கை என்பதைப் பால்வண்ணனோ, சிவசங்கரனோ எதிர்பார்க்கவில்லை. வெள்ளம் மறுபடியும் வந்தது! இந்த முறை முன்னைவிடப் பயங்கரமாக வந்தது!

செண்பகநாயகி திருவிழாவுக்குத் தஞ்சையிலிருந்து ஒரு பெரிய பாடகர் வருகிறார் என்ற செய்தி அந்த வட்டாரத்தையே கலகலக்க வைத்தது! பல்லவி பாடுவதில் வல்லவரும், பைரவி ராகத்தை மூன்று நாள் நான்கு நாள் பாடக்கூடியவருமான சின்ன முத்துக்குமரன் என்ற வித்துவான், அந்தக்காலத்தில் தஞ்சை மாவட்டம் முழுதும் வியாபகமாக இருந்தார். அவரை வரவழைத்து இரண்டாந் திருநாளன்று இரவு செண்பநாயகி கோவிலின் வசந்த மண்டபத்திலே கச்சேரி செய்யும்படி ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். மறுநாள் இரவு குமுதவல்லியின் சதுர்க்கச்சேரி.

சின்னமுத்துக் குமரன் தஞ்சாவூரிலிருந்து வந்து சேர்ந்தார். இரவு அவருடைய கச்சேரி நடைபெற்றது. கச்சேரிக்குச் சென்றிருந்த பால்வண்ணனும் சிவசங்கரனும் மெய்ம்மறந்து ஈடுபட்டார்கள் அந்த இசையிலே! முன் ஜன்மங்களில் இறைவனுக்குக் குடம் குடமாய்ப் பாலையும் தேனையும் அபிஷேகம் செய்து வழிபட்டு, அதன் பயனாக இந்த ஜன்மத்தில் பாலும் தேனும் கலந்தது போன்ற குரலைப் பெறுகிறார்கள் என்று சொல்வதுண்டு அல்லவா! அப்படிப்பட்ட குரல் முத்துக்குமரனுக்கு. அநாயாசமாக மேலும் கீழும் ஏறி இறங்குகிற சாரீரம். அதோடு சுத்தமான நெறி முறை! மரபு வழுவாத பயிற்சி! எல்லாம் சேர்ந்து அந்தக் கச்சேரி இறைவனுக்கு உகந்த ஒரு பூஜையாகவே அத்தனை உன்னதமாக இருந்தது!

கச்சேரி முடிந்ததும் சிவசங்கரனும் பால்வண்ணனும் இந்த அபூர்வமான சங்கீத வித்துவானைச் சந்தித்துத் தங்களுடைய மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். அதோடு நிற்க


SB
க்ரியேஷன்ஸ்
அவனா இவன்!?
தயாரிப்பு & டைரக்ஷன்: S. பாலசந்தர்

வில்லை. இன்னொரு வேண்டுகோளும் செய்து கொண்டார்கள் இருவரும்!

அந்தக் காலத்தில் தஞ்சாவூரில் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' என்ற நடன நாடகத்தை மிக உயர்ந்த முறையிலே நடத்தி வந்தார்கள். இந்த நாட்டிய நாடகத்துக்கான இசையமைப்பும், நடனப் பங்கீட்டு முறையும், சின்ன முத்துக்குமரனுடைய நிர்வாகத்தில் நடந்து வந்தன என்பது நாடெல்லாம் தெரிந்த செய்தி! அதோடு, இந்த நாட்டிய நாடகத்தில் தோன்றிய பெண்கள் எல்லாம் பிற்காலத்தில் மிகுந்த புகழும் செல்வமும் அடைந்து, நாடெல்லாம் கொண்டாடுகிற அளவுக்கு முன்னேறியதும் பலருக்குத் தெரிந்த விஷயம்! எனவே கலையுலகில் முன்னணிக்கு வர வேண்டும் என்று விரும்புகிற பெண்கள் எல்லாரும் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி'யில் தங்களுக்கு ஒரு பங்கு கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பாக இருந்தது அந்தக் காலத்தில்! பால்வண்ணனுக்கும் உள்ளத்தின் அந்தரங்கத்தில் இப்படி ஒரு சிறு ஆசை. இதைச் சிவசங்கரனிடம் வெளியிட்ட போது அவனுக்கும் இந்தக் கருத்து ஒரே கொண்டாட்டமாக இருந்தது. குமுதவல்லி எதிர்காலத்தில் ஒரு பெரிய நடனக் கலையரசியாகத் திகழ வேண்டும் என்றால், அவள் அந்தச் செண்பகநாயகி வட்டாரத்தில் மட்டும் நின்றுவிடாமல், இப்படி வெளியூர்களுக்குச் சென்று, இம்மாதிரி நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று சிவசங்கரனும் சொன்னான். இதற்கு ஏற்றவாறு சின்ன முத்துக்குமரனோடு வந்திருந்த நண்பர்கள் சிலர் பால்வண்ணனிடம் ஒரு செய்தியைத் தெரிவித்தார்கள். இந்த நடன நாடகத்தில் குறவஞ்சியின் வேடத்தைத் தாங்கக் கூடிய ''புதிய முகம்'' எங்காவது கிடைக்குமா என்று, சின்னமுத்துக்குமரன் தேடி வருவதாக அவர்கள் தெரிவித்தார்கள். இந்த நாடகத்தில் குறவஞ்சியாகத் தோன்றுகிற நங்கை மிகவும் முக்கியமான ஒரு பாத்திரம் என்றும், நடனக் கலையில் நன்றாகத் தேர்ந்திருப்பதோடு, இனிமையான குரலும் அவளுக்கு அமைந்திருக்க வேண்டும் என்றும், குரலோடு மட்டுமில்லாமல் வசீகரமான முகத் தோற்றமும், குறுகுறுப்பான கண்களும், பளிச்சென்று மக்களைக் கவரும் இங்கிதமும், எல்லாம் சேர்ந்திருக்க வேண்டும் என்றும், இத்தனை இயல்புகளும் சேர்ந்த ஒரு பெண் இதுவரையில் அகப்படவில்லை என்றும் தஞ்சை நண்பர்கள் கூறினார்கள். பால்வண்ணன் இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து ஏதேதோ ஆசைக் கனவுகள் காணத் தொடங்கினான்! தனது தங்கையைப் போன்று அழகும், நடனத் திறமையும், சாமர்த்தியமும், கலைப்பாங்கும் எல்லாம் ஒருங்கே அமைந்த ஒரு பெண் இந்த நடன நாடகத்திலே ஈடுபடுவாளானால், நாடகமும் அவளுடைய எதிர்காலமும் இரண்டுமே மேன்மை அடையும் என்று பால்வண்ணன் கருதினான். இதை அந்த நண்பர்களிடமும் சொன்னான்.

''எங்கள் ஆசிரியர் நாளைக் காலையிலேயே தஞ்சாவூருக்குத் திரும்ப எண்ணியிருக்கிறார். நாளைக்குப் புறப்படுவதற்குப் பதிலாக ஒரு நாள் தங்கி நாளை மறுநாள் இங்கிருந்து புறப்படும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள். நாளை இரவு உங்களுடைய தங்கையின் சதுர்க் கச்சேரியை அவர் கட்டாயம் பார்க்க வேண்டும் என்று சொல்லுங்கள். குறவஞ்சி நாடகத்துக்குப் பொருத்தமாக இருப்பாளா என்ற கருத்தோடு பார்க்கும்படியே வெளிப்படையாகச் சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் அவர் உடனே இசைந்து விடுவார்! ஏனென்றால் எல்லாத் திறமையும் ஒருங்கே அமைந்த ஒரு நங்கையைத் தேடித் தேடி மனம் நொந்த நிலையில் இருக்கிறார் அவர்!''

இவ்வாறு சொன்னார்கள் முத்துக்குமரனின் நண்பர்கள். அதன்படியே பால்வண்ணனும் சிவசங்கரனும் முத்துக்குமரனிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

''அதற்கென்ன! எங்கள் நாடகத்துக்குப் பொருத்தமான ஒரு கலைநங்கையைத் தேர்ந்தெடுப்பதானால், ஒரு நாள் என்ன, ஒரு வாரங்கூடத் தாமதிப்பதற்குச் சித்தமாக இருக்கிறேன். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் முதலிலேயே கண்டிப்பாகக் கூறி விடுகிறேன். நாளை நிகழ்ச்சியைப் பார்த்த பிறகு, உங்கள் குமுதவல்லியின் திறமை எங்கள் நாடகத்துக்குப் பயன்படும் என்றால் மகிழ்ச்சியோடு அந்தச் செய்தியை உங்களிடம் அறிவிப்பேன். ஆனால் அப்படியில்லாமல், எனக்கு அதில் திருப்தி ஏற்படவில்லை என்றால் அதையும் வெளிப்படையாகவே சொல்லி விடுவேன். பிறகு நீங்கள் என்னிடம் வருத்தப்படக் கூடாது!''

இவ்வாறு சொன்னார், முத்துக்குமரன்.

''ஆகா! அப்படியே செய்யுங்கள். அவளுடைய நடனத்தைப் பார்த்தீர்களானால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள் என்பதில் எங்களுக்கு எவ்விதமான சந்தேகமும் கிடையாது!'' என்று உற்

சாகமாக மறுமொழி கூறினான் பால்வண்ணன். உண்மையிலேயே அவனுடைய உள்ளத்தில் அதைப் பற்றி எத்தகைய சந்தேகமும் இல்லை. தனது தங்கையின் நடனத்திலும் அவளுடைய அபிநயத் திறமையிலும் அவனுக்கு அத்தகைய நம்பிக்கை இருந்தது!

முத்துக்குமரனுடைய கச்சேரியைக் கேட்டு ஆனந்த பரவசத்திலே நினைத்துக் கொண்டிருந்த ரசிகப் பெருமக்களுக்கு மறுநாள் நடைபெறவிருந்த நடன நிகழ்ச்சியைப் பற்றிய ஒரு புதிய செய்தியும் காற்றிலே மிதந்து வந்தது! வழக்கப்படி குமுதவல்லியின் சதுர்க்கச்சேரி அற்புதமாகவே அமையும் என்றாலும், இந்தச் சதுர்க்கச்சேரி தனிப்பட்ட சிறப்போடு அமையப் போகிறது என்று ''விஷயம் அறிந்த வட்டாரங்களில்'' பேசிக் கொண்டார்கள்! இந்த நிகழ்ச்சியைக் காண்பதற்காக முத்துக்குமரன் மறுநாள் அங்கே தங்கியிருக்கப் போகிறார் என்ற செய்தி அத்தனை விரைவாக இசையுலகிலே பரவி விட்டது! இவ்வளவு பெரிய வித்துவானின் முன்னிலையில் குமுதவல்லி நடனம் ஆடப் போவதால், தனது திறமைகளை யெல்லாம் முழு ஆற்றலோடு வெளியிடுவாள் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்! திருவிழா நிர்வாகிகளும் மிகுந்த உற்சாகத்தோடு நடனத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார்கள். வழக்கத்துக்கு அதிகமாகவே கூட்டம் வரும் என்று எல்லாரும் எதிர் பார்த்ததால், கோவில் மண்டபத்துக்கு எதிரேயிருந்த திறந்த வெளியிலும் மக்கள் அணி அணியாக இருந்து பார்ப்பதற்கு வசதிகள் செய்தார்கள்!

அன்றிரவு முழுவதும் பால்வண்ணன் தூங்கவில்லை. தனது தங்கையின் எதிர்காலக் கலைவாழ்வைப் பற்றியே விதம் விதமான கற்பனைகள் செய்தான். துயரமும் துன்பமும் சூழ்ந்து விடுமோ என்று அஞ்சிய தங்களது வாழ்வில், ஒரு புதிய யுகம் உருவாகப் போகிறது என்று மனக் கோட்டை கட்டினான் பால்வண்ணன்! மறுநாள் நடக்க விருந்த தனது தங்கையின் நடன நிகழ்ச்சி அந்தப் புதிய யுகத்துக்குக் கட்டியம் கூறி வரவேற்கப் போகிறது என்று ஆசையோடு கற்பனை செய்தான் பால்வண்ணன். சகோதர பாசமும், தங்கையின் திறமையில் அவனுக்கு இருந்த எல்லையற்ற நம்பிக்கையும் சேர்ந்து அவனுடைய கற்பனைகளுக்கு வேகம் கொடுத்தன! பொழுது விடிந்ததும் தங்கள் வாழ்விலேயே ஒரு பொன்னாள் மலரப் போகிறது என்று எதிர்பார்த்தான் பால்வண்ணன்!


(தொடரும்)



திரு எம். பி. சாரங்கபாணி அவர்களின் புதல்வி சௌ. மாலதிக்கும், திரு கா. ஸ்ரீ. ஸ்ரீனிவாசாச்சாரியார் அவர்களின் புதல்வர் திரு பார்த்தசாரதிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.



விருத்தாஜலம் யூனியன் இன்ஜினியர் திரு தர்மராஜய்யர் அவர்களின் புதல்வி சௌ. சாவித்திரிக்கும், திரு விசுவநாதனுக்கும் கல்யாணம் நடைபெற்றது.



எழுத்தாளர் திரு நா. சி. வரதராஜனுக்கும், (பீஷ்மன்) சௌபாக்கியவதி சீதாலக்ஷ்மிக்கும் மதுரையில் திருமணம் விமரிசையாக நடந்தேறியது.

உம்ரிகர் ஓய்வு பெறுகிறார்!

குண்டுமணி

இந்திய கிரிக்கெட்டில் பந்துவீச்சில் ஒருவர் நிபுணராக இருப்பார், ஆனால் பந்தடிப்பதில் அவ்வளவு திறமைசாலியாக இருக்கமாட்டார்; பந்தடிப்பதில் சூரராயிருப்பார் ஒருவர், ஆனால் பீல்டிங்கில் கோட்டை விட்டுக் கொண்டிருப்பார். கிரிக்கெட் ஆட்டத்தில் பௌலிங், பாட்டிங், பீல்டிங் ஆகிய மூன்று துறைகளிலும் திறமைசாலிகளாக இருப்பவர்கள் மிகச் சொற்பம். அவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். 'இப்படிப்பட்ட 'ஆல்ரௌண்டர்' கோஷ்டியில் ஒருவரான உம்ரிகர் இனி டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறப் போகிறார் என்பது கிரிக்கெட் ரசிகர்களுக்கு அளவில்லாத துயரத்தைக் கொடுத்ததில் அதிசயமில்லை.

மேற்கிந்தியத் தீவு பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரரான வீக்ஸ், "உம்ரிகரின் ஆட்டத்தில் கவனம் செலுத்துங்கள். அவர் எதிர்காலத் தலைசிறந்த ஆட்டக்காரர்!" என்று முன்பே உம்ரிகரின் வருங் காலத்தைப் பற்றிக் கூறியிருந்தார். அவர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பது ஒவ்வொரு டெஸ்ட் பந்தயத்திலும் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளதைக் கண்டோம்.



1951ம் வருஷம் இரண்டாம் காமன்வெல்த் கிரிக்கெட் கோஷ்டி சென்னையில் வந்து ஆடியது. இந்த ஆட்டத்திலே உம்ரிகர் 110 ரன்கள் எடுத்துச் சென்னை ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. 1952ம் வருஷம் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியைச் சென்னையில் ஓர் இன்னிங்க்ஸ் எட்டு ரன்கள் வித்தியாசத்தில் இந்திய கோஷ்டி தோல்வியுறச் செய்தது சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவமாகும். இந்தப் பந்தயத்தில் உம்ரிகர் ஆட்டமிழக்காமல் நூற்றுமுப்பது ரன்கள் எடுத்தார் என்றால் அது இணையற்ற சாதனைதானே?

கான்பூரில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் குழுவுக்கும் நடந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றதற்குக் காரணமானவர்களில் உம்ரிகரும் ஒருவர். இந்த அதிசய சாதனையைக் கண்டு மூக்கின் மேல் விரலை வைக்காதவர்கள் இல்லை. அதோடு மட்டுமா? சென்னையில் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கெதிரே இந்திய கோஷ்டி ஆடிய போது தோல்வி கிடைத்து விடும் என்றே பலர் எதிர்பார்த்தனர். அச்சமயத்தில் அபாரமாக ஆடி இந்தியாவின் பெருமைக்கு இழுக்கு வராமல் ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடியக் கைகொடுத்து உதவியவர் உம்ரிகர் அவர்கள்தான்.

கல்கத்தாவில் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினரை வென்று, ஜெயக்கொடி நாட்டியது உம்ரிகர் தலைமை வகித்து நிர்வகித்த இந்திய கோஷ்டிதான். சென்னையில் கிடைத்த இரண்டாம் வெற்றிக்கும் உம்ரிகரின் ஆட்டம் பெருந் துணை செய்தது.


டெஸ்ட் பந்தயங்களில் கண்டிராக்டர், தாம் காப்டன் பதவி வகித்த காலத்திலும் பீல்டிங் அமைப்பு முறை பற்றி உம்ரிகரிடம் கலந்தாலோசித்துக் கொண்டே முடிவு செய்ததை உம்ரிகரின் நிர்வகிக்கும் திறமைக்குச் சான்றாகக் கூறலாம்.

பம்பாயில் 1926-ம் வருஷம் மார்ச் 28-ந் தேதி பிறந்த உம்ரிகர் இதுவரை ஐம்பது டெஸ்ட் பந்தயங்களுக்குமேல் கலந்துகொண்டிருக்கிறார். யார்க்ஷயரில் ஸ்கோர் போர்டுக்கு மேலே பந்தையடித்து விரைவாகப் பந்தைத் தாக்கும் நிபுணர் என்று புகழ் பெற்றவராயிற்றே. இவர் பம்பாய்க் கோஷ்டிக்குத் தலைமை வகித்து ரஞ்சித் கோப்பைப் பந்தயத்தில் மூன்று வருடங்கள் தொடர்ந்து வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார். டெஸ்ட் பந்தயங்களிலே அதிகமான 223 எண்ணிக்கையை ஹைதராபாத்தில் நியூஸிலந்துக்கும், இந்தியாவுக்கும் நடைபெற்ற மாட்சில் எடுத்திருக்கிறார். இவருக்கு இந்த வருஷம் குடியரசு தினத்தன்று இந்திய சர்க்கார் பத்மஸ்ரீ பட்டம் வழங்கிக் கௌரவித்தது மிகப் பொருத்தமாகும்.

ஆல்ரௌண்டர் உம்ரிகர் இந்திய கிரிக்கெட்டுக்கு நல்ல பெயரைத் தேடித் தந்தவர். முதுகு வலி காரணமாக டாக்டர்கள் ஆலோசனைப்படி டெஸ்ட் பந்தயங்களில் கலந்து கொள்ள முடியாமலிருக்கிறார். டெஸ்ட் பந்தயங்கள்தானே ஆட்டக்காரர்களின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பது. டெஸ்ட் பந்தயம் ஆடி ஆடிமுதிர்ந்த அனுபவம் பெற்ற இவர் தமது முப்பத்தியாறாவது வயதிலேயே கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்களிலிருந்து ஓய்வு பெறுவது இந்திய கிரிக்கெட் உலகுக்குக் கை ஒடிந்தது போலாகும். ஆனால் அவர் முழுதும் கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து விடுதலை பெறவில்லை என்பது சிறிது மனச் சாந்தியை அளிக்கிறது.

விடி

எல்லார்



"ஜானு! இன்னும் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று உள்ளிருந்து கேட்ட என் அக்காளின் குரல் என்னிடம் கறு கறுப்பை உண்டுபண்ணிற்று. பரபரவென்று கோலமிடத் தொடங்கினேன்.

"போனால் போன இடம்; வந்தால் வந்த இடமா? ஒரு காரியத்துக்குப் போனால் மசமசவென்று எத்தனை நேரம்! நானு கை தண்ணீரைத் தெளித்து இரண்டு இழை கோலம் போட்டு விட்டு வர ஜாமப் போதா?"

அக்காள் உள்ளே புலம்புவது எனக்கு நன்றாகக் கேட்டது. சிறிசிலிருந்தே பொதுவாக அவள் என்னை இப்படிக் கடிந்து கொள்வது சர்வ சாதாரணம். அந்தக் கடிதலுக்குள் புதைந்து கிடக்கும் அன்பும் பண்பும் எனக்கு நன்கு தெரியுமாகையால் நான் ஒருபோதும் முகத்தைச் சுணங்கியதே இல்லை. ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளாக அவள் செய்யும் கெடுபிடிகள்! அதிலும் தப்பித் தவறி நான் வாசல் பக்கம் வந்து விட்டால் போதும்; அவளுக்கு உள்ளே இருப்பே கொள்ளாது. இதற்காக அவள் என்னைத் தெரு வாசலுக்கு விளக்கு வைப்பதற்குக்கூட அனுமதிப்பதில்லை. இப்பொழுது நாலு நாட்களாய்த் திரேகமில்லை. நிறைமாதமாகி விட்டபடியால் அவளால் நடமாடக்கூட முடியவில்லை; வேலைக்காரியும் ஊரில் இல்லை. நிராப் பொறியே என்று என்னை வாசல் பக்கம் அனுமதித்தாள். ஆனால் கண் இமைப்பதற்குள் காரியத்தை முடித்துக் கொண்டு உள்ளே போய் விட வேண்டும் என்று கெடுபிடி. அது ஏன் என்பதை நானும் அறிந்தே இருந்தேன்.

ஏற்கனவே ஊரில் என்னைப் பற்றி எண்ணற்ற கதைகள்; வெறும் வாயை மெல்லுபவர் கையிலே பிடி அவலையும் கொடுத்தாற் போல் ஆகிவிடக் கூடாதே என்ற கவலை அவளுக்கு.

'அழகும் அதிர்ஷ்டமும்' என்று இணைத்துச் சொல்வார்கள். ஆனால் இரண்டும் ஓர் இடத்திலே இணைந்திருப்பது அரிதுதான் என்பது என் அனுபவம். 'மூக்கும் விழியுமாக ஜானு எப்படித்தான் இருக்கிறாள், ராஜாத்தி மாதிரி!' என்று இளமையில் என்னை எல்லாரும் கொண்டாடுவார்கள். என் பாட்டி, 'ராஜாத்தி' என்றே கூப்பிட்டாள். அழகி என்றதுமே அதிர்ஷ்டம் கெட்டவள் என்பது வெளிப்படை. பாழும் அழகு எனக்கு எதற்குத்தான் அமைந்ததோ, பாலையில் பெய்த தண்ணீரை மழை போல்!

அக்காளுக்கு உள்ள கவலையும் பொறுப்பும் எனக்கு மட்டும் இல்லையா என்ன? நான் வாசல் பக்கம் எட்டிப் பார்ப்பதுகூட இல்லை. தப்பித் தவறி எப்போதாவது வந்தால், "என்ன ஜானு! உனக்கு என்ன உடம்புக்கு? ஜுரமா?" என்று பார்க்கிறவர்கள் கேட்கும்படிதான் இருக்கும், என் தலையும் சந்தமும். ஆனால் என்னதான் நான் அரை பரக்கத் தலை பரக்கச் செயற்கை முறைகளால் என்னை அலங்கோலமாக்கிக் கொண்டாலும் இயற்கையாக என்னிடம் அமைந்து விட்ட எழிலும் இளமையின் மிளுமிளுப்பும் அந்த அலங்கோல நிலையிலே ஒட்டாமல் தனித்து நின்று, பசி நிறைந்த கண்களுக்கு என்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

இரண்டே நிமிஷங்களில் உள்ளே ஓடிவிட வேண்டும் என்று தான் வந்தேன்; அதற்கேற்ற பரபரப்போடு

நான் அலுவல்களில் ஈடுபட்டேன். அப்போது தெருக்கோடியில் 'ஜல்ஜல்' என்று வண்டி மாடுகளின் சதங்கை ஒலி கேட்டது. எதுவா னாலும் ஏறிட்டுப் பாராத இயல்பை வளர்த்துக் கொண்டு விட்ட நான் இப்போதும் அப்படியே கருமமே கண்ணாக இருந்தேன்.


வேகமாக வந்த ரயிலடி வண்டி எதிர்வீட்டு வாசலில் நின்றது. அடுத்த சில விநாடிகளில் என் அருகே நிழலாட்டம்; ''ஜானுக்கா...'' என்ற இறைந்த குரல்.

நிமிர்ந்தேன். தங்கச் சிலை போல் சரசு நின்றிருந்தாள். தாய்மைச் செழுமையும், தள தளவென்று பூரித்த தோற்றமும் கைகள் நிறைய வளையல்களும், கண்களில் அழகு குமிழியிடும் அயர்வும் வாய் நிறையச் சிரிப்புமாய் அருகே நின்ற அவளை அப்படியே கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் ஆசையாக இருந்தது. அது நடுத்தெரு என்கிற நினைவும், அவளுக்கும் எனக்கும் இடையே உள்ள தாரதம்மிய உணர்வும் உள்ளத்தில் எழுந்து என் ஆசைக்கு அணை கட்டின.

''இப்போதுதான் வருகிறாயா?'' என்று வாத்ஸல்யத்தோடு கேட்டேன். அவள் 'ஆம்' என்று தலையசைத்தாள். இதற்குள் வண்டி வாடகையைக் கொடுத்து அதை அனுப்பி விட்ட அவள் தகப்பனார் அவர்கள் வீட்டுக் கழிக்கிற வாசலிலும், உள்ளேயிருந்து மஞ்சள் நீர் கரைத்தெடுத்து வந்து அவள் தாயார் ஹாரத்தித் தாம்பாளமும் கையுமாய் அவர்கள் வீட்டுப் படியிலுமாய் நின்று எங்கள் அன்பு நாடகக் காட்சியை இமையாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''நான் என்னவோ கேள்விப்பட வேண்டும் என்ற ஆசையோடு வந்தேன். உனக்கு விடிவே கிடையாதா ஜானக்கா?''

அவள் கண்கள் கலங்கின. இளங்காற்றிலே பொல்லெனப் பறந்து அவள் நெற்றியிலே



வந்து விழுந்த அவளுடைய சிறு குழற் கற்றையை இடக்கையால் ஒதுக்கித் தலையைக் கோதி விட்டபடி நான் விரக்தி தோன்ற மெல்ல நகைத்தேன்.

''விடிவு....''' இனிமேல்தான் விடிகிறதே!'' என்றேன்.

''வாம்மா, அப்புறம் சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்'' என்றார் அவள் அப்பா. அவள் மெல்லென அடி எடுத்து வைத்தாள். திரும்புகிற போது அவள் கண் கடையில் திரண்டு நின்ற நீர் முத்து தரையில் விழுந்து சிதறியது.

சுற்றிக் கொட்டியானதும் அவள் என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே உள்ளே சென்றாள். நான் கண்ணைத் துடைத்துக் கொண்டு காரியத்தில் ஈடுபட்டேன்.

'....நேற்றையப் பெண். என்னைவிட ஆறு வயசு சின்னவள். போன வைகாசியில் கல்யாணம்; இந்த ஆனியில் தாயாகி விட்டாள்; ஆம், தாய்மை பெற்று விட்டாள். பேறு காலத்துக்கு வந்திருக்கிறாள்; இன்னும் சில நாட்களில், அவள் மடியில் சொர்ண விக்கிரகம் போல் குழந்தை கிடக்கும்.'

என் நினைவோட்டத்தை அக்காளின் குரல் அறுத்தது. சட்புட்டென்று அலுவலை முடித்துக் கொண்டு உள்ளே போனேன்.

''கொஞ்சங்கூட உலகம் புரியாத பெண்ணாக இருக்கிறாயே, ஜானு. அபிராமி மாமி நல்லவள்தான்; ஆனால் கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமே! வாழாத பெண் கண்ணாலே சுட்டு விட்டாள் என்று ஒருவர் சொல்லும்படிக்கு நாம் வைத்துக் கொள்வானேன்? சரசுவுக்குத் தலையைக் காலை வலித்தால் பழிச்சொல் வரும்!....இந்தா, இதைக் குடித்து விட்டுச் சட்டென்று குளித்து விட்டு ஒரு பிடி களைந்து வை. எனக்கு உடம்பு என்னவோ போல் இருக்கிறது....''

குமுறி வந்த அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு காப்பியைக் குடித்து விட்டுக் குளிக்கச் சென்றேன். மனம் மடை திறந்து கொண்டது.

அப்பா முகம் எப்படி இருக்கும் என்று அறியும் பாக்கியமற்ற நான் அம்மாவையும் அதிசீக்கிரத்திலேயே இழந்தேன். ஒரே தமக்கையின் அடைக்கலப் பொருள் ஆனேன். எனக்கும் அவளுக்கும் பதினைந்து வயசு வித்தியாசம். இடையே இரண்டு மூன்று பிறந்து போய் விட்டனவாம். அவை புண்ணியம் செய்த பிறவிகள்!

அக்காள் புருஷரை, யுதிஷ்டிரர், ராமர் — இப்படி எந்த உவமையிட்டுச் சொன்னாலும் பொருந்தும். அத்தனை நல்லவர்; நேர்மையானவர். தமக்குரிய சிறு வீடு, சொற்ப நிலம் இவற்றை வைத்துக் கொண்டு மானமாகக் காலட்சேபம் செய்து வந்தார்.

பிறந்து பிறந்து இறந்த சிசுக்கள், அக்காள் அவள் கணவர் இருவர் நெஞ்சங்களிலும் ஆறாத புண்ணை உண்டு பண்ணியிருந்தன. அதற்கொரு மாற்றுப் போல் நான் அவர்களின் பெண்ணாகவே வளர்ந்து வந்தேன்.

பருவம் வந்ததும் என்னை உரிய இடத்தில் சேர்ப்பதற்காக அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. பணப்பந்தல் போடத் தயாராக இருப்பவர்கள் பெண்களுக்கே இலேசில் 'குரு பலம்' வராத போது ஏழை ஜானுவின் கதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? கடைசியில் ஓர் இடம் கிடைத்தது. பெரிய இடம் என்றார்கள்; அநுதாபத்தினால் இணங்கினார்கள் என்றார்கள்; என்ன என்னவோ சொன்னார்கள். எனக்கு ஏதோ கலவரமாக இருந்தது.

என் கலக்கம் வீண் போகவில்லை. இடம் பெரிய இடம்தான். ஆனால் 'பெரிய' என்ற சொல்லுக்கும் எனக்கு மாலை இட்டவருக்கும் துளியேனும் ஒட்டுறவில்லை. எப்படி நான் என் தமக்கையின் நிழலில் வாழ்ந்து வந்தேனோ, அதே போல் அவரும் அவருடைய தமக்கையின் ஆதரவில் இருந்து வந்தார்—அவ்வளவே. இந்த விவரமும் இன்னும் சில விவரங்களும் திருமணம் நிறைவேறி, நான் அங்கே வலக் காலை முன் வைத்து வாழப் போன போது தான் அறிந்தேன். அவர் அங்கே ஏவலாளராக இருந்தார்; நான் ஒரு வேலைக்காரி என்று உணர்ந்தேன்.

பரம ஏழைமையிலிருந்து திடீர்ப் பணக்காரர்களான அவர்களின் போக்கு வெறுக்கத் தக்கதாகவும் எள்ளி நகைக்கத் தக்கதாகவும் இருந்தது. புதுப் பணம் படுத்திய பாடு! என்ன ஆர்ப்பாட்டம்! எவ்வளவு ஆடம்பரம்!

அவர்கள் எப்படியோ இருந்து தொலையட்டும் என்று தான் நான் இருந்தேன். ஆனால்... அந்த மனிதர் — என் கணவரின் தமக்கை கணவர் — என்னை அப்படி இருக்க விடவில்லை. என்னைச் செல்லாக் காசாக அவர் எண்ணுகிறார் என்பது அவருடைய பார்வை, சிரிப்பு, பேச்சு, நடவடிக்கை முதலியவைகளிலிருந்து எனக்கு நன்றாகப் புரிந்தது. புரிந்த உடனே பெருந்தீயின் நடுவே நான் இருப்பது போல் உணர்ந்தேன். உஷார் ஆனேன்.

அந்த அப்பாவி — என் கணவர் — அவர் எங்கேதான் போவாரோ, என்னதான் செய்வாரோ; வீட்டில் தங்குவதே இல்லை. ஒரு நாள் ஒரு பொழுதில் எப்போதாவது ஒரு முறை எட்ட இருந்தபடி அவர் முகத்தைப் பார்க்கும் பாக்கியம் கூட எனக்குக் கிட்டுவதில்லை. காணக்கிடைப்பதே அரிதென்றால்? பேசவும், சிரிக்கவும் வாய்ப்பு ஏது? அப்படி அவருக்கு என்னதான் வேலை இருக்குமோ? கடவுளுக்குத்தான் தெரியும்.

எழுதப் படிக்கத் தெரியாத என் நாத்தி, பணம் என்ற போர்வையின் செல்வாக்கினால் சங்கங்களிலும் கிளப்புகளிலும் பதவிகள் பெற்றிருந்தாள். பல சமயம் அவள் வீட்டில் இருப்பதில்லை. பல சந்தர்ப்பங்களில் அவள் கணவர் வீட்டில் இருப்பதில்லை. இன்னும் பல வேளைகளில் அவர்கள் இருவருமே இருப்பதில்லை. அம்மாதிரி சந்தர்ப்பங்களில் வீட்டில் தனித்திருக்கும் என் கண்கள் எனக்குரியவரைக் காண ஏங்கும். ஏக்கந்தான் மிச்சம்.

நான் அங்கே வாழ்ந்த காலமெல்லாம் விரல் விட்டுக் கணக்கிடக் கூடிய சில நாட்களேதான். அதற்குள் பிரளயமே நடந்து விட்டது. அந்தப் பெரிய மனிதரிடம் வழிந்து கொண்டிருந்த அசட்டுத்தனம் சற்று அளவைக் கடந்த போது நான் பொல்லாதவளாக மாறினேன். அதன் விளைவு — வாழா வெட்டிப் பட்டத்துக்கு உரியவளானேன்.

''நீ என்னடா சொல்கிறாய் சுந்தரம்? ஆழம் தெரியாமல் காலை விட்டாயே விட்டது. அந்தப் பெண்ணைப் பற்றி அவள் ஊரிலும் அக்கம் பக்கத்திலும் கதை கதையாகச் சொல்கிறார்களாம். கல்யாணம் அங்கே நடந்திருந்தால்



கரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன். நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122. கன்ஸராசால்... பம்பாய்-2.

அப்போதே சூட்டு வெளிப்பட்டிருக்கும். அதை மூடி மறைக்கத்தான் போலிருக்கிறது. அந்த மனிதன் பிரார்த்தனை, அது இது என்று சொல்லி உப்பிலியப்பன் சந்நிதியிலே வைத்துக் காரியத்தைக் காதும் வாயும் வைத்தாற் போல முடித்திருக்கிறான்.''

''இதையெல்லாம் எதற்காக அக்கா என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாய்? என்ன வேண்டுமோ செய்து கொள்!''

அங்கிருந்து புறப்படுமுன் தம்பிக்கும் தமக்கைக்கும் நடந்த இந்தச் சம்பாஷணையைக் கேட்டபோது என்னால் பொறுக்க முடியவில்லை. பெண் புலியாய் மாறினேன். அவர்கள் எதிரே சென்று படபடவென்று வார்த்தைகளைக் கொட்டினேன்.

''சீ! மூடு வாயை!'' என்றாள் அந்தப் புண்ணியவதி. அந்தப் புண்ணியவான் அதைக் கூடச் சொல்லவில்லை. அந்த இடத்தைவிட்டுப் போயே போய் விட்டார்.

வண்டி வந்தது. துணைக்கு ஒரு கிழவி வந்தாள். அவளோடு நான் என் தமக்கை வீட்டை அடைந்தேன். கிழவி பலே கைகாரி. வாயே திறக்கவில்லை. உடனே திரும்பிப் போய் விட்டாள்.

தமக்கையும் தமக்கை கணவரும் அனைத்தையும் கேட்டனர்; ஆறுதல் கூறினர். தங்களுக்குள் பல்வேறு கோணங்களில் பேசிக் கொண்டனர். 'சண்டித்தனமாக அங்கேயே இருந்திருந்தால்?' என்று ஒருவர் சொன்ன போது, 'குழந்தை தற்கொலை செய்துகொள்ள நேர்ந்திருக்கும்' என்று மற்றவர் கூறினர். 'அங்கேயே இருந்து கொண்டு யார் மூலமாக வேனும் நமக்குத் தகவல் கொடுத்திருந்தால்?' என்ற கேள்வி பிறந்த போது, 'ஊர் சிரிக்கும் நிலை ஏற்படும்; பணம் பாதாளம் வரை பாயும்' என்று பதில் கிடைத்தது.

உடம்பிலே காயம் ஏற்படுகிற போது ஒரு விதமான வலி; மறுநாள் அந்த வலியின் உபாதை அதிகரிக்கும்; நாள் ஆக ஆகப் புண் என்ற நிலை மாறிக் காயம் வடுவாக ஆகி விட்டால் வலியே இராது; அடையாளம் மட்டுமே தங்கும். ஆனால், புண் ஆற வழியின்றி மேலும் மேலும் அந்த இடத்திலே அடிபட்டுக் கொண்டே இருந்தால் உபாதை இருந்து கொண்டே இருக்கும்; காயத்தில் ரத்தம் கசிந்து கொண்டே இருக்கும்.

என் நிலை ஆறாத புண்; என் நெஞ்சில் ஓயாத ரத்தக் கசிவு. சிறுமி சரசுவின் நிலை என்ன; இந்த ஜானுவின் நிலை என்ன?

''அம்மா! .... ஜானு எங்கே?''

''கிணற்றடியில் குளிக்கிறாள். ஏன்?''

''சீக்கிரம் அவளைக் கிளம்பச் சொல். பத்து மணி ரயிலுக்கு அவளை அழைத்துக் கொண்டு திருச்சி போகிறேன்.''

''திருச்சிக்கா? .... திடீரென்று என்ன இப்படி?'' என்றாள் அவன் அக்கா.

''அவள் கணவனிடம் அவளைச் சேர்த்து விட்டு வரப் போகிறேன்.''

''அது சரி. பலமுறை முயன்று படுதோல்வி பெற்ற காரியத்தில் திடீரென்று இந்தப் பரபரப்பு எதனால் என்று கேட்கிறேன். நேற்றிரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தோம். இதைப் பற்றி ஒரு வார்த்தை நீங்கள் பேசவில்லை. இன்று விடியற்காலம் எழுந்து வயல் வெளிக்குப் போகிற போதுகூட ஒன்றும் சொல்லவில்லை. இப்போது இப்படிப் பரபரக்கிறீர்கள்!....நல்ல செய்தி ஏதாவது கிடைத்ததா?'' என்றாள்.

''ஆமாம். நல்ல செய்தி! ராமசப்பு குளத்தங்கரையில் நாலு பேர் நடுவிலே பேசிக் கொண்டிருந்தான். ஜானுவை உரிய இடத்திலே சேர்க்க எனக்கு மனமில்லையாம். அதனால் நான் முயற்சி எதுவும் எடுக்காமல் இருக்கிறேனாம். நீ பெற்றுப் பெற்று நாலும் தோஷமாகப் போய் விட்டாயாம். இம்முறை உன் நிலை மிகவும் கவலைக்கு இடமாக இருப்பதால் உன்னை ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போகிறேனாம். சேர்த்துவிட்டு நான் இங்கே கொண்டாளடிக்கப் போகிறேனாம் ....''

''அடப் பாவி!....அவன் வாயிலே பூச்சி வைக்க!''

''நான் அவனை அடித்துப் போட்டுவிட்டு வந்து விட்டேன். அது போகட்டும்; குழந்தையைக் கூப்பிட்டுச் சீக்கிரம் கிளம்பச் சொல். நான் வடக்குத் தெருவரையில் போய் விட்டு வருகிறேன்.''

''எனக்கு......உடம்பு......இன்று.... ஒரு மாதிரியாக....''

''என்ன வேணுமானாலும் நடக்கட்டும். கிட்டா, பார்வதி இருவரிடமும் சொல்லியிருக்கிறேன். அவர்கள் உன்னைக் கட்டிக் காத்துக் கவனித்துக் கொள்வார்கள். ஜானு இனி ஒரு போதுகூட இங்கே இருக்கக்கூடாது!''

''அங்கே போய் என்ன செய்வீர்கள்?''

''அது அங்கே போய்த்தான் தெரியும்.... உம்....உம்....''

சமையல் அறையில் அக்காளுக்கும் அவள் கணவருக்கும் இடையே நிகழ்ந்த இந்த உரையாடல் எனக்கு நன்றாகக் கேட்டது. ராமசப்புவின் பழிச்சொல்லால் மனத்தில் வேதனை படர்ந்தாலும் அந்த வேதனையினுள்ளும் ஒரு கிளுகிளுப்பு இழையோட்டம் கொடுத்தது. அந்தக் கிளுகிளுப்பு, வாழ்விலே நான் இன்றளவும் கண்டறியாத ஒரு நூதன இன்ப உணர்வாக இருந்தது. துன்பத்தில் இன்பம் என்பது போல, ராமசப்புவின் வாய்ச் சொல் மூலம் தெய்வத்தின் கட்டளை இதில் ஏதாவது இருக்குமோ! எனக்கும் கூட விடிவு உண்டோ?

அவசரம் அவசரமாகத் துணியைப் பிழிந்து கட்டிக் கொண்டு உள்ளே வந்தேன். அக்காள் மூக்க முட்டப் பேசினாள்.

'ஐயோ!....இந்த நிலையில் இவளை விட்டுப் போவதா?....ஆனால்....'

நான் குழம்பிக் கொண்டிருக்கிற போதே அக்காள் புருஷர் வடக்குத் தெருவிலிருந்து வண்டியோடு வந்து விட்டார். அவரோடு கிட்டா மாமாவும் பார்வதி மாமியும் வந்து சேர்ந்தார்கள்.

நான் புறப்பட்டு விட்டேன், திகைப்பயமாக. பேச முடியாமல் பல்லைக் கடித்துக் கொண்டு துக்கத்தையடக்கி அக்காள் விடை கொடுத்த காட்சி என் நெஞ்சை அறுத்தது. முழுக்க முழுக்க அவள் சோற்றில் வளர்ந்த இந்த உடம்பு கருவுயிரைத் தலைமேல் சுமந்தபடி அவளுக்கு உதவ முடியாமல், கொண்டவரின் அரவணைப்பையோ, பேராற்றின் தழுவலையோ பெறுவதற்குப் புறப்படுகிறது!

இரவு பத்து மணி. மையிருள். மழை கொட்டுக் கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. குதிரை வண்டி என் நாத்தியின் வீட்டு வாசலை அடைந்து நின்றது. "ஜாக்கிரதையாக இறங்கி வா அம்மா" என்று சொல்லிக் கொண்டே என் தமக்கை கணவர் வண்டியை விட்டிறங்கி நடந்தார்; நான் அவரைத் தொடர்ந்தேன். எமன் கோயிலை அணுகுவது போல் என் இதயம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது.

என் அக்காள் புருஷர் கதவை இடித்தார். என்னுடையவர் வந்து திறந்தார். எங்களைப் பார்த்துத் திடுக்கிட்டாரோ என்னவோ; என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

"உம். உள்ளே போ அம்மா."

"நான் தயங்கித் தடுமாறி நடந்தேன்.

"சாமி!...நேரமாவது சாமி!...மழை!.." என்று அவசரப்படுத்தினான் வண்டிக்காரன்.

"இதோ வருகிறேன். இரு அப்பா" என்ற என் தமக்கை கணவர் என் கணவரைநோக்கி, "அப்பா, சுந்தரம்; இவள் உன் சொத்து. புனிதத் தன்மைக்கு நிகரற்ற நெருப்புப் போன்றவள் இவள். உன்னால் முடிந்தால் வைத்து ஆதரி; இல்லா விட்டால் காவிரியிலே தள்ளி விடு. நடுத்தெருவில் மட்டும் விட்டு விடாதே!" என்று கூறிவிட்டு 'விர்' ரென்று நடந்து சென்று வண்டியிலே ஏறிக் கொண்டார். அது ஓடி மறைந்தது. சிறிது நேரத்துக்குள் அது ஓடும் ஒலியும் தேய்ந்து மறைந்து விட்டது.

திருதிருவென்று விழித்த வண்ணம் நடையில் நின்று கொண்டிருந்த என் கணவர் என்னை ஏறிட்டுப் பார்த்தார். நானும் பயத்தோடும் ஆசையோடும் அவர் முகத்தை நோக்கினேன். அவரிடம் சலனம் ஏற்பட்டது. கதவைத் தாழ் இட்டுவிட்டு மெல்ல நடந்தார். நான் கைப் பெட்டியுடன் பின்னே நடந்தேன். அவர் கூடத்துக்குப் போனார். நானும் பின்னே சென்றேன். அவர் அறைக்குள் சென்றார்; நானும் போனேன்.

"சாப்பிட்டு விட்டாயா?"—முதல் பேச்சு.

'உம்'மென்று தலை அசைத்தேன். கொடியிலிருந்து ஒரு துண்டைக் கொணர்ந்தார். "தலையைத் துவட்டிக் கொள்" என்று கொடுத்தார். துவட்டிக் கொண்டேன். அவர் என்னையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். வீட்டிலே யாருமே — அவரையும் என்னையும் தவிர — இல்லை என்பதைச் சூழ்நிலை உணர்த்திற்று. உடனே என் உடம்பிலும் உள்ளத்திலும் உருப்புரியாத கிளர்ச்சியும் படபடப்பு உண்டாயிற்று. நெடுநாட்கள் கிட்டாத அவர் அன்பு இன்று எனக்குக் கிட்டிவிட்டதும் என் ஆசைக் கனவு நனவாகிவிட்டது.

'ஓ'வென்ற பேரிரைச்சல் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தேன். இடுப்பிலே இரு கைகளையும் ஊன்றிய வண்ணம் லங்கிணி போல் கட்டில் அருகே நின்றிருந்தாள் என்



9-7-62 அன்று கும்பகோணம் இந்தியன் பாங்க் லிமிடெட் ஏஜண்ட் திரு ஆர். சந்திரசேகரன் அவர்களின் குமாரத்தி சௌ. பிரேமாவுக்கும் கும்பகோணம் கோ-ஆப்ரேடிவ் சென்ட்ரல் பாங்க் லிமிடெட் செக்ரட்டரி திரு ராமையா முதலியார் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ஆர். மாணிக்கத்திற்கும் திருமணம் இங்கு நடந்தது.

அவ்வமயம் யூனியன் உதவி மந்திரி கனம் டி. ஆர். பட்டாபிராமன் முதலான பிரமுகர்கள் விஜயம் செய்தார்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் திவ்விய பிரசாதமும், ஸ்ரீ காமாட்சி அம்மன் பொற்காசும் வழங்கினார்கள். தருமபுரம் ஆதீனகர்த்தா அவர்களும் பிரசாதம் அனுப்பி வைத்தார்கள். திருவாடுதுறை ஆதீனகர்த்தா அவர்கள் திவ்விய பிரசாதமும் ஸ்ரீமான்கள் ஆர். சந்திரசேகரன், எஸ். ராமையா முதலியார் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டது. செட்டிநாட்டு ராஜா ஸர் டாக்டர் முத்தையா செட்டியார் அவர்கள் முதலான பல பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்பட்டன.

மாலை வரவேற்பும், திருவிதாங்கூர் ஆஸ்தான வித்துவான்கள் திரு கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, மாயூரம் கோவிந்தராஜப் பிள்ளை, திரு பாலக்காடு மணி அய்யர் அவர்களின் தனி பிடில் கச்சேரியும் நடைபெற்றது.

நாத்தி. அவள் வாயிலிருந்து நாராசம்போன்ற சொற்கள் தெறித்த வண்ணம் இருந்தன. என் கணவர் தம்முடைய துணிமணிகளைப் பொறுக்கி மூட்டை கட்டிக்கொண்டிருந்தார். கட்டிலினின்றும் துள்ளியெழுந்த நான் ஒரு மூலையில் சென்று பதுங்கினேன். நாத்தியின் கணவர் கூடத்து ஊஞ்சலில் அமர்ந்து ஒய்யாரமாகச் சிகரெட் ஊதிக் கொண்டிருந்தார். கண்ணை உருட்டி விழித்தபடி என்னிடம் பாய்ந்த நாத்தி. ''உன் அப்பன் வீட்டிலிருந்து சீதனம் கொண்டு வந்தாயோ 'ஸ்பிரிங்' கட்டிலும் பஞ்சணையும் மெத்தையும்!'' என்று என் கன்னத்தில் இடித்தாள். இதற்குள் மூட்டையை ஒரு கையிலும், என் பெட்டியை மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்ட என் கணவர், ''உம், வா'' என்றார். நான் பூனை போல் அவரைப் பின்பற்றி நடந்தேன்.

''ஏய்! மூட்டையை வை கீழே! உடுத்த துணியோடு நட!''

அவர் பொத்தென்று மூட்டையைப் போட்டு விட்டு வேகமாக நடந்தார்; நானும் அவரைப் பின் தொடர்ந்தேன். இருவரும் தெருவில் இறங்கி நடந்தோம். என்னவோ நீச பாஷையில் திட்டிய என் நாத்தி, 'தூ' என்று காறித் துப்பியதும், பகீர் என்று தெருக்கதவைச் சாத்தியதும் எங்கள் செவிகளுக்குக் கேட்டன.

சிறிது நேரம் சென்றதும், ''பெட்டிக்குள் பணம் ஏதாவது இருக்கிறதா?'' என்று அவர் மெல்லக் கேட்டார். ''ஐந்து ரூபாய் இருக்கிறது'' என்றேன். நடுத்தெருவில் பெட்டியைத் திறந்து அதை எடுக்கச் சொன்னார். எடுத்துக் கொடுத்தேன்.

பொழுது மெல்ல மெல்லப் புலர்ந்தது. இருவரும் ஓட்டலுக்குப் போனோம். பிறகு வண்டி வைத்துக் கொண்டு பெருமாள் செட்டியார் என்பவர் வீட்டுக்குப் போனோம். அவர் புகல் அளித்தார். அவருடைய வீடுகளில் ஒன்றில் குடியிருக்க இடமும், அவர் கடையில் கணக்கெழுதும் வேலையும் கொடுத்தார். அந்த அளவுக்கு என் கணவரிடம் அன்பு கொண்டவர் அவர்.

புதுக்குடித்தனம்— சட்டி பானைகளோடு — தொடங்கிற்று. அது எனக்கு இனித்தது. ஏகாந்தத்தில் உரையாடிக் கொண்டிருந்த போது அவர் எல்லாம் கதை கதையாகச் சொன்னார்.

அவள் இவருடைய அக்காளும் இல்லையாம், ஒன்றும் இல்லையாம். 'வண்டி ஓடத்தில் ஏறும்; ஓடம் வண்டியில் ஏறும்' என்பார்களே அது போல இவர்கள் கதை. என் மாமனார் செல்வராக இருந்த போது அந்த அரக்கியின் தகப்பனார் அவரிடம் பணி புரிந்து வந்தாராம். தாயில்லாப் பெண்ணுடன் இவர்கள் குடும்பத்திலேயே ஒட்டிக் கொண்டாராம். காலம் மாறிற்று. என் மாமனார் சில பிழைகளைப் புரிந்து ஓட்டாண்டியாகிக் காலம் ஆனார். என் கணவர் இப்போது அந்த அரக்கியின் தந்தையிடம் வளர வேண்டியதாயிற்று. அக்காள் — தம்பி உறவு இப்படித்தான். அரக்கிக்கு மணம் ஆயிற்று. அவள் தந்தை இறந்தார். அவள் கணவர் வீடு சென்றாள். என் கணவரும் அவளுடன் சென்றார். ஏதோ 'கோல்மால்' மூலம் அரக்கியின் கணவர் திடீர்ப் பணக்காரர் ஆனார். என் மாமனார் பட்டிருந்த கடன்களில் ஒரு சில பாக்கியிருந்தது. அவற்றைத் தீர்த்து வைத்த நன்றிக்காக என் கணவர் அவர்களின் கைப் பொம்மையாக ஆடி வந்தார்.

நேற்று முன் தினம் அந்தத் தம்பதிகள் பேச்சை என் கணவர் செவியேற்க நேர்ந்ததாம். அவர்கள் ஊரிலிருந்து வந்ததும் வீட்டை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு இவர் என்னிடம் வர இருந்தாராம். அதற்குள் நானே வந்து விட்டதும், ஈசுவர சங்கல்பத்தை எண்ணி மனமகிழ்ந்து என்னை ஏற்றுக்கொண்டாராம். எல்லாம் வேளையின் விளைவு!

எங்கள் சிறு குடித்தனம் உற்சாகமாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி உருவாயின.

''தலை தூக்க முடியாத மசக்கையோடு ஒன்றியாய்த் திண்டாடுவானேன்? வா, உன்னை உன் அக்காள் வீட்டில் கொண்டு விடுகிறேன்'' என்று பரிவோடு அழைத்தார் அவர். நானும் இணங்கினேன்.

கணவரோடு ரயில் பிரயாணம் என் மனத்துக்கு அளவிறந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. பொழுது புலருகிற நேரத்தில் ரயில் பூங்குடி நிலையத்தை அடைந்தது. அங்கே இறங்கி மாட்டு வண்டியில் ஊரை நோக்கிப் பயணப்பட்டோம். வண்டி கிராமத்தில் நுழைந்தது.

தெருக்கோடியில் வருகிற போதே என் தமக்கை வீட்டுக்கு எதிர்வீட்டு வாசலில் வண்டியொன்று புறப்படத் தயாராக நின்று கொண்டிருப்பது தெரிந்தது. என் ஊகம் தவறவில்லை.

என் தமக்கை வீட்டு வாசலில் நானும் என் கணவரும் இறங்கியபோது எதிர்வீட்டுச் சரசு கையும் குழந்தையுமாக வண்டி ஏற வந்தாள். அவளை வழியனுப்ப என் அக்காள் உள்ளே இருந்து வந்தாள். அவள் அணைப்பிலே அவள் செல்லக் குழந்தை.

எல்லோரும் எங்களைப் பார்த்தார்கள். ஒரே சமயத்தில், ''ஆ! ஜானு!....ஜானு....'' என்றார்கள். அந்த இடத்திலே மகிழ்ச்சிவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சரசு என்னிடம் தாவி ஓடி வந்தாள். ''ஜானுக்கா!....'' என்றாள். பேச முடியாமல் திணறினாள். ''விடிந்து விட்டது: இல்லையா?'' என்றாள்.

''ஆம் சரசு; ஆம். எனக்கும் விடிவு ஏற்பட்டு விட்டது'' என்று அவளை அணைத்துக் கொண்டு விட்டேன்.


அவள் என்ன கண்டாளோ என்னவோ, சட்டென்று, என்னிடமிருந்து சற்று விலகி நின்று என்னை ஏற இறங்கப் பார்த்தாள்.

''எத்தனை மாசம்?'' என்றாள். நான் சட்டென்று வீட்டினுள் விரைந்தேன். இவற்றையெல்லாம் கண்ட என் தமக்கையின் புருஷர் பெருநிதியைக் கண்டவர் போல், ''வா— சுந்தரம்'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

நாங்கள் வந்த ரயிலடி வண்டியும் சரசு பயணப்பட்ட வண்டியும் சேர்ந்தாற் போல் புறப்பட்டுச் சென்றன. மாடுகளின் சதங்கை ஒலி, 'விடிவு, விடிவு' என்று இசைப்பது போல் என் காதில் ஒலித்தது.

காவேரி

தமிழழகன்



பொங்கிக் கழித்தனள் ;
பூவில் விழித்தனள் ;
பொன்மகள் காவேரி !—விழித்துடன்
மூங்கிக் குழித்தனள் ;
முத்தும் கொழித்தனள் ;
மும்மையும் காவேரி !

துள்ளிச் சிரித்தனள் ;
தூய்மை விரித்தனள் ;
தொன்மகள் காவேரி!—விரித்(து) அலை
தெள்ளித் தெறித்தனள்;
தேனும் நிறைத்தனள்
தேயமும் காவேரி !

அணைபல சாடினள் ;
ஆலோலம் பாடினள் ;
ஆனந்தி காவேரி !—நிலமகள்
மணம்பெறக் கூடினள் ;
மஞ்சனம் ஆடினள் ;
மாமன்னர் காவேரி !


மங்கலம் உற்றனள் ;
மண்வளம் பெற்றனள் ;
மாணிக்கக் காவேரி !—குமிழிகள்
அங்கவள் பற்றினள் ;
ஆரத்தி சுற்றினள் ;
ஆம் ; தெய்வக் காவேரி !

ஆடியும் வந்தனள் ;
ஆர்வம்முன் தந்தனள் ;
அன்னைதான் காவேரி !—அவளையே
பாடிப் பணிவோம் ;
பதமும் அணிவோம் ;
பரவுக காவேரி !

நீயின்றி நானில்லை!

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

தபால்காரர் கொடுத்து விட்டுச் சென்ற கடிதத்தைப் படித்த கீதா அவளையும் மீறி, ''அட, பாவமே!'' என்றாள் கவலையும் அனுதாபமும் நிறைந்த குரலில். பக்கத்தில் நின்று கொண்டு அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ராஜம்மா ''என்னடி கடிதம்? யார் எழுதியிருக்கா?'' என்றாள்.



''மாமா எழுதியிருக்காரம்மா. பாட்டிக்கு உடம்பு சரியில்லையாம். வயதாகி விட்டதால் எதையும் நம்புவதற்கில்லையாம். உன்னை ஒரு முறை வந்து போகுமாறு எழுதியிருக்கிறார். கடைசி நாட்களில் நீயும் பக்கத்தில் இருந்தால் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன் என்கிறாள் பாட்டி...'' என்று கடிதத்தின் வாசகத்தைச் சுருக்கிக் கூறினாள் கீதா.



ராஜம்மாவின் கண்களில் நீர் துளித்து நின்றது.

''எந்த வண்டிக்கும்மா போறே?'' என்றாள் கீதா.

''அடுத்த வண்டிக்கே அனுப்பி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார் உங்க அப்பா! 'எல்லாம் செத்த பிறகு போனால் போதும்' என்பார். ஒரு வேளை அப்புறமும் 'அதுதான் போயிட்டாளே. நீ போனதும் எழுந்து உட்காரப் போகிறாளா என்ன?' என்று சொன்னாலும் சொல்லுவார்!'' என்று தன் கணவரின் சுபாவத்தை நிஷ்டூரத்துடன் எடுத்துச் சொன்னாள் ராஜம்மா. அவள் சொன்னதிலும் தவறில்லை. அவள் கணவர் முத்துசாமி அப்படிச் சொல்லக் கூடிய மனிதர்தான்!

ராஜம்மாவும் ஒரு மனுஷ்ய ஜீவன், அவளுக்கும் ஆசாபாசங்கள் இருக்கும் என்று நினைக்க மாட்டார். என்றைக்கு அவள் கழுத்தில் தாலியைக் கட்டினாரோ அன்று முதல் அவளைக் கடவுள் தமக்கென்றே படைத்து அனுப்பியிருப்பது போன்ற ஓர் எண்ணம் அவர் மனத்தில் பதிந்திருந்தது. மனைவியைக் கஷ்டப்படுத்தினார் என்று குறை கூற முடியாது. அவளுக்கு ஒரு குறையும் வைத்தவரல்ல. ஆனால் எதிலும் அவளையும் ஒரு நபராகச் சேர்த்துக் கொண்டதில்லை—அதாவது முக்கிய விஷயங்களில். மற்றப்படி அவளுடைய காரியங்களை யெல்லாம் அவள்தான் கவனிக்க வேண்டும்.

ராஜம்மாவுக்குக் கணவரின் சுபாவம் பழக்கப்பட்டு விட்டது. ஆனால் கீதாவுக்கு இது விஷயத்தில் கொஞ்சம் குறை. அம்மாவை அப்பா அலட்சியம் செய்கிறார் என்கிற வருத்தத்தில் சில சமயம் ஆண் இனத்தின் மீதே அவள் எரிந்து விழுவாள்.

''அசடாட்டமா உளறாதே. புருஷன்—மனைவி உறவு பலவிதமாகத்தான் இருக்கும். சிலர் பெண்டாட்டியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவார்கள். எதிலும் மனைவியின் விருப்பப்படிதான் நடப்பார்கள். அதையும்தான் பரிகாசம் செய்கிறோம். பெண்ணாய்ப் பிறந்தவள் புருஷன் விருப்பப்படி நடந்து கொள்வதுதான் நல்லது..'' என்று கீதாவுக்குப் புத்திமதி சொல்லுவாள் ராஜம்மா.

''எதற்கும் ஒரு அளவு வேண்டுமம்மா. மனைவி என்றால் ஜடம் என்று நினைக்கக் கூடாது. இதுவரையில் உன் இஷ்டப்படி எதையாவது செய்ய விட்டிருக்கிறாரா அப்பா?....''

''குடும்பம் நடந்து கொண்டுதானே இருக்கிறது!'' என்று அமைதியாகப் பதில் சொல்லுவாள் ராஜம்மா. என்றாலும் உள்ளத்தின் அடித்தளத்திலே கணவரிடம் சிறிது வருத்தம் இருக்கத்தான் செய்தது. வேறு எதையும் அவ்வளவாகப் பொருட்படுத்தா விட்டாலும் கடந்த பன்னிரண்டு வருஷ காலமாகப் பிறந்தகத்தைக் கண்ணால் பார்க்காத துக்கம் சொல்லி முடியாது.

கீதாவைப் பிரசவிப்பதற்கும் அடுத்தவள் ஜனகாவைப் பிரசவிப்பதற்கும் தான் பிறந்தகம் அனுப்பி வைத்தார்

முத்துசாமி. பிறகு ஐந்து பிரசவங்களுக்கும் ராஜம்மாளின் தாயார்தான் இங்கு வந்து ஒத்தாசை செய்தாள். சென்ற வருடம் கூடத் தன் மகளின் பேறுகாலத்தில் அவளே வந்து மிகுந்த தள்ளாமையுடன் உழைத்துவிட்டுப் போனாள்.

இப்பொழுது அந்தக் கிழவி சாகக் கிடக்கிறாள்! ஏழு பெண்களைப் பெற்ற தாய் தன்னைப் பெற்றவளை நினைத்துக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

அம்மா அழுவதைப் பார்க்கச் சீதாவின் மனத்தை ரொம்பவும் சங்கடப்படுத்தியது. "ஏம்மா, அழறே? பாட்டி நிச்சயம் பிழைத்து விடுவாள். எனக்குக் கல்யாணமாகித் தங்க விக்கிரகம் போல் ஒரு குழந்தை பிறந்து அதை எடுத்துக் கொஞ்சாமல் கண்ணை மூடிவிட மாட்டாள்!" என்று அம்மாவுக்கு ஆறுதல் கூறினாள் சீதா.

"போடி, பித்துக்குளி!" என்று கண்களைத் துடைத்துக்கொண்டாள் ராஜம்மா.

"நீ கவலைப்படாதேம்மா; அப்பா அனுப்ப மறுத்தால் நான் அடம் பிடித்தாவது உன்னை அனுப்பி வைக்கிறேன்" என்று தந்தையிடம் தனக்குள்ள சலுகையுடன் தெம்பாக அபயமளித்தாள். முத்துசாமியும் தமது இஷ்ட கஷ்டத்தைப் பாராமல் சீதாவின் கோரிக்கை எதையும் பூர்த்தி செய்ய இது நாள் வரை தவறியதில்லை.

சற்றைக்கெல்லாம் வெளியில் சென்றிருந்த முத்துசாமி வீடு திரும்பினார்.

"அப்பா! நாளையிலிருந்து உனக்கு என் சமையல் தான்!" என்றாள் சீதா.

"ஏன்? அம்மா 'ரிடையர்' ஆகிறாளா?" என்றார் சிரித்துக் கொண்டே.

"இல்லை; கேம்ப் போகிறாள்!" என்றாள் சீதா.

அவர் ஒன்றும் புரியாமல் விழிப்பதற்குள் ராஜம்மாள் ஊரிலிருந்து வந்த கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதைப் படித்து விட்டு, "பாவம் போய்ப் பார்த்துட்டு வா!" என்று கூறினார்.



ராஜம்மா இதோ இருவர் முகங்களும் ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் மலர்ந்தன.

"துணைக்கு நீ வேண்டுமானால் போகிறாயா இதோ?" என்றார்.

"நானும் போய் விட்டால் வீட்டுக் காரியத்தை யாரப்பா கவனிப்பது?"

"அதுவும் வாஸ்தவம்தான்" என்று சிறிது யோசித்தார். பிறகு, "சரி; குழந்தைகள் எல்லோரையுமே அழைத்துக் கொண்டு போ. நானும் இதோவும் இருக்கிறோம்...." என்றார்.

"குழந்தைகள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு போனால் செலவில்லையா? வீணில் ரயில்காரனுக்குச் செலவழிப்பானேன்?" என்றாள் ராஜம்மா.

"ஆனால் ஆகட்டுமே. குழந்தைகளுக்கு ரயில் பிரயாணம் செய்தாற் போல் இருக்கும். போன இடத்தில் உனக்கும் குழந்தைகளைப் பற்றிய கவலை இருக்காது..." என்றார். தான் போவதற்கே ஏதாவது ஆட்சேபணை சொல்லுவார் என்று எதிர்பார்த்த ராஜம்மாளுக்கு இப்பொழுது கணவர் ஒரு புதிராயிருந்தார். நன்றி நிறைந்த விழிகளுடன் கணவரைப் பார்த்து, "உங்களுக்குத்தான் கொஞ்சம் சிரமமாயிருக்கும்...." என்றாள்.

"சிரமம் என்ன? ஒரு வாரத்துக்கு நிம்மதியாயிருப்பேன்!" என்றார் மெல்லச் சிரித்தவாறு. ராஜம்மாளின் முகம் இறங்கி விட்டது. "அது வேணும், இது வேணும்னு சதா நச்சரிக்க மாட்டாய் பாரு..." என்றார் தொடர்ந்து.

"எதையும் வேணும்னு கேட்கும் வரை நீ ஏம்பா வைச்சக்கணும்?" என்றாள் இதோ. பாராட்டும் வகையில் பெண்ணைப் பார்த்தார் முத்துசாமி.

அன்று இரவு வண்டிக்குப் பிறந்தகம் கிளம்பினாள் ராஜம்மா. இதோவும், அவளுக்கு அடுத்தவளான ஜனகாவும் தகப்பனுடன் தங்கி விட்டனர். மற்ற விவரம் தெரிந்த குழந்தைகளும் விவரம் தெரியாத குழந்தையும் கைக்குழந்தையும் அம்மாவுக்குத் துணை போனார்கள்.

"அப்பாவைப் பற்றி ரொம்பவும் தவறாக நினைத்துக் கொண்டிருந்தோமில்லையா? செலவைக் கூடப் பார்க்காமல் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போகச் சொல்லியிருக்கிறாரே!" என்றாள் இதோ தன்னுடைய தவறுக்கு வருந்துபவள் போல்.

"எல்லாம் காரியமாகத்தான் இருக்கும்!" என்றாள் ஜனகா.

"அப்படீன்னா?"

"அம்மா ஊருக்குப் போனால் எப்பொழுது திரும்புவாளோ என்னமோ? 'நீ இல்லாமல் எனக்குக் கஷ்டமாயிருக்கு; உடனே புறப்பட்டு வா' என்று எழுதினால், பின்னால் அம்மா கை ஓங்கி விடும். 'இரண்டு நாளைக்கு நான் இல்லாவிட்டால் தெரியும்' என்று சமயம் வரும் போது சொல்லிக் காட்டுவாள். இப்பொழுது அப்படியில்லையே. குழந்தைகளின் படிப்பை உத்தேசித்து அம்மா ஒரு வாரத்தில் வந்தாகணுமே! அப்படியே வராவிட்டாலும் 'குழந்தைகளின் படிப்பு வீணாகிறது!' என்று ஒரு வரி எழுதிப் போடலாமே!..." என்றாள்.

அதிசயத்துடன் அவளைப் பார்த்தாள் இதோ. "நிஜந்தாண்டி! இது ஒரு சூழ்ச்சிதான்!" என்றாள் ஜனகா.

ராஜம்மா ஊருக்குப் போய் ஒரு வாரத்துக்கு மேல் ஆகி விட்டது. பாட்டிக்கு எப்படி இருக்கிறது, என்ன ஆனாள் என்றுகூடத் தகவல் இல்லை. "இன்று ஏதாவது தபால் உண்டா?" என்று முத்துசாமி கேட்காத நாளே கிடையாது. மனைவி இல்லாமல் அவர் பல சௌகரியங்களை இழக்க நேர்ந்தது. சமையலை என்னவோ இதோ சமாளித்துக் கொண்டிருந்தாள். முத்துசாமி அதி

இவர்கள் எல்லோரும் சங்கீத வித்வான்கள். இவர்கள் என்ன செய்கிறார்கள்?



(பின்பக்கம் பார்க்க)

காலையில் நாலரை மணிக்கு எழுந்து விடுவார். உடனே பல்பொடியும் செம்பிலே தண்ணீரும் எடுத்துக் கொண்டு ராஜம்மா நிற்கவேண்டும். பல் தேய்த்து முடித்ததும் கடக் கடக் காப்பி தயாராக இருக்க வேண்டும். காப்பி ஆனதும் ஸ்நானம். அதற்கு அண்டாவில் நீர் நிரப்பியிருக்க வேண்டும். புதன் சனி எண்ணெய் தேய்த்துக் கொள்ளத் தவற மாட்டார். பக்குவமான சூட்டில் வெந்நீர் விளாவி வைத்திருக்க வேண்டும். மத்தியான வேளைகளில் அவர் படுத்துக் கொண்டால் சிறிது நேரம் விசிறிக் கொண்டிருக்க வேண்டும். இரவு ஒன்பது மணிக்குப் படுக்கையை நன்றாகத் தட்டிப் போடணும். இதைப் போல் இன்னும் எவ்வளவோ. இவைகளில் ஏதாவது ஒன்றுக்குச் சிறிது நேரமானாலும் மனைவியின் மீது அவர் எரிந்து விழுவார். ஆனால் ராஜம்மா எல்லாவற்றையும் கன கச்சிதமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவ்வளவையும் அவரே செய்து கொள்ள வேண்டியிருந்தது. சொல்லவும் முடியவில்லை. காலைக் காப்பிக்குக்கூட அவரே அடுப்பு மூட்ட வேண்டியிருந்தது. ஒரு நாள், இரண்டு நாளென்று பத்து நாட்களைத் தள்ளி விட்டார்.

திடீரென்று அன்று ராஜம்மா வந்து நின்றாள்.

"பாட்டிக்கு எப்படியம்மா இருக்கு?" என்றாள் சீதா.

"கொஞ்சம் தேவலை. இரண்டுங் கெட்டானாயிருந்தது. அதனால்தான் இவ்வளவு நாளாகி விட்டது. இன்னும் பத்து நாட்கள் இருந்து பாட்டி நன்றாய் எழுந்து உட்கார்ந்ததும் போகலாம் என்று எல்லாரும் ரொம்பச் சொன்னார்கள்..."

"இருந்து விட்டு வருவதுதானே!" என்றார் முத்துசாமி.

"இருந்து விட்டு வரணும்னுதான். ஆனால் உங்களை நினைத்துத்தான் வந்து விட்டேன். உங்களைக் கவனித்துக் கொள்ளக் சீதாவால் முடியாதென்னு.."

"என்னை என்ன கவனிக்கிறது?" என்று அலட்சியமாகக் கூறி விட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றார் முத்துசாமி.

"குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலேன்னு அப்பா பேச்சைப் பார்த்தியா? அம்மா! நீ இல்லாமல் அப்பா ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டார். ஒரு கை ஒடிஞ்ச மாதிரி தவித்து விட்டார். 'தபால் வரல்லியா? இப்படிப் போய் உட்கார்ந்து விட்டாளே... குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் போகிறதே.....' என்று தினமும் புலம்பிக் கொண்டிருந்தார்" என்றாள் சீதா.

"எனக்குத் தெரியும்டீ! அதனால் தான் ஓடி வந்தேன்...."

"ஒரு வார்த்தை. நீ இல்லாதது ரொம்பவும் கஷ்டமாக இருந்தது என்று சொன்னால் என்னவாம் என்கிறேன்?" என்றாள் சீதா சிறிது கோபத்துடன்.


தன் கணவர் ஒரு நாளும் அந்த மாதிரி ஒரு வார்த்தை சொன்னதில்லையே என்ற குறை ராஜம்மாவுக்கு உண்டு. என்றாலும் எதையும் காட்டிக் கொள்ளாமல், "வாய் விட்டுச் சொன்னால்தானா?" என்றாள்.

"மனத்தாலும் நினைக்க மாட்டார்" என்றாள் சீதா.

"மனத்தால் நினைக்காமல் இருக்க முடியாது. எங்களுக்குள் ஓர் ஆந்தரீகமான பாசம் உண்டு. அது வெளியில் தெரியாது. அவர் புகழ வேண்டும் என்று நான் எதையும் செய்ய வில்லை!" என்றாள் ராஜம்மா.

சீதா அம்மாவை ஒரு பக்தியுடன் பார்த்தவாறு, 'உன்னைப்போல் நான் இருப்பேனா?' என்று நினைத்துக் கொண்டாள்.

ஒரு மாதம் கழித்து ஒரு நாள் ராஜம்மாள் தனியாக இருக்கையில் முத்துசாமி சொன்னார்: "இனிமேல் நீ எங்கேயாவது ஊருக்குப் போவதானால் குழந்தைகளுடன் சேர்த்து என்னையும் அழைத்துக் கொண்டு போ!" என்று.



இவர்கள் வாத்தியம் எதுவும் வாசிக்கவில்லை. பாடும்போது ஏற்படும் கோணங்கிதான்!

மெல்லிளம் சருமத்திற்குப் போஷாக்கு அளிக்க



மெரோலின்

சுகாதார டியோடரண்ட் டாய்லட் சோப்

பூரண சருமப் பாதுகாப்பு இப்பொழுது கைக்கு எட்டியுள்ளது. சுத்தம் செய்வது தவிர, மெரோலின் உடல் நாற்றங்களை நீக்குகிறது. சரும ஆரோக்கியத்தைப் பூர்த்தி செய்கிறது. அழகு மிளிரச் செய்கிறது. அதன் மருந்து சக்தியும் நாற்றம் போகும் சக்தியும் உடல் சுத்தத்துடன் ஆரோக்கியமும் அளிக்கின்றன.



தயாரிப்பு

வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ்

கள்ளிக்கோட்டை

வாழ்வு-ஒரு யாத்திரை

"கலியாணம் ஆகி விட்டால் பிள்ளைகள் மாறித்தான் போகிறார்கள். இதுதான் என்னுடைய அனுபவம்" என்று தேவகியம்மாள் தன் பால்ய சிநேகிதி ருக்மிணியம்மாளிடம் குறைப்பட்டுக் கொண்டாள்.

ருக்மிணி புன்சிரிப்பாக உதட்டை மடித்துச் சுழித்து ஒரு சிரிப்புச் சிரித்து வைத்தாள். அவளுக்குத் தேவகிக்கு ஏற்பட்ட அனுபவம் இன்னும் ஏற்படவில்லை. இனிமேலும் ஏற்பட வழி இல்லை. அவளுக்கு இருப்பது ஒரே ஒரு பெண்தான். பி. ஏ. இரண்டாவது வருஷத்தில் படித்துக் கொண்டிருந்தாள். தேவகிக்கு நாலு ஆண்பிள்ளைகள். மூன்று பேர்களுக்கு நல்ல இடத்தில் பெண் பார்த்துக் கலியாணம் செய்து வைத்தாள். முதல் மருமகள் வீட்டுக்கு வந்ததும் தனக்கு ஏதோ பிரமாதமாகக் குடும்பப் பொறுப்பிலிருந்து விடுதலை கிடைத்து விட்ட மாதிரி தேவகி நினைத்துத் தன் கணவர் சாம்பசிவத்திடம் "என்னுங்க! இரண்டு பாஸ் போடுங்களேன்" என்று கேட்டாள். அவர் வியப்புடன் தன் மனைவியை ஏறிட்டுப் பார்த்து, "ஏன்?" என்று கேட்டார்.

"சும்மாத்தான். இப்படிக் கன்யா குமரி வரைக்கும் போயிட்டு வரலாமே! எனக்கும் கொஞ்சம் ஓய்வு வேண்டாமா?"

சாம்பசிவம் தம் மீசையை முறுக்கியவாறு யோசனையில் ஆழ்ந்தார். அத்தனை பெரிய வீட்டையும், இரண்டு கறவை மாடுகளையும், மாட்டிலே பாதிராவைக் [illegible] அளிக்கும் ராஜபாளையம் நாயையும், தினம் ஒரு சாக்குப் போக்குக் கூறும் தவசிப் பிள்ளையையும், இரண்டு வேலைக்காரர்களையும் கட்டி யார் மேய்ப்பார்கள்? அப்படி மேய்த்தாலும், இன்னும் கலியாணம் ஆகாத மூன்று பிள்ளைகளின் தேவைகளைக் கவனித்துச் செய்ய யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்?

"என்னங்க?" என்று தன் குரலை உயர்த்தி நீட்டிக் கூப்பிட்டாள் தேவகி.

"நீ என்ன சொல்றே தேவகி? பாஸ் போட்டுக்கிட்டு ஜம்முன்னு பஸ்ட் கிளாஸிலே உட்கார்ந்து ஊர் சுத்தப் போயிட்டா இந்த வீட்டை யார் கவனிப்பாங்க? ஹூம்?...."

"எல்லாம் கவனிக்க ஆள் வந்தாச் சென்னுதான் உங்க கிட்டே வந்து கேக்கறேன். காலத்துக்கும் எனக்கு உழைப்புத்தான் மிச்சம்."

தேவகியின் கண்களில் சாம்பசிவம் முப்பத்தைந்து வருடங்களில் முதல் முதலாகக் கண்ணீரைக் கண்டார். பாவம், அவள் ஆசையைக் கெடுப்பா



ஸரோஜா ராமமூர்த்தி

னேன் என்று எண்ணியவராகச் சாம்பசிவம் அன்றே 'பாஸ்' தேவைக்காக அதிகாரிகளுக்கு எழுதி விட்டார்.

தேவகி உடனே மூட்டை முடிச்சுகள் கட்ட ஆரம்பித்தாள். எல்லாப் பெரிய மனிதர்களைப் போல் சாம்பசிவம் பகலில் அரிசிச் சாப்பாடும், இரவில் கோதுமைச் சாதமும் சாப்பிடுவார். ஆகவே, அவருக்குத் தேவையான சாமான்களை யெல்லாம் மறக்காமல் எடுத்துக் கொண்டாள்.

''நம் இரண்டு பேர்களுக்கா இவ்வளவு மூட்டைகள்? ஒய்வு வேண்டுமென்று கேட்டாய். அங்கேயும் வந்து சமைக்கப் போகிறாயா என்ன? ஹெட்டலிலே சாப்பிட்டுக் கொள்கிறது....'' என்றார் சாம்பசிவம்.

''அதெல்லாம் கூடாதுங்க. 'ஸ்டவ்' கொண்டு வருகிறேன். சமைக்கிறது ஒரு வேலையா? ஒரு நிமிஷத்திலே முடிச்சுட மாட்டேனா?''

தேவகி அந்தக் குடும்பத்தின் பொறுப்பைப் பெரிய மருமகள் வசந்தியிடம் ஒப்புவித்து விட்டு யாத்திரை கிளம்பினாள். வீட்டிலே எல்லா வசதிகளையும் செய்து விட்டுத்தான் புறப்பட்டாள்.

வசந்திக்கு அத்தனை பெரிய குடும்பத்தை நிர்வகித்துப் பழக்கமில்லை. கல்லூரியிலிருந்து கணவன் வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தன. மாடு கன்றுகள், பல்வேறு குணமுடைய மைத்துனர்கள், வேளைக்கொரு பொய் பித்தலாட்டம் செய்யும் வேலைக்காரர்கள் இவர்களைக் கட்டி மேய்க்கும் பொறுப்பை அவள் கல்லூரியிலே படிக்கவில்லை. படித்திருந்தால் புள்ளி விவரத்துடன் நடந்து ஒழுங்கை ஏற்படுத்தியிருப்பாள்!

அன்றலர்ந்த மலர் போல் இருந்த மனைவியின் முகம் வாடியிருப்பதைப் பார்த்த அவள் கணவனுக்கு உடனே தன் தாயின் மீது வருத்தம் ஏற்பட்டு விட்டது. வேறு ஒரு காரணமும் பிரமாதமாக இல்லை. நண்பர்கள் மூலம் வேறு வீடு பார்த்துக் கொண்டு பெற்றோர் வந்தவுடன் கிளம்பி விடுவது என்று காத்துக் கொண்டிருந்தான்.

அவர்களும் யாத்திரையை முடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். குடும்பத்துக்கு மூத்த மகன் இப்படித் தனியாகப் பிரிந்து போவதைத் தேவகியால் தாங்க முடியவில்லை.

''பைத்தியம்! பைத்தியம்! உன் மகன் இன்னமுமா நீ தூளியில் போட்டுத் தாலாட்டிய குழந்தை? அவனே இன்னும் இரண்டொரு ஆண்டுகளில் தகப்பன் ஆகி விடுவான். என்னவோ தனியாக இருப்பதில் அவனுக்கு ஆசையாக இருக்கிறது. போகட்டும் விடு..'' என்று சாம்பசிவம் மனைவிக்கு ஆறுதல் சொன்னார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மகன் மனைவியுடன் வந்து பெற்றோருடன் விருந்து சாப்பிட்டு விட்டுப் போவான். இரவு சாப்பாட்டுக்கு வசந்தியிடம் தேவகி 'காரிய'ரில் சாப்பாடு கொடுத்து அனுப்புவாள். இதுவே அவளுக்கு நாளடைவில் பழக்கமாகி விட்டது.

இரண்டாவது மகனுக்குக் கல்யாணம் ஆயிற்று. பெரிய மருமகள் ரொம்பப் படித்தவள். அதனால் குடும்பத்துடன் ஒட்டாமல் போய் விட்டாள் என்கிற கருத்தில் இரண்டாவது மருமகள் நன்றாகப் பாடக் கூடிய பெண்ணாகத் தேர்ந்தெடுத்தாள் தேவகி.

அவள் திருமணமான நாளிலிருந்து வெளியூர்களில் கச்சேரி அது இது என்று போய் விட்டு வருவதற்கே சரியாக இருந்தது. மனைவி புகழில் தானும் பங்கு பெறக் கருதி அவள் கணவன் அவளுக்கு மேலும் புகழ் வளர என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மருமகள் கச்சேரிக்குக் கிளம்புகிறாள் என்றால் மாமியார் முன்னதாகவே தவசுப்பிள்ளையிடம் பால் காய்ச்சச் சொல்லி ஏற்பாடு செய்ய வேண்டும்.

தேவகி கவலையுடன் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருப்பதைச் சாம்பசிவம் ஒரு தடவை கவனித்து விட்டு, ''தேவகி! ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்?'' என்று விசாரித்தார்.

''ஒரு மாதிரியுமில்லை, இரண்டு மாதிரியுமில்லை. எப்பொழுதும் போலத்தான் இருக்கிறேன்.''—அலுப்புடன் வந்த விடை இது.

''உன் தோற்றத்திலோ, அன்பிலோ நீ மாறி விடவில்லை. என் கண்களுக்கு நீ எப்பொழுதும் போலத்தான் இருக்கிறாய். இருந்தாலும், உன் மனதில் ஏதோ குறை இருக்கிறது —'' என்றார் அவர்.

மனைவியின் கண்களில் மறுபடியும் கண்ணீரைக் கண்டார் அவர்.

''இதோ பார்! வடக்கே காசி வரையில் போகலாமென்று பாஸ் போட்டிருக்கிறேன். கிளம்பு. அவரவர் பாடென்று விட்டு விட்டு நாம் பாட்டுக்குப் போய் விடுவோம் – ''

''கிளம்புகிறதா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? சிவாவும், பாலுவும் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே அந்தப் பிள்ளைகளைக் கவனிக்க யார் இருக்கிறார்கள்....?''



''பிள்ளைகளுக்கு ஒருத்தி வருகிற வரையில் தான் தாய் தந்தையரின் தயவு வேண்டியிருக்கிறது. பிள்ளைகளாம் பிள்ளைகள்! — '' தந்தையின் வேதனைப் பொருமல் இது.

பெற்றோர் இருவரும் காசி யாத்திரை கிளம்புவதற்கு முன்பே இரண்டாவது மகன் தன் மனைவியுடன் பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டான். வெளி உலகம் என்னவோ சாம்பசிவம் மருமகள் வாகவியின் சங்கீதத்தை அபாரமாகத்தான் புகழ்ந்தது. 'அது ஒரு கலைக்குடும்பம். கலைக் கோயில். முதல் மருமகள் ரொம்பப் படித்தவள். பெரிய பெரிய ஆராய்ச்சி யெல்லாம் செய்து வருகிறாள். இரண்டாம் மருமகள் சங்கீதத்தையே கரைத்துக் குடித்தவள்.' பத்திரிகைகளின் புகழ் மாலைகள் இவை. குடும்பம் என்பது ஒரு தனி உலகம். அதனுள் இருந்து அதைத் திறம்பட நிர்வகித்துப் பணி புரியும் தேவகியின் உடல் அலுப்புப் பற்றியோ, உள்ளச் சோர்வைப் பற்றியோ வெளி உலகம் என்ன கண்டது?

மகனும், மருமகளும் பம்பாயிலிருந்து வந்தவுடன் சாம்பசிவம் அவராகவே பார்த்து அவர்களை வேறு குடித்தனம் வைத்து விட்டார். சங்கீதத்துடன் அவள் மனைவி சமையலும் செய்து கணவனுக்குச் சேவை செய்யட்டும் என்கிற கருத்தாக இருக்கலாம்.

மூன்றாவது மகன் சேகர்தான் அந்த வீட்டிலே அம்மா செல்லம். இரவு படுக்கப் போகும் முன்பு அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்தபடி குட்டிக் கதைகள் சொல்லச் சொல்லிக் கேட்காமல் போக மாட்டான்.

''போடா எழுந்திருந்து! வயசாகிறது. குழந்தையாட்டம் என்னடா என் மடியில் உனக்குப் படுக்கை? — ''

''நான் உன் குழந்தைதானே அம்மா? கதை சொல்லும்மா — '' இந்தச் செல்லக் குழந்தை ஒரு நாள் திடீரென்று அம்மாவிடம் தன் கருத்தை வெளியிட்டது. அவனுக்குத் திடீரென்று காதல் முளைத்து விட்டதாம். அவன் காதலி ஒரு நல்ல 'டான்சர்!' கல்லூரியிலே நடனம் ஆடிப் பல பரிசுகளைத் தட்டியவளாம். ரொம்ப ரொம்ப அழகாம்.

''ஏண்டா அப்பா நீதான் குழந்தையா?'' என்று தேவகி மகனைக் கோபத்துடனும், அதே சமயத்தில் பரிவுடனும் கேலி செய்தாள். இந்த விஷயத்தைக் கணவரிடம் மெதுவாகப் பிரஸ்தாபித்தபோது அவர் வெகுண்டார்.

''நம் வீடு இருக்கும் லட்சணத்தில் நடனம் ஒன்றுதான் பாக்கியாக இருக்கிறது. அதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது, தேவகி!'' என்றார் அவர் பிடிவாதமாக.

''சரிப்படுகிறதோ இல்லையோ. குழந்தைக்கு அதுதான் பிரியம் என்றால் நீங்களும், நானும் அதற்குத் தடையாக இருப்பானேன்?''

''ஓஹோ! எனக்கு நீ புத்தி சொல்ல வந்து விட்டாயோ? முதல் இரண்டு பிள்ளைகளுக்குப் பெண் பார்த்தவனுக்கு மூன்றாவது மகனுக்



"முத்துமாலை கறுத்துப் போய் விட்டால் என்ன செய்வது?"

"கறுக்காது! கறுத்தால் உத்தரவாதத்துக்கு நான் இருக்கிறேன்!"

"அதெப்படி உம்மை உத்தரவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும்? நீங்களேதான் வரவரக் கறுத்துப் போய்க் கொண்டிருக்கிறீர்களே!"

குப் பெண் பார்த்துக் கட்டி வைக்கத் தெரியாதா?" என்றார் சாம்பசிவம்.

தேவகி வேதனையுடன் சிரித்தாள்.

"இங்கே பாருங்க. பெற்றோராகிய நாம் நம் ஆயுட்காலம் முழுவதும் நாம் பெற்ற குழந்தைகளின் நலனுக்காகத்தான் எல்லாமே செய்து வருகிறோம். அவனுக்கு அந்தப் பெண் மீதுதான் விருப்பம் என்றால், அதை மீறி வேறு பெண்ணைக் கட்டி வைத்து அவன் வாழ்க்கையைக் கெடுப்பானேன்? அதில் நமக்கென்ன மகிழ்ச்சி இருக்கப் போகிறது?"

சாம்பசிவம் மனைவியை நிமிர்ந்து நேருக்கு நேர் நன்றாகக் கவனித்தார்.

தியாகத்தின், அன்பின் உருவமாக அந்த அன்னையைக் கண்டார் அவர்.

சிவாவின் மனைவி சரயூ பிறந்த வீட்டின் மஞ்சட்காணியாக அரை லட்சத்துடன் வந்தாள். சிவா பெரிய மனிதன் ஆகி விட்டான். இடும் என்று மனைவியுடன் நடன நிகழ்ச்சிகளுக்காக 'அமெரிக்கா போகிறேன், லண்டனுக்குப் போகிறேன்' என்று அம்மாவிடம் சொல்லி விட்டுப் போக வருவான். தன் மடி மீது தலை வைத்துக் கதைகள் சொல்லக்கேட்ட மகன் இவன்தானா? 'என் சிவாவா இவன்? மாறி விட்டான், மாறித்தான் போய் விட்டான்.' தாய்ப்பாசம் தியாக எண்ணத்தையும் வென்றவாறு அவளைக் குலுங்கக் குலுங்க அழவைத்து விட்டது.

* * *

சீன்னக் கண்ணீரை உமிழ, பேசாமல் உட்கார்ந்து விட்ட தேவகியை ருக்மிணி உசுப்பி ஒரு கேள்வி கேட்டாள்.

"தேவகி! என் குழந்தை பானு இருக்கிறான் பாரு...."

"ஆமாம். அவனுக்கென்ன? ராசாத்தி யாட்டம் செக்கச் செவேல்னு. நல்ல இடமாகப் பார்த்துக் குடு அவளை...."

தேவகி கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சொன்னாள்.

"அதுதான் சொல்ல வந்தேன். உன் மகன் பாலனுக்கும் அவளை ரொம்பப் பிடிச்சிருக்காம். இரண்டு பேரும் கல்யாணம் கட்டிக்க ஆசைப்படுகிற மாதிரி தெரியுது தேவகி...."

தேவகி எதற்குத்தான் மறுத்துப் பேசியிருக்கிறாள்?

"அப்படியா? அவர்கிட்டே சொல்லி முடிச்சாப் போச்சு....எனக்கு இந்த விஷயமே தெரியாதுருக்கு...."

சாம்பசிவத்தின் மனமும் இப்பொழுது பக்குவமாகி விட்டது. வார்த்தைக்கு வார்த்தை 'தேவகிதான் எனக்குக் குரு' என்று தம் நண்பர்களிடம் சொல்லுவார். 'குழந்தைகளைப் பெறுகிறோம், வளர்க்கிறோம். கடமைகளைச் செய்து முடிக்கிறோம்' என்று வேதாந்தமாகப் பேசவும் பழகிக் கொண்டார்.

அந்தக் குடும்பத்தின் கடைசி மகன் தன் மனைவியுடன் மாலையும் கழுத்துமாக வந்து பெற்றோரை வணங்கினான். மறுவீட்டுக்குப் போய் வந்த பாலன் தன் தாயிடம் புதுச் செய்தி ஒன்றைத் தெரிவித்தான்.

"அம்மா! பானுவின் அம்மா அவங்க மகளையும் இங்கே அனுப்பி விட்டு எப்படித் தனியாக இருப்பாங்க? அதனால் என்னை அவங்க வீட்டோட வைக்க ஆசைப் படறாங்க...."

நாலு பிள்ளைகளுக்குப் பெற்றோராகிய அவர்கள் நிலைமை என்ன? ருக்மிணியம்மாள் தனியாக இருக்கிறாளாமே?

"அதற்கென்ன அப்பா? போய் வா." இரண்டே வார்த்தைகளில் தன் ஒப்புதலைத் தெரிவித்த தேவகி துயரத்தின் வேதனை தன் நெஞ்சைப் பிழிந்தெடுப்பதைத் தாளாமல் மகன் ஊருக்குப் புறப்பட்டவுடன் சோர்ந்து உட்கார்ந்து விட்டாள்.

"தேவகி! இவ்வளவு பெரிய வீட்டில் நாம் ஏன் ஒண்டிக்கட்டைகளாகக் காலம் தள்ள வேண்டும்? காலமும், கருத்தும் மாறி வருகிறது தேவகி. நாம் உலகத்திலிருந்து எத்தனையோ நாகரிகங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். குழந்தைகள் மணமாகும் மட்டும் தான் பெற்றோருடன் வசிப்பார்கள். பிறகு அவர்கள் வேறு, இவர்கள் வேறுதான். இது மேல் நாட்டாரின் வழக்கம். நம் பண்பாடோ தர்மத்தை ஒட்டியும், கடமையைச் செய்ய இருப்பதால் பெற்றோர்களுக்கு மக்கள் தம் கடமையைச் செய்யவில்லையே என்று வேதனைப் படுகிறோம். இனி வருங்காலத்தில் நம் சந்ததியார் அநேகமாக மாறி விடுவார்கள். அவனவன் பாட்டை அவனவன் பார்த்துக் கொள்வான். அதுதான் பெரிய நாகரிகம் என்று சரித்திரத்திலே கூட எழுதி வைத்துவிடுவார்கள். நான் பத்ரி போவதாக இருக்கிறேன். நீயும் புறப்படு. நம் கடமை முடிந்து விட்டது. பலனை எதிர்பார்க்கக் கூடாது என்பது கண்ணனின் வாக்கு —"

தேவகி சலனமற்ற மனத்துடன் பத்ரி யாத்திரைக்கு மூட்டை முடிச்சுகள் கட்ட ஆரம்பித்தாள்.

ால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை கற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமி களில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய்-துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமான வர்களுக்குச் சொத்தை ஒழிக்கப் படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித் தால் மட்டும் போதாது—சாப்பிட்ட வுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்ந்திருக்கும் அருமை நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

க்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- துர் நாற்றத்தை அகற்றுகிறது
- சொத்தையைத் தடுக்கிறது
- பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பி னுல், இந்த பலன்கள் அனைத்தை யும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

ரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெற ம் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.



அத்தியாயம் பதினாறு

இயந்திரங்கள் வந்தன

சிறியதொரு புதுச் சுரங்கத்துக்கு அருகில் அந்தப் பயிற்சிக் கூடத்தை அமைத்திருந்தனர் கம்பெனிக்காரர்கள். காற்றோட்டம் மிகுந்த நீண்டதொரு கூடத்தில் ஒரு 'மாடல்' சுரங்கத்தை வைத்து விளக்கிக் கொண்டிருந்தார் பயிற்சியாளர். முருகையனும் அவனைப் போன்ற இளைஞர்களும் வியப்போடு அதை உற்று நோக்கிக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

மின்விசை இயக்கத்தில் அந்தச் சிறு படிவம் வேலை செய்யத் தொடங்கியது. சுரங்கத்துக்குள்ளிருந்த நிலக்கரிப்பாளங்களில் உளிகள் நிறைந்த ஓர் இரும்புச் சங்கிலி, சுழன்று, ஆழமான பள்ளம் தோண்டி நிலக்கரியைப் பிளந்து தள்ளியது. மற்றோர் இயந்திரம் தனது ராட்சதக் கரங்கள் போன்ற கருவிகளால், உடைக்கப்பட்ட நிலக்கரியை இரும்புப் பெட்டிக்குள் அள்ளி நிரப்பியது. அந்த இரும்புப் பெட்டி பல பகுதிகளில் திரும்பிச் சென்று, ஓரிடத்தில் தன்னிடமிருந்த கரிக்குவியலைத் தலைகீழாகக் கொட்டியது. கொட்டப்பட்ட இடத்திலிருந்து நீண்ட ரப்பர்த் தகடுகள் நிலக்கரியைச் சுமந்து கொண்டு தரையின் மேல் மட்டத்துக்கு வந்தன; இன்னும் உயரே சென்றன. அங்கிருந்த கிடங்குகளில் மளமளவென்று கரிக்குவியல் வந்து விழுந்தது. கிடங்குகளின் அடித்தளங்கள் திறக்கப்பட்டவுடன், அவற்றின் கீழ் நின்று கொண்டிருந்த 'ரயில்வே வாகன்'களுக்குக் கரி போய்ச் சேர்ந்தது. 'வாகன்'களை இழுத்துக் கொண்டு ரயில்வே இன்ஜின்கள் புறப்பட்டன!

"சுரங்கத்துக்குள்ளே கரி தோண்டி எடுப்பதிலிருந்து, அதை வெளியூர்களுக்கு அனுப்பி வைப்பது வரையில் எல்லா வேலைகளையும் இயந்திரங்கள் செய்து விடுகின்றனவே!" என்றான் முருகையன்.

"மேல் நாடுகளில் இப்போதெல்லாம் இப்படித்தான் செய்கிறார்கள். நாமும் உலக நாடுகளோடு தொழில் துறையில் ஒன்றாக வளர வேண்டும்" என்றார் பார்வையாளர்.

முருகையனும் மற்ற இளைஞர்களும் ஆர்வத்தோடும் சுறுசுறுப்போடும் இயந்திரங்களை இயக்கும் வித்தைகளைப் பயிலத் தொடங்கினர்கள். இயந்திரங்களின் சக்தியும் வலிமையும் எவ்வளவுதான் திகைப்பூட்டினாலும், அந்த இயந்திரங்களையே உருவாக்கி அடக்கி ஆளும் தன்மை மனிதனுக்குத்தான் இருக்கிறது என்று நினைத்தபோது முருகையனுக்குப் பெருமை தாங்கவில்லை.


''இங்கேயும் தொழிற் புரட்சி தொடங்கி விட்டது!'' என்றான் ஓர் இளைஞன்.

''ஆமாம், இயந்திரங்களே இவ்வளவையும் செய்து முடித்துவிடுமென்றால், நம்முடைய தொழிலாளர்கள் அவ்வளவு பேர்களுக்கும் எப்படி வேலை யிருக்கும்? கன்னியன் பேசுவதில் என்ன தப்பு இருக்கிறது?'' என்றான் மற்றொருவன்.

அப்போதுதான் முருகையனுக்கும் அந்த உண்மை 'பளி'ச்சென்று புலப்பட்டது. அவன் தன்னைக் கடுமையாக எச்சரிக்கை செய்து அனுப்பியதை நினைத்துக் கொண்டான். இயந்திரங்களின் வரலாறு அவனுக்கு ஏற்கனவே தெளிவாகத் தெரிந்துதான் இருக்க வேண்டும். மனிதன் இயந்திரங்களை அடக்கி ஆள்வது போலவே, இயந்திரங்களும் மனிதர்களை அடக்கி ஆளக்கூடியவை!

''பயிற்சி முடிந்து நாம் இயந்திரங்களுடன் திரும்பிப் போனால் கன்னியன் நம்மையெல்லாம் என்ன செய்வானே, தெரியாது!'' என்று மிகுந்த பயத்தோடு ஒருவன் தனது சந்தேகத்தை வெளியிட்டான்.

''கட்டாயம் ஒரு போராட்டம் நடக்கத்தான் செய்யும்!''



பலவிதமான பரபரப்பூட்டும் செய்திகள் பயிற்சி நிலையத்துக்கு வந்துகொண்டிருந்தன. முருகையனால் ஒவ்வொரு நாளும் பெருமாள் சாமியை நினைக்காமல் இருக்க முடியவில்லை. தொழில் பற்றிய போராட்டம் ஒரு பக்கம், சாந்தாவைப் பற்றிய போராட்டம் மறு பக்கம், இப்படி இரு வகைகளிலும் முருகையனின் மனம் வேதனையுற்றது.

அதே சமயம், இயந்திரங்களின் மூலம் மற்றவர்கள் பாதிக்கப்பட்டு வேலை போய்க் கஷ்டப்படுவார்கள் என்பது உறுதியாகிவிட்டால், முதன் முதலாக அவன் அந்த வேலையிலிருந்து விலகிக் கொள்ள முடிவு

செய்துவிட்டான். அந்த முடிவை அவன் யாரிடமும் வெளியிடவில்லை.

கம்பெனியின் புதிய நிர்வாகி பயிற்சி நிலையத்தைப் பார்வையிடுவதற்காக வந்திருந்தார். வந்திருந்தவர் இளைஞர்கள் அனைவரையும் தனியே அழைத்து அவர்களிடம் சில விஷயங்கள் பேச விரும்புவதாய்த் தெரிவித்தார்.

கூடம் ஒன்றில் அந்தக் கூட்டம் நடந்தது. நடுத்தர வயதைக் கடந்து விட்ட அவரது முகத்தில் அமைதியும் உறுதியும் நிலவின. எழுந்து நின்று இளைஞர்களின் உற்சாகத்தையும் திறமையையும் பாராட்டினார். தொழிலையும் வளர்த்து, தங்களையும் அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றார்.

''இது ஒரு மாறுதல் காலம். பழைமையும் புதுமையும் போராடும் காலம். நல்ல சக்திகளும் தீய சக்திகளும் மோதிக் கொள்ளும் காலம். நம்முடைய அறியாமையை அகற்றி, அச்சத்தை விரட்டி உலகத்தோடு ஒன்றி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றார்.

அவருடைய பேச்சு முடிந்தவுடன் முருகையன் எழுந்து நின்றான்: ''ஒரு முக்கியமான சந்தேகம்...!''

அவனைக் கூர்ந்து நோக்கி விட்டு, ''தாராளமாய்க் கேட்கலாம்'' என்றார் நிர்வாகி.

''மேல்நாடுகளைப் போல நாமும் தொழில்களை இயந்திர மயமாக்குகிறோம். மேல் நாடுகளில் ஜனத்தொகை குறைவு. நம்மிடம் அதிகம். திடீரென்று நாமும் இயந்திரச் சக்தியால் மனித சக்திக்கு வேலை இல்லாமல் செய்து விட்டால், நம்முடைய நிலைமை என்ன ஆகும்?...

''இந்தப் பயத்தாலும் சந்தேகத்தாலும்தான் நம்முடைய தொழிலாளர்களை கிளர்ச்சி செய்வார்கள் போல் இருக்கிறது.''

''நியாயமான பயம், நியாயமான சந்தேகமாக இருந்தால்?''

முருகையனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார் அந்தப் புதிய அதிகாரி.

''ஒரு விஷயத்தை மட்டும் நீங்கள் எல்லோரும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மேல்நாடுகளில் தொழிற்புரட்சி காலத்தில் ஏற்பட்ட தொல்லை கூடியவரையில் இங்கே இருக்காது. இந்தக் கொள்கையின் நிலைமையும்கூட நல்லவிதமாக மாறப் போகிறது. ஒரு சிலருடைய லாபத்துக்காக மட்டும் இனி இந்தத் தொழில் நடக்காது. மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்த இயந்திரங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் அதிகமான கரங்கள் தோண்ட வேண்டியதிருக்கிறது. யாருமே இதனால் வேலை இழந்துவிட மாட்டார்கள். இந்த உறுதியை என்னால் கொடுக்க முடியும்.''

முருகையனுக்கும் மற்ற இளைஞர்களுக்கும் அந்த மனிதரிடம் பெருமதிப்பு ஏற்பட்டது. எல்லோரும் ஆனந்தப் பெருக்கோடு தங்கள் கைகளைத் தட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அவர் கடைசியாக வேதனையுடன் சில விஷயங்களைக் கூறினார்:—

''உங்களுக்குக் கூறிய விவரங்களையெல்லாம் நான் அங்குள்ள தொழிலாளர்களிடம் கூறி விட்டேன். ஆனால் அவர்கள் என் வார்த்தைகளை நம்பவில்லை. அவர்களையும் குறை சொல்ல முடியாது. மிகவும் துன்பங்களையும் தொல்லைகளையும் அநுபவித்து வந்திருக்கிறார்கள் அவர்கள். உண்மையைக்கூட அவர்களால் நம்ப முடியவில்லை. அவர்களைத் திருப்திப் படுத்துவதில் என் முயற்சி தோல்வியடைந்தால் மிகவும் தொல்லை ஏற்படத்தான் போகிறது: நீங்கள் எல்லோரும் முன் வந்து அவர்களுக்கு எதிர்காலத்தில் நன்மை உண்டு என்பதை வலியுறுத்திப் பாருங்கள்.''

கூட்டத்தின் முடிவில் அதிகாரியைக் காண்பதற்காகக் கம்பெனியில் வேலை பார்த்த சிலர் ஒரு ஜீப்பில் வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய முகங்களில் கவலையும் பரபரப்பும் காணப்பட்டன: அவர்கள் அதிகாரியிடம் பேசிய பேச்சில் கன்னையனின் பெயர் அடிபட்டது.

வந்தவர்கள் அவரை அழைத்துக் கொண்டு விரைந்து சென்றார்கள்.

''ஏதோ தொல்லை ஆரம்பமாகி விட்டது!'' என்றான் ஓர் இளைஞன்.


''கன்னையன் நம்மைச் சும்மா விடமாட்டான். நம்முடைய பாடும் திண்டாட்டந்தான்'' என்றான் மற்றொருவன்.

முருகையனின் மனம் கொந்தளித்து அலை வீசத் தொடங்கியது.

அத்தியாயம் பதினேழு

மாற்றத்தின் சீற்றம்

பயிற்சி முடிந்தவுடன் ஊருக்குத் திரும்பிய முருகையனைச் சுந்தரமும் மீனாட்சியும் கவலை நிறைந்த முகங்களுடன் வரவேற்றார்கள். ஊருக்குள் நுழைந்து முருகையன் வீட்டுக்கு வந்து சேருவதற்குள் பல தொழி



ஏன்? அவன் நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கியில் பணம் சேமித்தான். ஐந்தே ரூபாயுடன் கோவிந்தன் ஒரு சேமிப்புக் கணக்கைத் துவங்கினான். அவனுடைய பணம் பத்திரமாக இருந்ததுடன் வருஷத்திற்கு 3 சதவீதம் வட்டியும் கொடுத்தது. ஒவ்வொரு மாதமும் அவன் ஒழுங்காகச் சேமித்து வந்தான். கொஞ்ச காலத்திலேயே கணிசமான பணம் பாங்கியில் சேர்ந்து விட்டது. அவன் புத்திசாலி. தன் வருங்காலத்திற்காக, தன் குடும்பத்திற்காக, சந்தோஷமான, சிறந்த நாளைக்காக... அவன் சேமித்து வைத்தான்.

உங்களுடைய குடும்பத்திற்காக சேமிப்பது பற்றி நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா?

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிட்.,

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு.
தூத்துக்குடி: 44, பீச் ரோடு

NGB/70-TAM

ளாளர்களை அவன் வழியில் சந்தித்து விட்டான். ஒருவர் கூட அவனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. சிலர் தலையைக் குனிந்து கொண்டார்கள்; சிலர் அவனை முறைத்துப் பார்த்தார்கள்.

வழக்கமாக வேடிக்கையும் சிரிப்புமாகப் பேசும் சுந்தரம்கூட, "நான் உன்னை இந்தப் பயிற்சிக்கு அனுப்பாமலே இருந்திருக்கலாம்" என்றான்.

"என்ன காரணம்?"

"ஊருக்குள் ஒரே கொந்தளிப்பாயிருக்கிறது. தொழிலாளர்களுடைய நன்மைக்கு விரோதமாக நீயும் மற்றவர்களும் நடந்து கொண்டதாகக் கன்னையன் பேசிக் கொண்டிருக்கிறானாம். எதற்கும், நீ கவனமாக நடந்து கொள்வது நல்லது. நாலுபேர்கள் கூடி நிற்கும் இடத்தில் நீ தலையைக் காட்ட வேண்டாம்."

மெல்லச் சிரித்துக் கொண்டான் முருகையன். "எதற்கும் நான் அவனைச் சந்தித்துப் பேசப் போகிறேன்" என்றான்.

"முருகையா!" என்று அதட்டினான் சுந்தரம். "இது ஒன்றும் சாதாரண விஷயமில்லை. இந்தச் சமயத்தில் எது நடக்குமோ தெரியாது. எல்லாரும் உணர்ச்சி வயப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இது ஒரு காரணமாய்ப் போய் விட்டது. நீ இதில் தலையிடக் கூடாது."

மீனாட்சியும் தன் பங்குக்கு ஒரு செய்தியைச் சொல்லி வைத்தாள்.

"இந்தச் சாந்தாவுக்கு இப்போது இடையென்று என்ன வந்து விட்டதோ தெரியவில்லை. வீடு வீடாகப் பெண்களிடம் போய் அவளும் ஏதோ தூண்டி விடுகிறாளாம். நான்கூடக் கன்னையனுடன் அவள் ஒரு வீட்டுக்குப் போவதை என் கண்களால் பார்த்தேன்: நாம் ஒன்று நினைக்க நடப்பது வேறொன்றாய் வந்து முடியும் போலிருக்கிறதே. இந்தப் பெண்ணுக்கு இப்போது என்ன வந்து விட்டது?"

சுருக்கென்று முருகையனுக்கு நெஞ்சில் தைத்தது இந்தச் செய்தி. சற்று நேரத்துக்கெல்லாம் சாந்தாவைப் போய்ச் சந்திக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தான் அவன். மீனாட்சியின் பேச்சைக் கேட்ட பிறகு அவனுடைய எண்ணம் மாறி விட்டது. அவளை நினைத்து வேதனையுற்றான்.

"அண்ணா! சாந்தா உங்களுடைய உதவியால் இங்கு வந்தவள்தானே? அவளை இது விஷயமாக நீங்கள் சந்தித்துப் பேசினீர்களா?" என்று கேட்டான் முருகையன்.

"முன்பு இங்கே அடிக்கடி வருவது போல் இப்போது வருவதில்லை. அவ

ளுக்கு வயதும் ஆகி விட்டது. தானாக நினைத்து எதையும் முடிவு செய்யக் கூடியவள். அவளிடம் நான் எதைப் பேசுவது? மேலும் நான் ஒரு பொறுப் பில் இருப்பவனுகையால் கவனமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.''

அன்றைக்கு முருகையனுக்கு ஓய்வு நாள். ஆகவே, சுந்தரம் அலுவலகத் துக்குப் புறப்பட்டவுடன், பழைய பத்திரி கைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு அறைக்குள் அடைந்து கிடந்தான் முருகையன். நெடுநாட்கள் நெருங்கிப் பழகிய சித்திராவைப் பிரிந்த போது கூட அவனுடைய மனம் இவ்வளவு கலக்கமுறவில்லை. ஆனால் ஏனோ சாந்தா வின் நினைவு அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிவது போல் துன்பத்தைத் தந்தது.

இவ்வளவுக்கும் சித்திராவைப்போல் சாந்தா அவனிடம் கலகலப்பாகப் பேச வில்லை; சிரிக்கவில்லை; உல்லாசமாகப் பொழுது போக்கவில்லை.

சாந்தாவும் அவனும் ஒன்ருகக் காரில் போனது கிடையாது. சாந்தா அவனைக் கடற்கரைக்கோ, மாமல்லபுரத்துக்கோ, திரைக் காட்சிகளுக்கோ அழைத்துச் சென்றதில்லை. சித்திராவிடமிருந்த மயக் கும் பேரழகு சாந்தாவிடம் இல்லவே இல்லை. — இப்படியெல்லாம் இருந்தும் ஏன் இவ்வளவு துன்பத்தைக் கொடுக் கிருள் சாந்தா? இதற்குப் பெயர்தான் காதலா? ஒருதலைப்பட்சமான காதல் என்பார்களே, அதுதானு இது? அப்படி யானுல் சித்திராவிடம் பழகியபோது சாந்தாவை ஏன் நினைக்க முடியவில்லை?

தன்னைச் சுற்றிலும் மயக்கம் நிறைந்த கவர்ச்சித் திரையைத் தொங்க விட்டுக் கண்களை மறைத்து வைத்திருந்தாளா சித்திரா? இளமைப் பருவத்தின் வெகு ளித் தன்மை நிறைந்த மதிமயக்கந் தானு அது? சித்திராவிடம் கொண் டிருந்தது வெறும் கவர்ச்சிதானு?

மீண்டும் இங்கு வராமல் இருந்திருந் தால், சாந்தாவை மீண்டும் சந்திக்கா மல் இருந்திருந்தால், எவ்வளவு நன்ருக இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்த் தான் முருகையன். —சித்திரா செல்வ ரத்தினத்தை மணந்து கொண்டு இன்ப மாக வாழ்க்கை நடத்துகிருள். சாந்தா பெருமாள்சாமியுடன் சேர்ந்துகொண்டு அவனுக்கேற்ற லட்சிய வாழ்க்கை நடத்தப் போகிருள் போலிருக்கிறது.... நடத்தட்டும்....நடத்தட்டும்!

செய்திப் பத்திரிகையில் குருசாமியின் புகைப்படம் ஒன்று பெரிய அளவில் வந்திருக்கவே, அதைப் பார்த்து விட்டுக் கீழே இருந்த வரிகளைப் படித்தான் முருகையன். குருசாமி ஓர் இடத்தில்

நடித்து அந்தப் படமும் வெளிவந்து விட்டதாம். அதில் அவனுக்கு நல்ல புகழ் கிடைத்து விட்டதாம். அது வரையில் அவனுக்குத் திரையில் நடிக்கத் தெரியாதென்று சொல்லி வந்தவர்களே அவனை ஐந்தாறு படங்களுக்கு ஒப்பந்தம் செய்திருந்தார்கள்!

அதே பத்திரிகையின் அடுத்த பக்கத்தில் குமரவேலுக்குத் தண்டனை என்ற செய்தியையும் வெளியிட்டிருந்தார்கள். பெருந்தொகை அபராதம் விதிக்கப்பட்டு, அவருடைய செயல்களும் தீர்ப்பில் கண்டிக்கப்பட்டிருந்தன. நிம்மதியாக நீண்ட பெருமூச்சு விட்டான் முருகையன். விரைவில் ரிக்ஷாக்கார முனியாண்டிக்கும் அங்கே ஒரு வேலை தேடிக் கொடுத்து, அவனையும் அவன் குழந்தைகளையும் அழைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது. வேலம்மாளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டு மல்லவா?

ஆனால், அவனுடைய வேலையின் நிலையைப் பற்றியே அப்போது அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. சுந்தரத்தின் எச்சரிக்கை அலட்சியம் செய்து விடக் கூடியதல்ல. பெருமாள்சாமியும் தன் எச்சரிக்கையைச் செயலில் காட்டி விடத் துடித்தான் போலும்.—சாந்தாவின் விஷயமாகவும் பெருமாள்சாமிக்குத் தனிப்பட்ட முறையில் சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ?

பிற்பகல் வேளையில் மெதுவாக வீட்டை விட்டு வெளியில் கிளம்பினான் முருகையன். தேக்குமரச் சோலை வழியே நடந்து சென்றபோது அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. காக்கி உடையும் கையில் துப்பாக்கியுமாக ராணுவ உடையில் பலர் அவ்வழியே விரைந்து சென்றார்கள். இதெல்லாம் என்ன! எதற்காக இந்த ஏற்பாடுகள்?

முதலில் ஒரு மரத்தின் மறைவில் பதுங்கி நின்று அவர்களுக்கு வழி விட நினைத்தான். மறுகணமே எதற்காக அவர்களைக் கண்டு மறைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஒற்றையடிப் பாதையிலிருந்து விலகி அவர்களுக்கு வழிவிட்டு நின்றான். பிறகு கடைசியில் சென்ற வீரர்களின் தலைவனிடம் ஓடிச் சென்று விசாரித்தான். அவன் கூறிய பதிலைக் கேட்டவுடன் பிரமித்துப்போய் மரங்களுடன் மரமாக வெகு நேரம் அங்கு நின்று விட்டான் முருகையன்.

அவனுக்குச் சுய நினைவு வந்தபோது அந்த வீரர்கள் அனைவரும் அவனுடைய கண்களிலிருந்து மறைந்து விட்டனர். 'இப்போதைக்கு ரகசியமாக இருக்கட்டும்!' என்று அந்தத் தலைவன் கூறிய வார்த்தைகள் அவனிடம் அழுத்தமாகப் பதிந்தன.

திடீர் திடீரென்று பல காரியங்கள் நடக்கத்தான் போகின்றன போலும்!

தேக்கு மரச்சாலையைத் தாண்டிச் சென்ற போது, சுரங்க வாயிலுக்குச் சற்றுத் தொலைவில் பெரியதொரு கூட்டம் கூடியிருந்தது. ஆண், பெண், குழந்தைகள் உட்பட பெரும்பாலான தொழிலாளர்கள் அங்கே கூடியிருந்தனர். கூட்டத்தில் அனல் தெறிக்கப் பேசிக் கொண்டிருந்தான் பெருமாள் சாமி. செல்வம் படைத்தவர்கள் இயந்திரங்களை வரவழைத்துக் கொண்டு, ஏழை எளியவர்களின் வாழ்வைப் பறிப்பதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்களென்றும் இதற்கு ஒருகாலும் பணியமுடியாதென்றும் அவன் முழங்கினான். இயந்திர மயமாக்குவது நிச்சயமென்றால் அப்போது வேலை நிறுத்தம் நிச்சயம் என்று சவால் விடுத்தான்.

அடுத்தாற் போல் சாந்தாவும் பெண்களுக்காகப் பேசத் தொடங்கினாள். பொறுமையைச் சோதனை செய்யப் பல துன்பங்களும் தொல்லைகளும் ஆண்களுக்கு நேரலாமென்றும், அவர்களை ஊக்கப்படுத்தி உற்சாகம் குன்றாமல் போராடச் செய்ய வேண்டியது பெண்களின் கடமை என்றும் வற்புறுத்தினாள்.

கூட்டத்தில் உணர்ச்சி வெள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. கைதட்டல்களும் ஆரவாரங்களும் அடிக்கடி எழுந்தன. முன்பொருநாள் பெருமாள் சாமியிடம் வாக்குவாதம் செய்த அந்தக் குள்ள மனிதன் கோபத்தோடு எங்கோ ஓட்டமும் நடையுமாக வந்தான். தனியே நின்று கொண்டிருந்த முருகையனைக் கண்டவுடன் பயந்து நடுங்கி, ''வந்தது ஆபத்து! அந்தக் கன்னையன் பயல் பொல்லாதவன்! அவன் எதையும் செய்து விடுவான்!'' என்று சொல்லிக் கொண்டே கிளம்பினான்.

சரேலென்று அம்புபோல் கூட்டத்துக்குள் நுழைந்து மேடையை நோக்கி விரைந்தான் முருகையன். சிலர் அவனைப் போக விடாதபடி சட்டையைப் பற்றி இழுத்தனர். சிலர் 'துரோகி!' என்று ஏசினார்கள். இன்னும் சிலர் அவனைப் பிடித்து அடிக்க முயன்றார்கள். இவர்களையெல்லாம் தாண்டிச் சென்று, ''என் சொல்லை ஐந்து நிமிஷம் கேளுங்கள்!'' என்று கத்தினான் முருகையன்.

அவன் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை விழுந்தது. முருகையனின் தலை சுழன்றது. என்றாலும் அவன் கீழே விழவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)



சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங்
சாப்பிடுங்கள்

மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினல் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்



அன்புச் செல்வி

நாடகக் கலை தமிழ் இலக்கியத்துக்குப் புதியதன்று. சிலப்பதிகாரக் காப்பியத்தின் உரையில் குறிப்பிடப்படும் மதிவாணனார் நாடகத் தமிழ் நூலும் பிற்காலத்து நூலாசிரியர்களான சுவாமி விபுலாநந்தர், பரிதிமாற் கலைஞர் ஆகியோர் இயற்றிய மதங்க சூளாமணி, நாடகவியல் போன்ற நூல்களும் இந்தத் துறையில் தமிழின் பெருமையைச் சொல்லிக் கொண்டே இருப்பன.

வளரும் தமிழுக்கு மேலும் மேலும் அணி செய்யக் கருதிப் பல புதுப் புது நாடக ஆசிரியர்கள் முன் வருகிறார்கள். திரு இ. மாணிக்கவாசகம் அவர்கள் புதிய அழகுகளும், பழைய பெருமைகளும் பொருந்தி வரச் சில நாடகங்களைத் தமிழுக்கு அளித்திருக்கிறார்.

'அன்புச் செல்வி' — என்ற இந்த நாடகம் ஷேக்ஸ்பியரின் துன்பியல் கதைகளில் ஒன்றாகிய 'கிங் லியரை'த் தழுவி எழுதப்பட்டது ஆகும். சுருங்கிய வடிவும் சுவை குன்றிவிடாத நாடக அமைப்பும் பொருந்திய இக்கதையை மேடை நடிகர்களும், பயிற்சி நடிகர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என நினைக்கிறோம். பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் சிறப்பாக மாணவர்கள் நடித்து மகிழவும் பயன்படும்.

ஆசிரியர்: இ. மாணிக்கவாசகம் பி. ஏ., வெளியீடு: ஸ்ரீ விசாலாட்சி பதிப்பகம், மீனாட்சி நிலையம், திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை — 3. விலை: ரூ. 1.25.

நியாயக் களஞ்சியம்

நியாயக் களஞ்சியம் என்னும் இந்த நூல் கற்பதற்குச் சுவையான முறையில் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. 'பிரசித்தமாக்க முடியாத விஷயங்களை விளக்குவதற்கு மேற்கோளாக எடுத்து ஆளப்படும் உலகப் பிரசித்தமான மொழி'—தான் நியாயம்.

வேதாந்த சித்தாந்த சாத்திரங்களிலும், தருக்க நியாய நூல்களிலும் வருகிற ஏராளமான நியாயங்களில் இருந்து இருநூறுக்கு மேற்பட்ட முக்கியமான நியாயங்களைத் தொகுத்து விளக்குகிறது இந்தப் புத்தகம்.

நியாயங்களை விளக்குவதற்காக அங்கங்கே காட்டப்பட்டிருக்கிற இலக்கிய உதாரணங்களும் பொருத்தமாயிருக்கின்றன. கற்கிறவர்கள் எந்தவிதமான இடர்ப்பாடுமின்றி அரியதொரு துறையை எளிய முறையில் கற்று முடிப்பதற்கு இந்த நூல் துணை செய்யுமென்று துணிந்து கூறலாம்.

ஆசிரியர்: கு. நடேச கவுண்டர். வெளியீடு: மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை — 1. விலை: ரூ. 2.25

இலக்கியப் பலகணி

சிந்தித்து மகிழ்வதற்குரிய நல்ல இலக்கியக் கட்டுரைகள் பலவற்றை இந்தப் பலகணி வழியே பார்க்கிறோம் என்பதற்காகப் பெருமைப் படலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களின் கதாபாத்திரங்களை அவரவர் குண நலன்களுக்கு ஏற்பப் பெயர் சூட்டிக் கற்பழகி, கலையழகி, அருளழகி என்று எழுதப்பட்டிருக்கும் கட்டுரைகள் தரமாக வாய்த்திருக்கின்றன. திருக்குறள் கருத்துக்களை விளக்கும் தனிக் கட்டுரைகளும், பாரதி பாடல்கள், கம்பன் காவியம் ஆகியவற்றிலே நயம் கண்டு தெளியும் பிற கட்டுரைகளும் ஆசிரியரின் இலக்கியத் திறனைக் காட்டுகின்றன.

ஆசிரியர்: பொ. சுந்தர மூர்த்தி நாயனார். வெளியீடு: செல்வி பதிப்பகம், காரைக்குடி. விலை: ரூ. 2.00.

பெருந்தகைப் பெண்டிர்

நமது பழமையான சங்க இலக்கியங்களிலும், பெருங்காப்பியங்களிலும் சிறந்து விளங்கிய பெண் மக்கள் சிலரைப் பற்றிக் கூறும் நூல் இது. பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு, கற்புக்கரசி கண்ணகி, பேகன் மனைவியான மற்றொரு கண்ணகி, துறவி மணிமேகலை, புனிதவதி காரைக்காலம்மையார்,— ஆகிய ஐந்து பெரும் பெண்களைப் பற்றிய காவிய அறிமுகம் இந்தச் சிறிய நூலில் கிடைக்கிறது. கட்டுரைகளின் நடுவே நயமான மூலப்பகுதிகளும் இடையிடையே தரப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களும், கல்லூரி இளைஞர்களும்,—ஏன் இலக்கியச் சுவை தேர்ந்தவர்களுங்கூடப் படித்து இரசிக்க ஏற்ற புத்தகம்.

ஆசிரியர்: ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, வெளியீடு: சாந்தி நூலகம், 2-122 பிராட்வே சென்னை—1; விலை: ரூ. 2 00.

அச்சுக் கலை

இது ஓர் அருமையான நூல். இரண்டு வகையில் இந்நூல் சிறப்பு வாய்ந்தது. அச்சுக் கலை பற்றித் தமிழில் இது வரையில் விரி

வான முறையிலோ, சுருக்க முறையிலோ ஒரு நூலும் வந்திருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் குறையை இது போக்குகிறது. இரண்டாவது இதில் அடங்கிய விஷயங்களும், அவை அளிக்கப்பட்டுள்ளமுறையும், எழுதப்பட்டுள்ள நடையும், அச்சடித்து வழங்கப்பட்டுள்ள அழகும், கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருகின்றன. சொல்வன்மையுடன் தெளிவுடன் எழுதப்பட்டிருக்கிறது. விஷயங்களைச் சேகரித்து வரிசைப்படுத்துவதில் மிகுந்த ஆராய்ச்சித் திறனையும் அசாத்தியமான விடா முயற்சியையும், தமது ஆழ்ந்த அனுபவத்தையும் ஆசிரியர் காட்டியுள்ளார்.

அச்சடிப்பது பற்றிச் சில கட்டுரைகளும், அச்சுத் தோன்றிய வரலாறு பற்றிச் சில குறிப்புக்களும் அந்தந்தச் சந்தர்ப்பங்களை யொட்டிப் பரவலாகப் பலர் எழுதியுள்ளார்கள். ஆனால் இந்தத் துறையில் மாணவர்களும், அச்சுத் தொழிலாளிகளும் அச்சகத்தாரும் படித்துப் பயன்பெறும் ஒரு தனிப் புத்தகமாகவே வெளிவருவது இதுவே முதல் தடவை என்று சொல்லலாம்.

காகிதம் பிறந்த வரலாறு முதல், மையின் தோற்றமும் அச்சின் முன்னோடிகளாக விளங்கிய முத்திரை, அச்சுப் படிமை, கல்லச்சு முதலியவற்றின் தோற்றங்களும், தனித் தனி எழுத்துக்கள் மரப்பட்டைகளிலும், உலோகங்களிலும் பின்னர் மூசைகள் மூலமும் உருவாகிய வரலாறும் விளக்கமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் அச்சுக் கலை வளர்ந்த வரலாறும் அச்சகத்தின் சிறப்புக்களும், அச்சுக் கோத்தல், அச்சுக் கோக்கும் பொறிகள், படப் பதிப்புமுறைகள், அச்சுப் பொறிகள் போன்ற நவீன அச்சகத்தில் தினசரி நடைபெற்று வரும் தொழில் சம்பந்தமான விளக்கங்களும் வரலாறுகளும் ஒன்றன்பின் ஒன்றாகக் கோவையாகக் கதை சொல்லும் எளிமையுடன் கூறப்பட்டுள்ளன.

ஆங்கிலச் சொற்கள் மிகுதியாக வழக்கில் உள்ள இத்துறையில் ஒவ்வோர் அம்சத்துக்கும் அதற்குரிய சரியான தமிழ்ச் சொற்களை மிகுந்த பிரயாசையுடன் பொறுக்கி எடுத்து ஆசிரியர் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்: மா. சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை–1; விற்பனையாளர்கள் பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை–1; விலை: ரூ. 6. 00.

மாலைப் பாக்கள்

தெளிவான தமிழ் நடையில் பல பொருள்களைப்பற்றிப் புலவர் மாஸ்கரேனஸ் பாடல்கள் இயற்றியிருக்கிறார். அவற்றில் பெரும்பான்மையான பாடல்கள் சமய சம்பந்தமானவை. கர்த்தரைப் பற்றியும், கன்னி மரியாளைப் பற்றியும் பக்திப் பாடல்களே அவற்றில் மிகுதியாக உள்ளன. அஞ்சலி என்னும் தலைப்பில் உள்ள இவரது பாடல்கள் இவரது மத விசுவாசத்தையும், பக்தியையும் காண்பிக்கின்றன. திருமலிப் பத்து என்னும் தலைப்பில் காணும் பாடல்கள் கன்னி மரியாளைப் பற்றி அழகாக விளக்குகின்றன. துணைவியை நினைந்து ஏழையின் புலம்பல் என்னும் பாடல்களும் உருக்கமாயுள்ளன. ஏனைய பிற பாடல்களும் சிறப்பாக உள்ளன.

பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை–5; விலை: ரூ. 1. 25.

ரவீந்திரநாத தாகூர்

தமிழ் நாட்டில் யாராகிலும் கவி ரவீந்திரரின் உள்ளத்தை, கவிதையை உணர்ந்தவர்கள் உண்டா என்றால், ''இதோ இருக்கிறாரே, இ. சந்திரசேகரன்'' என்று யாரும் சொல்லுவார்கள். அவ்வளவு தூரம் ரவீந்திரரின் இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர். தாம் அனுபவிப்பதோடு பிறரையும் அக்கவிதையை அனுபவிக்கும்படி செய்பவர். அப்படிப்பட்டவர் ''ரவீந்திர நாத டாகுர்'' என்ற நூலை எழுதியிருக்கிறார். இப்படிச் சொல்லும் போதே கவி ரவீந்திரரின் பிறப்பு, வளர்ப்பு, சாதாரண வாழ்க்கை நிகழ்ச்சிகளை இதில் காண முடியாது என்பதை யாரும் ஊகித்துக் கொள்ளலாம். ''நம் நாட்டுக் கவிஞர்களின் சரித்திர நிகழ்ச்சிகளே நமக்குத் தெரியாவிட்டாலும் பாதகமில்லை. அதனால் வருந்த வேண்டியதொன்றுமில்லை'' என்று கவி ரவீந்திரரே கூறியிருக்கிறார். அவர் குறித்தபடியே தான் சந்திரசேகரன் அவர்களும் இந்நூலைப் புனைந்திருக்கிறார்.

கவி ரவீந்திரர் 'சாந்தி நிகேதனம்' என்ற மிகப் பெரிய சர்வகலாசாலையைப் பெரும் பொருள் செலவிட்டு நிர்மாணித்தார். அதைப் பற்றி எவ்வளவோ படித்திருக்கிறோம். இதோ இந்நூலாசிரியர் இதில் எப்படிக் கவிஞரின் கவிதைப் பண்பு வெளிப்படுகிறது என்று எடுத்துக் காட்டும்போது இவரது கவிதைப் பண்பை வியக்கத் தோன்றுகிறது. ''சாந்தி நிகேதனப் பள்ளிக் கூடத்தில் வகுத்திருந்த தினசரித் திட்டங்களே கவிஞருடைய உணர்ச்சிகளுக்கெல்லாம் ஏற்றபடி எழுந்த ஏற்பாடுகள் என நினைக்கச் செய்யும். காலையில் விடியும் நேரத்தில் உறங்குகிறவர்களை எழுப்பத் தம்புரா கருவியுடன் இன்னிசை இசைப்பச் செய்திருந்த ஓர் ஏற்பாடு போதும், ரவீந்திரருடைய கலை ததும்பும் உள்ளம் உருவாக்கிய அழகிய வழக்கங்களைக் காட்ட'' என்று எழுதுகிறார்.

கவிதை, நாடகம், சிறுகதை ஆகிய எல்லா இலக்கியத் துறைகளிலும் அவர் சிருஷ்டித்துள்ள அருமையான இலக்கியங்களை விளக்கிக் கூறுகிறார். இனிப்பைப் பற்றி எவ்வளவு வர்ணித்தாலும் அதன் சுவை தெரிய மாட்டாது. ஒரு துண்டு கற்கண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டால் தெரிந்து விடுகிறதல்லவா? அதைப் போல் இந்நூலின் கடைசியில் தாமே டாகுரின் இலக்கியப் பகுதிகள் சிலவற்றை அருமையாக மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.


கவி தாகுரின் நூற்றாண்டு அஞ்சலியில் தமிழகம் செய்த சிறந்த அஞ்சலி இந்நூல் என்று சொல்லத் தோன்றுகிறது.

பிரசுரம்: சாகித்திய அக்காடெமி, டில்லி, விற்பனை உரிமை. பாரிநிலையம், 59, பிராட்வே சென்னை–1; விலை: ரூ. 2 00.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

அருமையான பொருள்களுக்கு உரிமையான இடமெதுவோ அங்கே...

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு ஆதரவு: டால்டா



அன்பைப் பெறுவதிலே போட்டி... சுவைப்பதிலே போட்டி...
ன்புப் போட்டி...ஆசைக்கினிய உணவுகள் யாவுமே அன்னை
ின் அன்பிலே விளைந்தவை ... டால்டா வனஸ்பதியினால்
மைத்தவை! ஆம். தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களா
ான டால்டா...சுகாதார முறைப்படி சீல்விட்ட டப்பாக்களிலே
துமையோடு வரும் தூய்மையான டால்டா...வளரும் கண்மணி
ளுக்கான வைட்டமின்கள் அடங்கிய வனஸ்பதி ... நம்மவர்
மையலுக்கு நல்ல துணை வேறென்றுண்டோ ?



டா வனஸ்பதி-அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

